# பொன்விழா மலர்

1972–2022

50

1972–2022

முதல் திருப்பலி

# பொன்விழா

## தூய அந்தோனியார் திருத்தலப்பங்கு

வெட்டுவெந்நி, மார்த்தாண்டம்

குழித்துறை மறைமாவட்டம்

# ஜூபிலி மலர்குழு



| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. D. கிறைஸ்ட் எட்வின் ராஜ் |
| ஜூபிலி ஒருங்கிணைப்பாளர் | : | திரு. M. அருள் பிரகாஷ் |
| செயலாளர் | : | திருமதி. S. லீமா ஜெசிந்தா |
| அருட்பணியாளர்கள் | : | அருட்பணி. அந்தோணி M. முத்து<br>அருட்பணி. S.மரிய மார்ட்டின் |
| உறுப்பினர்கள் | : | திரு. M.ஜோசப் கிரேசியஸ்<br>திரு. M. மரிய சிசில்<br>திருமதி. R.லில்லிபாய்<br>திரு. R.ரோஜர் ராஜேஷ்<br>திருமதி. M.S.பிளாரன்ஸ் விஜிலா<br>திரு. R. தனிஸ்லாஸ் |

ஆவணங்கள் தந்து உதவிய வேற்று மத நண்பர்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் நன்றி.
முழு ஒத்துழைப்பு தந்து மலரை செம்மைப்படுத்திய பங்கு அருட்தந்தையர்களுக்கு நன்றி.
ஆவணங்கள் தந்தத்துடன் ஆவணங்கள் சேகரிக்க என்னுடன் அனைத்து இடங்களுக்கும் வந்து உதவிய திரு M. பர்ணபாஸ், படியன்விளை அவர்களுக்கு அளப்பரிய நன்றி.
மலர் வெளியிட உறுதுணையாக இருந்து ஆவண குறிப்புகள் மற்றும் விளம்பரம் சேர்த்த அனைத்து குழு உறுப்பினர்களுக்கும் நன்றி.

**மலர் குழு தலைவர்.**





திருத்தந்தை பிரான்சிஸ்



Bishop. V. Jerome Dhas



பேரருள்பணி. S. இயேசுரெத்தினம்



அருட்பணி. **அந்தோணி M. முத்து**



அருட்பணி. **S. மரிய மார்ட்டின்**

# DIOCESE OF KOTTAR

**Most Rev. Peter Remigius D.D.**
Bishop Emeritus of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India
Off : +91 - 4652-233927
Per : +91 - 94431 31927
E-mail : peterremigius@gmail.com

28/11/2022



## *Message*

அன்புள்ள வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப்பங்கு இறைமக்களே,

2022 ம் ஆண்டை நீங்கள் யூபிலி ஆண்டாகக் கொண்டாடுவதை அறிந்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். 50 ஆண்டுகளுக்கு முன்னால் 14.02.1972–ல் அன்றைய கோட்டாறு ஆயர் மேதகு மரியானூஸ் ஆரோக்கியசாமி அவர்கள் அப்போது இருந்த சிறு குருசடியில் முதல் திருப்பலியை நிறைவேற்றியதை நன்றியுடன் நினைவு கூர்வதுதான் இந்த பொன்விழா ஆண்டின் சிறப்பு என்பதும் எனக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. இவ்வேளையில் அன்று ஆயர் ஆரோக்கியசாமி, இத்திருத்தலத்தின் (அப்போது குருசடி) காணிக்கையின் பெரும் பகுதி ஏழைகளுக்கு செலவிடப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். அவ்வாறு செலவிடும் விதத்தில், திருத்துவபுரத்தில் ஒரு முதியோர் இல்லத்தையும் நிறுவினார் என்பது என் நினைவுக்கு வருகின்றது.

மாற்கு எழுதிய நற்செய்தியில், நம் ஆண்டவர் இயேசு, நறுமணத்தைலம்அவரது தலையில் பூசப்பட்ட நிகழ்வில் “என் அடக்கத்திற்காக இவர் முன்னதாகவே என் உடலுக்கு தைலம் பூசி விட்டார்,” என்று கூறி, தான் எதிர்கொள்ளப் போகும் இறப்பை தன்னுடன் இருந்தவர்களுக்கு நினைவுப்படுத்தினார். ஆண்டவர் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றை நினைவு கூரும் நிகழ்வுதான் நாம் நிறைவேற்றும் திருப்பலி. இத்திருப்பலியின் மேன்மையை உணர்ந்து, முதல்முறையாக தூய அந்தோணியார் குருசடியில் திருப்பலி

நிறைவேற்றப்பட்டதை நன்றியுடன் நினைவு கூர்ந்து, 50 ஆண்டுகள் நிறைவினை யூபிலி ஆண்டாகக்கொண்டாடும் நீங்கள் பாராட்டுக்குரியவர்கள்.

நறுமணத்தைலம் பூசப்படும் நிகழ்வில் ஆண்டவர் இயேசு கூறிய வார்த்தைகளின் மற்றொரு பகுதியையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். “ஏழைகள் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள். நீங்கள் விரும்பும் போதெல்லாம் அவர்களுக்கு நன்மை செய்ய முடியும்.” இவ்வாறு அவர் சொன்னதன் பொருள் ஏழைகளின் பரிதாப நிலையை நாம் கண்டு கொள்ள வேண்டாம் என்பது அல்ல. மாறாக கடவுளுக்கு உரியதை கடவுளுக்கு அளிக்க வேண்டும். ஏழைகளுக்கு உரியதை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்பதே பொருள். எனவே இறைவார்த்தை உணர்த்தும் யூபிலி ஆண்டின் உயர் மதிப்பீடுகளான துன்பம் அகற்றுதல், துயர்துடைத்தல், இரக்கம் காட்டுதல், ஆகியவை யூபிலி ஆண்டில் மட்டுமல்ல, எப்போதுமே உங்கள் வாழ்வின் மதிப்பீடுகளாக அமைவனவாக.

குருசடியாக இருந்த இந்த இடம் இன்று பலவகையில் வளர்ச்சி பெற்றுள்ளதையும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து ஆசிர் பெறுவதையும், பலன் அடைவதையும் எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். தொடர்ந்து இத்திருத்தலம் வளர்ச்சியடையவும், இங்கு வருகின்றவர்களின் வேண்டுதல்கள் நிறைவேறவும், புனித அந்தோணியார் வழியாக இறை ஆசிர் பெற்றிடவும் வேண்டுமென்று வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.




உங்கள் அன்புள்ள

+ H P Remigius

**ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ்**

கோட்டாறு முன்னாள்ஆயர்

DIOCESE OF KOTTAR

Most Rev. Nazarene Soosai Th. D.,D.D.
Bishop of Kottar

Bishop's House, P.B. No:17,
Asaripallam Road, Nagercoil - 629 001.
Kanniyakumari District, Tamil Nadu, India.
Off : +91 - 4652-278343, 279152, 279933
Per : +91 - 4652-278868
E-mail : nazarene13@gmail.com



# வாழ்த்துரை

அன்பிற்கினியவர்களே,

அலைஅலையாய், பல்லாயிரம் மக்கள் நலம்நாடி நம்பிக்கையோடு கூடிவரும் வெட்டுவெந்நி புனித அந்தோணியார் திருத்தலத்தில் முதல் திருப்பலி நிறைவேற்றியதன் ஐம்பதாம் ஆண்டினை நீங்கள் யூபிலி ஆண்டாகக் கொண்டாடுவதை அறிந்து நான் உளமகிழ்கின்றேன். கடந்த ஐம்பது ஆண்டுகளில் கடந்து வந்த பாதையில் உங்கள் திருத்தலப் பங்கு அடைந்துள்ள ஒருங்கிணைந்த வளர்ச்சி மிக்கப் பாராட்டுக்குரியது; மிகவும் நன்றிக்குரியது. இத்திருத்தலத்தில் "ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்?" (திபா 116:12) என்ற நன்றி உணர்வே நம் உள்ளங்களில் மேலோங்குகிறது. தொடர்ந்து காக்கும் அன்புக்கடவுள் நலமோடு உங்களைக் காத்திடவும் இன்னும் பல நூறு ஆண்டுகள் இத்திருத்தலம் "மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய 'இறை மன்றாட்டின் வீடு' (எசா 56:7) எனத் திகழ்ந்திடவும் அன்போடு வாழ்த்துகின்றேன்.

சிறியதொரு குருசடியாக 1972 –ஆம் ஆண்டில் உருவாகி ஆண்டுகள் பல உருண்டோடி ஆண்டவர் கருணையால், புனித அந்தோணியாரின் பாதுகாவலில் இத்திருத்தலம் படிப்படியாக வளர்ந்து வந்ததை எண்ணி வியக்கின்றேன். சமயம், மொழி, மாநிலம் கடந்து தேவைகளில், இத்திருத்தலம் தேடி வரும் எண்ணற்ற மக்களுக்கும் தன் வல்லமைமிக்க உடனிருப்பால் உதவிடும் புனித அந்தோணியார், வருகின்ற காலத்திலும் அனைத்து மக்களுக்கும் ஆதரவாக இருந்து ஆண்டவரின் வரங்களைப்பெற்றுத்தர ஆசிக்கின்றேன். உங்களுக்கும் உங்களை வழிநடத்துகின்ற அருள்பணியாளர்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களும் பாராட்டுகளும்!

அன்புடனும் ஆசியுடனும்

+ Nazarene

**ஆயர் நசரேன் சூசை**
கோட்டாறு மறைமாவட்டம்

MOST REV. VINCENT MAR PAULOS
BISHOP OF MARTHANDAM

BISHOP'S HOUSE
MARTHANDAM - 629 165
TAMIL NADU, INDIA.
PHONE : 04651 - 271722
FAX : 04651 - 272910
E-mail: bpmardio@gmail.com



# வாழ்த்துரை

I am indeed very delightful to know that a souvenir is being brought out in connection with he Golden Jubilee of St. Antony's Shrine Parish, Vettuvenni.

The journey of St. Antony's shrine Parish to this memorable milestone of the Jubilee Year began at a slow pace on 14th February, 1972. Though few in numbers, at the beginning , it spread gradually like the proverbial mustard seed into a stately tree by the river side. Gradually, this shrine parish has become a place of Antonian devotion and pilgrimage. This shrine remains as a visible sign proclaiming to all generation how great is God's love and testifying that 'He first loved us' (1 Jn 4:19) by way of miracles happened on account of the intercession of St. Antony. In addition, it irresistibly draws the people of all faith towards God by disclosing manifold richness and goodness of the Lord and by way of providing a podium to experience and inestimable gift of grace.

On this graceful occasion, I too join with you to thank God for the immeasurable blessings He has been bestowing on all of us all through these years. I wish and pray that this Shrine Parish may continue to give powerful Christian witness in this locality and may continue to be a source of peace and relief to hundreds of people who approach it every day. I believe that it is notably worth to release a souvenir to mark this joyous occasion. With a heart of joy fulness and love towards St. Antony, let me impart my special prayerful wishes and take this opportunity to extend my appreciation to all the people who collaborate to make this day a remarkable one.

May the event be an occasion of grace and mercy, Be assured of my prayers and blessing.

with prayers

**Vincent Mar paulos**
Bishop of Marthandam

**Diocese of Thuckalay**
**Bishop George Rajendran SDB**

Mobile : +91-9443281100
Email : bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu - 629175, India
Phone : +91-4651-250633
Diocese Email : thuckalaydiocese@yahoo.com



# வாழ்த்துரை

தூய அந்தோணியாரின் அன்பு பக்தர்களே!

முக்கடலும் சங்கமிக்கும் குமரி மண்ணில் மும்மதங்களும் சங்கமிப்பது போல, கத்தோலிக்க வழிபாட்டு முறைகளான லத்தீன், சீரோ–மலபார், சீரோ– மலங்கரை எனும் மூன்று வழிபாட்டு முறைகளை தன்னகத்தே கொண்ட குமரியின் எழில் மிகுந்த பகுதியான வெட்டுவெந்நியில் ஓங்கி உயர்ந்து நிற்கும் தூய அந்தோணியார் திருத்தலம் 14.02.1972 இல் முன்னாள் கோட்டாறு ஆயர் மேதகு ஆரோக்கியசாமி அவர்கள் முதன்முதலில் திருப்பலி நிறைவேற்றியதன் 50 வது ஆண்டை பொன்விழாவாக கொண்டாடும் இந்த மங்களகரமான தருணத்தில் மட்டற்ற மகிழ்சியோடு அருட்தந்தையருக்கும் பங்குமக்களுக்கும் பொன்விழாவின் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

வெட்டுவெந்நி, புனித அந்தோணியார் திருத்தலப்பங்கின் வளர்ச்சி என்பது வரலாற்று சிறப்புமிக்க ஒன்றாக கருதுகிறேன். 1972 இல் ஒரு சிறு குருசடியாக தொடங்கப்பட்டு திருத்தலமாக உயர்ந்து நிற்கும் இதன்சிறப்பு எண்ணிலடங்கா அதற்காக உங்களோடு இணைந்து இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். கவலையோடும் கண்ணிரோடும் திரண்டு வந்து புனித அந்தோணியாரின் பரிந்துரை வேண்டி செபிக்கும் ஒவ்வொரு இறைமக்களுக்கும் இத்திருத்தலம் நிழலாகவும், ஆறுதலாகவும் நம்பிக்கையாகவும் வளர்ந்து நிற்கிறது. சிறுவனாக இருந்த காலகட்டத்தில் என் பெற்றோரோடும் நண்பர்களோடும் இக்குருசடியில் முழங்கால் படியிட்டு திருச்சிலுவையை வணங்கி செபித்த அனுபவம் எனக்கும் உண்டு. மறைபரப்பு பணியை இயல்பாகவே தன்னகத்தே கொண்ட, இவ்வாலயத்தில் வந்து செல்லும் தூய அந்தோணியாரின் பக்தர்களே இதற்கு சாலச்சிறந்த எடுத்துக்காட்டு.

இந்த இனிய தருணத்தில் தனது பொன்விழாவைக் கொண்டாடும் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலத்தின் பக்தர்கள் அனைவருக்கும் பொன்விழா வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு இந்நாள் வரை ஆன்மீக பாதையில் வழிநடத்திய ஒவ்வொரு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினரின் பணி நன்றி உணர்வுடன் பாராட்டுதலுக்குரியது. உங்கள் ஒவ்வொருவரின் கால்தடங்களையும் வரலாறு பேசும். குறிப்பாக, இன்றைய பங்குத்தந்தை, அருட்தந்தை அந்தோணி M. முத்து அவர்களின் பணி வரலாற்றில் பதியப் பெறும். உங்களது பொன்விழா மலர் ஒரு வரலாற்று பெட்டகமாக உருவாகட்டும் என்று வாழ்த்துகிறேன். தூய அந்தோணியாரின் அருளும் ஆசீரும் நம் அனைவரோடும் இருப்பதாக!

என்றும் ஏசோ மெசிகாவில்

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்** SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்.

**THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI**



Fr. S. Jesu Retnam
Contact Person

Bishop's House,
Post Box No. 1,
Unnamalaikadai - 629 179
Kanyakumari District,
Tamilnadu, India

Off : 9488048146 www.kuzhithuraidiocese.com vgkuzhithurai@gmail.com




# வாழ்த்துரை

பொன்விழா நல்வாழ்த்துக்கள்

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலம் குமரி மாவட்டத்தில் புகழ்பெற்ற திருத்தலம். சாதி, சமயம், மொழி, இடம் கடந்து, பக்தர்கள் இங்கு கோடி அற்புதர் புனித அந்தோணியாரைத் தரிசிப்பதை நாம் காண்கிறோம். இதன் வளர்ச்சி நமக்குப் பெருமையாக இருக்கிறது. இறைவனுக்கு நாம் நன்றி கூறுவோம். தொடக்க காலத்தில் இது ஒரு சிறிய குருசடியாக இருந்தது. இன்று இது சிறந்த திருத்தலமாக உயர்ந்துள்ளது. காரணம் மக்களின் நம்பிக்கை. இங்கு வருகின்றவர்கள் அருள் வாழ்வில் வளர முன்னாள் ஆயர் ஆரோக்கிய சாமி அவர்கள் 14.02.1972 –ல் முதன் முதலில் திருப்பலி நிறைவேற்றினார்கள். இதன் பொன்விழாவை 13.06.2022 அன்று கொண்டாடி மகிழ்கிறோம். இதன் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட ஆயர்கள், பங்குத்தந்தையர்கள், அதிபர்கள், பங்கு இறைமக்கள், பக்தர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

புதுமைகளின் வள்ளல் தூய அந்தோணியார் என்று அழைக்கின்றோம். தூய அந்தோணியார் இறைவனோடு நெருக்கமான நம்பிக்கை கொண்டவர். இறைவன்மேல் கொண்ட அன்பினால் இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட மக்களையும் அன்பு செய்தார். ஏழைகள்மேல் அதிகம் பரிவு கொண்டு அவர்களுக்காக இறை வேண்டுதல்செய்து பல அருள்கொடைகளை பெற்றுக் கொடுக்கிறார். தூய அந்தோணியார் பக்தர்கள்இறை நம்பிக்கையிலும், பிறர் அன்பிலும் வளர வேண்டும். இத்திருத்தலம் மக்கள்அருள்வாழ்வில் வளர உதவுகிறது. இது சமய நல்லிணக்கத்திற்கு அடையாளமாகத் திகழ்கிறது. திருத்தலம் வரும் பக்தர்களாலும், இந்திருத்தல பங்கு இறைமக்களாலும், பங்குத்தந்தையர்கள், அதிபர்கள் மற்றும் இணை அதிபர் ஆகியோரின் ஆன்மீக வழிகாட்டுதலாலும் வளர்ந்து கொண்டிருக்கிறது. தற்சமயம் பணி செய்யும் அருட்பணி. அந்தோணி M. முத்து அவர்களையும், அருட்பணி. S. மரிய மார்ட்டின் அவர்களையும், அருட்பணி. டென்சிங் அவர்களையும் பாராட்டி, குழித்துறை மறைமாவட்டம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி

அன்புடன்

அருட்பணி. **S. இயேசுரெத்தினம்**

மறைமாவட்ட தொடர்பாளர்.

THE ROMAN CATHOLIC DIOCESE OF KUZHITHURAI

அருட்பணி. **P. அகஸ்டின்**
மறைமாவட்ட நிதிபரிபாலகர்

Bishop's House,
Post Box No. 1,
Unnamalaikadai - 629 179
Kanyakumari District,
Tamilnadu, India



## வாழ்த்துரை

பொன்விழா நல்வாழ்த்துக்கள்

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப் பங்கு 1972–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ம் தியதி கோட்டார் முன்னாள் ஆயர் மேதகு ஆரோக்கிய சாமி அவர்களால் அப்போதைய சிறு குருசடியில் முதல்திருப்பலி நிறைவேற்றி தொடங்கப்பட்டு அச்சிறு குருசடி இன்று மறைமாவட்டத்தின் முதன்மை திருத்தல பங்காகி 50–வது ஆண்டு நிறைவடைவதை நினைத்து பெரும்மகிழ்ச்சிக் கொள்கின்றேன். ஒரு சிறிய குருசடியாக இருந்து இன்று தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்களை இத்திருத்தலப்பங்கு ஈர்த்துக் கொண்டிருக்கும் நிகழ்வானது உண்மையிலேயே பெருமைக்குரியது. இத்திருத்தலப் பங்கு ஜாதி, மதம், மொழி, வர்க்கம் இவற்றையெல்லாம் கடந்து இயேசுவின் இறையாட்சி மதிப்பீடான சமத்துவத்தை பிரதிபலிக்கின்ற புண்ணிய பூமியாகத் திகழ்வது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. இத்திருத்தலப் பங்கிற்கு வந்து செல்லும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறை நம்பிக்கையில் உறுதி கொண்டவர்களாகவும், மனித உறவுளை கட்டியெழுப்புகின்றவர்களாகவும், வளமையான வாழ்வை பெற்றுக்கொள்பவர்களாகவும் இத்திருத்தல பங்கின்செயல்பாடுகள் தொடர்ந்து அமைய வாழ்த்துகின்றேன். இத்திருத்தல பங்கிற்காக தங்களை அர்ப்பணித்த முந்நாள் அருட்பணியாளர்கள், துறவியர், பொறுப்பாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் திருத்தலப் பங்கினுடைய இந்நாள்அருட்பணியாளர்கள், நிர்வாகிகள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் திருத்தலப் பங்கு மக்கள் அனைவருக்கும் உளமார நன்றி கலந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன். திருத்தலப் பங்கினுடைய திட்டங்களும், கனவுகளும் தூய அந்தோணியார் ஆசியுடன் விரைவாக நிறைவேறட்டும். திருத்தலத்திற்கு வந்து செல்கின்ற பக்தர்கள் மற்றும் அனைத்து மக்களையும் தூய அந்தோணியார் வழியாக இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்கட்டும்.

பணித்தோழமையில்

அருட்பணி. **P. அகஸ்டின்**
மறைமாவட்ட நிதிபரிபாலகர்

**Fr. T. ஏசுதாசன்**
(பணி ஒய்வு)
ஏஞ்சல்ஸ் போஸ், பளுகல்



# வாழ்த்துரை

அன்பு கலந்த வாழ்த்துக்கள்!

பொன்விழா மலர் வெளியிடும் தருணத்தில் இத்திருத்தலத்தில் முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சியை எண்ணிப் பார்க்கிறேன். முன்னாள் கோட்டாறு ஆயர்மேதகு. ஆரோக்கியசாமி அவர்களின் செயலராக அதில் கலந்து கொள்ள முடிந்தது. மக்களின் ஆர்வம், எழுச்சி பொங்கி வழிந்தது.

காலம் விரைவாகக் கடந்து செல்கிறது. 1980 – 88 வரை திருத்துவபுரம் பங்கு அருட்பணி மறைவட்ட முதன்மைப் பணியாளர் என்ற முறையில், புனித அந்தோணியார் குருசடி இருந்த இடத்தில் சென்று, நிலம் வாங்கி, ஒரு சிறு இல்லமும் அமைத்தோம். சுற்றிலுமுள்ள புனித அந்தோணியார் பக்தர்கள், காப்புக்காடு, பாலவிளை, மருதங்கோடு , களியக்காவிளை பங்கு மக்கள் நவநாள் நிகழ்ச்சியில் செவ்வாய்க்கிழமை தோறும் கலந்து சிறப்பிப்பார்கள். பக்தர்களின் வேண்டுதல்களைக் கேட்டு புனிதரும் இறைவனிடமிருந்து நலன்களைப் பெற்றுத் தருவார். இது ஒரு தொடர் நிகழ்ச்சி.

திருத்தல வளர்ச்சியைக் காணும் யாவரும் வியப்படைகின்றனர். இதுவும் கோடிஅற்புதரின் ஒரு அருட்செயலே! அண்மையில் திருத்தலம் ஒரு பங்குத்தளமாக உயர்வு பெற்றுள்ளது. திருத்தலப் பங்கு மக்கள் ஒற்றுமையுடனும், அன்புடனும் இணைந்து பயணிக்கவும் பொன்னான மலர்வழி வாழ்த்துகிறேன்.

Fr.T. ஏசுதாசன்



# வாழ்த்துரை

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப் பங்கு மக்களுக்கு வாழ்த்துக்கள்! பொன்விழா நல்வாழ்த்துக்கள்! தூய அந்தோணியார் திருத்தலம் முதலில் ஒரு குருசாகவும், பின்னர் குருசடியாகவும், அதன்பின் திருத்தலமாகவும் இறுதியாகப் பங்காகவும், பரிணமித்தது. அத்தனைக்கும் காரணம் பலவித மக்கள், எல்லைகள் தாண்டிய பக்தர்கள்.

தூய அந்தோணியார் எல்லைகளைத் தாண்டிய எல்லா மக்களுக்கும் நற்செய்தியை அறிவித்த தூதர் ஆவார்.

தூய அந்தோணியார் திருத்தலமும் எல்லை தாண்டிய மக்களுக்கு சமூக பொருளாதார நற்செய்தியை அறிவிக்க வேண்டும். வாழ்வின் முழு மகிழ்ச்சியைத் தரவேண்டும்.

அத்தகைய பணியை ஆற்ற அன்புடன் வாழ்த்துகிறேன்.

**பணி. வ. இராபர்ட்**

அருட்பணி. S. வின்சென்ட்



# வாழ்த்துரை

## பொன்விழா நல்வாழ்த்துக்கள்

என் உள்ளத்தின் உள்ளிருந்து உதிக்கும் பொன்விழா நல்வாழ்த்துக்கள். இயற்கை எழில் கொஞ்சும் வெட்டுவெந்நி புனித அந்தோணியார் திருத்தலம். காலந்தோறும் வற்றாது பாய்ந்தோடும் தாமிரபரணி ஆறு. பல்வேறு மதத்தை சார்ந்தவர்கள் வழிபாட்டிற்கென்றும், ஆனந்த குளியலுக்கென்றும் இவ்விடம் வந்து செல்லும் காட்சி. இருவேறு மத நம்பிக்கை கொண்ட மக்கள் தொட்டு தொட்டு அருகாமையில் இருந்தாலும் கொட்டி கொட்டி தீர்க்கும் பாச மழை. வெவ்வேறு அடையாளங்களோடு வேறுபாடின்றி கைகொடுத்து நிற்கும் கனிவான கலை. இப்படி பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கிய வெட்டுவெந்நி திருத்தலத்தில் முதல் திருப்பலி நிறைவேற்றி 50 ஆண்டுகளை எட்டும் பொன்னான பொன்விழா இதோ பிறந்து விட்டது என்று அடியேன் பெருமிதம் கொள்கின்றேன். இத்திருத்தல அதிபராகவும், இப்பங்கு மக்களின் பங்குத் தந்தையாகவும், கோட்டாறு மறைமாவட்ட முன்னாள் ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ் என்னிடத்தில் பொறுப்பை ஒப்படைத்த போது இதயத்தல் இமயத்தை தொடும் இலக்கு இருந்தது. அவைகளில் சில ஆண்டவரின் அருளோடும், கோடிஅற்புதர் புனித அந்தோணியாரின் பரிந்துரையோடும், பங்கு மக்களின் ஒத்துழைப்போடும், பக்தர்களின் வாரிவாரி வழங்கும் வள்ளல் தன்மையோடும் செய்திருக்கின்றேன் என்ற பெருமிதம் கொள்கின்றேன். என்னுடைய பணி காலத்திலேயே இத்திருத்தலம் பசிலிக்காவாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டேன் இந்த ஆசை நிறைவேறும் தூரம் மிக அண்மையில் இருப்பதையும் உணர்ந்தேன். காரணம் ஒவ்வொரு நாளும் வந்து

செல்லும் பக்தர்கள் நூறு... நூறு என்று நூற்றுக்கணக்கில் உண்டு. திருப்பலிக்காக வந்து செல்லும் பக்தர்கள் ஆயிரம்... ஆயிரம் என்று ஆயிரக்கணக்கில் உண்டு. திருப்பலியில் மக்கள் எழுதிக் கொடுக்கின்ற வேண்டுதல் கடிதங்களும், நன்றி கடிதங்களும் திருத்தலப் பாடகர் குழுவோடு சேர்ந்தும், என்னோடு பலியில் பங்கேற்கும் அருட்பணியாளர்களோடு சேர்ந்தும், விண்ணை பிளக்கும், கோடி அற்புதர் புனித அந்தோணியாரின் புகழ் ஏதோ அவரது வரலாற்று புத்தகத்தோடும், நவநாள் ஜெபத்தோடும் அடங்கி விட முடியாது. ஆக பக்தர்களின் இதயங்களிலே எழுச்சியோடு எந்நாளும் ஒலித்துக் கொண்டிருக்கும் கீதங்களாகவே என்றும் இருக்கும். இத்திருத்தலத்தின் பெயரையும் புகழையும் எழுத்துக்குள் என்னால் அடக்கி விட முடியாது. காரணம் அதையும் தாண்டி ஆண்டவரின் அருள் புனித அந்தோணியார் வழியாக இத்திருத்தலத்தை நிரப்பிக் கொண்டிருக்கிறது. தாமிரபரணியாறு மக்களின் உடலை நனைத்தாலும் மக்களின் உள்ளங்களை நனைத்துக் கொண்டிருக்கின்ற இத்திருத்தலம் காலத்தை கடந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும். பொன்விழா ஓர் நினைவு மட்டும்தான் பொன்னான வரலாற்றுச் சுவடுகள் தொடர்ந்து இன்னும் பதியவிருக்கின்றன. அதுவரையிலும் வாழ்ந்து முடிந்தவர்கள் வானில் வாழ்த்திக் கொண்டிருப்பவர்களும் இத்திருத்தலத்தின் புகழைப் பாடிக் கொண்டிருப்பார்கள். எனவே இநத 50–வது ஆண்டு பொன்விழாவில் அனைத்து பங்குமக்களையும் ஒவ்வொரு நாளும் வந்து செல்கின்ற பக்தர்களையும் வாழ்த்துகின்றேன், வாழ்த்திக் கொண்டே இருக்கின்றேன், ஜெபிக்கின்றேன், ஜெபித்துக்கொண்டே இருக்கின்றேன். 50–வது ஆண்டு பொன்விழா காணும் இந்த தருணத்தில், உங்கள் திருத்தலத்தின் வளர்ச்சியை பதிவு செய்ய ஒரு வரலாற்று ஏடாக இந்த பொன்விழா மலர் அமையும் என்று நம்புகின்றேன்.

பணித்தோழமையில்,
அருட்பணி. S. வின்சென்ட்

**அருட்பணி S. மரியதாசன்**
மகிழ் இல்லம்
புனித தேவசகாயம் திருத்தல வளாகம்
நட்டாலம், குமரி மாவட்டம்



# வாழ்த்துரை

பொன்விழா நல்வாழ்த்துக்கள்

50–ஆண்டுகளாக கேரளா, தமிழ்நாடு மக்களை சிறப்பாக வரவேற்றுக் கொண்டிருக்கும் புனித அந்தோணியாருடைய திருத்தலப் பங்கு முதல் திருப்பலி பொன்விழாவை கொண்டாடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். பொன்விழா ஜூபிலி மலருக்கு என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களின் சிறப்பான பணிக்கு இறைவன் ஆசீ வழங்குவாராக நன்றி.

அன்புடன்
அருட்பணி. **S. மரியதாசன்**

## புனித அந்தோணியார் திருத்தலப்பங்கு
வெட்டுவெந்நி





### பொன்விழா யூபிலி மலர் வெளியீட்டு விழா வாழ்த்து

அன்பானவர்களே, அனைவருக்கும் இனிய வணக்கம்,

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலத்தில் முதல் திருப்பலி நடைபெற்ற பொன்விழா யூபிலி மலரை வெளிவிடும் தருணத்தில் எங்களது அன்பான வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம்மலர் ஓவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், துணுக்குகள், வரலாறு என பல்வேறு சுவைகளைப் பொலிவோடு தாங்கி வருகிறது.

நினைவுகளுக்குக் கால வரையரையுண்டு – அழிவுண்டு. விளைவுகள், வரலாறுகள், நிகழ்வுகள் நிலைத்து நிற்க ஆவணப்படுத்துதல் அவசியம். இவற்றை எழுதி வைத்தாலும் ஆவணப்படுத்துதல்தான். இம்மலரின் நமது திருத்தலப்பங்கின் வரலாறு, அருள்பணிப்பேரவையின் முக்கியக் குறிப்புகள் அடங்கியுள்ளன.

நமது பங்கு மக்களின் எழுத்தாற்றலும் திறமையும் சிறப்பாக வெளியிட்டுள்ளன. தங்களது படைப்பாற்றலை வழங்கிய அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

இந்த யூபிலி மலர் வெளிவர அயராது உழைத்த யூபிலி மலர் குழுவினருக்கும், ஒருங்கிணைப்பாளர் திரு. அருள் பிரகாஷ் அவர்களுக்கும் நன்றிகளும், பாராட்டுக்களும்.

அன்புடன்

அருள்பணி. **அந்தோணி M. முத்து** – அதிபர் / பங்கு தந்தை

அருண்பணி. **மரியமார்ட்டின்** – இணைப்பங்குதந்தை

அருண்பணி. **டென்சிங்** – ஆன்மீக வழிகாட்டி

# வாழ்த்துரை



**M. ஜோசப் கிரேசியஸ்**
துணைத் தலைவர்
பங்கு அருட்பணி பேரவை

நம் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப்பங்கில் முதல் திருப்பலி நிறைவேறி 50 ஆண்டுகள் முடிந்து புதுப்பொலிவுடன் பொன்விழா காணும் இந்நேரம் ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்காகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கும் பங்கின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணை நின்ற ஆயர்கள், அருட்பணியாளர்கள், அருட்பணி பேரவை, மறைக்கல்வி மன்றம், திருத்தூது கழகங்கள், பங்கு மக்கள், பக்தர்கள் அனைவருக்கும் பொன்விழா வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

“வேற்றுமையில் ஒற்றுமை” என்ற பாரதத்தின் உயிர் மூச்சுக்கு இலக்கியம் வழங்கும் இன்பச் சோலை தான் நமது தூய அந்தோணியார் திருத்தலப் பங்கு. இது அருகுபோல் வேரோடி, ஆல்போல் தழைத்து தம்மை அண்டி வருவோர்க்கும், நாடி வருவோர்க்கும் நலன்கள், ஆசீர்கள் பல கொடுத்து, மனக்குறைகளைப் போக்கி மகிழ்விக்கும் ஒரு கற்பகத்தருவாகும். நம் வாழ்வு வளர்ச்சியடைய பற்பல மாற்றங்கள் தந்து கடந்த 50 ஆண்டுகளாக நம் ஒவ்வொருவரையும் இறையன்பில் வேரூன்றச் செய்தது இந்த திருப்பலிக் கொண்டாட்டம் தான்.

ஜூபிலி ஆண்டு கடந்து வந்த பாதையைச் சிந்திக்கவும், கடந்து செல்ல இருக்கின்ற வழிகளைச் சீர்தூக்கி பார்க்கவும் இறைவன் தரும் ஒரு வாய்ப்பு. நாம் கடந்து வந்த பாதையில் மேடு பள்ளங்கள் ஏராளம், ஏற்றத்தாழ்வுகள் தாராளம், தடைகற்களைப் படிக்கற்களாக்கி, முன்பாதையில் வெற்றிக்கொடிகளை ஏற்றி நாம் பயணிக்கிறோம்” என்பது உண்மை. மன்னித்தும் மறந்தும், ஒற்றுமையுணர்வுடன் ஜூபிலி கொண்டாடும் போது இறை பிரசன்னம் நம் நடுவே சாத்தியமாகிறது. எனவே நாம் அனைவரும் தொலைநோக்குச் சிந்தனையும், பரந்த நோக்கமும், வெட்டுவெந்நி தூய அந்தோணியாரிடம் ஆழ்ந்த ஈடுபாடும் கொண்ட இறை சமூகமாக வாழ இந்த ஜூபிலி விழா மலரட்டும் என வாழ்த்துகிறேன்.

துணைத்தலைவர்
**பங்கு அருட்பணிபேரவை**


VETTUVENNI ST.ANTONY'S SHRINE PARISH
(BOUNDARY MAP)
HOSPITALS
CHURCHES
GOVT. OFFICES
TEMPLES
PONDS
COLLEGES
SCHOOLS
BANKS
IMP. BUILDINGS
PETROL BUNK
ROAD
SMALL STREET
RAILWAY LANE
RIVER
PAROCHIAL HOUSE
ANBIAMS
PALA VILAI PARISH
THIRUTHUVAPURAM PARISH
MARUTHANCODE
MELPURAM
AMALA PURAM PARISH
KAPPUCAUD PARISH
NALLOOR PARISH
MARTHANDAM R.C. STREET PARISH
PACODE PARISH
THAMIRAPARANI RIVER
N H 47
THIRUVANANTHAPURAM
NAGERCOIL
KULASEKHARAM
I
II
III
IV
V
VI
VII

# அந்தோணியார் திருத்தல பங்கு ஆலயத்தின் வளர்ச்சி தோற்றங்கள்



1972 முதல் திருப்பலி நிறைவேற்றிய குருசடி



1974 மேதகு ஆரோக்கிய சாமி ஆண்டகை அவர்களால் அர்ச்சித்து துவங்கி வைக்கப்பட்ட சிற்றாலயம்



1989 சிற்றாலயத்தின் முன் திருப்பலி நடைபெற்று வந்ததால் திருப்பலி நிறைவேற்ற அமைக்கப்பட்ட திறந்தவெளி ஆலயம்



2005 சிற்றாலயம் புனரமைக்கப்பட்டு செம்பருத்தி வடிவில் வடிவமைக்கப்பட்டது



2007 ல் புதிதாக திருப்பலி பீடத்துடன் கட்டப்பட்ட ஆலயம்

# பங்கில் பணியாற்றிய அருட்பணியாளர்கள்



அருட்பணி. M. தனிஸ்லாஸ்
1972–1980



அருட்பணி. இயேசுதாசன் தாமஸ்
1980–1989



அருட்பணி. யூஜின் குழந்தை
1989–1994



அருட்பணி. ராபர்ட்
1994–1998



அருட்பணி. செபஸ்தியான்
1998–1999



அருட்பணி. அந்தோணி M. முத்து
1999–2002



அருட்பணி. K. ஜார்ஜ்
2002–2004



அருட்பணி. டோமினிக் சாவியோ
2004–2009



அருட்பணி. S. வின்சென்ட்
2009–2015



**அருட்பணி. அருள்தேவதாசன்**
2015–2019



**அருட்பணி. வின்சோ ஆன்டனி**
உதவிப்பங்குத்தந்தை
2017–2019



**அருட்பணி. S. மரியதாசன்**
ஆன்மீக ஆலோசகர்



**அருட்பணி. அந்தோணி M. முத்து**
2019 முதல்



**அருட்பணி. S. மரிய மார்ட்டின்**
2019 முதல்



**அருட்பணி. டென்சிங்**
ஆன்மீக ஆலோசகர்

## வட்டார அருட்பணியாளர்கள்



**பேரருட்பணி. கிலாரியஸ்**
1999–2002



**பேரருட்பணி. S. வின்சென்ட்**
2003–2009 வரை



**பேரருட்பணி. M. பீட்டர்**
2009 முதல் 2015 வரை



**பேரருட்பணி. புஷ்பராஜ்**
2015 முதல்

# நிர்வாகிகள்

## முதல் கமிட்டி 1972


Adv. சாந்தகுமார்


திரு. மதன் மோகன் லால்


திரு. நடராஜன்


திரு. தேவதாஸ்

## இரண்டாவது கமிட்டி 1974 முதல் 1982


Fr. M. தனிஸ்லாஸ்


திரு. தேவதாஸ்


திரு. மதன் மோகன் லால்
1978 வரை


திரு. ஏசுதாஸ்
1978 வரை


திரு. தனிஸ்லாஸ்
1978 முதல்

## வளர்ச்சிக்குழு 1982 முதல் 1989


Fr. இயேசுதாசன் தாமஸ்
தலைவர்


திரு. இராஜையன்
துணைத்தலைவர்


திரு. தேவதாஸ்
செயலர்


திரு. தனிஸ்லாஸ்
பொருளர்


திரு. கிறிஸ்துராஜ்
துணைச்செயலர்

## வளர்ச்சிக்குழு & 1-வது பங்குப்பேரவை 1989 முதல் 1996


Fr. யூஜின் குழந்தை
தலைவர்


திரு. இராஜையன்
துணைத்தலைவர்


திரு. மரியசிசில்
செயலர்


திரு. தனிஸ்லாஸ்
பொருளர்


திரு. கிறிஸ்துராஜ்
துணைச்செயலர்

## 2-வது பங்குப்பேரவை 1996 முதல் 1999



Fr. ராபர்ட்
தலைவர்
1996–1998



திரு. செபஸ்தியான்
தலைவர்
1998–1999



திரு. இராஜைய்யன்
துணைத்தலைவர்



திரு. மரியசிசில்
செயலர்



திரு. கிறிஸ்துராஜ்
துணைச்செயலர்



திரு. தனிஸ்லாஸ்
பொருளர்

## 3-வது பங்குப்பேரவை 1999 முதல் 2003



Fr. அந்தோணி M. முத்து
தலைவர்



திரு. ராஜாமணி
துணைத்தலைவர்



திரு. அருள்பிரகாஷ்
செயலர்



திரு. ஜாண்சன்
துணைச்செயலர்



திரு. தேவராஜ்
பொருளர்

## 4-வது பங்குப்பேரவை 2003 முதல் 2006



Fr. K. ஜார்ஜ்
தலைவர்



திரு. வின்செண்ட் தேவராஜ்
துணைத்தலைவர்
2003–2004



திரு. A.C. செல்வராஜ்
துணைத்தலைவர்
2004–2006



திரு. மரியசிசில்
செயலர்



திரு. ஜாண்சன்
துணைச்செயலர்



திரு. தனிஸ்லாஸ்
பொருளர்

## 5-வது பங்குப்பேரவை 2006 முதல் 2009



Fr. டொமினிக் சாவியோ
தலைவர்



திரு. A.C. செல்வராஜ்
துணைத்தலைவர்



திரு. மரியசிசில்
செயலர்



திரு. K. ராஜன்
துணைச்செயலர்



திரு. தங்கப்பன்
பொருளர்

## 6-வது பங்குப்பேரவை 1996 முதல் 1999


Fr. S. வின்சென்ட்
தலைவர்


திருமதி. பிளாரன்ஸ் விஜிலா
துணைத்தலைவர்


திரு. தாஸ்
செயலர்


திரு. I. ஜெபகுமார்
துணைச்செயலர்


திரு. தங்கப்பன்
பொருளர்

## 7-வது பங்குப்பேரவை 2012 முதல் 2015


Fr. S. வின்சென்ட்
தலைவர்


திருமதி. ஜெசிந்தா மேரி
துணைத்தலைவர்


திரு. மரியசிசில்
செயலர்


திரு. I. ஜெபகுமார்
துணைச்செயலர்
2013 முதல் பொருளர்


திரு. G.டென்னிஸ்
பொருளர்
2012-2013

## 8-வது பங்குப்பேரவை 2015 முதல் 2018


Fr. அருள் தேவதாசன்
தலைவர்


திரு. ஜோசப் கிரேசியஸ்
துணைத்தலைவர்
2003-2004


திருமதி. ஜெசிந்தா மேரி
செயலர்


திரு. பிரைட் சிங்
துணைச்செயலர்


திரு. தங்கையன்
பொருளர்

## 9-வது பங்குப்பேரவை 2019 முதல்


Fr. அந்தோணி M. முத்து
பங்குத்தந்தை
தலைவர்


Fr. S. மரிய மார்ட்டின்
இணைப்பங்குத்தந்தை


திரு. ஜோசப் கிரேசியஸ்
துணைத்தலைவர்


திருமதி. லில்லிபாய்
செயலர்


திரு. பிரைட் சிங்
துணைச்செயலர்


திரு. தங்கையன்
பொருளர்



வெட்டுவெந்நி

# தூய அந்தோணியார் ஆலய வரலாறு

## ஆவணங்களுடன் கூடிய ஓர் ஆய்வு அமைவியல் பார்வை

இந்திய துணைக் கண்டத்தில் தென் தமிழ்நாட்டில் பல்சமயங்கள், பலமொழிகள், பல இனங்களைக் கொண்ட மக்களை உள்ளடக்கிய, 100% கல்வியறிவு பெற்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். தென்னை, வாழை, பனை, புளி, ரப்பர், நெல், மரவள்ளி போன்ற விவசாயம் செழிக்கும் மாவட்டம். தனிநபர் வருமானத்தில் முதன்மையான மாவட்டம். மீன் பிடி தொழிலாளர்களை அதிகம் கொண்ட மாவட்டம். தோள்சீலைப் போராட்டம், குமரியை தாய் தமிழகத்தோடு இணைக்கும் போராட்டங்கள் போன்றவற்றை முன்னெடுத்து வெற்றி கண்ட மாவட்டம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என இயற்கையைத் தன்னகத்தே கொண்ட மாவட்டம்.

தேன் பொழியும் மார்த்தாண்டம் மாநகரில், குழித்துறை நகராட்சிக்கு உட்பட்ட வெட்டுவெந்நியில், பண்டைய தேசிய நெடுஞ்சாலையான தாமிரபரணி ஆற்று சப்பாத்து ரோட்டில் ஸ்ரீ கண்டன் சாஸ்தா கோயிலும், தூய அந்தோணியார் ஆலயமும் அருகருகே அமையப் பெற்று பல்சமய ஒற்றுமையை பறைசாற்றும் புனித தலமாக இம் மண் விளங்குகிறது.

### குமரி மாவட்டத்தில் கிறிஸ்தவம்

கி.பி. 52 தூய தோமையார் சென்னை, தென்தமிழகம் மற்றும் கேரளா மாநிலத்தின் சில பகுதிகளிலும் கிறிஸ்தவ மறையை போதித்தார் என பாரம்பரியம் உறுதிபட கூறுகிறது. திருவிதாங்கோடு பகுதி வந்து தங்கி கிறிஸ்தவ மறைபணி ஆற்றினார். அவரது சீடர்கள் காலத்தில் அரைப்பள்ளி சிற்றாலயம் கட்டப் பட்டது. அங்கு திருமுழுக்குப் பெற்ற சிலர் கி.பி. 63–ஆம் ஆண்டுகளில் மாடத்தட்டுவிளை பகுதியில் வந்து தங்கியதாகவும் உறுதியாக நம்பப்படுகிறது. (மாடத்தட்டுவிளை நூற்றாண்டு மலர் – 2019)

கி.பி. 1542–1552 ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் சவேரியார் கன்னியாகுமரி மாவட்டம், குமரி பகுதிகளில் தம் செபம், சிறந்த உழைப்பால் கிறிஸ்தவத்தைத் தழைக்கச் செய்தார் என்பது வரலாறு. 1800–களில் குமரி மாவட்டம், கொல்லம் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. கொல்லம் மறைமாவட்டத்தின் பூராதின எட்டுப் பங்குகளில் வேங்கோடும் ஒன்று. கி.பி. 1847–ஆம் ஆண்டில் வேங்கோடு பங்கில் 2780 கிறிஸ்தவர்கள் இருந்ததாக ஆவணக் குறிப்புகளில் காணப்படுகிறது. அந்நாளில் வேங்கோடு பங்கு புதுக்கடை, களியக்காவிளை, தொடுவெட்டி, குழித்துறை, பாறசாலை மற்றும் ஐம்பது சிற்றூர்களைத் தன்னில் கொண்டிருந்தது. குமரி மாவட்டத்தின்

பெரும்பாலான பகுதியானது கோட்டாறு மறைமாவட்டமாக 1930 ஆண்டு மே 26–ஆம் நாள் மலர்ந்தது. 1871–ஆம் ஆண்டு புள்ளி விபரப்படி, குமரியில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை 44,490. (கோட்டாறு மறைமாவட்ட பவளவிழா மலர் 2005 பக்கம் 10) இதில் வேங்கோடு தளத்தில் 4000 கிறித்தவர்கள் இருந்தனர். விளவங்கோடு தாலுகாவும், வேங்கோடும், நாடார் சமுதாய மக்களை ஈர்த்து எடுத்த கேந்திரங்களாக அமைந்ததாக காண முடிகிறது.

### வெட்டுவெந்நி - கிறிஸ்தவம் - சூழமைவு

வெட்டுவெந்நி பகுதி மார்த்தாண்டவர்மா ஆளுகைக்கு உட்பட்ட பகுதியாக இருந்துவந்த கால கட்டத்தில் 1741–ம் ஆண்டு திருவிதாங்கூர் நாட்டை எதிர்த்து டச்சுப்படையினர் குளச்சலில் போர் தொடுத்தனர். 21.07.1741–ல் டச்சுப்படை தளபதி ஜெனரல் எஸ்தாக்கியூஸ் பெனடிக்ட் டிலனாய் அவர்கள் மார்த்தாண்ட வர்மா மன்னரிடம் கைதானார். டிலனாய்க்கு மார்த்தாண்ட வர்மா மதரீதியாக துன்பம் கொடுக்காததால் அப்போதைய அரண்மனை கண்காணிப்பு பொறுப்பில் இருந்த நீலகண்டபிள்ளை, டிலனாயால் ஈர்க்கப்பட்டு கத்தோலிக்க முறையை தழுவினார். கிறிஸ்தவம் மார்த்தாண்ட வர்மா அரண்மனையில் விதைக்கப்பட்டு தழைத்தது.

### i ) வெட்டுவெந்நியில் நீலகண்டபிள்ளை என்ற தேவசகாயம்

1749–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23–ஆம் நாள் தேவசகாயம்பிள்ளை கிறிஸ்தவராக மாறியதால், புரோகிதர்களின் சூழ்ச்சியால் கைதாகி பத்மநாபபுரம் சிறையில் அடைக்கப் பட்டார். அவர் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்ட பின் அன்றைய எட்டு தாலுகா அதிகாரிகள் முன் தீர்ப்புக்காக நிறுத்தப்பட்டார். பத்மநாபபுரம், கல்குளம், தோவாளை, அகஸ்தீஸ்வரம், விளவங்கோடு, நெய்யாற்றின்கரை, திருவனந்த புரம், நெடுமங்காடு, பகுதிகளாக அப்பகுதிகள் அமைந்திருந்தன. விளவங்கோடு தாலுகா என்பது வெட்டுவெந்நி, குழித்துறையை மையமாக கொண்டு அமைந்து இருந்தது. அப்போது, தேவசகாயம் பிள்ளை வெட்டுவெந்நியில் வைத்து மிளகாய் புகைமூட்டத்தில் சித்திரவதை செய்யப்பட்டு, தீர்ப்பு நிறைவேற்றப்பட்டது. இந்நிகழ்வு கி.பி. 1750 ஏப்பிரல் 27 முதல் மே 26 வரை விளவங்கோடு, **வெட்டுவெந்நியில்** நடந்தது என்று **காற்றாடிமலை கால் தடங்கள்** என்ற நூலில் பார்க்க முடிகிறது. (பக்கங்கள் 40–60) மேலும் 1750 காலகட்டங்களில் வெட்டுவெந்நியிலிருந்து குழித்துறையை இணைக்கும் சாலையாக, வெட்டுவெந்நி குருசடி சாலை (சப்பாத்துசாலை) இருந்து உள்ளது. இச்சாலையில் சத்திரம், சுமைதாங்கி கற்கள் அமைந்திருந்ததை பார்க்கும் போது இவ்விடம் வழிபோக்கர்கள் சிறிது நேரம் இளைப்பாறும் இடமாக இருந்திருப்பது தெரிகிறது.

### ii) கள்ளித்தட்டு - காப்புக்காடு :

களப்பாறை தாய்வீட்டு முன்னோர் பத்மநாபன் என்பவரின் புதல்வன் 1700–1750 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலத்தில் சூசைமுத்து எனும் பெயரில் ஞான நீராட்டு பெற்று கிறிஸ்தவ மறையை தழுவினார் என்றும், குழிவிளையில் கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தேவசகாயம் என்பவரும், தொடர்ந்து சுற்றுப்புற இந்துக்கள் பலரும் கிறிஸ்தவ மறையைத் தழுவினார் என்றும் தென்பாண்டி மான வீரநாடு நூற்குறிப்புகள் (பக்கம் – 358) சொல்கிறது. இப்பகுதியும் மிகுந்த வன பகுதியாகவே இக்காலக்கட்டத்தில் காணப்பட்டிருந்தது.

கன்னங்காரவிளை, காட்டுவிளை, மாமூட்டுவிளை, வெட்டுக்காடு பூராண்டிவிளை, குழிவிளை, பெருவிளை, வாழைத்தோட்டம் சேர்ந்த கள்ளித்தட்டின் மையப்பகுதியான வாழைத் தோட்டத்தில் புனித அந்தோணியார் பெயரில் குருசடி ஒன்றினை அமைத்து அப்பகுதி மக்கள் வழிபட்டனர். குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க

ஓலையினால் வேயப்பட்ட கூடாரம் அமைத்து பிராத்தனை செய்து வந்தனர். காலபோக்கில் சிற்றாலயம் அமைத்தனர். பின்னர் புதுக்கடை பங்கோடு இணைத்தனர். இதைத் தொடர்ந்து புதுக்கடை பங்குத்தந்தை அருட்திரு. வர்கீஸ் அடிகளார் கள்ளித்தட்டு கிறிஸ்தவர்களை கண்காணித்ததுடன், திருப்பலியும் நிறைவேற்றினார்.

கொல்லம் மறைமாவட்ட ஆயர் மேதகு அலோசியஸ் மரிய பென்சிகர் ஆண்டகை இப்பகுதியில் ஆலயமொன்று எழுப்ப விழைந்தார். காப்புக்காடு, தேங்காபட்டணம் ரோட்டில் பெருவிளையில் களப்பாறை தாய்வீட்டு வியாகப்பர் மகன் சூசைமுத்தன் என்ற சிங்காராயன் தனக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தை 1920 ஆம் ஆண்டு நவம்பர் 4–ம் நாள் இனாமாக ஆவணம் பதிவு செய்து வழங்கினார். இவ்விடத்தில் மக்களோடு சேர்ந்து அருட்திரு. வர்கீஸ் அடிகள் அவர்களால் ஆலயம் கட்டி எழுப்பட்டு 1926–ம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 15–ம் நாள் ஆயர் பென்சிகர் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. 1943–ம் ஆண்டு காப்புகாடு பங்கு தனிபங்காக மேதகு ஆயர் T.R. ஆஞ்ஞிசுவாமி அவர்களால் உயர்த்தப்பட்டது.

### iii) பூவன்விளை - திரித்துவபுரம் பங்கு :

1900 களில் கொல்லம் மறைமாவட்டத்தின் எட்டு பங்குகளில் வேங்கோடு பங்கும் ஒன்று. தற்போதைய திரித்துவபுரம் பங்குப் பகுதியானது வேங்கோடு பங்கின் பகுதியாக இருந்தது. கொல்லம் மறைமாவட்ட ஆயராக மேதகு அலோசியஸ் மரிய பென்சிகர் O.C.D. அவர்கள் பொறுப்பேற்க வருகையில் (சுவிட்சர்லாந்து நாட்டினர்) ஆற்று விபத்தில் சிக்கி, இறையருளால் உயிர் தப்பினார். அவ்வேளையில் இறைவனுக்கு நன்றிக்கடனாக மறைமாவட்டத்தில் 12 ஆலயங்கள் கட்டுவதாக ஆயர் தீர்மானித்தார். (திரித்துவபுரம் நூற்றாண்டு மலர் – ஆண்டு 2010, பக்கம் 28).

ஆகவே ஆயர் அவர்களால் அப்போதைய பூவன்விளையில் கி.பி. 1905–ல் நிலம் வாங்கப்பட்டு 1906–ல் ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. களியக்காவிளை பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. இன்னசென்ட் அடிகளார் ஆலய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள 08.12.1910 – ல் மேதகு ஆயர் அலோசியஸ் மரிய பென்சிகர் O.C.D. அவர்களால் மூவொரு இறைவன் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. பின்னர் பூவன்விளை என்ற பெயர் மாற்றப்பட்டு திரித்துவபுரம் என்ற பெயர் பெற்றது. கி.பி. 1910 முதல் கி.பி. 1920 வரை களியக்காவிளை பங்கின் கிளைப்பங்காக திரித்துவபுரம் இருந்தது. ஆலயத்தைச் சுற்றி உள்ள மக்கள் கிறிஸ்தவ முறையை தழுவியதால் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே 1920–ல் தனிபங்காக உதயமானது. அருட்பணி. இ,ன்னசென்ட் முதல் பங்குதந்தையாக பொறுப்பேற்றார். திரித்துபுரம் எல்லை கிழக்கே குழித்துறை வரை எல்லையாக அமைந்திருந்தது. 1926–ல் கோட்டாறு மறைமாவட்டத்தின் நான்கு வட்டாரங்களில் ஒன்றான திரித்துவபுரம், அவ்வட்டாரத்தின் தலைமை இடமாக அமைக்கப்பட்டது.

### குருசு பற்றிய ஆய்வு

### 1. வாய்மொழி சான்று

அரசர் மார்த்தாண்ட வர்மா காலத்தில், போத்துக்கீசிய தளபதி டிலனாய் அவர்களின் படைப்பிரிவில் உள்ள ஒருவர், மிகுந்த கடவுள் நம்பிக்கை உரியவர். இறந்த அவரை வண்டியில் கொண்டுவரும் போது, வண்டி தற்போது அந்தோணியார் குருசடி அமைந்திருக்கும் இடத்தில், நகராமல் நின்றதால், இவ்விடம் அரசுக்கு சொந்தமான இடம் என கருதியதாலும் அவ்விடத்திலேயே அடக்கம் செய்யப்பட்டார் என்று வாய்மொழி தகவல் உள்ளது.

### 2. “தென்பாண்டி மண்டலமான வீரநாடு” - புத்தகச் சான்று

தென்பாண்டி மண்டலமான வீரநாடு ஆய்வு

நூலின் ஆசிரியர் திரு. அலெக்ஸ் குரூஸ் முத்தையா இப் புத்தகத்தின் 360, 361–ஆம் பக்கங்களில் **“வெட்டுமணி புனிதர் அந்தோணியார் குருசடி ஆலயம்”** என்னும் தலைப்பில் வெட்டுவெந்நி குருசடி துவக்க கால வரலாற்றை விவரிக்கிறார். கி.பி. 1800–ம் ஆண்டுகளில், அதாவது தற்போதைய நூற்றாண்டு கண்ட பழைய குழித்துறை ஆற்றுபாலம் கட்டுவதற்கு முந்தைய காலகட்டங்கள்.

இக்கால கட்டங்களில் ஆற்றைக் கடந்து செல்ல, சப்பாத்து வழி ஒன்றே பயன்பட்டது


18–ம் நூற்றாண்டுகளிலிருந்து வெட்டுவெந்நி குழித்துறையை இணைத்த ஆற்றுப்பாலத்தின் தற்போதைய நிலை

வழிப்போக்கர்களும் வாகனங்களும் இச்சப்பாத்து பாதை ஒன்றையே பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

கீழ்திசை நாட்டை சேர்ந்த கிறிஸ்தவர் சவரிமுத்து நாடார் இச்சப்பாத்து பாதைவழி




கிழக்கு, மேற்கு பகுதிகளுக்கு பாரவண்டி ஓட்டி சென்று வந்தார். பாதுகாப்பற்ற இரவுகளை தம் உறவினர்கள் வாழும் கள்ளித்தட்டு கிறிஸ்தவர்களோடு கழித்தார். பாரவண்டி ஓட்டி வந்த ஒருநாள், ஆற்றைத்தாண்டி கீழ்புறம் வரும்போது, அவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்தது என்று பதிவிட்டுள்ளார்.

மேலும் மரண செய்தியறிந்த கள்ளித்தட்டு கிறிஸ்தவர் அன்னாரது உடலை அவர் இறந்த இடத்தில் நல்லடக்கம் செய்ய எண்ணினார். அடர்ந்த வனமாயிருந்த அப்பகுதியில், அக்காலம் வனத்தினூடே நாயர் வகுப்பினர் வாழ்ந்து வந்தனர். சவரிமுத்து நாடார் இறந்த நிலம் குமரேசன் பிள்ளை, குட்டன்பிள்ளை என்னும் நாயர் குடும்பத்திற்கு சொந்தமாய் இருந்ததும், கள்ளித்தட்டு கிறிஸ்தவர் ஒருவரின் ஒற்றிக் குழிக்கான உடமையிலிருந் ததும், நாடாரின் உடலை, தனது ஒற்றிக்குழிக் கான நிலத்தில் அடக்க முனைந்தனர். சுற்றுப்புற நாயர்கள் எதிர்த்தனர். எதிர்ப்புகளுக் கிடையே பெருவிளை, காட்டுவிளை, வீர ஆசான்மார் உதவியுடன், சவரிமுத்து நாடாரை, அவர் இறந்த இடத்திலேயே நல்லடக்கம் செய்தனர்.

கல்லறைக்கு நாயர்களால் எந்தவிதமான அழிவோ, சேதமோ, இழிவோ ஏற்படா வண்ணம் வீரமிகு காவலர்களைக் கொண்டு அதனைக் காத்து வந்தனர்.

ஆசிரியரின் ஆய்வில் கல்லறைமீது நடப்பட்டுள்ள இரட்டை சிலுவை கொல்லம் 1013–ம் ஆண்டை குறிப்பிடுவதால் சவரிமுத்து நாடார் இறந்தகாலத்தை கி.பி. 1838–ம் ஆண்டாக கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. (தற்போது இரட்டை சிலுவையாக இல்லை. மேல் பகுதி உடைந்து போயிருக்கலாம்)

### 3. செந்தீ நடராசன் - ஆய்வு

நாகர்கோவில் செம்பவளம் ஆய்வுத்தளம் அறக்கட்டளையில் – தலைவர் திரு. செந்நீ நடராஜன் அவர்களின் நேரடி ஆய்வின்படி




குருசில் தற்போது இருக்கும் எழுத்துக்களை ஆய்வு செய்து 1833–ம் வருடம் செப்டம்பர் மாதம் 17–ந் தேதி திங்கள்கிழமை பகல் 11 மணிக்கு வெங்களூரில் இருக்கும் சவரிமுத்து மகன் சவரிமுத்து கிறிஸ்துவின் கிருபை மரணமடைந்தான். வயது 22 மேலே வாசிப்பவர்கள் அவருடைய ஆத்துமத்திற்காக பரமண்டலம் (உச்சரிக்கவும்). என எழுதப்பட்டதாக பதிவு செய்துள்ளார். அக்காலம் திருவிதாங் கோடு அரசர் சுவாதி திருநாள் (1829–1847) ஆண்ட காலம் என்று ஆய்வுச் சான்று பகர்ந்துள்ளார்.

திரு. செந்தீ நடராசன் அவர்களின் கல்வெட்டுச் செய்தியும், திரு. அலெக்ஸ் குரூஸ் முத்தையா அவர்களின் ஆய்வுச் சான்றுகளும் ஏறக்குறைய ஒரே விதமான தகவல்களை தருவதால் அதுவே உண்மை என அறிய முடிகிறது.

## 1833-1910-ம் வருட காலகட்டங்களில்

'தென்பாண்டி மண்டலமான வீரநாடு' புத்தக ஆய்வு படி அக்காலம் இவ்வனப்பகுதியில் கொள்ளையர் திருடர் பயம் அதிகமிருந்தது. பகற்பொழுதிலும் கூட இப்பாதை வழியே மக்கள் செல்ல அஞ்சியகாலம். இப்பகுதி நாயர் குல ஆடவர் ஒருவர் ஒரு நள்ளிரவில் இவ்வழியே நடந்து செல்லும்போது கொள்ளையரால் துரத்தப்படவே, ஆடவர் ஓடி குருசடிபகுதியில் விழுந்ததாகவும், அங்கு ஒருவர் தோன்றி, ஆடவருக்கு தண்ணீரளந்து, காத்து இரட்சித்ததாகவும் செவிவழிச் செய்தி ஒன்று நிலவியுள்ளது. இச்செய்தியறிந்த நாயர்குடியினர், சவரிமுத்து நாடார் கல்லறைமீது குருசடி எழுப்பநிலம் வழங்கியதாகக் கூறப்படுகிறது. (பக்கம் 361)

1833–ம் ஆண்டு செப்டம்பர் 17–ம் நாள் மரணமடைந்த திரு. சவரிமுத்து என்பவரின் உறவினராக திரு. வியாகன் என்பவரின் பேரன் திரு. தர்மநாதன் அவர்களின் கூற்றுப்படி, திரு. சவரிமுத்து என்பவர் ஆண்டவர் இயேசு மீது அளவிட முடியாத பக்தியும், புனித அந்தோணியார் மீது தீராத பற்றும் கொண்டவராக இருந்திருக்கிறார். அவர் மரணமடைந்து வண்டியில் இருந்த இடம், ஆண்டவருக்கு சித்தமான இடமாக இருப்பதாகக் கருதி, அவரது உறவினர்களான கள்ளித்தட்டு கிறிஸ்தவர்கள், ஒற்றி இடமாக தற்போதைய ஆலயம் இருக்கும் இடத்தில், அவரை நல்லடக்கம் செய்து, அதில் ஒரு சிறிய குருசை நிறுவி, புனித அந்தோணியார் திருப்படத்தையும் வைத்து, பராமரித்து வந்தனர்.

இவ்விடத்தை கடந்து செல்லும் கிறிஸ்தவர்கள் மற்றும் பிற மதத்தினரும், இவ்விடத்தில் விளக்கு ஒளியூட்டப்பட்டு இருந்ததால் குருசை வணங்கி செல்வது வழக்கம். காலப்போக்கில் மக்கள் அச்சமின்றி இவ்விடத்தை கடந்து ஆற்றுப்பாலத்தை கடந்து வந்தனர். சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்னால், கல்லறைக்கும், காப்புக்காடு–கள்ளித்தட்டு பகுதி மக்களுக்கும் தொடர்பு இருந்ததால் புதுக்கடை பங்குத்தந்தை வழியாக சிறிய அந்தோணியார் சுரூபம் மந்திரித்து வைக்கப்பட்டதாக அறிய முடிகிறது. இதை

மக்கள் வணங்கி சென்றதாக தகவல் நிலவுகிறது. இவ்விடத்தை சுற்றியுள்ள பகுதிகளில், கத்தோலிக்கர்களின் எண்ணிக்கையும் பெருக தொடங்கியது.

1750–களில் மார்த்தாண்ட வர்மா அரண்மனையில் வைத்திய வேலை செய்த புல்லாங்குழி வைத்தியர் வழிமுறை உறவினர், சகாயம் வைத்தியர் வெட்டுவெந்நியில் 1945 களில் வாழ்ந்து வந்தார் என்றும், சிறு அந்தோணியார் சுரூபத்தோடு குருசடி ஒன்று அமைத்தார் என்ற கருத்தும் நிலவுகிறது.

1950–களில் வெட்டுவெந்நியை சார்ந்த திரு. அபுபக்கர் அவர்களின் தந்தைக்கு சகாயம் வைத்தியர் வாழ்ந்த இடத்தை விற்றுவிட்டு சென்றதாக திரு. அபுபக்கர் சான்று பகர்கிறார்.

### 1910-1915 காலகட்டங்களில்

இக்காலகட்டங்களில், தற்போது நாம் வணக்கம் செலுத்தும் சுரூபத்துடன் கூடிய உயரமான சுரூபக் கூண்டு அமைக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தான் குழித்துறை பாலம் கட்டப்பட்டது. 1912–ம் ஆண்டு இத்தாலி, பெல்ஜியம் நாட்டைச் சார்ந்த பொறியாளர்கள் இப்பால வேலைகளில் பணியாற்றியதாகவும், மக்கள் குருசடியில் வழிபடுவதை பார்த்து, குருசடியை மேலும் அகலப்படுத்தி, அந்தோணியார் சுரூபத்தை நிறுவி உள்ளனர். அவர்களுடைய பராமரிப்பு 1915 வரை இருந்தது.

இக்கருத்தை வலுப்படுத்தி 1992–ம் ஆண்டு, குழித்துறை தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் சுரூபத்தில் ஏற்பட்ட சிறு பழுதை சரி செய்த போது, இது இத்தாலியில் செய்யப்பட்ட சுரூபம் என முன்னோர்கள் கூறியதாக காலஞ்சென்ற உபதேசியார் திரு. தேவதாஸ் அவர்கள் 1982–களில் கூறிய கருத்து மெய் ஆகும் விதத்தில் அமைந்துள்ளது.

### 1915-1970 காலகட்டங்களில்

இக்கால கட்டத்தில் திரித்துவபுரம், காப்புக்காடு ஆகிய இடங்களில் கோயில்கள் எழுப்பப்பட்டாலும், எந்த ஆவணக் குறிப்புகளிலும் வெட்டுவெந்நி பற்றியோ, குருசடி பற்றியோ எதுவும் காணப்படாதது அக்காலகட்டங்களில் இது ஒரு கல்லறையுடன் கூடிய குருசடி என்பதாகவே கருத வேண்டியுள்ளது.

1945 வரை ஒரு வயதான பாட்டி, மற்றும் புல்லங்குழி வைத்தியரின் உறவினர் திரு. சகாயம் வைத்தியர் ஆகியோர் இதனைப் பராமரித்து வந்ததாகவும், அதன்பிறகு பராமரிப்பு இல்லாமல் விட்டதாகவும் கருத்து நிலவுகிறது.

1950–களில் திரு. ராயப்பன், கார் ஓட்டுநராக இருந்த திரு. செல்லய்யன் ஆசான் அர்ஜுனன் நாடார், செல்லம், ராமசுவாமி, பீட்டர் ஆசான் இன்னும் சிலர் கிறிஸ்மஸ் விழா நாட்களில் குருசடியை சுத்தம் செய்து, வெள்ளை அடித்தனர். வருடத்தின் பெரும்பான்மையான நாட்களில் குருசடியை சுற்றியுள்ள பகுதிகள் பராமரிப்பின்றி புதராகவே காட்சியளித்தது என்பதை பெரும்பான்மையான வாய்மொழி செய்திகள் தெரிவிக்கின்றன.

### கஞ்சி வழங்கும் கலாச்சாரம்

இறந்த ஆண்டை நினைவில் கொண்டு கஞ்சி ஊத்தும் கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது. இக்காலகட்டங்களில் அருகேயுள்ள ஸ்ரீ கண்டன்சாஸ்தா கோவில் விழாவின் போது பிரசாதமாக உணவு வழங்கப்பட்டது. அக்காலத்தில் சாதிய தாக்குதல்கள் அதிகம் இருந்ததால், தாழ்த்தப்பட்ட ஏழை மக்கள் மீதிவரும் உணவுக்காக கோயில் வளாகத்திற்கு வெளியே காத்திருப்பது வழக்கமாக இருந்தது. இதைக் கண்ட ஒரு பிரிவினர் குருசடியில் ஏழைகளுக்கு வயிறாற கஞ்சி வழங்கினர்.

### குருசும் - மக்கள் மனமும்

குருசு, இரவு நேரத்தில் இருக்கும் விளக்கு வெளிச்சம், கல்லறையோடு சேர்ந்த அந்தோணியார் படம், அதை தொடர்ந்து சுரூபம் போன்றவை மக்கள் இவ் விடத்தை கடந்து செல்லும் போது வணங்கி செல்வதும்



ஒரு பக்தியை ஏற்படுத்தியது. இவ்விடம் நாயர் சமுதாய பூர்வீக குடியினரிடம் இருந்ததால், கத்தோலிக்க முறைப்படி எந்த பக்தி முயற்சிகளும் நடந்ததற்கான எந்த தடயங்களும் தென்படவில்லை.

புதக்கடை திருத்துவபுரம் பங்குகளோடு தொடர்பில் இருந்ததாக எந்த ஆவணங்களும் இல்லை. அக்காலத்தில் வெட்டுவெந்நியில் வாழ்ந்து வந்த கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் புதுக்கடை பங்கு மற்றும் கள்ளித்தட்டு பங்கிற்கு சென்றதற்கான தடயங்கள் இல்லை. மக்கள் மனதில் புனிதம் மலர்ந்ததால், மதநல்லிணக்க குருசடியாகவே 1972 வரை இருந்து வந்துள்ளது என்பதே சான்றாக உள்ளது.

1970–களில் கட்டபொம்மன் நாடக குழுவினர் ஒரிரு நாடகங்களை குருசடி வளாகத்தில் அரங்கேற்றி வந்தனர். திரு. சந்திரசேகர் நாயர், இவ்விடத்தில் நாடகம் நடத்த அனுமதி அளித்தார். நாடகக் குழுவில் அவருடைய மகன் C. இராதாகிருஷ்ணன் நாயர் (உண்ணி) இடம் பெற்றிருந்தார்.

### 1971-1972 பல்சமய நண்பர்கள் கமிட்டி

இப்பகுதியிலுள்ள பல்வேறு சமயங்களை சார்ந்தவர்கள் இணைந்து இதை பராமரிக்க



கமிட்டி ஒன்றை ஏற்படுத்தினார்கள். அதில் அட்வகேட் சாந்தகுமார் தலைவராகவும், திரு. மதன்மோகன் லால் அவர்களை செயலராகவும், திரு. நடராஜன் அவர்களை பொருளாளராகவும், திரு. தேவதாஸ், திரு. மத்தியாஸ், திரு. பிரான்சிஸ் மைக்கேல், திரு. ஏசுதாஸ், திரு. ஜெகதீஸ், திரு. சாகுல் ஹமீது மற்றும் சிலர் உறுப்பினராக இருந்தனர்.

## கமிட்டியோடு தொடர்புடைய மற்றும் கமிட்டி நண்பர்களின் கூற்றுகள்

### அட்வகேட் சாந்தகுமார் - தலைவர்

சில நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று தலைவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.



சுற்றுவட்டார கத்தோலிக்க ஆலயங்களை நாடி வழிபாடு நடத்த கோரிக்கை வைத்து எவரும் முன்வராததால், நன்கொடை பிரித்து திருவிழா எடுக்க முடிவு செய்தோம். ஞாயிறு துவங்கி மூன்று நாட்கள் திருவிழா நடைபெற்றது, திருவிழாவின் போது ஆயர் ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களை வரவேற்று பொன்னாடை அணிவித்ததை நினைவுகூறுகிறேன். பல்சமய ஒற்றுமைக்கு என்றும் துணை நிற்பதுதான் என் கொள்கை, கருத்து என எடுத்துரைக்கிறார்.

### திரு. மதன்மோகன் லால் - செயலர்

YMCA – கலுங்கில் கூடிய கூட்டம் ‘வெட்டுவெந்நி அந்தோணியார் குருசடி திருவிழா கமிட்டியாக உரு வெடுத்தது. சுற்றுவட்டார கத் தோலிக்க ஆலயங்கள் வழிபாடு நடத்த முன் வராததால் திருவிழா அழைப்பிதழில் **“ஜாதி, மத பேதமின்றி வெட்டுவெந்நி அந்தோணியார் குருசடி திருவிழா”** என நோட்டீஸ் மற்றும் நன்கொடை ரசீது அச்சடிக்கப்பட்டது. நோட்டீஸ் இரண்டு நாட்கள் சிறந்த நிகழ்ச்சிகள் கொண்டு



வடிவமைக்கப்பட்டது. இந்த நோட்டீஸ் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் கையில் கிடைக்க பெற்றதால் அவர்கள் திருத்துவபுரம் பங்குத்தந்தை தனிஸ்லாஸ் அவர்களை அழைத்து விசாரித்ததால் உபதேசியாராய் இருந்த திரு. தேவதாஸ் அவர்கள் Fr. தனிஸ்லாஸ் அருட்பணியாளரோடு இணைந்து ஆயரை சந்தித்து திருவிழா கொண்டாடப்பட்டது. திருவிழாவிற்கு உதவியதோடு, ஆயர் அவர்கள் வருவதாக கூறி மூன்றுநாள் திருவிழாவாக மாற்றப்பட்டது. கண்டன் சாஸ்தா கோயில் மேலாளர் திரு. சுரேந்திரன் நாயர், திரு. ராஜன் ஆகியோர் குருசடியில் அன்னதானம் சிறப்பாக நடைபெறவும், மத ஒற்றுமையை பேணவும் நன்கு உதவினர். 1976–ல் மின் இணைப்பு திரு. ஏசுதாஸ் மூலம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கிறார்.

### திரு. நடராஜன் - பொருளர்



திரு. சாந்தகுமார், திரு. மதன் மோகன்லால், திரு. நடராஜன், திரு. தேவதாஸ், திரு. மத்தியாஸ், திரு. பிரான்சிஸ் மைக்கேல், திரு. ஏசுதாஸ், மேலும் வெட்டுவெந்நி, குழித்துறை, கழுவன்திட்டை போன்ற ஊர் மக்கள் உறுப்பினர்களாக இருந்தனர் என்றும், மூன்று நாள் திருவிழா நிகழ்வுகளையும், ஆயர் அவர்களுடைய வருகையையும், Fr. தனிஸ்லாஸ் முன்னிலையில் திரு. தேவதாஸ் அவர்களிடம் பொறுப்புகளை கொடுத்ததாகவும் எடுத்துரைக்கிறார். மேலும் 1972–ஆம் ஆண்டு செயலராக இருந்த திரு. மதன்மோகன்லால் அவர்களோடு இனணந்து 2018 ஆம் ஆண்டு திருவிழா பல்சமய விழாவில் கலந்து கொண்டு மகிழ்ந்தேன் என்கிறார்.

### திரு. ஏசுதாஸ்



திரு. மதன் மோகன்லால் அவர்களின் கருத்தும் இவரின் கருத்தும் பெரும்பாலும் ஒன்றாகவே உள்ளது. 1972 முதல் 1979 வரை சி.எஸ்.ஐ. கிறிஸ்தவரான நான் குழுவில் இருந்து செயல்பட்டதுடன், இன்றும் அந்தோணியாரை மனதில் கொண்டு வாழ்ந்து வருவதாக எடுத்துரைக்கிறார். 50 ஆண்டுகள் நிறைவடைந்தது என்பதை கேட்டு மகிழ்ச்சியில் திளைப்பதாக கூறுகிறார். 1974 –ல் புனரமைக்கப்பட்ட சிற்றாலய பணியில் பங்கு பெற்றது மிகவும் மகிழ்ச்சியான தருணங்கள் என்கிறார். 1976 –ல் நான் தமிழக மின்வாரியத்தில் பணியில் இருக்கும் போது சிற்றாலயத்திற்கு மின்னிணைப்பு எடுக்கப் பட்டது. 1979 வரை சிற்றாலய வளர்ச்சி பணிகளில் தன்னை ஈடுபடுத்தி கொண்டதை பெருமையாக கருதுகிறேன்.

### திரு. P. அபுபக்கர்



வெட்டுவெந்நியில் 1945–களில் வாழ்ந்த கத்தோலிக்க குடும்பங்களில் ஒன்று சகாயம் வைத்தியர் குடும்பம். இக் குடும்பம் வாழ்ந்த இடத்தை வாங்கி, அதில் வாழ்ந்து வருகிறோம் என்கிறார் இவர். சுற்றுவட்டார கோயில்களை நாடிய போது வழிபாடு நடத்த எவரும் வராத நிலையில், விழா எடுக்க முனைந்தார்கள் பல்சமய நண்பர்கள் என்கிறார் இவர். 1972– வரை எந்த வளர்ச்சியும் இல்லாது இருந்தது. தற்போது மக்களின் வழிபாடு மற்றும் குருசடியின் வளர்ச்சியை பார்த்து மகிழ்கிறார் இவர்.

### திரு. C. ராதாகிருஷ்ணன்



1950– க்கும் முன் வரை இவ்விடம் தன் அப்பாவுக்கு சொந்தமாக இருந்தது. என்கிறார். 1970–களில் கட்டபொம்மன் நாடக குழுவிற்கு நாடகம் நடிக்க தன் அப்பா அனுமதி கொடுத்ததாக கூறுகிறார். திரு. சுரேந்திரன் நாயர் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழி வகுத்தார் என்கிறார். 1984

வரை வழிபாடு நடத்த உறுதுணையாக இருந்ததுடன் 1984–ல் இவ்விடத்தை சிற்றாலயத்திற்கு அவரும், தாயார் மீனாட்சி அம்மாளும் இணைந்து விலைக்கு தந்ததாக கூறுகிறார். அதோடு பூர்வீக குடியான நாங்கள் மத நல்லிணக்கமாக இருப்பதுடன், குருசடியின் தற்போதை வளர்ச்சியை பார்த்து பூரிப்பு அடைவதாகவும் கூறுகிறார்.

இவர்களின் எழுத்துபூர்வ கூற்றை பார்க்கும் போது 1972–வரை எந்த ஒரு கத்தோலிக்க முறை வழிபாடுகளும் நடந்ததற்கான எந்த ஆதாரமும் காணப்படவில்லை. ஆனால் **'ஜாதி மத பேதமின்றி வெட்டுவெந்நி அந்தோணியார் குருசடி திருவிழா'** இவ்வளர்ச்சிக்கு முக்கிய ஆதாரமாக அமைந்தது எனலாம்.

### திருவிழா நிகழ்வுகள் :

1972 பெப்ருவரி 13,14,15 நாட்களில் திருவிழா நடந்தது. திருவிழா கமிட்டி 13,14 நாட்களுக்கு அழைப்பிதழ் அச்சடித்தாலும் ஆயர் அவர்களின் வருகையால் 15–ம் நாள் செவ்வாய்க் கிழமை சேர்க்கப்பட்டு 3–நாள் திருவிழாவாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அருட்பணி. தனிஸ்லாஸ்



திருவிழா கம்மிட்டியால்
திருவிழா எடுக்கப்பட்ட குருசடி

அனைத்து உதவிகளையும் திருவிழா கமிட்டிக்கு செய்து கொடுத்து விழா நடைபெற்றுள்ளது. திரித்துவபுரம் கோயிலுக்கு, கமிட்டியில் இருந்த தேவதாஸ் சென்று வந்ததால் அவர் வழியாக அனைத்து நிகழ்வுகளும் வகுக்கப்பட்டது.

கமிட்டி தலைவர் Adv. சாந்தகுமார் அவர்கள் ஆயர் அவர்களை வரவேற்று பொன்னாடை அணிவித்தார்கள். திருவிழா நாட்களில் தினமும் திருப்பலி நடைபெற்றது. விழாவில் கலை நிகழ்ச்சிகளாக அன்றைய புகழ் பெற்ற



தாஸ் மியூசிக்கல்ஸ், திருவனந்தபுரம் அவர்களின் இசை நிகழ்ச்சியும், கட்டபொம்மன் நாடக குழுவின் நாடகமும், சிறுவர் சிறுமியர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கண்டன் சாஸ்தா கோயில் மேலாளர் திரு. சுரேந்திர நாயர் மற்றும் திரு. ராஜன் ஆகியோர் அன்னதானம் வைக்கத் தேவையான அனைத்து பாத்திரங்களும் தந்து உதவியுள்ளனர். ஆயர் ஆரோக்கிய சாமி அவர்களின் வருகை சுற்று வட்டார மக்களை ஒன்று திரள வழி வகுத்தது எனலாம்.



விழாவில் போலீஸ் பாதுகாப்பு, பொதுக் கூட்டம், ஒலி, ஒளி அமைப்பு, கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் விழா கமிட்டியினர் மிகச் சிறப்பாக செய்து இருந்தனர். திருவிழா சார்ந்த ஆவணங்களும் காணப்படுகிறது. விழாக் கமிட்டியினர் ஆயர் ஆரோக்கிய சாமி, அருட்பணி தனிஸ்லாஸ் உடன் சேர்ந்து குழு புகைப்படம் எடுத்துக் கொள்ளப்பட்டது. விஜில் ஸ்டியோ அனைத்து நிகழ்வுகளையும் புகைப்படம் ஆக்கியது.

## 1972- க்கு பின் பல்சமய கமிட்டி :

திருவிழா திருப்பலியை தொடர்ந்து, ஒரிரு மாதத்தில் அருட்தந்தை தனிஸ்லாஸ் அவர்கள் இனி கத்தோலிக்க முறைப்படி அனைத்து நிகழ்வுகளும் நடைபெறும் என்ற தகவலை எடுத்துரைத்தார்கள். பிற மத நண்பர்கள் பொறுப்புகளை கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ நண்பர்களிடம், அருட்தந்தை. தனிஸ்லாஸ் முன்னிலையில் கொடுத்து விட்டனர். அப்போது அவர்களின் ஒரே கோரிக்கை தொடர்ந்து 3–நாள் திருவிழா நடைபெற வேண்டும் என்பதாக இருந்தது. அதை தொடர்ந்து கத்தோலிக்கரான திரு. தேவதாஸ், திரு. மத்தியாஸ், திரு. பிரான்சிஸ் மார்டின் ஆகியோருடன் இணைந்து திரு. மதன் மோகன் லால், திரு. A. ஏசுதாஸ், ஜெகதீஸ் போன்றோர் அருட்பணி. தனிஸ்லாஸ் அவர்களின் வழிகாட்டுதலில் இணைந்து செயல்பட்டு வந்தனர்.

## 1974- குருசடி சிற்றாலயமாக விரிவாக்கம் செய்தல்

அருட்பணி. தனிஸ்லாஸ் அவர்கள் தலைமையில் வளர்ச்சி கமிட்டி உதவியுடன் 1974–ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14–ம் நாள் 12 நபர்கள் வரை உட்காரும் அளவிற்கு பழைய



ஆயர் ஆரோக்கிய சாமி அவர்களால் அர்ச்சிக்கப்பட்ட சிற்றாலயம்

குருசடியை இணைத்து முன்பக்கத்தில் கோபுரத்துடன் கூடிய திறந்த வடிவ கோவில் தோற்றத்துடன் கூடிய சிற்றாயலம் கட்டப்பட்டது. ஆயர் ஆரோக்கிய சாமி அவர்களால் 14.2.1974 –ல் அர்ச்சிக்கப்பட்டு



ஆயரை திரு. தேவதாஸ் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்கள்.

திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அர்ச்சிப்புக்கு வருகை தந்த ஆயர் அவர்களை செயலர் திரு. தேவதாஸ் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்கள். மூன்றுநாள் திருவிழா நடைபெற்றது. 1972 முதல் தொடர்ந்து பெப்ருவரி மாதம் 3–நாட்கள் திருவிழா நடைபெற்று வந்தது. அது பின்னர் 1992 ஆண்டு 5 நாள் திருவிழாவாகவும் 2004 ஆண்டு 8 நாள் திருவிழாவாகவும் மாற்றப்பட்டு தற்போது 8 நாள் திருவிழாவாக இருந்து வருகிறது. 1978–1979 களில் வளர்ச்சி கமிட்டி செயல்பாடு மாற்று பரிணாமத்தை எடுத்தது.

### வெட்டுவெந்நியில் கத்தோலிக்கர்கள்

பந்தல்விளை, கண்ணக்கோடு பூர்வீக குடிமக்கள் 1880 ஆண்டுகள் வரை வேற்று மதத்தவராகவே இருந்து வந்தனர். பூர்வீகக்குடி இந்துவாக இருந்த அமரர் மனுவேல் திருமணத்தின் வாயிலாக திருமுழுக்கு பெற்று கத்தோலிக்கத்தை தழுவி உள்ளார். பேரன்களான திரு. கிறிஸ்துதாஸ் மற்றும் திரு. ராஜசேகர் கூறும் போது, அமரர் மனுவேல் குடும்பம் தற்போது வெட்டுவெந்நி பங்கில் 50 க்கும் மேல் குடும்பங்களாக வளர்ந்துள்ளது என்கிறார்கள். மேலும் 1910 ஆம் ஆண்டு கத்தோலிக்க கிறிஸ்தவரான திரு. சவரிமுத்து கள்ளித்தட்டு கரவிளாகத்தில் வசித்து வந்ததாகவும் அவருடைய மகன் அமரர். ராயப்பன் 1940 களில் வெட்டுவெந்நி சாலியன்விளையில் குடிபெயர்ந்து வந்ததாக அவருடைய 80 வயதான மகன் திரு. தனிஸ்லாஸ் சான்று பகர்கிறார். அதே போல் அமரர் திரு. தேவதாஸ் அவர்களின் சகோதரர் திரு. பர்ணபாஸ் கூறும் போது பூர்வீக இந்துவாக இருந்த என் அப்பா அமரர். அருந்தன் குஞ்சுபிள்ளை திருமணத்தின் போது 1945 –ல் திருமுழுக்கு பெற்று திரு. ஏசுதாஸ் என்னும் பெயரில் கத்தோலிக்கத்தை தழுவினார் என சான்று பகர்கிறார். கத்தோலிக்க குடும்பத்தை சார்ந்த களப்பாறையை பூர்வீகமாக கொண்ட அமரர். மரியதாஸ் 1945 ல் BOC தெரு, சிவகண்டான் விளை – ஐசக் ஆஸ்பத்திரி சமீபம் குடி வந்தார் என அவரது மனைவி திருமதி. மரியசெல்வி சான்று பகர்கின்றார். மேலும் குளச்சலை பூர்வீகமாக கொண்ட திரு. மத்தியாஸ் 1963–ல் வெட்டுவெந்நிக்கு குடிபெயர்ந்தார் என அவரது மகன் திரு. கிறிஸ்டோபர் சான்று பகர்கிறார். திரு. மரிய சிசில் திருமணத்திற்கு பின் 1975 – ல் சாலியன்விளையில் குடியமர்ந்ததாக சான்று பகர்கிறார்.

இச்சான்றுகள் அனைத்தும் தற்போது பங்கில் உறுப்பினர்களாக இருக்கும் வழிமுறை நபர்களால் வழங்கப்பட்டுள்ளது. இதை பார்க்கும் போது 1950 – 1960 களில் வெட்டுவெந்நி பகுதியில் 25 குடும்பங்கள் இருந்திருக்கலாம். மேலும் 1982 –ல் 300 நபர்கள் இருந்ததாக கோட்டாறு மறைமாவட்ட டையறக்டரி (Diocese Directory) 1983 – ல் ஆவணமாக காணப்படுகிறது.

### 1979 - 1980 களில் முதல் திருவிருந்து வகுப்பு

இக்காலகட்டம் வரை வளர்ச்சி கமிட்டி திருப்பலிக்கு தேவையான உதவிகளை செய்வது, இடத்தை சுத்தம் செய்வது, காணிக்கையை எடுத்து அருட்தந்தையிடம் கொடுப்பது, திருவிழா காலங்களில் திருவிழாவிற்கான ஏற்பாடுகளை செய்வது போன்றனவாக இருந்து வந்தது.

இவ்வேளையில் அருட்தந்தை தனிஸ்லாஸ் அவர்களின் அனுமதி பெற்று முதல் திருவிருந்து வகுப்பை துவங்கினார் அமரர். தேவதாஸ் அவர்கள். வெட்டுவெந்நி, குழித்துறையை சார்ந்த 14 நபர்கள் பங்கு கொண்டார்கள். இதன் மூலம் குழித்துறை சந்திப்புக்கு முன் உள்ள கத்தோலிக்க குடும்பங்களும் குருசடிக்கு வர துவங்கினர். திருத்துவபுரம் பங்கிற்கு புதிய பங்குத்தந்தையாக 1980 ஆம் ஆண்டில் அருட் தந்தை ஏசுதாசன் தாமஸ் அவர்கள் பொறுப்பேற்றார். அவர்கள் முன்னிலையில் திருவிருந்து மற்றும் உறுதிபூசுதல் அருட்சாதனங்களுக்கான இறுதி

கட்ட பயிற்சிகளை திரித்துவபுரம் புனித அன்னாள் சபை அருட்சகோதரிகள் அளித்தனர். 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13 நாள் திருத்துவபுரத்தில் நடைபெற்ற திருவிழாவின் போது பெரியவர்கள், சிறியவர்கள் என 14 நபர்களுக்கும் முதல்திருவிருந்து மற்றும் உறுதிபூசுதல் ஆயர் ஆரோக்கியசாமி அவர்களால் வழங்கப்பட்டது.

### 1981-1982 மறைக்கல்வி துவக்கம் :

முதல்திருவிருந்து வகுப்பை தொடர்ந்து அமரர். தேவதாஸ் அவர்களால் 8 சிறுவர், சிறுமிகளை கொண்டு முதல் மறைக்கல்வி வகுப்பு 1981 ஜூன் மாதம் துவங்கப்பட்டது. ஞயிற்றுக்கிழமைகளில் மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை மறைக்கல்வியும் அதை தொடர்ந்து ஜெபமாலை, நவநாள் நடைபெற்றது. இதை அமரர். தேவதாஸ் மற்றும் செல்வி. ஆனிலெட் அவர்கள் வழிநடத்த மாணவர்கள் மற்றும் அவர்களின் பொற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 1982 பெப்ருவரி 3 நாள் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. இதை தொடர்ந்து மக்களிடம் ஞாயிறு திருப்பலி வேண்டும் என்ற கருத்து நிலவத்துவங்கியது.

### கத்தோலிக்கர்களை கொண்ட முதல் வளர்ச்சிகுழு 1982-1989

வளர்ச்சி கமிட்டியில் அருட்தந்தை ஏசுதாசன் தாமஸ் அவர்கள் தலைமையில் உதவி தலைவராக திரு. ராஜையன், செயலராக திரு. K. தேவதாஸ், துணைச்செயலராக திரு S. கிறிஸ்துதாஸ், பொருளராக திரு. R. தனிஸ்லாஸ் உறுப்பினர்களாக அமரர் V. மரியதாஸ், திரு. A. அம்புறோஸ், S. அமலதாஸ், R. ஜாண்றோஸ், G. டென்னிஸ், அமரர் D. தாஸ், திரு. M. கிறிஸ்டோபர், திரு. A. பாபு, திரு. கிறிஸ்டல் ஆகியோர்களைக் கொண்டு அமைக்கப்பட்டது.

### 1982- ஞாயிறு திருப்பலி - கிளைப்பங்கு

அருட்தந்தை ஏசுதாசன் தாமஸ் அவர்களால் புதிய வளர்ச்சி குழுவுக்கு மேதகு ஆயர்


DIRECTORY
OF THE
DIOCESE OF KOTTAR

The Directory Committee.
1983

அவர்களின் அனுமதி பெறப்பட்டது, வெட்டு வெந்நியில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்தது. ஞாயிறு திருப்பலி கேட்கும் மக்களின் கோரிக்கை தொடர்ந்து வளர்ச்சி குழுவில் எடுக்கப்பட்ட பரிந்துரையின் படி, அருட்தந்தை யேசுதாசன் தாமஸ் அடிகளார் ஆயர் அவர்களிடம் ஞாயிறு திருப்பலி வேண்டி அனுமதி கோரினார்கள். இதன் பயனாக **1982 திருவிழாவைத்** தொடர்ந்து ஆயர் ஆரோக்கியசாமி ஆண்டகை அவர்களால் **ஞாயிறு திருப்பலி காலை 5.30–க்கு** மணிக்கு நடைபெறும் என்ற அறிவிப்பு வெளியானது. திரித்துவபுரத்தின் கிளைப்பங்காக வெட்டுவெந்நி மாறியது. (கோட்டாறு மறைமாவட்ட டயரட்டரி 1993).

பின்னர் தாய்ப்பங்கான திரித்துவபுரத்திற்கு ஏற்கெனவே கிளைப் பங்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும், காலையில் நடைபெற்ற திருப்பலியானது ஆயரின் ஒப்புதலுடன் மாலை 5.00 மணிக்கு மாற்றப்பட்டது. எனவே 3.00 மணி முதல் 5.00 மணி வரை பாடல் பயிற்சி, மறைக்கல்வி வகுப்பு, ஜெபமாலை தொடர்ந்து திருப்பலி நடைபெற்று வந்தது.

### சிற்றாலயத்திற்கு நிலம் வாங்குதல் :

1984 ஆம் ஆண்டு சிற்றாலயத்தை சுற்றியுள்ள நிலத்தை வாங்க கமிட்டி எடுத்த முயற்சிக்கு நல்ல பலன் ஏற்பட்டது. கமிட்டி உறுப்பினர்கள் சேர்ந்து ரூ. 10950/–நிலம் வாங்க நன்கொடை வெட்டுவெந்நி மக்களிடம் வசூலித்தனர். 15.11.1984 ஆம் ஆண்டு ரூ. 50000 க்கு நிலம் வாங்கப்பட்டது. திரு. மரியசிசில் நிலம் வாங்குவதில் முக்கிய பங்கு வகித்தார். இதை தொடர்ந்து 1984 ஆம் ஆண்டு திரு. மரிய சிசில், அருட்தந்தை ஏசுதாசன் தாமஸ் அவர்களின் நியமன உறுப்பினராக கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப் பட்டார். இக்கமிட்டியானது மாதம்தோறும் கூடி வளர்ச்சி பணிகளை செய்து வந்தது. ஞாயிறு மற்றும் செவ்வாய்கிழமைகளில் திருப்பலியின் போது உதவி, திருவிழாக்கள் மற்றும் குருசடிக்கான வளர்ச்சிகளை முன்னெடுத்து வந்தது.

### 1987 ஆம் ஆண்டு புனித வின்செண்ட் தே பவுல் சபை துவக்கம்

திரு. மரியதாஸ் தலைவராகவும் திரு. S. சேவியர் ராஜ் செயலராகவும் திரு. R. தனிஸ்லாஸ் பொருளராகவும் கொண்டு 12 உறுப்பினர்களுடன் துவங்கப்பட்டது. 1989 வரை வளர்ச்சி கமிட்டியில்



திருப்பலி பீடம் மாற்றப்பட்ட சிற்றாலய விரிவாக்கம்

உள்ள அனைவரும் வின்செண்ட் தே பவுல் சபை உறுப்பினர்களாக இருந்தனர். வின்செண்ட் தே பவுல் சபையின் வீடு சந்திப்பு, மற்றும் மருத்துவ, உணவு, கல்வி உதவிகள் ஒவ்வொரு வாரமும் நடைபெற்றது. இதன் பலனாக ஆலயத்திற்கு வராதோர் வர துவங்கினர், புதிய உறுப்பினர்கள் சேர்ந்தனர். பங்கு தளத்தில் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததோடு ஆலயத்தில் செயல்படுவோர் எண்ணிக்கையும் அதிகரித்தது.

### சிற்றாலய விரிவாக்கம்

சிற்றாலய விரிவாக்கம் அருட்பணி யேசுதாசன் தாமஸ் வளர்ச்சி குழுவின் உதவியுடன் சிற்றாலயத்தின் பின்னால் 100 பேர் அமர்ந்து திருப்பலியில் பங்கேற்கும் அளவிற்கு திறந்தவெளி கட்டிடத்துடன் கூடிய அறை ஒன்றும் சேர்த்து ஆலய விரிவாக்கம் செய்தார்கள். இவ்வாலய விரிவாக்கம் 04.04.1989–ஆம் ஆண்டு மேதகு ஆயர் லியோன் அ. தர்மராஜ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. அதன் பிறகு விரிவாக்கம் செய்த இடத்தில் திருப்பலி நடத்தப்பட்டது.

### 1989 -ல் இரண்டாவது வளர்ச்சி கமிட்டி -பங்கு பேரவை (1989-1994 வரை)

1989 –ல் வளர்ச்சி கமிட்டி மாற்றி அமைக்கப்பட்டது. செயலராக செயல்பட்டு வந்த திரு. K. தேவதாஸ் ஆலய உபதேசியார் பணியை செய்து வந்ததால் திரு. மரியசிசில் செயலராக பொறுப்பேற்றார். புதிதாக திரு. ராஜன் உறுப்பினராக சேர்த்துக்கொள்ளப்பட்டார். அருட்தந்தை யேசுதாசன் தாமஸ் அவர்களால் ஆயர் அனுமதி பெறப்பட்டது.

### அருட்பணி யூஜின் குழந்தை - 1989

அருட்தந்தை யூஜின் குழந்தை அவர்கள்



தலைமையில் அருட்தந்தை யேசுதாசன் தாமஸ் அவர்களால் அமைக்கப்பட்ட வளர்ச்சி குழு (பங்கு பேரவை) செயல்பட துவங்கியது. பங்கு பேரவையில் முடிவெடுத்து அந்தோணியார் கூண்டிற்கான சாவி உபதேசியார் மற்றும் பொருளர் சார்பாக திரு. ராஜன் ஆகியோரிடம் வழங்கப்பட்டது. 24/38 கதவு எண்ணிற்கு மும்முனை இணைப்பு பெறப்பட்டது. பாடகர் குழு துவங்கப்பட்டு இசைக்கருவிகள் வாங்கப்பட்டு புனரமைக்கப்பட்டது.

மூன்று நாள் திருவிழாவானது ஐந்து நாள் திருவிழாவாக மாற்றி அமைக்கப்பட்டது. ஆலயத்திற்கு பங்குத்தந்தை பெயரில் மூன்று நபரிடமிருந்து 126 சென்ட் நிலம் வாங்கப்பட்டது.

குடிநோய், மனநோய்க்கு சேவை புரியும் பொருட்டு பங்கு பேரவையால் மருத்துவக் குழு, உயர் கல்விக்கு உதவி புரியும் பொருட்டு உயர்கல்வி குழு, 1992 வெள்ளப்பெருக்கில் அவதிப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டு பேரிடர் நிவாரண குழு துவங்கப்பட்டது.

01.09.91–ல் மறைக்கல்வி மன்றம் துவங்கப்பட்டது. 18.02.1992–ல் எல்கையுடன் கூடிய கிளைப்



செயற்கை வைரம் பட்டை தீட்டும் நிலையத்தில் பணியாற்றிய பணியாளர்கள்

பங்கு செயல்திட்ட ஆணை ஆயர் லியோன் அ. தர்மராஜ் அவர்களால் வழங்கப்பட்டது. பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த செயற்கை வைரம் தீட்டும் நிலையம் ரூ. 150000–ல் துவங்கப்பட்டது அதில் 18 பேர் பணியாற்றினார்கள்.

08.09.1992 அன்று முதல் பகல் நேரப்பணியாளராக திரு. ஜார்ஜ் அவர்கள் பங்குப் பேரவையால் பணியமர்த்தப்பட்டார்கள்.

### இளம் கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம்- 1993

1992–ல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது மிகவும் அற்புதமாக பங்கு பேரவையோடு சேர்ந்து செயலாற்றிய இளைஞர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் தலைவராக A. அம்புறோஸ், செயலராக T. தேவராஜ், பொருளராக M.சுனில் பிரகாஷ் செயலாற்றினர். சட்ட ஆலோசகராக Advt. சாந்தகுமார் (1972 வளர்ச்சி குழு தலைவர்) செயலாற்றினார்கள் என்பது சிறப்பு.

பேரிடர் காலத்தில் வின்சென்ட் தே பவுல் சபையின் ஒத்துழைப்பு நன்றாக இருந்தது. 527 மக்களைக் கொண்டு 109 குடும்பங்களாக கிளை பங்கு வளர்ச்சி கண்டு இருந்தது.

### அருட்பணி வி. இராபர்ட் 1994 முதல் 98 வரை

11 வார்டுகளில் உள்ள 18 வயதிற்கு மேற்பட்டோர்களைக் கொண்டு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு 25 – 8 – 96 இல் தேர்தல் நடைபெற்றது.11 வார்டு பிரதிநிதிகளும் நான்கு பக்த சபை உறுப்பினர்கள், மூன்று நியமன உறுப்பினர்கள் ஆக மொத்தம் 18 உறுப்பினர்களைக் கொண்ட மக்களால் தேர்வு செய்யப்பட்ட பங்கு அருட்பணிபேரவை ஆயர் ஒப்புதல் பெற்று அருட்பணி இராபர்ட் அவர்கள் தலைமையில் செயல்பட்டது.

### இரண்டாவது பங்கு பேரவை (25.08.96 - 05.01.99)

பங்கில் வழிபாட்டு குழு அமைக்க தீர்மானிக்கப்பட்டது.

இளைஞர் இயக்கம், இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்னதான கஞ்சி குழு உருவாக்கப்பட்டது. VSCS வங்கியின் 20 பங்குகளை வாங்கவும், 11 வார்டு உறுப்பினர்களைக் கொண்ட VSCS வளர்ச்சி சங்க கிளை நமது பங்கில் அமைக்க தீர்மானிக்கப்பட்டது.



பங்கு பேரவை உறுப்பினர் திரு. D. ராஜாமணி அவர்கள் பங்குபேரவைக்கு தனது உறவினர்கள் நன்கொடையாக கோயில் முகப்புக் கட்டி தருவதாகக் கூறி அனுமதி கேட்டார்கள்.

அதை ஏற்றுக்கொண்ட பங்குப்பேரவை மேதகு. ஆயர் லியோன் அ. தர்மராஜ் அனுமதி பெற்று செம்பருத்தி பூ வடிவிலான குருசடி அமைக்க பங்குபேரவை அனுமதி அளித்தது. உறுப்பினர் திரு ராஜாமணி அவர்களின் உறவினர் திரு. வேல்தாஸ் திரு. பொன்னப்பன் ஆகியோரால் புதிய செம்பருத்திப்பூ வடிவ முகப்பு கட்டித்தரப்பட்டது. கூண்டிற்கான பளிங்கு கற்களுக்கான வேலை பங்கால் புதுப்பிக்கப்பட்டது.

பங்குக்கு பொருட்கள் வாங்கும் போது ரசீது வாங்கவும் முடிவு செய்யப்பட்டது. **அன்னதான கணக்கு மாதம் தோறும் பங்கு பேரவையில் படித்து ஒப்புதல்** பெற வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

1998 ஜனவரி முதல் ஞாயிறு திருப்பலியும் ஆரம்பிக்கப்பட்டது. மந்திரிக்கப்பட்ட புனித எண்ணெய், திருப்பண்ட பொருட்கள், புத்தகங்கள் விற்பனை நிலையம் புனித வின்சென்ட் தே பவுல் சபையினரால் நடத்தப்பட்டது. புனித வின்சென்ட் தே பவுல் சபை, கிராம முன்னேற்ற சங்கம், விளவங்கோடு வளர்ச்சி சங்கம், மரியாவின் சேனை இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம், இளைஞர் இயக்கம் 1997– 1998 ஆம் ஆண்டு சிறப்பாக நடைபெற்றதாக ஆண்டறிக்கை கூறுகிறது. **இரவு காவலர் பேரவையால்** நியமிக்கப்பட்டார்.

### 3-வது பங்குபேரவை
### 1999 முதல் 2002 வரை செயல்பாடுகள்:

அருட்தந்தை அந்தோணி M . முத்து தலைமையில் பங்கு பேரவை திறம்பட செயல்பட்டு, குடும்ப விபரம் மறு சீரமைப்பு செய்து புதிய குடும்ப அட்டை கொடுக்கப்பட்டது. 11 வார்டுகளாக இருந்த அமைப்பை, ஆறு அன்பியங்களாக மாற்றி அமைத்து புனரமைக்கப் பட்டது.

தொடக்க கூட்டுறவு வங்கி கணக்கு எண் 647 / 7 மற்றும் பங்கு பேரவை கூட்டு கணக்கு எண் 1042 முடித்து பணம் பெறப்பட்டு, VSCS வங்கியில் புதிய கணக்கு தொடங்கப்பட்டது. வைப்பு நிதிகள் அனைத்தும் VSCS வங்கிக்கு மாற்றப்பட்டது.

நம் தாய் பங்கான திருத்துவ புரத்திற்கு ஆயர் அவர்கள் 18.08.1999–இல் வந்த போது **புது நன்மை, உறுதி பூசுதல்** நம் பங்கு மக்களுக்கும் வழங்கப்பட்டது.

1972–ல் இருந்து எல்லா திருவிழாக்களிலும் மத நல்லிணக்க விழா நடைபெற்று வந்தாலும் 2000–ம் ஆண்டு மிகவும் சிறப்பாக **பூஜிதகுரு பால பிரஜாதிபதி அடிகள், திரு பீர் முகமது, திரு விக்டர்** கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஊர் கூட்ட தீர்மானப்படி, 16 சென்ட் நிலம் கல்லறை தோட்டத்திற்கு ஒதுக்கப்பட்டது. செயற்கை பட்டை தீட்டும் நிறுவனத்தின் கணக்குகள் முடித்து பங்கு கணக்கில் சேர்க்கப்பட்டது.

கோட்டாறு மறை மாவட்ட ஜூபிலி ஆண்டு 2000–த்தை முன்னிட்டு 7 ஆலயங்கள் (கோட்டாறு, குளச்சல், சகாய நகர், சுங்கான் கடை, திருவிதாங்கோடு, புலியூர்குறிச்சி, வெட்டுவெந்நி) திருத்தலங்களாக அறிவிக்கப் பட்டது. அன்று சிறப்பாக திருப்பலி நிறைவேற்றி கொண்டாடப் பட்டது.

அன்னதானம், உளநல மையத்திற்கு தனித்தனி கணக்குகள் பங்குத்தந்தை மற்றும் பங்கு பொருளாளர் கொண்டு V S C S – ல் துவக்கப்பட்டது.

பாலவிளை ஆலயத்திற்கு ரூபாய் 50,000–ம் மற்றும் அறிவியல் கலை கல்லூரி போன்றவற்றிற்கு கடன் தொகையும் வழங்கப்பட்டது.

முதல் சமபந்தி 2001 திருவிழாவின் போது நடைபெற்றது. **சமபந்தியில் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு N. டென்னிஸ் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இதில் அருட்தந்தை அந்தோணி M. முத்து அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.** முதல் சமபந்தியில் 5000 நபர்களுக்குமேல் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



சமபந்தியில் நாடாளுமன்ற உறுப்பினர் N. டென்னிஸ் மற்றும் பங்குத்தந்தை அந்தோணி M. முத்து பங்கேற்கும் காட்சி

திருத்துவபுரம் பங்கிற்கு ரூபாய் மூன்று லட்சம் கடனாக கொடுக்கப்பட்டது.

### நான்காவது பங்குப்பேரவை 2002 முதல் 2006 வரை

அருட்பணி க. ஜார்ஜ் தலைமையில் புதிய பங்குபேரவை 2004 –ல் அமைக்கப்பட்டது. புதிய பங்கு பேரவையில் 33 சதவீதம் பெண்கள் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டது. கோட்டாறு மறை மாவட்ட ஆயர் இல்லத்தில் பயிற்சி மற்றும் சிறப்பு நிதி குழு பற்றிய கலந்தாய்வின் அடிப்படையில் ஆயர் அவர்கள் சிறப்பு நிதிக்குழு வழிமுறையை வழங்கினார்கள்.

2003–ஆம் ஆண்டு மறை மாவட்ட ஐந்து பிரதிநிதிகள், வெட்டுவெந்தி பங்கின் நான்கு பிரதிநிதிகள் கொண்டதாக சிறப்பு நிதிக்குழு அமைத்து, சிறப்பு நிதிக்குழு ஆணை மற்றும் வழிமுறை ஆணைகளை தந்தார்கள்.

வின்சென்ட் தே பவுல் சங்கம் நடத்தி வந்த திருப்பண்ட நிலையம் 01.06.2003 முதல் பங்கின் பொறுப்பிற்கு வந்தது.

மருத்துவக் குழு ஊழியர்கள் செல்வீனம்மாள், மரிய ரோஸ் அவர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. 4.1.2004– ல் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

ஐந்து நாள் திருவிழா 8–நாள் விழாவாக தீர்மானம் எடுக்கப்பட்டு பங்கு பேரவையால் நிறைவேற்றப்பட்டது.

அன்னதானம், திருப்பண்டம், மருத்துவ குழு கணக்குகள், பங்கு கணக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

பங்கு பேரவையால் நிர்வகித்து வந்த காணிக்கை தங்கம் வெள்ளி காணிக்கை பொருள்கள் சிறப்பு நிதிக்கென தனிக்கணக்காக பேணப்பட்டது.

2004–ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்டம் பங்கு பேரவையால் சமர்ப்பிக்கப்பட்டு நிதி குழுவில் ஒப்புதல் பெற்று நிதி பெற்று பங்கு பேரவை நிர்வாகம் செயல்பட்டது.

### அருட்பணி டோமினிக் சாவியோ – 2004

மேதகு ஆயர் லியோன் அ தர்மராஜ் அவர்களின் பங்கு சந்திப்பிற்கு வருகையின் போது, ஆலய விரிவாக்கம் மற்றும் பணியாளர் இல்லம் கட்டுவது தொடர்பாக பேசப்பட்டு உடனடியாக பணி துவங்க சொன்னார்கள்.

சிறப்பு நிதி குழுவில் பங்கு பேரவை செயலர் சேர்க்கப்பட்டார்.

புதிய ஆலய விரிவாக்கத்திற்கு வட்டார முதன்மை பணியாளர் அருட்பணி வின்சென்ட் அடிகளார் 23.01.2006–ல் அடிக்கல் நாட்டினார்.

பங்குத்தந்தை டோமினிக் சாவியோ பணிகளை விரைந்து நடத்தினார்.

அன்னதான அரங்கிற்கு அருட்பணி டோமினிக் சாவியோ 23.01.2006–ல் அடிக்கல் நாட்டினார்.

## ஐந்தாவது அருட்பணிப்பேரவை
09.09.2006 முதல் 06.06.2009 வரை

அருட்பணி. டோமினிக் சாவியோ அவர்களின் தலைமையில் பங்கு அருட்பணிப்பேரவை செயல்பட துவங்கியது.

அன்னதான இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டது. பங்கு மக்கள் பக்தர்கள் வசதிக்காக கழிவறைகள் கட்டப்பட்டது. பழைய மெழுகு பங்கிற்கு சொந்தமானது என அறிவிக்கப்பட்டது. 15 K V A ஜெனரேட்டர் வாங்கப்பட்டது.

**17.04.2007–ல் கோட்டாறு மறை மாவட்ட பரிபாலகர் V. மரியதாசன் அவர்களால் புதிய விரிவாக்க ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது.**



விரிவாக்கம் செய்யபட்ட ஆலய தோற்றம்





அந்தோணியார் கூண்டின் தோற்றம்

உயர்கல்வி திட்டத்திற்கு ரூபாய் 1, 60,000/– F D – ல் போடப்பட்டது. முதல் உயர்கல்வி திட்டத்தில் சாலியன்விளை அன்பியத்தை சார்ந்த மாணவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

புதிய கல்லறைத் தோட்டம் 16 சென்ட் நிலத்தில் சீரமைக்கப்பட்டது.

பங்குதந்தையர் இல்லம் கட்ட மேதகு ஆயர் பீட்டர் ரெமெஜியூஸ் அவர்களால் 01.07.2008



பங்குத்தந்தையர் இல்லம்

அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து பங்கு தந்தையர் இல்லம் கட்டும் பணி நடைபெற்றது.

**இறுதிச் சடங்கு திருப்பலி பங்கில் நடைபெறும் என்று 11.01.2009–இல் பங்கு தந்தையால் அறிவிக்கப்பட்டது.**

10.02.2009 அன்று மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் பங்குத்தந்தையர் இல்லம் அர்ச்சிக்கப்பட்டது.

26.5.2009 அன்று மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் நமது வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலம் குமரி மாவட்ட முதன்மை திருத்தலமாகவும், தனிப்பங்காகவும் செயல்படும் எனவும், அருட்பணி S. வின்செண்ட் அடிகளார் திருத்தல அதிபராகவும், பங்கு தந்தையாகவும் செயல்பட பொறுப்பு வழங்கப் படுவதாகவும் அறிவித்தார்.

## ஆறாவது பங்குப்பேரவை
## (26.6.2009 - 12.8.2012)

அருட்பணி. S. வின்சென்ட் அவர்களின் தலைமையில் பங்கு அருட்பணிப்பேரவை செயல்பட துவங்கியது.

1972 முதல் 1987 வரை நமது பங்கில் செயலாளராகவும் உபதேசியாராகவும் பணியாற்றிய திரு தேவதாஸ் அவர்கள் இயற்கை எய்தினார். அவரின் அடக்கச் செலவுகள், கல்லறை கட்டுமான செலவுகள் அனைத்தும் பங்கு பேரவை செய்தது.

புனித வின்சென்ட் தே பவுல் சபைக்கு மெழுகுவர்த்தி மற்றும் எண்ணெய் அடைக்க பங்குக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்ட அனுமதிக்கப்பட்டது.

சேம்பறவிளை அன்பியம் கோட்டைக்காட்டு விளை, தெங்கன் குழிவிளை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

பங்கில் நடைபெறும் திருமணங்களுக்கு கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டது. பங்கு அலுவலகத்திற்கு கணினி வாங்கப்பட்டது. அதில் Tally படித்த ஒருவர் பகுதி நேர பணியில் அமர்த்தப்பட்டார்.

**நற்செய்தி அறிவிப்புக்காக அதிக காணிக்கை கொடுத்ததற்காக 16. 2 . 2010 தமிழ்நாடு, பாண்டிச்சேரி ஆயர்களின் கூட்டு திருப்பலியில் கேடயம் பரிசாக வழங்கப்பட்டது.**

திருவிழா நிறைவு நாளில் மத நல்லிணக்க விழாவில் திரு. கிருஷ்ணராஜ், திரு. புருஷோத் தமன் நாயர், திரு. ஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நமது பங்கில் திருமணமாகி 25 ஆண்டு நிறைவு பெற்று வெள்ளி விழா காணும் தம்பதிகளை திருப்பலியில் சிறப்பித்து பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

கோவில் விரிவாக்க கட்டிடம் கட்ட ரூபாய் 60 லட்சம் முதல் கட்டமாக பணி செய்ய கொடுக்கப்பட்டது.

பங்கில் வைக்கப்பட்டுள்ள பெயர் பலகைகள் பெரிய அளவில் வைக்கப்பட்டது. ஆலயத்தின் முன்னால் பக்தர்கள் அமர்வதற்கு ஷெட் அமைக்கப்பட்டது.



ஆலய முன்புற ஷெட்

## ஏழாவது அருட்பணிப்பேரவை
## (12.08. 2012 - 9.7.2015)

அருட்பணி. S. வின்சென்ட் அவர்களின் தலைமையில் பங்கு அருட்பணிப்பேரவை செயல்பட துவங்கியது.

74 சென்ட் நிலம் வாங்க ரூ. 3,52,46,334 செலவானது, இதில் ரூ. 24 இலட்சம் ரூ. வட்டியில்லா கடனாக பங்கு மக்களிடம் வாங்கி பிறகு திருப்பி செலுத்தப்பட்டது.

நமது கோயிலின் பின்பக்க விரிவாக்கத் துக்கு கட்டடக்குழு, பங்குத்தந்தை தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் உத்தேசக் கணக்கு 1 கோடியே 90 இலட்சம் அதில் முதல் கட்ட பணி ரூ. 80 இலட்சம் 8.3.2015 –ல் கொடுக்கப்பட்டது.

பங்கில் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகை (போர்டு) புதுப்பிக்கவும் (NH 47) தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலிருந்தும் மக்கள் பார்க்கும் விதத்தில் 20'x10' அளவில் பெரிய போர்டு 9.8.2015 –ல் வைக்கப்பட்டது.

புதிதாக 24 சென்ட் நிலம், 1 கோடியே 24 இலட்சம் ரூபாயில் 30.9.2015 இல் வாங்கப்பட்டது.

## எட்டாவது அருட்பணிப்பேரவை (9.7.2015 - 2018)

புனித அந்தோணியார் சமூக நல அரங்கு கட்டப்பட்டது.





விழா அரங்கம்

வட்டார முதியோர் தின விழா நமது பங்கில் வைத்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பழைய ஆவணங்கள் குறைந்தது பத்து வருடங்களாவது பாதுகாக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.



உணவு அரங்கம்

அரங்கை திருமண மண்டபமாக பயன்படுத்த ஏதுவாக 300 பேர் அமர்ந்து சாப்பிடுவதற்கு வசதியாக புதிய உணவு செட் போடப்பட்டது.





கார் பார்க்கிங்

பீடத்தின் முன் ஒரு பக்கம் மாதா சொரூபமும் மறுபக்கம் சூசையப்பர் சொரூபமும் அன்பளிப்பாக பெறப்பட்டு அதற்கு கூண்டும் அன்பளிப்பாக பெறப்பட்டது.

## அசாதாரண நிலை - 2018-2019

குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் அவர்களின் ஆணைஎண் FA–156/216/SP Date 12/12/2016 – ன் படி இறைமக்கள் சமூகத்தோடு இணைந்த திருத்தலமாக வெட்டுவெந்நி, திருவிதாங்கோடு, புலியூர்குறிச்சி, சுங்கான்கடையும் அறிவிக்கப் பட்டது. அதே நேரம் வெட்டுவெந்நியை நட்டாலத்தோடு ஒப்பிட்டு சேர்க்கும் வகையில் பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்களின் பங்குபேரவை கூட்டத்தின் போது ஆத்திரமூட்டும் பேச்சும் பங்குப்பேரவையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால், ஆத்திரமடைந்த பங்கு மக்கள் ஒன்றிணைந்து போராட்டமாக முன்னெடுத்தனர்.

அருட்பணி. ரசல்ராஜ், அருட்பணி. வின்சோ ஆன்றனி. அருட்பணி. அருள்தேவதாசன், திரு. இராஜப்பன் ஆகியோர் தொடர்ந்த காவல்துறை வழக்குகளாலும், R D O அலுவலக பிணைய ஒப்பந்த மூலமாக மன அழுத்தங்களும், பங்கு மக்கள் கைது, மறைமாவட்டத்தால் பங்கு பேரவை நிர்வாகிகள் மற்றும் சிறப்பு நிதிக்குழு செயலாளர் டிஸ்மிஸ் ஆகியவற்றால் ஆத்திர மடைந்த பங்கு மக்கள் தொடர் போராட்டத்தை கையிலெடுத்தனர். இக்கால கட்டங்களில் புதிய பங்கு பேரவை அமையும் வரை எவ்வித ஆவணங்களும் பாதுகாக்கப்படவில்லை. (2018–2019)

## அருட்பணி. மரிய மார்ட்டின் 2019

அருட்பணி. மரிய மார்ட்டின் பங்குப் பணியாளராக பொறுப்பேற்றவுடன், மறைமாவட்ட நிர்வாகத்துடன் பேசி சமாதான பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தி பங்குமக்களை சமாதானப்படுத்தி, புதிய ஆணையை பெற்றுத் தந்ததால் இதற்கு மேல் உள்ள பங்கு மக்களின் கோரிக்கைகள் புதிய ஆயர் அவர்களுடன் பேசி முடிவு காண முடிவு செய்யப்பட்டது.

புதிய பங்குப்பணியாளர் அருட்பணி. மரிய மார்ட்டின் அவர்களின் பணி பங்கு மக்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தியதுடன், பங்கில் இணைந்து பணியாற்ற தூண்டுதலாக அமைந்தது. அருட்பணி. M. அந்தோணி முத்து புதிய அதிபராக பொறுப்பேற்றார்.

சமாதான குழுவின் முயற்சியால் பல கட்ட பேச்சுவார்த்தைக்கு பின் அருட்பணி. அந்தோணி M. முத்து பங்குத்தந்தையாகவும், அதிபராகவும் அருட்பணி. மரிய மார்ட்டின் இணை பங்குதந்தையாகவும், துணை அதிபராகவும் பங்கில் பொறுப்பெடுத்து வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் புதிய பங்கு பேரவை தேர்வு செய்து, வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தியதால் பங்கு சமூகம் வளர்ச்சி நோக்கி பயணித்தது.

பலமுறை மறைமாவட்ட சமாதான குழு பேச்சு வார்த்தைக்கு பிறகு, மேதகு ஆயர் அவர்களால் உடன்படிக்கை ஏற்பட்டு சமாதான நிலைக்கு பங்கு மக்கள் திரும்பினாலும், நீதிமன்ற வழக்குகள் பங்கு மக்களை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. மேதகு ஆயர் ஜெரோம் தாஸ் அவர்கள் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலமும் பங்கும் வேறு வேறு அல்ல, ஒரே அலகு தான் என்று அறிவித்தார்கள்.

## ஒன்பதாம் அருட்பணிப் பேரவை 2019 முதல் இந்நாள்வரை

பங்குத்தந்தை அருட்பணி அந்தோணி M. முத்து, இணைப் பங்குத்தந்தை அருட்பணி. மரிய மார்ட்டின் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறோம்.

சனவரி 12–ம் நாள் 2019 நாள் குறிப்பிட்ட குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் அவர்கள் வழங்கிய ஆணை மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் திருத்தலம் மற்றும் பங்கு வெவ்வேறு அல்ல; இரண்டும் ஓர் அலகாகவே செயல்படும் என்ற ஆணைக்கு இணங்கி புதிய அருட்பணிப் பேரவைக்கான தேர்தல் 2.6.2019 அன்று மறைமாவட்ட பொது நிலையினர் பணிக்குழுவினரால் நடத்தப் பட்டு முடிவுகள் தெரிவிக்கப்பட்டன.

திருத்தல வருவாயில் 10% ஏழைகளுக் கானது, அது உண்மையான ஏழைகளைக் கண்டறிந்து உதவி வழங்க வேண்டும் என்ற நோக்கில் அருட்பணி. அந்தோணி M. முத்து, திரு. கிரேசியஸ், திரு. தேவராஜ் திருமதி. ஜெனட் இவர்களைக்கொண்ட ஒரு உதவிக் குழு உருவாக்கி மனுதாரரின் வீடுகளுக்குச் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்து உதவிகள் செய்யப்படுகிறது.

இது தவிர பங்கிலுள்ள ஏழை மாணவர்களுக்கு வருடந்தோறும் கல்வி உதவியும் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியும் மருத்துவ உதவியும் வழங்கப்

படுகிறது. இதற்காக வங்கியில் நிரந்தர வைப்புத் தொகை வைக்கப் பட்டுள்ளது.

பங்கு வருவாயில் 10% அ.மு.ச விற்குக் கொடுத்து அதன் மூலமும் உதவிகள் செய்து வருகிறோம். இது தவிர பங்கிலுள்ள நோய்வாய்ப்பட்டோருக்கு மாதந்தோறும் ரூ. 10000/– அளவில் உதவி செய்யப்படுகிறது.

கஞ்சி ஊற்றுமிடத்தில் நெரிசலைக் குறைப்பதற்காக இருபக்கங்களிலும் தடுப்புகள் அமைத்து வரிசையாக நின்று வாங்கவும், செல்லவும் வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அன்னதானம் வழங்கப்படும் இடத்தில் கிழக்குப் பக்க ஓரத்தில் 10 கழிவறைகள் ஆண், பெண் இருபாலருக்குமாகக் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலக்கூடம் 2021 சனவரி மாதம் அருட்பணி அந்தோணி M.முத்து அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டது.

அதிக மின்சக்தியில் 30 Kv ஜெனரேட்டர் ஒன்றும் வாங்கப்பட்டது.

### வாழும் குடில்:

கிறிஸ்து பிறப்பு பஜனை மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வீடு இல்லாத




ஏழைக்கு வீடு (வாழும் குடில்) கட்டிக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு, முதலில் 8.12.19 நடைபெற்ற பேரவை கூட்டத்தில் குழித்துறை அன்பியத்தைச் சார்ந்த திருமதி. மரிய புஷ்பம் என்பவரது வீடு தேர்வு செய்யப்பட்டு, கிறிஸ்து பிறப்பு பஜனை மூலம் கிடைத்த ரூபாயும், நன்கொடையாளர்களின் உதவியும், அன்பியங்கள், பக்தசபை, இயக்கங்கள் இவற்றின் உதவியுமாக ரூ. 6,26,880 /– செலவில் வீடுகட்டி முடிக்கபட்டு 12.10. 2020 அன்று ஜெபித்து திறந்து வைக்கப்பட்டது. அடுத்து 14.11.2020–ல் நடைபெற்றக் கூட்டத்தில் திருமதி. ஆனி பியூலாவின் வீடு கட்டிக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேவையான மரம் அறுத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

பழைய CCTV கேமராக்களை மாற்றி புதிய CCTV கேமராக்கள் பொருத்தி அதோடு புதிய T.V., Inverter வாங்கப் பட்டுள்ளது நமது ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி வழிபாடுகள், 15 பிப்ரவரி 2020 முதல் Youtube Chanel மற்றும் Website மூலம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. கோயிலில் முன்பக்கத்தில் செடிகள் வைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.

### கொண்டாடப்படும் விழாக்கள்

பிப்ரவரி பங்குத் குடும்ப விழா, மே 26 பங்கு உதய விழா, ஜனவரி 13 அந்தோணியார் பெருவிழா போன்ற விழாக்கள் சிறப்புடன், சமபந்தி விருந்துடன் மிகவும் சீரும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

### திருப்பண்ட நிலையம்

1990–ஆம் ஆண்டு வின்சென்ட் தே பவுல் சபையால் 200 ரூபாய் முதலீட்டில் எண்ணெய் அதைத் தொடர்ந்து திருப்பண்ட பொருட்கள் வெட்டுவெந்தி ஆலயத்தில் திருப்பண்ட விற்பனையாக துவங்கினர். வின்சென்ட் தே பவுல் சபை 2003 வரை இதனை நடத்தியது.



2002–ல் அருட்பணி ஜார்ஜ் காலத்தில் ஆயர் அவர்களின் வழிகாட்டுதலில் திருப்பண்ட பொருள்கள் பங்கே நடத்த வேண்டும் என்று கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் பங்குப் பேரவையில் பங்கே திருப்பண்ட நிலையம் நடத்துவது என தீர்மானம் நிறைவேற்றி, அதன் அடிப்படையில் 1– 6– 2003 அன்று பங்கு பேரவை நிர்வகிக்க துவங்கியது. வின்செென்ட் தே பவுல் சபைக்கு பொருள்களின் மதிப்பாக ரூபாய் 40 ஆயிரம் கொடுக்கப்பட்டது. 2009–ஆம் ஆண்டு அருட்பணி வின்செென்ட் காலத்தில் புதிய திருப்பண்ட நிலையம் அமைக்கப்பட்டு அர்ச்சிக்கப் பட்டது. திருமதி ஜெயறோஸ், திருமதி பெலிக்ஸ் இவர்கள் பணியாளர்களாக அமர்த்தபட்டனர்.

2003 முதல் திருப்பண்ட நிலையத்திற்கு பங்குப் பேரவையில் ஒரு குழு எடுக்கப்பட்டு அக்குழுவின் பொறுப்பாளரால் ஒவ்வொரு மாதமும் திருப்பண்ட நிலைய கணக்குகளை அருட்பணி பேரவை கூட்டத்தில் படித்து ஒப்புதல் பெறப்பட்டு வருகிறது. 2020 முதல் தற்போது வரை திருப்பண்டநிலைய பொறுப்பாளராக திரு D . கிறைஸ்ட் எட்வின் ராஜ் மற்றும் A. விபின்ராஜ் சிறப்பாக செயல்பட்டு வருகின்றார்கள்.

## அன்னதானம்

1 9 3 8 – களில் இறந்தவர்களை நினைத்து கஞ்சி விடும் கலாச்சாரம் இருந்தது. அதே சமயம்



ஸ்ரீ கண்டன் சாஸ்தா கோவிலில் அன்னதானம் கொடுக்கும் கலாச்சாரமும் இருந்தது. திருவிழா காலங்களில் மற்றும் நினைவு நாட்களில் அன்னதானம் நடைபெற்றது. 1970– லிருந்து 1980–களில் இது தொடர்ச்சியாக நடைபெறத் துவங்கியது.

1.7.1987–ல் அன்னதான குழு துவங்கப் பட்டது. அதன் பொறுப்பாளராக திரு அம்புரோஸ் நியமிக்கப்பட்டார். அதோடு திரு தேவதாஸ், திரு. டென்னிஸ் இணைந்து செயல்பட்டனர். 1972 முதல் அன்னதான பொறுப்புகளை திறன்பட செய்து வந்த திரு தேவதாஸ் பொறுப்புகளை திரு. அம்புறோஸ் அவர்களிடம் ஒப்படைத்தார்.

1972 முதல் 2002 வரை மக்கள் நினைக்கும் எல்லா நாட்களிலும் அன்னதானம் நடைபெற்று வந்தது. திருவிழா இறுதி நாட்களில் சிறப்பான மரக்கறி கஞ்சி அன்னதானமாக வழங்கப் பட்டது. 2002– ல் அன்னதான நிகழ்வு வரைமுறைப்படுத்தப்பட்டு செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் மட்டும் நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. அன்னதான கணக்கு மாதந்தோறும் பங்கு பேரவையில் படித்து ஒப்புதல் பெறப்பட்டு வருகிறது. இதன் தற்போதைய பொறுப்பாளர் களாக திரு. தேவராஜ், திரு. ஸ்டீபன், திருமதி. லிசி ஆகியோர் திறம்பட செயல்பட்டு வருகிறார்கள்.

## சமபந்தி

திருவிழா இறுதிநாள் அன்னதான கஞ்சி விடும் நடைமுறை இருந்து வந்தது. 2001–இல் சமபந்தி அமைத்து விருந்து வழங்க வேண்டும் என்ற குரல் பங்கு பேரவையில் ஒலித்து விவாதிக்கப்பட்டது. அருட்பணி அந்தோணி M. முத்து தலைமையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. முதல் சமபந்தி விருந்தில் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் N. டென்னிஸ் கலந்து கொண்டு துவங்கி வைத்தார்.

துவக்கத்தில் ஐந்தாயிரம் நபர்கள் கலந்து கொண்ட சமபந்தி விருந்தானது தற்போது



பாராளுமன்ற உறுப்பினர்
உயர்திரு N. டென்னிஸ் அவர்களுடன்
பங்குத்தந்தை அந்தோணி M. முத்து

30,000 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும் அன்பு விருந்தாக உருமாற்றம் பெற்று சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## செயற்கை பட்டை தீட்டும் நிலையம் :

செயற்கை பட்டை தீட்டும் நிலையம் அமைக்க 27.3.94–ல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ரூபாய் 150000–க்கு 10 இயந்திரங்கள் கொண்டு 21.05.94–ல் துவங்கப்பட்டது. யூனியன் வங்கியில் தனி கணக்கு துவங்கப்பட்டு, 20 நபர்கள் வேலை பார்த்து வந்தனர். கோயிலுக்கு இடது புற கட்டிடத்தில் நடைபெற்று வந்தது.

2001 இல் மூலப் பொருள்கள் வாங்குவது மற்றும் விற்பது போன்றவற்றில் ஏற்பட்ட தேக்க நிலையால் அந்த தொழிற்சாலையை கைவிட வேண்டி வந்தது.

## ஊர் பொதுக் குழு கூட்டம் :

ஊர் பொதுகுழு கூட்டம் ஆண்டுக்கு இரண்டு முறை நடைபெற்று வந்தது. பொதுக்குழுவால் எடுக்கப்படும் முடிவுகள் பங்கு பேரவையால் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

16 செண்ட் நிலத்தில் கல்லறை தோட்டம் அமைப்பது என்று தீர்மானிக்கப்பட்டு பங்கு பேரவையால் நிறைவேற்றப்பட்டது.

4.1.2004 பொதுக்குழு கூட்டத்தில் அன்னதானம் திருப்பண்டம், மருத்துவக் குழு போன்ற கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டது.

திருவிழா ஐந்து நாளில் இருந்து எட்டு நாட்கள் வரை என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ஒவ்வொரு ஆண்டும் திருவிழாவின் போது கூட்டப்பட்டு நிறை குறைகள் மற்றும் புதிய தொலைநோக்கு செயல்பாடுகள் ஊர் பொது குழுவால் ஒப்புதல் பெறப்பட்டு வருகிறது.

## உதவி குழு

அருட்தந்தை. யூஜின் குழந்தை காலத்தில் உதவிகள் வின்செண்ட் தே பவுல் சபை மற்றும் பங்கு பேரவையால் செயல்பட்டு வந்த நிலையில் உதவிக்குழு ஒன்று எடுப்பது என்று தீர்மானித்து திரு ராஜாமணி, திரு கிறிஸ்து தாஸ், திரு மரியதாஸ், திரு T. தேவராஜ், திரு G. டென்னிஸ், திரு மரிய சிசில், திரு. S. ராஜன் கொண்ட குழு அமைக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் திறம்பட செயல்பட்டு வந்தது.

## கல்விக் குழு

அருட்தந்தை க. ஜார்ஜ் காலத்தில் 2001–இல் கல்வி குழு ஆரம்பிக்கப்பட்டது. VSCS வங்கியில் கணக்கு துவங்கப்பட்டது. பங்குத்தந்தை மற்றும் பங்கு பேரவை பொருளாரால் கவனிக்கப்படுகிறது.

2002–ல் கிறிஸ்து பிறப்பு குடில் லாரி மோதி தீப்பிடித்த வழக்கில் வழி கிடைத்த ரூபாய் 2,17,500–ல் செலவுகள் போக மீதி தொகை கல்விக்காக வைப்பு நிதியாக பங்கிற்கு இளைஞர் இயக்கத்தால் வழங்கப்பட்டது.

## மருத்துவக் குழு

9.06.91–இல் அருட்பணி யூஜின் குழந்தை தலைமையில் பங்கு பேரவையில் முடிவெடுக்கப் பட்டு மருத்துவக் குழு தொடங்கப்பட்டது.

திருமதி. செல்வீனம்மாள், திருமதி.மரிய றோஸ் ஆகியோர் ஊழியர்களாக நியமிக்கப் பட்டனர்.

## தணிக்கைக் குழு

5.03.95–ஆம் ஆண்டு அருட்பணி யூஜின் குழந்தை காலத்தில் முதல் தணிக்கை குழு செயல்பட தொடங்கியது. அக்குழுவில் திரு. தங்கையன், திரு. கிறிஸ்துராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

தொடர்ந்து தணிக்கைக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### வழிபாட்டுக்குழு

அருள்பணி. செபாஸ்டின் அவர்கள் வழிகாட்டுதலில் 6.10.1996 முதல் வழிபாட்டுக் குழு செயல்பட தொடங்கியது. அதன் பொறுப்பாளராக திருமதி. லில்லி பாய் மற்றும் உறுப்பினர்களாக திரு. தனிஸ்லாஸ், திரு. தேவதாஸ், திரு. S. ராஜன், திருமதி சேம்கிரீன்ஸ், செல்வி பியூலா மலர் ஆகியோர் செயல்பட்டனர். தொடர்ந்து வழிபாட்டுக்குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### பஜனைக் குழு

அருட்தந்தை. யூஜின் குழந்தை காலத்தில் திரு V. மரியதாஸ் தலைமையில் திரு தங்கையன் மற்றும் திரு ராஜன் அவர்களோடு பஜனைக்குழு தொடங்கப்பட்டது. கிறிஸ்மஸின் உற்சாகத்திற்கு பஜனைக்குழுவும் முக்கிய பங்காற்றுகிறது. தொடர்ந்து பஜனைக்குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### தேர் பவனி

2016–ஆம் ஆண்டு அருட்பணி. அருள் தேவதாசன் தலைமையிலான பங்கு பேரவையில் முடிவெடுத்து திரு. S. பிரைட்சிங் அவர்கள் தலைமையில் அமையப்பெற்ற திருவிழா குழுவினரால் முதல் தேர் பவனி நடைபெற்றது. முதல் தேர் பவனி ஆலயத்தில் துவங்கி பந்தல் விளை, கண்ணக்கோடு, தெங்கன் குழிவிளை, சாலியன் விளை வழியாக ஆலயத்தில் வந்து நிறைவு பெற்றது. 2021 ஆம் ஆண்டு அருட்தந்தை. அந்தோணி M. முத்து தலைமையிலான பங்கு அருட்பணி பேரவை புதிய மரத்திலான தேர் செய்து, தேர் பவனியை மேலும் அழகு சேர்த்ததுடன் இன்றும் ஒவ்வொரு திருவிழாவிலும் குழு அமைத்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.



### கணினி மற்றும் தொலை தொடர்பு குழு

2020–ஆம் ஆண்டு அருட்தந்தை அந்தோணி M. முத்து அவர்கள் காலத்தில் பங்கு அருட்பணி பேரவையால் திரு D. கிறைஸ்ட் எட்வின் ராஜ் தலைமையில் திரு M.அருள் பிரகாஷ், திரு J. கௌதம் அவர்களைக் கொண்டு குழு அமைக்கப் பட்டது. 15.02.2020 அன்று St. Antony's Shrine Parish, Vettuvenni என்ற பெயரில் youtube chennal துவங்கப்பட்டு Youtube மற்றும் websites மூலம் திருப்பலி நேரலை பக்தர்கள் பார்க்க வசதி செய்யப்பட்டது. 2022–ல் இக்குழுவில் திரு ரோஜர் ராஜேஷ், திரு. சஜின் ராஜ் சேர்க்கப்பட்டனர். CCTV மற்றும் கணினி, video camera போன்றவை சுமார் 7 லட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### பாடகர் குழு :

முதல் பாடகர் குழு 1980 களில் உருவாக்கப்பட்டு திருப்பலி புதுப்பொலிவு பெற்றது. 1989–களில் இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டு புத்துணர்ச்சி பெற்றது. திரு ஜோசப் கிறிஸ்டஸ் முதலில் இசைக்கருவி மீட்டி பாடல் குழுவைத் துவங்கினார். பின் நம் பங்கை சார்ந்த மூன்று நபர்களுக்கு இசை பயின்று கொடுத்தார். இதன் பயனாக 1989இல் திரு சுனில் பிரகாஷ் ஆர்மோனியம் மீட்டத் துவங் கினார். திரு. சுனில் பிரகாஷ் தலைமையில் பங்கு பேரவையால் கீ போர்டு வாங்கப்பட்டு,

மிகச் சிறப்பாக செயல்பட்டது. திரு p. மரிய பிரான்சிஸ் சேவியர், ஆனிலட், பியூலா மலர் உள்பட 15க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். 2007 ஆம் ஆண்டு திரு மரிய பிரான்சிஸ் சேவியர் தலைமையில் கீபோர்ட் வாசிக்கப்பட்டு செயல்பட்டது. திரு. பிரதீப் தபேலா வாசிக்க துவங்கினார். செப்டம்பர் 2009 முதல் திரு பிரதீப் கீபோர்டு போட, தபேலா, மிக்சர் என பல இசைக் கலைஞர்கள் பங்கில் உருவாகினர். பாடல்கள் பாடவும் பல வயதினர் கொண்ட குழுக்கள் உருவானது. தற்போது திரு. பிரதீப் மற்றும் திருமதி. விஜி அவர்களுடன் பத்துக்கும் மேற்பட்ட இசைக் கருவிகள் மீட்டும் நபர்களுடன் சீரும் சிறப்புமாக பாடகர் குழு செயல்பட்டு வருகிறது.

### கட்டிட குழு

அருட்தந்தை வின்சென்ட் அவர்கள் தலைமையிலான பங்கு அருட்பணி பேரவையால் 2.06.2014–ல் C 2/87– ல் 17.794 சென்ட் நிலம் வாங்கப்பட்டு ஆலய விரிவாக்கம் செய்ய தீர்மானித்து, ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, 80 லட்சம் செலவில் பணிகள் துவங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அருட்பணி அந்தோணி முத்து தலைமையிலான புதிய பங்கு பேரவை அமையவே, கட்டிட குழு மாற்றி அமைக்கப்பட்டது.

அக்குழுவின் தலைவராக D. கிறைஸ்ட் ஜஸ்டின் ராஜ் செயல்பட்டார். 13.05.2019 அன்று C 2/–89–ல் 47 சென்ட் நிலம் வாங்கப்பட்டது. அரங்கம் மற்றும் உணவக அறை கட்டப்பட்டது. ஆலய விரிவாக்கத்திற்கு இரண்டாம் கட்ட தொகை கொடுத்து துவங்க இருந்த நிலையில், அசாதாரண நிலை ஏற்படவே அனைத்தும் தடைப்பட்டது.

2019–ல் புதிய பங்கு பேரவை அருட்தந்தை அந்தோணி M. முத்து அவர்கள் தலைமையில் அமைந்தது. பங்கு பேரவை கட்டிடக்குழு தலைவராக திரு. ஸ்டீபன் செயல்பட்டார். திரு. T. தேவராஜ் தலைமையிலான குழுவினர் ஆலய விரிவாக்கத்திற்கு தேவையான அரசாணைகளை வாங்கும் வேலைகளை கவனித்த நிலையில் திரு D. கிறைஸ்ட் ஜஸ்டின் ராஜ் மற்றும் திரு ஸ்டீபன் இணைந்து செயல்பட்டனர். சரியான அரசாணை இல்லாததால், செய்து வந்த வேலை நிறுத்தப்பட்டதுடன், அவை அனைத்தும் இடித்து அகற்ற வேண்டி வந்தது. தற்போது திரு. D. கிறைஸ்ட் ஜஸ்டின் ராஜ், திரு ஸ்டீபன் முயற்சியில் முதல் கட்ட அரசாணை பெற்று, ஆலயம் கட்ட தடையில்லா சான்று பெற விண்ணப்பித்து அதற்கான பணிகள் முழு அளவில் நடைபெற்று வருகிறது.

### எண்ணெய் அடைக்கும் குழு

2002 வரை வின்சென்ட் தே பவுல் சபை திருப்பண்ட நிலையம் நடத்தி வந்ததால் வின்சென்டியர்கள் எண்ணெய் அடைத்து வந்தனர். பங்கு பேரவை நடத்த துவங்கிய பின் செல்வி ஆனிலெட் அதனை செய்து வந்தார். அதைத் தொடர்ந்து தற்போது வரை திரு சத்தியன் தலைமையில் திருமதி. தங்கம், திரு. பர்ணபாஸ், திருமதி. ரெத்தினபாய், திருமதி. மீரா, திருமதி லிசி, திருமதி. ஜெனெட் ஆகியோர் செய்து வருகின்றார்கள்.

### தோட்ட பராமரிப்பு குழு

தோட்ட பராமரிப்பு பங்கு பேரவையால், பங்கு பேரவை நிர்வாகிகளால் பராமரிக்கப் பட்டது. தற்போது அதற்கென தனிக்குழு அமைக்கப்பட்டு, திரு. ராஜசேகர் அவர்கள் தலைமையில், திரு. சினோஜ், திரு. மரிய சிசில் ஆகியோரோடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

### முதியோர் இல்லம்

1989 முதல் திருத்துவபுரத்தில் செயல்பட்டு வந்த முதியோர் இல்லத்தை பராமரிக்க உதவி செய்துவரப்பட்டது. அருட்சகோதரிகளுக்கு உதவும் பொருட்டு 1992 முதல் குழுவாக சென்று பார்த்து பொருட்கள் கொடுத்து செயலாற்றியுள்ளோம்.

2012–ல் அருட்சகோதரிகள் இல்லாத நிலை வந்தபோது நம் பங்கு திரு. V. மரியதாஸ் தலைமையிலான குழு சென்று பார்த்து கவனித்து வந்தது. முதியோர் இல்ல பராமரிப்புக்கென இருந்த ஒரு ஏக்கர் நிலமும், அதில் உள்ள ரப்பர் மூலம் வரும் வருமானத்தையும், திருத்துவபுர பங்கே எடுத்துக் கொண்டு, முதியோர் இல்ல பராமரிப்பை திருத்துவபுரம் பங்கு பார்த்துக் கொள்வது என முடிவு செய்து ஒப்படைக்கப்பட்டது.

## தூய அந்தோணியார் திருத்தல பங்கு சொத்து விபரம்

15.11.1984–ஆம் நாளில் 12.5 சென்ட் நிலம் திரு. ராதாகிருஷ்ணன், திருமதி மீனாட்சி அம்மா இவர்களிடமிருந்து மேதகு. மரியானுஸ் ஆரோக்கிய சாமி பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

21.02.1991–ஆம் நாளில் 10 சென்ட் நிலம் திரு ஜெயச்சந்திரன் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை யூஜின் குழந்தை அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

15.02.1995–ஆம் நாளில் 33 சென்ட் நிலம் திருமதி லளிதாம்மா அவர்களிடமிருந்து பங்குத் தந்தை ராபர்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

15.02.1995–ஆம் நாளில் 33.5 சென்ட் நிலம் திருமதி லளிதாம்மா அவர்களிடமிருந்து பங்குத் தந்தை ராபர்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

9.07.1997–ஆம் நாளில் பழவாற்றில் 60 சென்ட் நிலம் திரு. செல்லசுவாமி அவர்களிடமிருந்து பங்குத் தந்தை ராபர்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

30.04.1998–ஆம் நாளில் 7.5 சென்ட் நிலம் திரு. நடராஜன் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை ராபர்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

20.04.2004–ஆம் நாளில் 8.150 சென்ட் நிலம் திரு. செலிஸ்டஸ், திருமதி. டார்வின் பாலம்மாள், திரு. ஜோஸ்பின், திரு. தம்பிராஜ் அவர்களிட மிருந்து பங்குத்தந்தை ஜார்ஜ் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

12.09.2005–ஆம் நாளில் 16 சென்ட் நிலம் திரு. சாத்ராக் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

27.09.2006–ஆம் நாளில் 22 பழவாற்றில் சென்ட் நிலம் திரு. செல்லசுவாமி, திரு. ஜெகநாதன் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

28.02.2007–ஆம் நாளில் பழவாற்றில் 46.250 சென்ட் நிலம் திருமதி. தங்க பாய், திரு. ஜஸ்டின் ராஜ், திருமதி புஷ்பலதா, திரு. டேவிட் ராஜ், திருமதி. விஜயலதா, திரு. கிறிஸ்துராஜ் ஆகியோரிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

04.04.2007–ஆம் நாளில் 12.5, 8.423, 7.336, 11.948, 6.793 சென்ட் நிலம் திரு. ஆதிநாயகம், திரு கிறிஸ்துதாஸ், A. J. A. வில்சன், A. சுரேஸ் நெல்சன் ஆகியோரிடம் இருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

04.04.2007–ஆம் நாளில் 10.250 சென்ட் நிலம் திரு மரியதாஸ் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

12.03.2008–ஆம் நாளில் 70 சென்ட் நிலம் திரு ஜார்ஜ், திரு சுவாமிதாஸ், திரு பிரான்சிஸ் ஆகியோரிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

10.02.2009–ஆம் நாளில் 29.170 சென்ட் நிலம் திரு J. சகாய தாஸ், திரு. C. காமராஜ், திரு. C. சௌந்தர் ராஜ், திரு. C. ரசல் ராஜ் ஆகியோரிடமிருந்து பங்கு தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

20.03.2009–ஆம் நாளில் 3.088 சென்ட் நிலம் திருமதி எல்சம்மா, திரு. M.டேவிட் ராஜ், திரு. M. ஞானசேகரன் ஆகியோரிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

12.05.2009–ஆம் நாளில் 50.265 சென்ட் நிலம் திரு கிறிஸ்துதாஸ் ஆகியோரிடமிருந்து பங்குத்தந்தை டோமினிக் சாவியோ அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

09.07.2009 ஆம் நாளில் 15 சென்ட் நிலம் திரு P. ஜாய், திரு. G. ஸ்டான்லி சுவாமிதாஸ் ஆகியோரிடமிருந்து பங்குத்தந்தை Fr. வின்சென்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப் பட்டது.

28.11.2011–ஆம் நாளில் 30 செண்ட் நிலம் Dr. V. ராஜசேகர் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை S. வின்செண்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

24.06.2013–ஆம் நாளில் 66 செண்ட் நிலம் திரு.A. ராஜசேகரன் நாயர், திரு. A. ரகுவன் நாயர், திரு. A. ராதாகிருஷ்ணன், திரு. A. ராஜேந்திர பாபு, திருமதி. P. ராதா குமாரி, திருமதி. K. P. பத்மினி அம்மா ஆகியவர்களிடமிருந்து பங்குத்தந்தை வின்செண்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

02.06.2014–ஆம் நாளில் 17.794 செண்ட் நிலம் திருமதி ராஜேஸ்வரி அம்மா, திரு சுதீர், திரு சஜித் ஆகியவர்களிடமிருந்து பங்குத்தந்தை வின்செண்ட் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

5.10.2015–ஆம் நாளில் 24 செண்ட் நிலம் திரு. D. D. சுந்தர்ராஜ் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

17.03.2016–ஆம் நாளில் 7 செண்ட் நிலம் திருமதி. பிளாரன்ஸ் எலிசபெத், திருமதி எபாசாரா, திருமதி எபாப்ளோரா ஆகியோரிட மிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

23.03.16–ஆம் நாளில் 30 செண்ட் நிலம் Dr. V. ராஜசேகர் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

08.07.2016–ஆம் நாளில் 10 செண்ட் நிலம் Dr. V. ராஜசேகர் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

13.05.2019–ஆம் நாளில் 22.183 செண்ட் நிலம் திரு S. குமார் என்ற ஸ்ரீ குமாரன் நாயர் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

13.05.2019–ஆம் நாளில் 24.783 செண்ட் நிலம் திரு. ஹரி என்ற ஹரிஹரன் அவர்களிடமிருந்து பங்குத்தந்தை அருள் தேவதாசன் அவர்கள் பெயரில் ஆலயத்திற்காக வாங்கப்பட்டது.

## மேதகு ஆயர்களின் ஆணைகள் மற்றும் வழிமுறைகள்

1. 1982 – கிளை பங்கு (கோட்டாறு மறை மாவட்ட டைரக்டரி 1983 )
2. 1992 – கிளை பங்கு எல்கையோடு கூடிய எழுத்துப்பூர்வ ஆணை – கோட்டாறு மறை மாவட்ட ஜூபிலி ஆண்டை ஒட்டி.
3. 2000 – ஏழு திருத்தலங்களில் ஒன்றாக வெட்டு வெந்நி அறிவிக்கப்பட்டது.
4. 2003 – சிறப்பு நிதி குழு அமைத்து வழிமுறை (15/03/2003).
5. 2003 – பங்கு மற்றும் சிறப்பு நிதிக்குழுவின் பணிகள் குறித்த வழிமுறை (நாள் 30/05/2003).
6. 2005 – கோட்டாறு மறை மாவட்ட ஆயர் அவர்களின், பங்கு பேரவை செயலரை சிறப்பு நிதி குழுவில் இணைக்கும் ஆணை (ANN – 11/2005 dt 15/10/2005).
7. 2009 – வெட்டுவெந்நி தனி பங்காகவும் குமரி மாவட்ட முதன்மை திருத்தலமாகவும் 26/5/2009 கோட்டாறு மறை மாவட்ட ஆயர் அவர்களின் ஆணை (114/2009 நாள் 26/05/2009).
8. 2016 – திருத்தலங்களுக்கான பொதுவான விதிமுறைகள் FA – 156/2016/SP dt(12/12/2016).
9. 2019 – வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலமும், திருத்தல பங்கும் வேறு வேறு அல்ல. ஒரே அலகு என்ற மேதகு ஆயரின் ஆணை.
10. 2019 – வெட்டுவெந்நி தூய அந்தோணியார் ஆலயம், குழித்துறை மறை மாவட்டத்தின் 106 ஆவது பங்கு என்ற ஆணை.

**பக்தர்களின் வேண்டுதல்களும்: நன்றி செலுத்துதல்களும்.**

**திருப்பலி ஒப்புக்கொடுத்தல்:**

முறையாக ஆவணப்படுத்த துவங்கிய காலமாகிய 1982–களில் 1500 முதல் 2000 வரை கொடுக்கப்பட்ட திருப்பலிகள், தற்போது ஒரு ஆண்டுக்கு 30 ஆயிரத்திற்கும் அதிகமாக திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு பயன் பெற்று உள்ளனர்.

**ஆபரண தங்கத்தால் காணிக்கை செலுத்துதல்:**

1982ல் தங்கம், வெள்ளி பொருள்களாக காணிக்கை செலுத்தியவர்கள் 80– க்கு மேல் இருந்த நிலையில் தற்போது 925–க்கு மேல் நபர்கள் காணிக்கை செலுத்தி பயன்பெற்று உள்ளனர்.

**அன்னதானம் செலுத்துதல்:**

1982–களில் அன்னதானம் செலுத்தி பயன் பெற்றவர்கள் 200– க்கும் மேல் இருந்த நிலையில் தற்போது 2022–ஆம் ஆண்டு 2560 பேர் அன்னதானம் செலுத்தி பயன்பெற்று உள்ளனர்.

ஆண்டுகள் 50 கடந்த நிலையில், ஆலமரமாய் வளர்ந்து நிற்கும் எமதாலயம் இன்னும் பல நூறு ஆண்டுகள் நாடி வருவோர் அனைவரையும் ஆசீர்வதித்து வாழவைக்கும் திருத்தலமாய் அமையட்டும்.



திரு. R. தனிஸ்லாஸ்



திரு. M. அருள்பிரகாஷ்



திரு. D. கிறைஸ்ட் எட்வின் ராஜ்

*தேர் கோயில்களை மட்டுமல்ல,
ஊர்களையும் அழகாக்கி விடுகிறது.
தேர்களின் அழகினில் தெய்வங்களே
இறங்கி வரும் சாத்தியம் உண்டு. ஊர்
சேர்ந்து தேர் இழுப்பதால் ஒற்றுமை
ஓங்கி, நல்லிணக்கம் நடமாடும்.
வழிபாட்டின் வகைகளில் தேர் பவனியும்
தனி இடம் பெறுகிறது. பவனியின்
உற்சாகத்தில், மனமெல்லாம் லேசாகி,
இதயம் அமைதி பெறுவது உண்மை.
கோடி அற்புதர் தூய அந்தோணியாரின்
தேர் பவனி கிறிஸ்தவத்தை மட்டுமல்ல
மனிதம் முழுமையையும் ஆட்கொள்கிறது.
மனிதம் செழிக்க உதவுகிறது.*



# பங்கு அருட்பணிப் பேரவை அறிக்கை

## 50–ஆண்டுகளின் சுருக்கமான தொகுப்பு – சிறப்புச் செயல்பாடுகள்

புனித அந்தோணியார் ஆலயம் வெட்டு வெந்நியில் அருள்பணி. தனிஸ்லாஸ் பணிபுரிந்த 1972 பெப்ரவரி 15–ஆம் நாளன்று திருப்பலி நடத்துவதற்கான அனுமதி அன்றைய ஆயர் ஆரோக்கியசாமி அவர்களால் வழங்கப்பட்டது. அன்று முதல் திருப்பலிகளும், நவநாள் ஜெபங்களும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இவ்வாறு வழிபாடுகள் தொடங்கி 50 ஆண்டு நிறைவு பெற்றுள்ளதால் இந்த 2022–ம் ஆண்டை பொன்விழா ஆண்டாக சிறப்பிக்க பங்கு பணியாளர் அருட்பணி. அந்தோணி முத்து, இணைப்பணியாளர் அருட்பணி. மரிய மார்ட்டின், பங்கு உதவித் தலைவர் திரு. ஜோசப் கிரேசியஸ் ஆகியோருடன் அருட்பணி பேரவையும், பங்கு மக்களும் இணைந்து முடிவு செய்தோம். அந்நாளில் பொன்விழா மலர் ஒன்றும் வெளியிட தீர்மானிக்கப்பட்டது. அதன்படி இந்த மலரில் நமது அருட்பணி பேரவையின் தொடக்ககால நிகழ்வுகளும், அதன் வளர்ச்சியும் இப்போதைய அருட்பணி பேரவையின் செயல்பாடுகளும், சுருக்கமாக தொகுப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

1982–ஆம் ஆண்டு ஞாயிறு திருப்பலி தந்து ஆயரின் அனுமதியோடு கிளை பங்காக அறிவிக்கப்பட்டது. அந்த தொடக்க காலத்தில் இருந்தே பங்கின் வளர்ச்சிக்காக வளர்ச்சி குழு செயல்பட்டு வந்தது. இரண்டு வளர்ச்சி குழுக்கள் செயல்பட்டன. முதல் வளர்ச்சி குழுவில்

| | |
|---|---|
| தலைவராக | – அருட்பணி. ஏசுதாசன் தாமஸ் |
| உதவித்தலைவர் | – திரு. K. இராஜையன் |
| செயலர் | – உபதேசியார் திரு.K. தேவதாஸ் |
| பொருளர் | – திரு. R. தனிஸ்லாஸ் |
| து. செயலர் | – திரு. S. கிறிஸ்துராஜ் |

### உறுப்பினர்கள் :

திரு. V. மரியதாஸ், திரு. R.ஜாண்றோஸ், திரு. R.அம்புறோஸ், திரு. G. டென்னிஸ், திரு. கிறிஸ்டல், திரு. A. பாபு, திரு. B. ராஜன், திரு. D. தாஸ், திரு. M.கிறிஸ்டோபர் ஆகிய உறுப்பினர்களையும் கொண்டு முதல் வளர்சிக்குழு செயல்பட்டு வந்தது.

சிற்றாலய விரிவாக்கம் அருட்பணி யேசுதாசன் தாமஸ் வளர்ச்சி குழுவின் உதவியுடன் சிற்றாலயத்தின் பின்னால் 100 பேர் அமர்ந்து திருப்பலியில் பங்கேற்கும் அளவிற்கு திறந்தவெளி கட்டிடத்துடன் கூடிய அறை ஒன்றும் சேர்த்து ஆலய விரிவாக்கம் செய்தார்கள். இவ்வாலய விரிவாக்கம் 04.04.1989 ஆம் ஆண்டு மேதகு ஆயர் லியோன் அ. தர்மராஜ் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. அதன் பிறகு விரிவாக்கம் செய்த இடத்தில் திருப்பலி நடைபெற தொடங்கியது.

### இரண்டாவது வளர்ச்சிக்குழு

| | |
|---|---|
| தலைவராக | – பணி. இயேசுதாசன்தாமஸ் |
| து. தலைவராக | – திரு.கே. இராஜையன் |
| செயலராக | – திரு.K.தேவதாஸ் |
| பொருளராக | – திரு.தனிஸ்லாஸ் |
| து. செயலாளராக | – திரு.S. கிறிஸ்துராஜ் |

### உறுப்பினர்கள் :

திரு. V. மரியதாஸ், திரு. R. ஜாண்றோஸ், திரு. A. அம்புரோஸ், திரு. G. டென்னிஸ் திரு. கிறிஸ்டல், திரு. A. பாபு, திரு. B. ராஜன், திரு. D. தாஸ், திரு. M. கிறிஸ்டோபர் இந்த உறுப்பினர்களைக் கொண்டு செயலர் திரு. M. மரிய சிசில் அவர்களைக் கொண்ட குழு அருட்பணி. யேசுதாசன் தாமஸ் அவர்களால் தேர்வு செய்யப்பட்டது.

**30.5.89–இல் பொறுப்பேற்ற அருட்பணி யூஜின் குழந்தை அடிகளார் ஒப்புதலுடன் ஆயர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்த வளர்ச்சி குழுவின் தலைவர் அருட்பணி யூஜின் குழந்தை, உதவித் தலைவர் திரு. கே. இராஜையன் செயலர் திரு எம் மரிய சிசில், துணைச் செயலர் திரு. கிறிஸ்துராஜ், பொருளர் திரு. R. தனிஸ்லாஸ் மற்றும் முந்தைய உறுப்பினர்களைக் கொண்டு இரண்டாவது வளர்ச்சி குழு 1996 வரை செயல்பட்டு வந்தது.**

1. புனித அந்தோணியார் கூண்டில் சொரூபத்தைத் தவிர இருக்கும் டெஸ்க் ஆடியோ சிஸ்டம் இவற்றை அப்புறப்படுத்தி தனி அறைக்கு கொண்டு செல்வதோடு பராமரிப்புப் பணிகளும் செய்ய தீர்மானம் நிறைவேற்றப் பட்டு செயல்படுத்தப்பட்டது (24.9.89)

2. 10.12.'89–ல் தங்கம் வெள்ளி பொருட்களுக்கு பேரேடு பேணவும், காணிக்கையாக வரும் பணம், தங்கம், வெள்ளி பொருட்கள் இவற்றை பாதுகாக்கப்படும் கோயில் கூண்டிற்கு இரட்டைச் சாவிமுறை கொண்டு வந்து உபதேசியார் திரு. தேவதாஸ் மற்றும் திரு. ராஜன் ஆகியோரிடம் சாவிகள் ஒப்படைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. கூட்டத் தீர்மானப்படி, கதவுஎண் 24/ 38–க்கு ரூ. 1065/– செலவில் 25.01.90 அன்று மும்முனை மின் இணைப்பு பெறப்பட்டது.

4. 01.07.90 அன்று நடைபெற்ற கூட்டத்தில் 527 நபர்களைக் கொண்ட 109 குடும்பங்கள் மற்றும் வரைபடங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

5. கோயில் விரிவாக்கம் செய்யவும் 60 சென்ட் பூமி வாங்கவும் தீர்மானம் நிறைவேற்றி பங்குத்தந்தை வழியாக ஆயரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. கனரா வங்கி கூட்டுக்கணக்கு எண் 5685 என்பதும் ஆயருக்கு தெரிவிக்கப்பட்டது.

6. 1972 முதல் 3 நாள் திருவிழாவாக நடைபெற்று வந்ததை மாற்றி 5 நாள் திருவிழாவாக நடத்த தீர்மானித்து, அருட்பணி. யூஜின் குழந்தை அவர்களின் வழிகாட்டுதல்படி 6 குழுக்கள் அமைத்து திருவிழா நடத்தப்பட்டது (6.01.91, 13.01.91 கூட்டங்கள்).

7. ஆலயத்துக்காக, 21.02.91 அன்று 10 சென்ட் நிலம் திரு ஜெயச்சந்திரன் அவர்களிட மிருந்து ரூ. 32000 – க்கு வாங்கப்பட்டது.

8. பாடகர் குழு புதுமைப்படுத்தப்பட்டது. 3 நபர்கள் இசை பயின்றனர். 01.09.91 மறைக் கல்வி மன்றமும் தொடங்கப்பட்டது.

9. 09.06.1991–ல் குடிநோய், மனநோய் இவற்றால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டெடுப்பதற்காக மருத்துவக்குழு துவங்கப்பட்டு 2001 ஆகஸ்ட் வரை நமது பங்குப்பேரவையின் பொறுப்பில் செயல்பட்டு வந்தது. 56 சென்ட் நிலம் வாங்க தீர்மானிக்கப்பட்டது.

11. 1982, வருடங்களில் கிளைப்பங்கு என்று அறிவித்தாலும் எல்லையுடன் கூடிய எழுத்து வடிவிலான ஆணை 18.02.1992 – அன்று ஆயர் லியோண் A. தர்மராஜ் அவர்களால் வழங்கப்பட்டது (23.02.92)

12. அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால் ஜெனரேட்டர் வாங்க முடிவு செய்யப் பட்டது. பங்குப்பணியாளர் அனைத்து கணக்குகளையும் பொருளரிடம் ஒப்படைத்தார்கள். (03.05.1992)

13. 6.9.1992 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பகல் நேரத்தில் வரும் பக்தர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பகல் பணியாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று முடிவு செய்ததின் பேரில் 8.9.92 அன்று மாதம் 300 ரூபாய் சம்பளத்தில் திரு ஜார்ஜ் பணி அமர்த்தப் பட்டார். அவரது பணி விதிமுறைகளும் வகுத்துக் கொடுத்ததோடு, தகவல்களை உடனுக்குடன் செயலர் மற்றும் பொருளருக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

14. 1992 – இல் பெருவெள்ளம் வந்து உடமைகள் இழந்து உயிருக்காகப் போராடியவர்களை, நம் பங்கு இளைஞர்கள் மற்றும் ஊரைச் சார்ந்தோர் காப்பாற்றிய தோடு நம் பங்கு மக்களின் நன்கொடைப்

பணம் மற்றும் ஆயர் இல்லம், தக்கலை, கோணங்காடு மற்றும் போக்குவரத்துத் தொழிலாளர் ஆகியோரிடமிருந்து நன் கொடை திரட்டியும் ரூ.7,06,710/– அளவில் வீடுகட்டத் தேவையான செங்கல், சிமென்ட், ஷீட், துணிகள், அரிசி, காய்கறி என பொருள்களாகவும் பணமாகவும் உதவிகள் செய்யப்பட்டன (அ.எண் – 24 நாள் 6.12.92)

15. ஆயர் இல்லப்பட்டியல் அடிப்படையில் அடக்கச் சடங்கிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் பங்கிற்கு வாங்கத் தீர்மானிக்கப்பட்டது. புதிய கட்டிட பக்கவாட்டு அறைகட்டப்பட்டது. 1992 முதல் ஒவ்வொரு பங்குப் பேரவையிலும் காணிக்கை வரும் நகைகள் சரிபார்க்கப் பட்டன. (16.6.93, 4.7.93)

16. 1993 – இல் பங்குப் பேரவையினர் கன்னியர் இல்லம் அமைக்க வேண்டும் என வேண்டுகோள் வைத்தனர். அது பல கட்டங்களிலும் பேசப்பட்டது. (19.9.1993)

17. 8.11.1993 அன்று நடைபெற்ற பங்குப் பேரவைக் கூட்டத்தில் வெட்டுவெந்நி கிளைப்பங்கு 5 மண்டலங்களாக பிரிக்கப் பட்டு புதிய பேரவை அமைப்பதற்கான விதிமுறைகளோடு கூடிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பெண்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் நோக்கத்தில் 27.3.94 அன்று நடைபெற்ற கூட்டத்தில் செயற்கை வைரம் பட்டை தீட்டும் தொழிலகம் தொடங்க தீர்மானம் நிறைவேற்றபட்டது. ரூ. 1,50000 செலவில் 10 இயந்திரங்களுடன் 2.5.94 அன்று தொழில் தொடங்கியது. 21.5.94–ல் அதற்காக யூனியன் வங்கியில் தனிக்கணக்கு தொடங்கப்பட்டது. செயற்கை வைரம் பட்டை தீட்டும் மையத்தில் 18 பேர் பயிற்சியும், தேர்ச்சியும் பெற்று 2 பகுதி நேரங்களாக (shift) பிரித்து பணியமர்த்தப்பட்டனர் (7.8.94)

18. கல்வி உதவிக்கான பணமும் யூனியன் வங்கியில் வைப்புநிதியாக வைக்கப் பட்டது. இதர புத்தகம், நோட் போன்ற செலவுகளை வின்சென்ட் தே பவுல் சங்கம் செய்வதாக கூறப்பட்டது.

பங்கில் 11 வார்டுகள் ஏற்படுத்தி 2 அமர்வுக் கூட்டங்களும், நடத்தி 11 வார்டு உறுப்பினர்களும் 16.10.1994 அன்று பங்குப்பேரவை செயலரிடம் ஆய்வு அறிக்கைகள் ஒப்படைத்தனர்.

20. (60 சென்ட் நிலம் வாங்க 6.11.94) அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கான விலை ரூ. 6,15000/–. அதில் குறைவுபட்ட ரூ. 1,00000/– பங்குத் தலைவர், செயலர், பொருளர் ஜாமின் பெற்று சௌத் இந்தியன் வங்கி வழியாக ஆயர் அவர்களால் பெற்றுத் தரப்பட்டது. 9.07.1997 அன்று பத்திரப்பதிவு நடைபெற்றது. நாள் 5.3.95 தணிக்கை குழுவிற்காக திரு. தங்கையன், திரு. கிறிஸ்து ராஜ் ஆகியோர் நியமிக்கப் பட்டனர்.

21. நம் பங்கில் 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஓட்டுரிமை உண்டு என்றும், 11 வார்டுகளிலிருந்தும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (5.5.1996) 25.8.96 அன்று 11 வார்டுகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

இவ்வாறு வளர்ச்சிக்குழு தனது பணியைச் சீரும் சிறப்புமாகச் செய்து முடிக்கவே மறைமாவட்ட ஆயரின் விதிமுறைகளுக்கும் வழிகாட்டுதலுக்கும் உட்பட்ட அருட்பணிப் பேரவை 1996 முதல் பொறுப்பேற்று செயல்படத் தொடங்கியது.

## இரண்டாவது அருட்பணிப் பேரவை (25.8.1996 - 5.1.1999)

அருட்பணி. இராபர்ட் அவர்கள் தலைமையில் 15.9.1996 அன்று தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்ட 11 வார்டு பிரதிநிதிகளும் 4 பக்த சபை உறுப்பினர் 3 நியமன உறுப்பினர் ஆக மொத்தம் 18 உறுப்பினர்களைக் கொண்டு மறைமாவட்ட விதிமுறைக்கு உட்பட்டு ஆயரின் வழி காட்டுதலுக்கு ஏற்ப, பங்குப் பணியாளருடன் இணைந்த அருட்பணிப் பேரவை பொறுப் பேற்றது.

### நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.

தலைவர் – பங்குத்தந்தை வ. இராபர்ட்
துணைத்தலைவர் – திரு. K. இராஜையன்
செயலர் – திரு. M. மரிய சிசில்
துணைச்செயலர் – திரு. S. கிறிஸ்துராஜ்
பொருளர் – திரு. R. தனிஸ்லாஸ்

### உறுப்பினர்கள் :

திரு. D. இராஜமணி திருமதி. R. லில்லிபாய் திரு. K. தேவதாஸ் திரு. T. தேவராஜ் திரு. S. ராஜன் திரு. R. அம்புறோஸ் திரு. G. டென்னிஸ், திரு. J. மரியதாஸ் திரு. T. வின்செண்ட் தேவராஜ் திருமதி ஜாஸ்மின் செல்வி, திருமதி இசபெல்லா திருமதி. வென்சியா லோப்பஸ் திரு. ஜார்ஜ் திரு. தங்கையன்

### பணியாளர்கள்

உபதேசியார் – திரு. தேவதாஸ்
கோயிலாயி – செல்வி. ஆனிலெட்
பகல்பணியாளர் – திரு. K. ஜார்ஜ்

இவர்களை உறுப்பினராகக் கொண்டதோடு அருட்பணி. இராபர்ட் தலைமையில் பங்கின் ஆன்மீக பொருளாதார வளர்ச்சிக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி, சிறப்பாகச் செயல்படுத்தி வளர்ச்சிப் பாதையில் பயணித்தது.

1. 6.10.1996 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வழிபாட்டுக்குழு அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பொறுப்பாளராக திருமதி. R. லில்லிபாய், மற்றும் உறுப்பினர்களாக திரு தனிஸ்லாஸ் திரு. தேவதாஸ், திரு. S. ராஜன் திருமதி சேம்கிரீன்ஸ், செல்வி பியூலாமலர் ஆகியோர் செயல்பட்டனர். அருட்பணி செபாஸ்டின் வழிகாட்டுதல்படி வாசகங்க ளுக்கு முன்னுரை எழுதுவது ஞாயிறு மற்றும் திருநாட்கள், முக்கிய விழாக்களில் வழிபாட்டைச் சிறப்பித்து வந்தனர். அ.எண் – 68
2. பங்குப் பேரவை பொருளர் செய்யும் முக்கிய செலவுகள் பங்குப் பேரவையில் முடிவெடுத்தே செய்ய வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ. எண் 70, நாள் 1.12.96)
3. அன்னதானக் கஞ்சி வைக்க குழு ஒன்று உருவாக்கப்பட்டது. திரு. அம்புறோஸ் தலைமையில் திரு. தேவதாஸ் திரு. G. டென்னிஸ் ஆகியோர் செயல்படுவர் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றைய கூட்டத்திலே 01.01.1997 முதல் ரூ. 400 ஆக இருந்த கஞ்சிக்கு 425 ரூபாயாக உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. (அ. எண் 70. நாள் 01.12.1996)
4. கிறிஸ்து பிறப்பு பஜனைக்கும் திரு. V. மரியதாஸ் தலைமையில் திரு. தங்கையன் திரு. ராஜன் இவர்களைக் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. (அ. எண். 70 நாள் 1.12.96)
5. விளவங்கோடு வளர்ச்சி சங்கத்தின் வங்கியின் பங்கில், நமது கிளைப் பங்கிலிருந்து 20 பங்குகள் வாங்குவது என்றும் 25.1.1997 தொடங்க இருக்கும் விளவங்கோடு வளர்ச்சி சங்கத்தின் கிளை நமது பங்கில் 11 வார்டு உறுப்பினர்களையும் இணைத்து தொடங்க

வேண்டும் என்றும், தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (அ. எண், 71 நாள் 5.11. 97)

6. அப்போதைய பங்குப் பேரவை உறுப்பினர் திரு. D. ராஜாமணி அவர்களின் உறவினர் களான திரு. வேல்தாஸ், திரு. பொன்னப்பன் ஆகியோர் புனிதரின் வழி பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக செம்பருத்திப்பூ வடிவிலான குருடியைக் அன்பளிப்பாக கட்டித் தருகிறோம் என்று அருட்பணிப் பேரவையிடம் வேண்டுகோள் வைக்க, ஆயரின் அனுமதி பெற்று அந்த குருசடி அழகிய வடிவில் கட்டித்தரப் பட்டது.

   பொறியாளர் கொடுத்த அளவுப்படி குருசடியில் உள்வளைவில் பங்குச் செலவில் கிரானைட் கல் பதிக்க தீர்மானம் நிறைவேற்றப்ட்டது. (அ. எண். 71 நாள் 5.01.1997)

7. காணிக்கையாக வரும் தங்கம், வெள்ளி மற்றும் ஏலம் போடவரும் பொருட்களுக் கான ரசீதுகள் போடப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ. எ.73, நாள் 16.3.97)

8. பங்கிற்குத் தேவையான பொருட்கள் வாங்கும் போது முழு விவரங்களுடன் கூடிய ரசீது (Bill) வாங்க வேண்டும். நேர்ச்சை நூல் வாங்கும்போது எடை போட்டு வாங்கவேண்டும். நகை விற்கும் போது 2 நபர்கள் கையெழுத்துப் போட்டு ரசீது பேணப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ.எ. 74 நாள் 06.04.97)

9. 60 சென்ட் நிலம் வாங்க தீர்மானிக்கப் பட்டது. போதிய பணம் இருப்பில் இல்லாததால் 2 இலட்சம் ரூ. கடனாகப் பெற ஆயரிடம் கேட்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதோடு மறைக்கல்வி மாணவர்களுக்கு வட்டாரப் போட்டிகளில் கலந்து கொள்ள நிதி ஒதுக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

   9.7.1997 அன்று 60 சென்ட் நிலம் திரு செல்லசுவாமி அவர்களிடமிருந்து ரூ. 6,15000 செலவில் பங்கிற்காக பங்குதந்தை பெயரில் வாங்கப்பட்டது.

10. அப்போது கையிருப்பாக இருந்த நகைகளை விற்கவும் தீர்மானிக்கப் பட்டது. பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு பற்றியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11. அன்னதானக் கணக்கு மாதந்தோறும் பங்குப்பேரைவையில் படித்து கண்டிப்பாக ஒப்புதல் பெறவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாதந்தோறும் தங்க நகைகள் சரிபார்த்து பங்குப் பேரவையில் ஒப்புதல் பெறவேண்டும் என்று தீர்மானித்து மாதந்தோறும் செயல்படுத்தப் பட்டது.

12. செயற்கை வைரம்பட்டை தீட்டும் தொழிலில் பட்டை தீட்டிய வைரங்கள் போதிய விலைக்குப் போகாததால் தொழில் நலிவடைந்தது. எனவே அதனைக் குத்தகைக்கு கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது. (அ.எ.183 நாள் 4.1.1998)

13. நமது பங்கில் ஞாயிறு, செவ்வாய் மாலை 5 மணி திருப்பலி நடைபெற்று வந்த நிலையில், 1998 சனவரி முதல் காலை ஞாயிறு திருப்பலியும் ஆரம்பிக்கப்பட்டது.

14. மந்திரிக்கப்பட்ட புனித எண்ணெய், மற்றும் திருப்பண்டம் பொருட்கள், புத்தகங்கள் இவற்றுக்கான விற்பனை நிலையம் புனித வின்சென்ட் தே–பவுல் சபையினரால் நடத்தப்பட்டு வந்தது. மறைக்கல்வி மன்றம் வின்சென்ட் தே– பவுல் சங்கம், கிராம முன்னேற்ற சங்கம், விளவங்கோடு வளர்ச்சி சங்கம், மரியாயின் சேனை, இளம்மாணவர் இயக்கம் இளைஞர் இயக்கம் இவை திறம்படச் செயல்பட்டதாக 1997–1998 – ஆம் ஆண்டறிக்கை கூறுகின்றது. பங்கின்

எல்லை வரைபடம் தயார் செய்ய வேண்டுகோள் விடப்பட்டது. (அ.எ. 84)

15. திரு. ராஜாமணி, திரு. கிறிஸ்துராஜ், திரு. V. மரியதாஸ் திரு.T. தேவராஜ், திரு. G. டென்னீஸ், திரு. M. மரிய சிசில், திரு. S. ராஜன் இவர்களைக் கொண்ட உதவிக் குழு 6 ஆண்டுகளாகத் திறம்படச் செயல் பட்டு, தேவையில் இருப்போரை இனங் கண்டு உதவிகள் பல செய்தது.

16. நடராஜனிடமிருந்து 7 1/2 செண்ட் நிலம் 100000 ரூ. செலவில் வாங்கப்பட்டது. இரவு நேரத்திலும் காவலுக்காக, இரவுக் காவலர் ஒருவரை நியமிக்கத் தீர்மானம் நிறைவேற்றி இரவுக் காவலர் மாதம் ரூ. 1500/– சம்பளத்தில் நியமிக்கப்பட்டார்.

17. பணியாளர்களுக்கு 1.5.98 முதல் இன்கிரிமென்ட் கொடுக்க தீர்மானிக்கப் பட்டது. பழைய பொருட்களை விற்கவும் தங்க நகைகளை விற்க கணக்கு எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (அ.எண் 87, நாள் 3.5.98)

18. VSCS வங்கியின் பங்குகளில் 40000 ரூபாய்க்கு பங்குகள் வாங்கப்பட்டன. புதிய கோயில் கட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. ராஜையன், திரு. மரிய சிசில், திரு. வின்சென்ட் தேவராஜ் ஆகியோரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது (அ.எ.91 நாள் 4.10.1998) கோயிலுக்கான புதிய வரைபடம் வரைய தீர்மானிக்கப்பட்டது. நகை கணக்குகளும் எடுக்கப்பட்டன. (அ.எண் 92 நாள் 1.11.98)

19. 1999–ஆம் ஆண்டிற்கான திருவிழா பற்றி பேசப்பட்டதோடு 9 குழுக்களாக திரு விழாவைச் சிறப்புற நடத்தத் தீர்மானிக்கப் பட்டது. (அ. எண் 94 நாள் 3.01.99)

20. ஆயர் இல்லத்துக்கு வருமானத்தில் 10% செலுத்தப்படுகிறது. அதன்படி 1998 – ஆம் ஆண்டிற்கான ரூ. 58925/– செலுத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மறைக்கல்விக்குத் தேவையான பணமும் பங்குப் பேரவை வழியாக வழங்கப்பட்டு வந்தது. (அ.எ. 95 நாள் 7.2.99)

## மூன்றாவது அருட்பணிப்பேரவை (6.6.1999 - 13.6.2002 )

தலைவர் – அருட்பணி அந்தோணி எம் . முத்து
துணைத்தலைவர் – திரு. ராஜாமணி
செயலர் – திரு. M. அருள் பிரகாஷ்
பொருளர் – திரு. T. தேவராஜ்
துணைச் செயலர் – திரு. ஜாண்சன்

அருட்பணி அந்தோணி M. முத்து தலை மையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. அன்பியம் துவங்கப்பட்டு 11 வர்டுகள் 6 அன்பியமாக மாற்றப்பட்டது. குடும்ப உறுப்பினர்கள் விபரம் சேகரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ.97 11.7.1999)

2. V.S.C.S வங்கி சார்பில் அருட்பணி ஹிலாரியுஸ், VSCS செயலர் திரு. இராஜையன், மற்றும் திரு. சார்லஸ் ஆகியோர் கூட்டத்திற்கு வருகை தந்து VSCS வங்கியில் பங்குதொகையைக் கூட்டவும், வைப்புநிதிகளை தங்கள் வங்கியில் வைக்கவும் கேட்டுக் கொண்ட தன் பேரில், கல்விவைப்புநிதி, திருமண வைப்புநிதி பங்கு கணக்குகளில் சில, நிபந்தனைகளுடன் வைக்கத் தீர்மானிக் கப்பட்டது. (அ.எ. 101, நாள் 1.8.99)

3. 300 குடும்ப அட்டைகள் அச்சடித்துக், கொடுத்து பங்கிலுள்ள குடும்பங்களை வலுவூட்டுவது என்றும், 18.8.99 அன்று திரித்துவபுரம் பங்கிற்கு ஆயர் பங்கு விசாரணைக்கு வரும்போது நமது

பங்கிலுள்ள மாணவர்களுக்கு புது நன்மை, உறுதிப்பூசுதல் வழங்க ஏற்பாடு செய்யும்படி தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (அ.எ. 102 நாள் 5.9.1999)

4. புதிய பங்குப் பேரவை பொறுப்பேற்றவுடன் 1999–வது ஆண்டு கணக்கு தணிக்கை செய்ய பேராசிரியர் வின்செண்ட் தேவராஜ், T. தேவராஜ், தனிஸ்லாஸ் ஆகியோரைக் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. பகல் பணியாளரிடம் வரும் காணிக்கைப் பொருட்களை, மாத இறுதியில் பொருளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 106 நாள் 2.1.2000)

5. 1999 – 2000 ஆம் ஆண்டு திருவிழா பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி முத்து அவர்களின் வழிகாட்டுதல்படி 10 குழுக்களின் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றது. குடும்ப விழாவின் இறுதியில் சமய நல்லிணக்க விழாவும் நடைபெற்றது. அதில் பூஜித குரு பால பிரஜாபதி அடிகள், பேராசிரியர் பீர்முகமது, ஆசிரியர் திரு. விக்டர் ஆகியோர் பங்கு கொண்டனர்.

6. வார்டு உறுப்பினருடன் பேரவை நிர்வாகம் சேர்ந்து குடும்பங்களுக்கு வரி நிர்ணயம் செய்ய தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 108 நா. 12.3.2000)

7. இரவுக்காவலர் நியமிப்பது சார்பாக பேசிய போது நபர்களை நேரில் பார்த்து முடிவு செய்ய தீர்மானிக்கப்பட்டது. இளைஞர் இயக்கம் குடிநீர் வழங்க பைப் இணைப்பிற்கு அனுமதி கோரிய மனுவிற்கு அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

8. VSCS வங்கியில் பங்கிற்கு கூட்டுக் கணக்கு தொடங்க ஆலோசிக்கப்பட்டது. திரித்துவபுரம் பங்கு திருமணமண்டபம் கட்ட பணம் கடன் கொடுத்து உதவலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 3 இலட்சம் ரூ. கடன் கொடுக்கப்பட்டது. (அ.எ. 114 நா. 5.11.115)

9. திருத்தலத் தூண்களில் சிலுவைப்பாதை சொரூபங்கள் செய்யவும், 17 சென்ட் நிலத்தில் கல்லறைத் தோட்டம் அமைக்கவும், ஊர் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (அ. எ. 116 நா. 3.12.2000)

10. செயற்கை வைரம் பட்டை தீட்டும் (ஜெம் கட்டிங்) இயந்திரங்கள் ஏலமிடத் தீர்மானிக்கப்பட்டன. (அ.எ.117 நா.7.1.2001)

11. கோட்டாறு மறைமாவட்ட யூபிலி ஆண்டு இரண்டாயிரத்தை (2000) முன்னிட்டு அறிவித்த 7 திருத்தலங்களில் வெட்டு வெந்நி புனித அந்தோணியார் திருத்தலமும் ஒன்றாகும் (2000–2001 ஆண்டறிக்கை)

12. செயற்கை வைரம் பட்டை தீட்டும் உற்பத்தி நின்றுபோனதால், அக்கணக்கு பங்குப்பேரவைக் கணக்குடன் சேர்க்கப் பட்டது.

13. 2001–ல் ஆண்டு திருவிழாவில் முதல் சமபந்தி விருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டென்னிஸ், மற்றும் பங்குப்பணியாளர் அருட்பணி. அந்தோணி. எம். முத்து ஆகியோர் இணைந்து தொடங்கி வைத்தனர். (அ.எ. 119 நா 23.3.2001)

14. தொடக்க கூட்டுறவு வங்கிக் கணக்கு எண் 649/7 முடித்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது. யூனியன் வங்கியில் பங்குப் பேரவை நிர்வாகிகள் பெயரில் உள்ள கூட்டுக்கணக்கு எண் 1042 / முடித்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

15. கல்லறைத் தோட்டத்தில் கல்லறை கட்ட ரூ. 2500/– என்றும், இட ஒதுக்கீடு என்றால் ரூ. 1000 /– என்றும் முடிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

16. திருத்தலக்கணக்கு 3 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யவும் தீர்மானிக்கப் பட்டது. (அ.எ. 121 நாள் 3.6.2001)

17. பாலவிளைப் பங்கிற்கு ரூ. 50000/– கடனாகக் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது.

18. அன்னதானத்துக்காகப் பங்குத்தந்தை மற்றும் பொருளர் பெயரில் VSCS வங்கியில் கணக்கு தொடங்கப்பட்டு அதிலிருந்து வரும் ஈவுத் தொகையைப் பங்குக் கணக்கில் சேர்ப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. (அ. எ. 129)

19. உளநல மையத்துக்கு வரும் அனைத்து பணவரவிற்கும் ரசீது போட தீர்மானிக்கப் பட்டது. (அ. எ. 130 20.) ஜூன் 13 அந்தோணியாரின் நினைவு தினத்தை விழாவாகச் சிறப்பிக்கத் தீர்மானிக்கப் பட்டது. (அ.எ. 132 (9.6.2002)

21. நிதிக்குழு அமைக்க பரிந்துரைக்கப் பட்டது. (அ.எ. 133)

22. வழிபாட்டில் அனைவரும் இணைந்துபாட பாடல் புத்தகம் ஒன்று வெளியிட்டு 50% மானியத்தில் பங்கு மக்களுக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 135)

23. விவிலிய தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு மானியமாக மக்களுக்கு விவிலியம் வழங்க ஆயர் இல்லத்துக்கு ரூ. 5000/ வழங்கப்பட்டது.

24. அறிவியல் கல்லூரிக்கு தொகை வழங்கப்பட்டது. அ.எ. 137

25. 3–வது பேரவைக்கான வாக்காளர் பட்டியல் தயார் செய்து ஒப்புதல் பெற்று பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு செய்யப்பட்டது (8.12.2002)

திரித்துவபுரம் பங்கிற்கு கடனாகக் கொடுத்த ரூ. 3 இலட்சம் பாலவிளைப் பங்கிற்கு கடனாகக் கொடுத்த 50000/–மும் திரும்பப் பெறப்பட்டன. (அ.எ. 138, நாள் 8.10.2002)

ஆண்டுதோறும் இளைஞர் இயக்கத்தினர் சிறப்பாக கிறிஸ்துபிறப்பு குடில் கட்டுவர் அதன்படி 2002 – இல் கட்டப்பட்ட குடில் தீப்பற்றி எறிந்ததன் பேரில் இளைஞர்கள் தொடுத்த வழக்கின் வழி 1,31,836/– ரூ. இழப்பீடாக அரசிடமிருந்து பெறப்பட்டது. அதில் இளைஞர் இயக்கம் சார்பாக 6000 ரூ. கடன் வாங்கியது போக, மீதி ரூபாய் கல்விக்கான வைப்புநிதியில் சேர்க்கப்பட்டது. (அ.எ. 139 நாள் 12.01.2003)

## நான்காவது அருட்பணிப் பேரவை (9.3.2003 - 9.7.2006)

தலைவர் – அருட்பணி K. ஜார்ஜ்
உதவித் தலைவர் – திரு. வின்செென்ட் தேவராஜ் மற்றும் (14.11.2004 முதல் திரு. AC. செல்வராஜ்)
செயலர் – திரு. மரிய சிசில்
துணைச் செயலர் – T. ஜாண்சன்
பொருளர் – திரு. தனிஸ்லாஸ்

அருட்பணி K. ஜார்ஜ் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. 4.2.97 முதல் வின்செென்ட் தே பவுல் சபையினர் பொறுப்பில் ஜெபமாலை, திருவிவிலியம் திருப்பலிப் புத்தகங்கள், புனித எண்ணெய் இவை அடங்கிய திருப்பண்ட நிலையம் செயல்பட்டு வந்தது. ஆனால் பங்குகளில் பங்கிற்குரிய நிலையங்கள்தான் இருக்க வேண்டும் என்ற மறைமாவட்ட விதிப்படி திருப்பண்ட நிலையம் 1.6.2003 முதல் பங்கின் பொறுப்பில் வந்தது. இதன்மூலம் வின்செெண்ட்டியர்களுக்கு இழப்பு ஏற்பட்டதால் இழப்பீடாக ரூ. 40000/– வழங்கப்பட்டது. (அ.எ. 144 நாள் 12.10. 2003)

2. 6,7,8 வகுப்பு மாணவர்களில் 4 ஆண்கள் 4 பெண்கள் ஆகியோருக்கு சீருடை எடுத்துக் கொடுத்து, பயிற்சியும் அளித்து பீடச் சிறார்களாக உதவி புரிந்தனர்.

   மருத்துவக்குழு ஊழியர்களான செல்வீனம்மாள், மரியறோஸ் ஆகியோருக்கு மாதம் ரூ. 500 வீதம் சம்பளமாகக் கொடுக்கப்பட்டது.

3. கிறிஸ்மஸ் மரவிழா நடத்தவும், செவ்வாய், வெள்ளி நாட்களில் 9 மணி முதல் 10 மணி வரையிலும் கோயிலுக்கு வந்து செல்வோர் புள்ளி விவரம் சேகரிக்க முடிவு செய்யப்பட்டது. (அ.எ. 146, நாள் 14.2.2003)

4. 4.1.2004 இல் பொதுக்குழுக் கூட்டம் நடத்தப்பட்டது அன்னதானம், மருத்துவக் குழு, புனித எண்ணெய் இவற்றுக்கான கணக்குகள் தனித்தனியாக அருட்பணிப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

   பங்கு ஆண்டு செலவுக்கு (சம்பளம், மின்கட்டணம் இதர செலவு) ரூ. 1,00,000/– ஆயர் அனுமதிபெற்று நிதிக்குழு ஒதுக்கீடு செய்துள்ளது என தெரிவிக்கப்பட்டன.

5. 2004 –ம் வருட திருவிழாவிற்கு உத்தேச வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடுவது என்றும், 5 நாள் திருவிழாவை 8 நாள் திருவிழாவாகக் கொண்டாடுவது என்றும் அதில் ஒரு நாளை திரித்துவபுரம், பாலவிளை, சூசைபுரம் இறைமக்கள் சேர்ந்து சிறப்பிக்க ஒதுக்க வேண்டுமென்றும் பொதுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 147 நாள் 11.01.2004)

6. சிறப்பு நிதிக்குழு தொடங்கியபின் கூண்டு காணிக்கையின் முதல் 3 மாதக்கணக்கை துணைத்தலைவர் அருட்பணி பேரவையில் சமர்ப்பித்தார்கள் (அ.எ. 149 நா. 8.2.2004)

7. குருத்து ஞாயிறு நமது பங்கில் தனியாக நடத்தத் தீர்மானித்து, YMCA வளாகத்திலிருந்து ஆரம்பித்து சாலியன்விளை வழியாக ஆலயத்தில் வந்தடைந்தது (அ.எ. 150 நா. 14.3.2004)

8. புனித அந்தோணியார் உயர் கல்வித் திட்டம் தொடங்கி ரூ.50000/– ஒதுக்கப்பட்டது.

### அருட்பணி V. டோமினிக் சாவியோ 2004

9. அருட்பணி V. டோமினிக் சாவியோ பொறுப்பேற்று முதல்கூட்டம் 13.6.2004 அன்று நடைபெற்றது. செவ்வாய் காலை 11 மணிக்கு திருப்பலி வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது.

   புதுமைகள் பதிவுசெய்ய பதிவு ஏடு ஒன்று வைக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ.154 நா. 11.7. 2004)

10. அருட்பணிப்பேரவை உதவித்தலைவர் இராஜினாமா செய்ததை ஏற்றுக்கொண்டு தேர்தல் நடைபெற்றது. அதில் திரு. AC செல்வராஜ் உதவித்தலைவராக 14.11.2004 அன்று தேர்வு செய்யப்பட்டார். (அ.எ.157)

11. 18.8.2005 அன்று மேதகு. ஆயர் பீட்டர ரெமிஜியூஸ் வருகை தந்து திருத்தல விரிவாக்கத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்து, இடத்தையும் பார்வையிட்டு திருத்தல விரிவாக்கத்தை உடனடியாக ஆரம்பிக்கவும் 66 சென்ட் நிலத்தில் பணியாளர் இல்லம் கட்டவும் உடனடியாக ஆரம்பகட்ட வேலைகளைத் தொடங்கச் சொன்னார்கள். (அ.எண், 166 நா. 21.8.05)

12. சிறப்பு நிதிக்குழுவில் பங்குப்பேரவை செயலர் இடம் பெறாதது பற்றி உதவித்தலைவர் எடுத்துரைத்தார். அதற்கு

ஆயர் இதுபற்றி பங்குப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி V.F. அவர்களின் ஒப்புதல் பெற்று வாருங்கள் என்று கூறியதற்கேற்ப செயல்பட்டதால், செயலரும் நிதிக்குழுவில் சேர்க்க ஆணை பிறப்பிக் கப்பட்டது. (அ.எ. 167 நாள் 11.9.2005)

13. 16 செண்ட் நிலம் பொறியாளரிடம் கொடுத்த ஒப்பந்தப்படி இந்த மாதமே வேலையைத் தொடங்க கேட்டுக் கொள்ளப்பட்டது. (அ. எ. 168 நா 13.11. 2005)

14. 23.1. 2006 அன்று கோயிலுக்காக வட்டார முதன்மைப் பணியாளர் அருட்பணி S. வின்செண்ட் அர்ச்சித்து அடிக்கல் நாட்டினார். பங்குத்தந்தை V.டோமினிக் சாவியோ, இணைபங்குத் தந்தை S.P.லாரன்ஸ், பொறியாளர், பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் பங்கு மக்கள் கலந்து கொண்டனர்.

    அன்னதான அரங்கிற்கு பங்குதந்தை V. டோமினிக் சாவியோ அடிக்கல் நாட்டினார். (172 நாள் 12.2.2006)

15. வின்செண்ட் தே பவுல் சபையானது பங்குப் பேரவை அனுமதி பெறாமல் வைத்த திருப்பண்ட நிலைய வண்டியை எடுக்க தீர்மானிக்கபட்டது. அதற்கான தொகை ரூ. 25000/– கொடுக்கப்பட்டது.

    ஆலயத்துக்குள் பங்கு பேரவையின் அனுமதியின்றி எந்த விதமான செயல்களிலும் ஈடுபட கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (அ.எ. 173 நா. 19.2.2006)

16. 2.4.2006 அன்று புதிய வாக்காளர் பட்டியல் வெளியிடவும் தொடர்ந்து 14.05.2006 – இல் தேர்தல் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. (அ.எ. 175 நா. 30. 4. 2006)

## ஐந்தாவது அருட்பணிப் பேரவை
## 9.09. 2006 - 6.6.2009

தலைவர் – அருட்பணி டோமினிக் சாவியோ
உதவித்தலைவர் – AC செல்வராஜ்
செயலர் – திரு. மரிய சிசில்
உதவிச்செயலர் திரு. K. இராஜன்
பொருளர் – திரு. K. தங்கப்பன்

அருட்பணி. டோமினிக் சாவியோ தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. ரூ. 11500/– செலவில் அன்னதான இடத்தில் ஆழ்துளைக்கிணறு தோண்டப் பட்டது. ரூ. 33000/– செலவில் கழிவறைகள் கட்டப்பட்டன.

    பழைய மெழுகு கோயிலுக்குச் சொந்த மானது எனமுடிவு செய்யப்பட்டது.

2. 15KV ஜெனரட்டர் வாங்க தீர்மானித்து, ரூ. 2,06,000– க்கு வாங்கப்பட்டது. (அ.எ. 179 11.3.2007)

3. 17.04.2007 இல் கோட்டாறு மறைமாவட்ட பரிபாலகர் V. மரியதாசன் அவர்களால் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. 15.04.2007

4. உயர்கல்வி உதவித்திட்டத்துக்கு ரூ. 160000 ரூ. F.Dயில் சேர்த்து போட தீர்மானிக்கப் பட்டு, செயல்படுத்தப்பட்டது. (அ.எ. 191 நாள் 9.9. 2007)

5. அதன் முதல் பயனாளராக சாலியன் விளை அன்பியத்தைச் சார்ந்த பிபின் தாசுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

6. பழைய கல்லறைத் தோட்டம் நிறுத்தப் பட்டதால், 16 செண்ட் நிலத்தில் புதிய

கல்லறைத் தோட்டம் அமைக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1.12.2007, 3 shift ஆக பணியாளர்களுக்கு (அலவலக பணியாளர்) பணி பிரித்து கொடுக்கப்பட்டது.

7. ஊர் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி பழவாற்றில் 47 1/2 சென்ட் நிலம் ஆலயத்துக்கு அருகில் 57 1/2 சென்ட் நிலம், கல்லறைத் தோட்டத்திற்கு அருகில் 70 சென்ட் நிலம் வாங்கப்பட்டது.

8. குடில் எரிந்த வழக்கில் இழப்பீடாக நீதிமன்றம் வழி கிடைத்த 1.5 இலட்சம் ரூபாயை புனித அந்தோணியார் உயர்கல்வித் திட்டத்தில் சேர்க்க இளைஞர் இயக்கம் சம்மதம் தெரிவித்தது. இளைஞர் இயக்கம் கடனாகப் பெற்ற ரூ. 6000/– தள்ளுபடி செய்யப்பட்டது. (அ.எ. 198 நாள் 13.4. 2008)

9. 15.8.2008 சுதந்தரதினவிழா, மாதா விண்ணேற்பு விழா, அந்தோணியார் பிறந்தநாள்விழா இவற்றைச் சிறப்பிக்க இளைஞர் இயக்க வேண்டுகோள்படி அனுமதி அளிக்கப்பட்டது.

10. பணியாளர் இல்லம் கட்ட வரைபடம் ஒப்புதலுக்காக அனுப்பபட்டது. அதற்கு 18 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கு அனுமதி அளித்ததோடு 1.7. 2008 அன்று மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியூஸ் அடிக்கல் நாட்டினார்.

11. இறப்புச் சடங்கு, நினைவுத் திருப்பலி நமது பங்கில் நிறைவேற்றப்படும் என பங்குத் தந்தையால் அறிவிக்கப்பட்டது. (அ. எ. 204 11.01.2009)

12. 10.2.2009 அன்று 26 சென்ட் பூமி ரூ. 7,2000/– ரூபாய்க்கு வாங்க முடிவு செய்யப்பட்டது. (அ.எ. 208, நா. 8.3.2009)

13. 20.8. 2009 அன்று 3 சென்ட் நிலம் ரூ. 87070/– க்கு வாங்கப்பட்டது. (அ. எ.20 நாள் 10.5.2009)

14. 26.05.2009 அன்று முதல், நமது வெட்டுவெந்நி திருத்தலம் குமரி மாவட்டத்தின் முதன்மை திருத்தல மாகவும், கிளைப்பங்காக இருந்த வெட்டுவெந்நிப் தனிப் பங்காகவும் 26.05.2009 முதல் செயல்படும் எனவும், மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் அவர்களால் அருட்பணி S. வின்சென்ட் அவர்கள் திருத்தல அதிபராகவும், பங்குத் தந்தையாகவும் செயல்பட பொறுப்பு வழங்குவதாகவும் அறிவிக்கப்பட்டது. (அ.எ.211 நாள் 3.6.2009)

## ஆறாவது அருட்பணிப்பேரவை
## (26.06. 2009 12.08.2012 )

தலைவர் – அருட்பணி S. வின்சென்ட்
உதவித்தலைவர்–திருமதி. M.S. பிளாரன்ஸ் விஜிலா
செயலர் – திரு. D. தாஸ்
துணை செயலர் – E. ஜெபகுமார்
பொருளர் – K. தங்கப்பன்

அருட்பணி. S. வின்சென்ட் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. 2009 ஜூன் மாதம் 15 சென்ட் நிலம் வாங்கப்பட்டது அன்னதான கிரவுண்ட் பக்கமுள்ள 14 1/4 சென்ட் நிலம் சென்டிற்கு 1 இலட்சம் வைத்து 1425000 –ம் பத்திரப் பதிவு செலவு 43000 சேர்த்து 1468000 மொத்தச் செலவாகியது. (அ.எ. 213 நாள் 9.8.2009)

1972 முதல் 1987 வரை நமது பங்கில் செயலராகவும், உபதேசியரகவும் பணியாற்றிய திரு. தேவதாஸ் அவர்கள் இயற்கை எய்தினார்... அவரது மரணச் செலவு

மற்றும் கல்லறை கட்டுவதற்கான செலவுகளையும் பங்கு ஏற்றுக்கொண்டது.

2. புனித வின்செண்ட் தே பவுல் சங்கத்திற்கு மெழுகுவர்த்தி மற்றும் எண்ணெய் டின் செய்வதற்காக நமது பங்கிற்கு சொந்தமான இடத்தில் ஒரு ஷெட் போட அனுமதிக்கப்பட்டது.

3. அன்பியக் கூட்டங்கள் சிறப்பாகச் செயல்படுவதைக் கருத்தில் கொண்டு சேம்பறவிளை அன்பியத்தை A என்றும் B என்றும் பிரிக்க அனுமதிக்கப்பட்டது. (அ.எ. 215)

4. பங்கில் நடைபெறும் திருமணங்களுக்கான கட்டண விபரம் நிர்ணயிக்கப்பட்டது. (அ.எ. 216 நா 8.11.2009)

5. பங்கு அலுவலகத்துக்காக கணினி வாங்கப்பட்டது. அதில் Tally படித்த ஒருவர் பகுதி நேரம் பணியாளராக பணியமர்த்தப்பட்டார். (அ.எ. 217 நா. 13.12.2009)

6. 3.1.2010 அன்று தமிழகம், பாண்டிச்சேரி ஆயர்களின் கூட்டுத் திருப்பலியின்போது நற்செய்தி அறிவிப்புக்காக திரித்துவபுரம் வட்டாரத்தில் அதிக காணிக்கை கொடுத்ததற்காக கேடயம் பரிசாக நமது பங்கிற்குக் கிடைத்தது.

16.2.2010 அன்று நடைபெற்ற திருவிழா நிறைவு நாளில் சமய நல்லிணக்க கூட்டம் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. T. கிருஷ்ணராஜ், மார்த்தாண்டம் புருஷோத்தமன் நாயர், வெட்டுவெந்நி கண்டன் சாஸ்தா கோயில் செயலர், மார்த்தாண்டம் ஜமாத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். (அ.எ 218)

8. மறைமாவட்ட பொது நிலையினர் பேரவைக்கு நமது பங்கு சார்பாகச் செயலர் D. தாஸ் அவர்களை அனுப்ப பங்குத் தந்தையால் அறிவிக்கப்பட்டது. (அ.எ. 225 நாள் 10.10.2010)

9. நமது பங்கில் திருமணமாகி 25 ஆண்டுகள்நிறைவு பெற்று வெள்ளிவிழா காணும் தம்பதிகளை ஞாயிறு காலை திருப்பலியின் போது சிறப்பித்துப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. (அ.எ. 246 நாள் 12.8.2012)

## ஏழாவது அருட்பணிப்பேரவை (12.08. 2012 - 9.7.2015)

தலைவர் அருட்பணி S. வின்செண்ட்
உதவித்தலைவர் – திருமதி V. ஜெசிந்தாமேரி
செயலர் – திரு. M. மரிய சிசில்
துணைச்செயலர் – திரு. J. ஜெபகுமார்
பொருளர் – திரு. டென்னிஸ் இவர்நோய்வாய் பட்டபிறகு J. ஜெபகுமார்

அருட்பணி. S. வின்செண்ட் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. 74 செண்ட் நிலம் 3 கோடியே ஐம்பத்திரண்டு இலட்சத்து நாற்பத் தாறாயிரத்து முந்நூற்று முப்பத்தி நான்கு ரூ. 3,52,46,334/– செலவானது. இதில் 24 இலட்சம் ரூ. வட்டியில்லா கடனாக வாங்கி பிறகு திருப்பி செலுத்தப்பட்டது. (அ. எ. 274 நா 8.03.2015)

2. நமது கோயிலின் பின்பக்க விரிவாக்கத் துக்கு கட்டடக்குழு, பங்குத்தந்தை தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் உத்தேசக் கணக்கு 1 கோடியே 90 இலட்சம் அதில் முதல் கட்ட பணி 80 இலட்சம். (அ. எ. 274 , நாள் 8.3.2015)

3. பங்கில் வைக்ககப்பட்டுள்ள பெயர்ப்பலகை (போர்டு) புதுப்பிக்கவும் (NH 47) தேசிய

நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலிருந்தும் மக்கள் பார்க்கும் விதத்தில் 20'x 1 0 ' அளவில் பெரிய போர்டு வைக்கத் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 279 நாள் 9.8.2015)

4. புதிதாக 24 சென்ட் நிலம், 1 கோடியே 24 இலட்சம் ரூபாயில் 30.9.2015–இல் வாங்கப்பட்டது.

## எட்டாம் அருட்பணிப் பேரவை 2015-2018

தலைவர் – அருட்பணி அருள் தேவதாசன்
உதவித்தலைவர்–திரு. M. ஜோசப் கிரேசியஸ்
செயலர் – திருமதி ஜெசிந்தாமேரி
உதவி செயலர் – பிரைட்சிங்
பொருளர் – திரு. தங்கையன்

அருட்பணி. அருள் தேவதாசன் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டனர்.

### செயல்பாடுகள்

1. மார்த்தாண்டம் அரசு உயர்நிலைப் பள்ளியில் உள்ள NSS Camp மாணவிகள் நமது திருத்தலத்தில் ஒருநாள் Camp நடத்த அனுமதி வழங்கப்பட்டது. (அ.எ. 293 நாள் – 11.9. 2016)

2. புதிய சமூக அந்தோணியார் அரங்கம் 9.10.16 அன்று காலை 10 மணிக்கு தறிவைத்து அடுத்த நாள் வேலை ஆரம்பிக்கப்பட்டது. நவம்பர் 5– ஆம் நாள் நமது வட்டாரத்திலுள்ள முதியோர்களைச் சிறப்பிக்கும் நோக்கத்தில் முதியோர் தின விழா நமது பங்கில் வைத்து கொண்டாடப் பட்டது. (அ. எண் 295 13.1.2011)

3. பழைய ஆவணங்கள் குறைந்தது 10 வருடங்களாவது பத்திரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். ஆடிட்டுக்குத் தேவைப்படும் போது பங்குத் தந்தையின் அனுமதி பெற்று எடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப் பட்டது. (அ.எ. 296 நாள் –11.12.206)

4. 19.12.17 அன்று புதிதாக கட்டப்பட்ட அந்தோணியார் அரங்கிற்கு காலை 10 மணிக்கு அர்ச்சிப்பு நடத்தப்பட்டது. (அ.எ. 299 நாள் 12.3.2017)

5. புதிய அந்தோணியார் அரங்கைத் திருமணமண்டபமாகப் பயன்படுத்த வாடகைக்கு கொடுக்கலாம் ஆனால் உணவு பரிமாறுவதற்கு அரங்கைப் பயன்படுத்த வேண்டாம். அதற்காக 200 பேர் உட்கார்ந்து சாப்பிடுவதற்கு வசதியாக, 1 ஷெட் போடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. (அ.எ. 300 நாள் –9.4.2017)

6. 9.4.2017 அன்று நடைபெற்ற அருட்பணிப் பேரவைக்கு மறைமாவட்டப் பொருளரும் வட்டார முதல்வரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர். அவர்கள் கூட்டத்தில் திருத்தல வருமானம் முழுவதும் திருத்தலத்துக்குத் தேவையான சொத்துக்கள் வாங்குவதற்கும் திருத்தல கட்டடச் செலவுகளுக்கும் தான் பயன்படும் ஒரு பைசா கூட மறைமாவட்டத்துக்கோ வேறு பங்குகளின் செலவுக்கோ கேட்கமாட்டோம் என உறுதியளித்தார்கள். (அ.எ.301 நாள் – 14.5.2017)

7. சேக்றிஸ்டி விரிவாக்கம் செய்யவும் சாப்பாட்டிற்கான ஷெட், சமயலறை இவை உடனே கட்டுவதற்கான வேலைகள் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது.

பீடத்தின் முன் ஒரு பக்கம் மாதா சொரூபமும், மறுபக்கம் இயேசுவின் திரு இருதய சொரூபமும் அன்பளிப்பாக வாங்கப்பட்டன. அவை வைக்கப்பட்டுள்ள கூண்டும் அன்பளிப்பாக செய்து கொடுக்கப்பட்டது. (அ.எ. 306 நா. 8.10. 17)

கோயில் கட்டுமானப் பணியை உடனே தொடங்கலாம் என்றும், முதல் தவணையாக

3 இலட்சம் ரூ. தந்தால் வேலை ஆரம்பிக்கலாம் என்று கேட்டதற்கிணங்க முதல் தவணை 3 இலட்சம் ரூபாய் பொறியாளருக்கு கொடுக்கப்பட்டது.

## அசாதாரண நிலை : 2018-2019

குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் அவர்களின் ஆணைஎண் FA–156/216/SP Date 12/12/2016 – ன் படி இறைமக்கள் சமூகத்தோடு இணைந்த திருத்தலமாக வெட்டுவெந்நி, திருவிதாங் கோடு, புலியூர்குறிச்சி, சுங்கான்கடையும் அறிவிக்கப்பட்டது. அதே நேரம் வெட்டுவெந்நியை நட்டாலத்தோடு ஒப்பிட்டு சேர்க்கும் வகையில், பங்குத் தந்தை அருள் தேவதாசன் அவர்களின் பங்குபேரவை கூட்டத்தின்போது ஆத்திர மூட்டும் பேச்சும், பங்குப்பேரவையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் ஆத்திரமடைந்த பங்கு மக்கள் ஒன்றிணைந்து போராட்டமாக முன்னெடுத் தனர். அருட்பணி. ரசல்ராஜ், அருட்பணி. வின்சோ ஆன்றனி. அருட்பணி. அருள்தேவதாசன், திரு. இராஜப்பன் ஆகியோர் தொடர்ந்த காவல்துறை வழக்குகளாலும், RDO அலுவலக பிணைய ஒப்பந்த மூலமாக மன அழுத்தங்களாலும், பங்குமக்கள் கைது, மறைமாவட்டத்தால் பங்கு பேரவை நிர்வாகிகள் மற்றும் சிறப்பு நிதிக்குழு செயலாளர் டிஸ்மிஸ் ஆகியவற்றால் ஆத்திரமடைந்த பங்கு மக்கள் தொடர் போராட்டத்தை கையிலெ டுத்தனர். இக்காலகட்டங்களில் புதிய பங்கு பேரவை அமையும் வரை எவ்வித ஆவணங்களும் பாதுகாக்கப்படவில்லை.

## அருட்பணி. மரிய மார்ட்டின் 2019

அருட்பணி. மரிய மார்ட்டின் துணை அதிபராக பொறுப்பேற்றார். மறைமாவட்ட நிர்வாகத்துடன் பேசி சமாதான பேச்சு வார்த்தைக்கு உட்படுத்தி, பங்குமக்களை சமாதானப்படுத்தி, புதிய ஆணையை பெற்றுத் தந்ததால் இதற்கு மேல் உள்ள பங்கு மக்களின் கோரிக்கைகள் புதிய ஆயர் அவர்களுடன் பேசி முடிவு காண முடிவு செய்யப்பட்டது.

புதிய பங்குப்பணியாளர் அருட்பணி. மரிய மார்ட்டின் அவர்களின் பணி, பங்கு மக்களுக்கு மன மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் பங்கில் இணைந்து பணியாற்ற தூண்டுதலாக அமைந்தது. அருட்பணி. அந்தோணி M. முத்து புதிய அதிபராக பொறுப்பேற்றார். ஆயர் இல்லத்தோடு பலகட்ட புரிதலுக்கு பின் அருட்பணி. அந்தோணி M. முத்து பங்குத்தந்தையாகவும், அருட்பணி. மரிய மார்ட்டின் இணை பங்குதந்தையாகவும் பங்கில் பொறுப்பெடுத்து வளர்ச்சியை நோக்கிய பயணத்தில், புதிய பங்கு பேரவை தேர்வு செய்து, வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தியதால் பங்கு சமூகம் வளர்ச்சி நோக்கி பயணித்தது. பலமுறை மறைமாவட்ட சமாதானகுழு பேச்சு வார்த்தைக்கு பிறகு மேதகு ஆயர் அவர்களால் உடன்படிக்கை ஏற்பட்டு, சமாதான நிலைக்கு பங்கு மக்கள் திரும்பினாலும், நீதிமன்ற வழக்குகள் பங்கு மக்களை கவலைக்குள்ளாக்கி இருக்கிறது. மேதகு ஆயர். ஜெரோம் தாஸ் அவர்கள் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலமும், பங்கும் வேறு வேறு அல்ல ஒன்றே தான் என்று அறிவித்தார்கள்.

## ஒன்பதாம் அருட்பணிப் பேரவை 2019 முதல் இந்நாள்வரை

பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி M. முத்து இணைப் பங்குத்தந்தை அருட்பணி. மரிய மார்ட்டின் தலைமையில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் சேர்ந்து சிறப்பாக செயல்பட்டு வருகிறோம்.

## தற்போது நடைபெறும் அருட்பணிப் பேரவையின் வளர்ச்சி நோக்கிய பயணம்

சனவரி 12–ம் நாள் 2019 நாள் குறிப்பிட்ட குழித்துறை மறைமாவட்ட மேதகு ஆயர் ஜெறோம் தாஸ் அவர்கள் வழங்கிய ஆணை மற்றும் விதிமுறைகளின் அடிப்படையில் திருத்தலம் மற்றும் பங்கு வெவ்வேறு அல்ல; இரண்டும் ஓர் அலகாகவே செயல்படும் என்ற ஆணைக்கு இணங்கி புதிய அருட்பணிப் பேரவைக்கான தேர்தல் 2.6.2019 அன்று மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு வினரால் நடத்தப்பட்டு முடிவுகள் தெரிவிக்கப் பட்டன

தொடர்ந்து 16.6.2019 மறைமாவட்ட பொதுநிலையினர் பணிக்குழு அலுவல கத்தில் வைத்து நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது தேர்தல் பொறுப்பாளர் திரு. செலஸ்டின் அவர்களால் பயிற்சியும் வழங்கப்பட்டது.

### நிர்வாகிகள்

தலைவர்–அருட்பணி. அந்தோணி எம் முத்து
இணைப்பங்குத்தந்தை; S. மரிய மார்ட்டின்
துணைத்தலைவர்–திரு. M. ஜோசப் கிரேசியஸ்
செயலர் – திருமதி. R. லில்லிபாய்
பொருளர் – திரு. A. தங்கையன்
துணைச்செயலர் – திரு. S. பிறைட்சிங்

### உறுப்பினர்கள்

1. திரு. இராஜசேகர்– கண்ணக்கோடு அன்பியம்
2. திரு. ஸ்டீபன் – கோட்டைக்காட்டு விளை அன்பியம்
3. திருமதி. அனிதா – கோட்டைக்காட்டு விளை அன்பியம்
4. திரு. கிறைஸ்ட் எட்வின் ராஜ் – தெங்கன்குழிவிளை
5. திருமதி. லிசிஜாய் – தெங்கன்குழிவிளை
6. திரு. அருள் பிரகாஷ் – சாலியன் விளை
7. திருமதி. அல்போன்சா– சாலியன் விளை
8. திருமதி. ராதா – தெக்குவிளை
9. திரு. சத்தியநேசன் – படியன்விளை
10. திருமதி. தங்கம் – படியன்விளை
11. திரு. ஜாண்றோஸ்–குழித்துறை அன்பியம்
12. திருமதி. ஜெனட்– குழித்துறை அன்பியம்
13. திரு. தேவராஜ்–வின்செண்ட் தே பவுல் சபை
14. திருமதி. லாசம்மாள்– மரியாயின் சேனை
15. திருமதி. பிளாரன்ஸ் விஜிலா – சிறார் இயக்க வழிகாட்டி
16. செல்வன். பிபின் ராஜ்–இளைஞர் இயக்கம்
17. செல்வி. மோனிஷா –YCS
18. திருமதி. லீமா ஜெசிந்தா–பெண்கள் இயக்கம்
19. திருமதி. லைசம்மாள் – கிராம முன்னேற்ற சங்கம்
20. திரு. M. ஸ்டீபன்
21. திரு. சேம் டானியல்
22. திரு. ஞானசீலன் – நியமன உறுப்பினர்

முதல் பேரவைக் கூட்டத்திலே பின்வரும் குழுக்கள் அமைத்து பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.

1. **திருப்பண்டம் மற்றும் புனித எண்ணெய் குழு – திரு. கிறைஸ்ட் எட்வின் ராஜ், செல்வன். பிபின் ராஜ்**
2. **அன்னதானக்குழு – திரு. தேவராஜ், திரு. G. ஸ்டீபன், திருமதி. லிசி ஜாய்**
3. **கட்டடக்குழு – திரு. M. ஸ்டீபன், திரு. சேம்டானியல், திரு. சத்திய நேசன், திரு. கிறைஸ்ட் ஜெஸ்டின் ராஜ்.**
4. **தன்னார்வத்தொண்டர் குழு – திருமதி. அனிதா, திருமதி . ஜெனட்**
5. **தோட்டப் பராமரிப்பு குழு – திரு. இராஜசேகர், திரு. ஜாண்றோஸ், திரு. ஞானசீலன்**
6. **பேரிடர் மேலாண்மை குழு – திரு. M. அருள் பிரகாஷ்**

## பங்கின் நிதிக்குழு : -

திரு. தேவராஜ், திருமதி. P. ராஜம், திரு. ஜோஸ்பின் ராஜ், செல்வன் சஜின் ராஜ் மற்றும் பங்குப்பேரவை நிர்வாகிகள் சேர்ந்த நிதிக்குழுவும் உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் 2–வது ஞாயிறு மறைக்கல்வி முடிந்தவுடன் பங்குப் பேரவைக் கூட்டம் நடைபெறும்.

எம் பங்கில் 7 அன்பியங்கள் அதில் 283 குடும்பங்களும் அதில் 1414 – உறுப்பினர்களும் உண்டு. 5 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் கொண்டது.

## செயல்பாடுகள்

திருத்தல வருவாயில் 10% ஏழைகளுக் கானது. அது உண்மையான ஏழைகளைக் கண்டறிந்து உதவி வழங்க வேண்டும் என்ற நோக்கில் அருட்பணி அந்தோணி முத்து, திரு. கிரேசியஸ், திரு. தேவராஜ் திருமதி. ஜெனட் இவர்களைக்கொண்ட ஒரு உதவிக் குழு உருவாக்கி, மனுதாரரின் வீடுகளுக்குச் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்த உதவிகள் செய்யப்படுகிறது.

இது தவிர பங்கிலுள்ள ஏழை மாணவர்க்கு வருடந்தோறும் கல்வி உதவியும் ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவியும், மருத்துவ உதவியும் வழங்கப்படுகிறது. இதற்காக வங்கியில் நிரந்தர வைப்புத் தொகை வைக்கப்பட்டுள்ளது.

பங்கு வருவாயில் 10% அ.மு.ச விற்குக் கொடுத்து அதன் மூலமும் உதவிகள் செய்து வருகிறோம். இது தவிர பங்கிலுள்ள நோய்வாய்ப்பட்டோருக்கு மாதந்தோறும் ரூ. 10000/– அளவில் உதவி செய்யப்படுகிறது.

வாரந்தோறும் செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் புனித கஞ்சி வழங்கப் படுகிறது. இதை வாரந்தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் குடித்து பசியைப் போக்குவதோடு, நோயும் நீங்கி நலம் பெறுகிறார்கள். இந்தக்கஞ்சி தயாரிப்பதற்கு 4 பணியாளர்களும், பாத்திரங்கள் சுத்தம் செய்வதற்கு 2 பேரும் பணியாற்றுகிறார்கள். இது தவிர தன்னார்வத் தொண்டர் பலர் கஞ்சி ஊற்றவும், பரிமாறவும் உதவி செய்கிறார்கள்.

கஞ்சி ஊற்றுமிடத்தில் நெரிசலைக் குறைப்பதற்காக இருபக்கங்களிலும் தடுப்புகள் அமைத்து வரிசையாக நின்று வாங்கவும், செல்லவும் வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

அன்னதானம் வழங்கப்படும் இடத்தில் கிழக்குப் பக்க ஓரத்தில் 10 கழிவறைகள் ஆண், பெண் இருபாலருக்குமாகக் கட்டப்பட்டுள்ளன.

சமூக நலக்கட்டடம் முந்தைய பேரவையில் தொடங்கப்பட்டாலும், சரியான முறையில் எல்லா வேலைகளும் முடிவடைய வில்லை. எனவே அதில் மின் விசிறிகள், மின் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் செய்யப்பட்டன. உணவுக்கூடம் அமைக்கப்பட்டது. அதற்கு வேண்டிய சமையல் பாத்திரங்கள், பந்தி அமைப்பதற்கான டெஸ்குகள் செய்து அவற்றில் தரமான ஸ்டீல் தகடுகள் பொருத்தி 500 நாற்காலிகளும் வாங்கப்பட்டன. தரமான டைல்ஸ் போட்டு ஒரே நேரத்தில் 450 பேர் அமர்ந்து உணவு உட்கொள்ளும் அளவுக்கு சிறப்பாக ரூ. 35,35348/– செலவில் கலையரங்க வேலையும், உணவுக் கூட வேலையும் நடைபெற்றது.

அன்னதான பொருட்கள் துல்லியமாக எடை பார்க்க, எடை இயந்திரம் ஒன்றும் வாங்கப்பட்டது. அதிக மின்சக்தியில் 30 Kv ஜெனரேட்டர் ஒன்றும் வாங்கப்பட்டது.

சமூக நலக்கூடம் 2021 சனவரி மாதம் அருட்பணி. அந்தோணி M . முத்து அவர்களால் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொடுக்கப்பட்டது.

அதற்கான வாடகையும் விதிமுறைகளும் வகுத்து அரங்கின் மேற்பார்வையாளர் ஒருவரும், ஆண் 2 பேர், பெண் 2 பேர் என நான்கு பணியாளர்களும் பங்குப்பேரவைத் தீர்மானப்படி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர்.

### வாழும் குடில்:

கிறிஸ்து பிறப்பு பஜனை மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வீடு இல்லாத ஏழைக்கு வீடு (வாழும் குடில்) கட்டிக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டு முதலில் 8.12.19 நடைபெற்ற பேரவை கூட்டத்தில் குழித்துறை அன்பியத்தைச் சார்ந்த திருமதி. மரிய புஷ்பம் என்பவரது வீடு தேர்வு செய்யப்பட்டு, கிறிஸ்து பிறப்பு பஜனை மூலம் கிடைத்த ரூபாயும் நன்கொடையாளர்களின் உதவியும் அன்பியங்கள் பக்தசபை இயக்கங்கள் இவற்றின் உதவியுமாக ரூ. 6,26,880/– செலவில் வீடுகட்டி முடிக்கபட்டு 12.10.2020 அன்று ஜெபித்து திறந்து வைக்கப்பட்டது. அடுத்து 14.11.2020–ல் நடைபெற்றக் கூட்டத்தில் திருமதி. ஆனி பியூலாவின் வீடு கட்டிக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டது. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தேவையான மரம் அறுத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டது.

### பணியாளர் நியமனம் :

இரவுக்காவலர் பகுதிப்பணிக்கு திரு. பாபு அவர்களும் கழிவறைத் துப்புரவுச் செய்தலுக்காக திருமதி. சகுந்தலா அவர்களும் பங்குப் பேரவை மூலம் தேர்வு செய்யப்பட்டு, தொகுப்பூதியத்தில் நியமிக்கப்பட்டனர். அலுவலக உதவி யாளராக பணிபுரிந்த திரு. அருள்தாஸ் அவர்களும் இரவுக் காவலராகப் பணிபுரிந்த திரு. பர்ணபாஸ் அவர்களும் மறைமாவட்ட விதிப்படி பணி ஒய்வு பெற்றதால், அலுவலக உதவியாளராக– திரு. ஸ்டாலின் ஜோஸ், இரவுக் காவலராக – திரு. இராஜேந்திரன்விற்பனையாளராகப் பணிபுரிந்த திருமதி. ஜெயறோஸ் தனது பணியை ராஜினமா செய்ததால், திருமதி ஆனிபியூலா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றார்.

### உதவிகள் :

கொரோனா தடைக்காலத்தில் பணியாளர் அனைவருக்கும் மாதந்தோறும் ஊதியம் வழங்கப்பட்டது.

1 ஒரு குடும்பத்துக்கு ரூ.1500/– வீதம் 174 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. அரிசி, மளிகை, பழங்கள், கபசரகுடிநீர், மாஸ்க், காய்கறி இவை வழங்கப்பட்டது. பக்கத்துப்பங்குகளான, குழித்துறை, மார்த்தாண்டம், மக்களுக்கும் உதவிகள் செய்யப்பட்டன. இதற்காக ஆறு இலட்சத்துக்கும் ரூ. 6,23,000/– அளவில் உதவிகள் வழங்கப்பட்டது. ஆண்டு தோறும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு சுமார் 5 இலட்சம் அளவில் நல உதவிகள் வழங்கப்படுகிறது. ஆயர் இல்லம் கட்டுவதற்கு ரூ. 1,00000/– ஒரு இலட்சம், நட்டாலத்தில் ஓய்வு பெற்ற குருக்கள் இல்லத்துக்காக 10,00,000/– (பத்து இலட்சம்) வழங்கப்பட்டது.

திரித்துவபுரத்தில் இயங்கி வந்த முதியோர் இல்லத்துக்காக மாதந்தோறும் 15000/– வழங்கப்பட்டு வந்தது. தற்போது அங்கு முதியோர்கள் இல்லாததாலும், ரப்பர் மரங்களிலிருந்து பால்வெட்டி வருமானம்

வருவதாலும் ஆயர் இல்லத்தின் அனுமதியோடு அந்த உதவி 2021 ஜூலை மாதம் முதல் நிறுத்தப்பட்டது.

புது வசந்தம் சார்பில் நடத்தப்பட்டு வரும் மருந்தகம் நடத்துவதற்கு நமது ஆலயத்திற்குச் சொந்தமான கட்டத்தில் ஒரு அறை தரவேண்டுமென ஆயர் இல்லத்திலிருந்து எழுத்து மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்கி, நாம் தேவைப்படும் போது கேட்டால் அதைத் திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனையோடு ஒரு அறை இலவசமாக வழங்கப்பட்டது. இப்போது அந்த அறையில் மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

## சமாதானக்குழு :-

### குழு உறுப்பினர்கள்

பங்குக் குடும்பங்களில் ஏற்படும் உறவுச் சிக்கல்களைக் கேட்டறிந்து அமைதியை யும், ஒற்றுமையையும் உருவாக்குவதற் காக அருட்பணியாளரைத் தலைவராகக் கொண்ட சமாதானக்குழு உருவாக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது.

பணியாளர்களுக்கு மறைமாவட்டத்தின் வழிகாட்டுதலின்படி ஊதிய நிர்ணயம் பங்கு அருட்பணிப்பேரவை வழி வழங்கப்பட்டு வருகிறது.

## நிலப்பராமரிப்புக் குழு:

நமது பங்கிற்குச் சொந்தமான நிலங்களைப் பராமரித்து வருகிறது. நிலத்தை வளப்படுத்தி வருமானத்தை உருவாக்குவதையும் நோக்கமாக கொண்டு 1275 வாழைக் கன்றுகள் நடப்பட்டன. ஊடுபயிராக உளுந்தும் போடப்பட்டது. பழவார் பூமியில் 600 தேக்கு மரக்கன்றுகளும் நடப்பட்டு பாராமரிக்கப்பட்டு வருகின்றன.

## சப்பரப்பவனி:

ஆண்டுதோறும் பங்குக் குடும்ப விழா நடைபெறும்போது 6–ம் திருநாள் ஞாயிறு மாலையில் சப்பரம் பவனி நடைபெறும் அதற்காக பழவார் தோட்டத்திலுள்ள தேக்கு, ஈட்டி மரங்களைக் கொண்ட சப்பரம் செய்யப்பட்டு, அதில் பாதுகாவலர் புனித அந்தோணியாரின் திருச்சொரூபம் வைக்கப்பட்டு பங்கு மக்களால் தோளில் சுமந்து, மேளதாளங்களோடு ஜெபங்கள் பாடல்கள் இவையும் கலந்து பக்தியாக பவனி நடைபெறும்.

ஆலயத்தில் முன்பக்கம் அமைந்துள்ள ஷெட்டின் நீளம், 30 அடி கூட்டி சீர் செய்யப்பட்டது. அந்த ஷெட்டின் பக்கத்தில் அமைந்துள்ள தடுப்புச்சுவரில் புனித அந்தோணியாரின் வாழ்க்கை, வரலாற்று நிகழ்வுகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

ஆலயத்தின் இடது பக்கச் சாலை சுவரில் ஓவியங்களோடு இறை வசனங்களும் எழுதப்பட்டுள்ளன. குருசடியின் மேற்கூரை தரமான தகடுகள் பொருத்தப்பட்டு சீர் செய்யப்பட்டது. பக்கத்தில் மின் விசிறிகள் பொருத்தப்பட்டன.

குருசடியின் மேற்கூரையிலும், திருப்பண்ட நிலையத்திலும் LED போர்டுகள் பொருத்தப் பட்டுள்ளன. ஆலயமும், குருசடியில் அமைக்கப்பட்டுள்ள சிலுவைப் பாதை சொரூபங்களும் வண்ணம் பூசப்பட்டன.

பழைய CCTV கேமராக்களை மாற்றி, புதிய CCTV கேமராக்கள் பொருத்தி அதோடு புதிய T.V.யும் Inverter –ம் வாங்கப்பட்டு நமது ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி வழிபாடுகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றன. கோயிலில் முன்பக்கத்தில் செடிகள் வைக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.

நகராட்சிக்கு மனுகொடுத்து கோயிலின் முன் பக்கத்திலுள்ள ஒடை சுத்தப்படுத்தப் பட்டது.

பங்கிற்கான எல்லை வரையறுக்கப்பட்டு எல்லையுடன் கூடிய வரைபடம் தயாரித்து, மக்களின் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இளங்கிறிஸ்தவ மாணவர் இயக்கம், இளைஞர் இயக்கம், மறைக்கல்வி, வழிபாட்டுக்குழு, தவக்காலம் போன்றவற்றுக்குத் தேவைக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன

ஆண்டுதோறும் தவக்காலத்தில் தவக்காலத் திருப்பயணம் செல்கிறோம்.

பெருஞ்சிலம்பு குழந்தைகள் காப்பகம் சென்று உதவிகள் செய்துள்ளோம்.

## கொண்டாடப்படும் விழாக்கள்

பங்குத் திருவிழா – ஒவ்வொரு ஆண்டும் பெப்ருவரி மாதம் திருநீற்றுப் புதனுக்கு முந்தின நாள் செவ்வாய் திருவிழா முடிவது போல அதற்கு முந்தின செவ்வாய் கொடியேற்றப்படும் திருக்கொடி YMCA மைதானத்திலிருந்து அர்ச்சிக்கப்பட்டு மேளதாளங்களுடன் பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொள்ள, பவனியாக எடுத்து வந்து ஏற்றப்படும். 8 நாட்கள் குடும்பவிழாவை அனைத்து அன்பியங்கள், பக்தசபை, இயக்கங்கள், அருட்பணிப் பேரவை அனைவரும் பங்கேற்று சிறப்பிப்பர். 6–ஆம் நாள் ஞாயிறு மாலை சப்பரப் பவனியும் இறுதிநாள் மலையாளம், தமிழ் என தேவைக்கேற்ப திருப்பலிகளும், தொடர்ந்து அன்பின் விருந்தும் நடைபெறும். அன்பின் விருந்தில் சாதிமத பேதமின்றி சுமார் 40000/– மக்கள் வரைச் சாப்பிட்டு பயனடைவர். கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா தடைக்காலம் ஆனதால் அரசின் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பழமும், மோரும் வழங்கப்பட்டன.

## பங்கு உதயவிழா:

2009 மே 26–ஆம் நாள் எமது பங்கு தனிப்பங்காக மேதகு ஆயரால் ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்நாள் வரை மாலை 6.30 மணிக்கு ஆடம்பரத் திருப்பலியும், திருப்பலி முடிந்த பிறகு பங்கு மக்களுக்காக, பங்கு மக்களின் செலவில் ஆட்டிறச்சியுடன் கூடிய விருந்தும் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் ஜூன் 13 அந்தோனியார் நினைவு நாள், அன்று காலை 11 மணிக்கு விழாந்திருப்பலியும் தொடர்ந்து சுமார் 8000 மக்கள் வரை பங்கேற்கும் அன்பின் விருந்தும் நடைபெறும்.

## முப்பெரும் விழா :

ஆகஸ்ட் 15 –ம் நாள் அன்னையின் விண்ணேற்பு விழா, அந்தோணியார் பிறந்தநாள் விழா, நாட்டின் விடுதலை விழா மூன்றும் இணைந்து தேசிய கொடியேற்றி இனிப்புகள் வழங்கி திருப்பலியுடன் இளைஞர் இயக்கமும் மரியாயின் சேனையும் இணைந்து சிறப்பிப்பர்.

## பொங்கல் விழா:

ஆண்டுதோறும் சனவரி 15 ஆம் நாள் வழிபாட்டுக் குழுவினர் இணைந்து ஆலயத்தின் முன் பகுதியில் கோலம் போட்டு, தொடர்ந்து திருப்பலி நடைபெறும் திருப்பலியின் போது 7 அன்பியங்களிலிருந்தும் பொங்கல் மற்றும் பொங்கலுக்கான பொருட்கள் அடையாள காணிக்கையாக வழங்கப்படும். இறுதியில் அனைவருக்கும் கரும்பும், பொங்கலும் வழங்கப்படும்.

## கிறிஸ்மஸ் விழா மற்றும் மரவிழா :

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு டிசம்பர் 23–ம் நாள் மாலை திருப்பலிக்குப்பின் மறைக்கல்வி மன்றம் ஒரு மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் தயாரித்தும், கிறிஸ்மஸ் தாத்தாவும் சேர்ந்து ஆட்டம்–பாட்டமாக விழா நடைபெறும் மறைக்கல்வி மாணவர் மற்றும் பங்கு மக்கள் எல்லோரும் இணைந்து, குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கி பங்குத் தந்தையின் ஆசியுரையுடன் விழா நிறைவடையும்.

டிசம்பர் 24–ஆம் தேதி இளைஞர் இயக்கத்தினரால் தத்ரூபமான குடிலை குறைந்த செலவில் கட்டி அதற்கான பணமும் சேர்த்து வீடில்லாத ஏழை ஒருவருக்கு வாழும் குடில் (வீடு) கட்டித்தரப்படுகிறது. டிசம்பர் 24–ம் தேதி இரவு ஆடம்பரத் திருப்பலியும் தொடர்ந்து மக்களுக்கு கேக்கும் வழங்கப்படும்.

இப்பேரவையின் தலைவர் பங்கு பணியாளர் அருட்பணி. அந்தோணி எம். முத்து அவர்களும், இணைபங்குப் பணியாளர் அருட்பணி. மரிய மார்ட்டின் அவர்களும், ஆன்ம குரு, டென்சிங் அவர்களும் பங்கு மக்களோடும், பங்கு அருட்பணி பேரவையோடும் இணைந்து சிறப்பாக பணியாற்றி வருவதும், சமூக நல அர்ப்பணிப்போடு செயல்படுவதும் பெருமையடையச் செய்கிறது.

மூன்று ஆண்டுகளாக இறைவன் திரு அருளாலும், எங்கள் பாதுகாவலர் புனித அந்தோணியாரின் ஆசீராலும், எம் பங்கு மக்களின் இணைந்த செயல்பாடுகளாலும், வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எம் பங்கு மக்களும், ஆயிரக் கணக்கான பக்தர்களும் புனித அந்தோணியார் வழியாக இறையருள் மழையில் நனைந்து, அருளாதாரத்திலும், பொருளாதாரத்திலும் வளர்ந்து மன மகிழ்வோடும் நிறைவோடும் வாழ்கிறோம்.

அன்பர்களே! அனைவரும் வாருங்கள்!!

எம் புனிதரின் அருளாசீர் பெற்றுச் செல்லுங்கள்!!!

அருட்பணிப் பேரவைச் சார்பில் அனைவருக்கும் இனிய பொன்விழா நல்வாழ்த்துகள்!!



**இரா. லில்லிபாய்**
செயலர்
பங்குஅருட்பணிப்பேரவை

## மனத்திண்மம்

G.ஆன்றனி ஜியோ



பல அவமானங்கள் பட்டாலும் – நான்
வீழ்வேன்என நினைத்தாயோ!
நான்வீழ்ந்தாலும் சூரியனைப் போல்
மீண்டும் உதிக்கமாட்டேன் என நினைத்ததாயோ!
கீழே விழுந்தாலும் தூக்கி விட ஒரு
கை இருந்தாலே போதும் – நீ சாதனையாளன்
வீழ்ந்து எழுந்தவன் தான் பிற்கால வீரனாக வருவான்
குழந்தை வீழ்ந்து வீழ்ந்துதான் நடக்கும்
அது பேல வீரனே உனக்குள்ளே ஒரு
இலட்சியத்தை உருவாக்கு
வீரனாய் தீரனாய் எழுந்து நில்
எந்த சக்தி உன்னைத் தாக்கினாலும்
வீழ்ந்து போவேன் என நினைக்காதே
சாதிப்பேன் என்று நினைத்துக்கொள்
தோல்வியும் உனக்கு வெற்றியாக மாறும்

அருட்பணி பேரவை





நிதிக்குழு



கட்டிடக்குழு



சிறப்பு நிதிக்குழு



பீடப்பூக்கள்



பாடகர் குழு



வழிபாட்டுக்குழு



அன்பிய ஒருங்கிணையம்



பக்த சபைகள் ஒருங்கிணையம்



மறைக்கல்வி ஆசிரியர்கள்



ஆலய பணியாளர்கள்



பாலர் சபை



சிறார் இயக்கம்



இளம் கிறிஸ்தவ மாணாக்கர் இயக்கம்



இளைஞர் இயக்கம்



வின்சென்ட்–தே–பவுல் சபை



கிராம முன்னேற்ற சங்கம்



அடித்தள முழு வளர்ச்சி சங்கம்



மரியாயின் சேனை



கத்தோலிக்க சேவா சங்கம்



பெண்கள் இயக்கம்



சமாதானக் குழு



கைகள் இயக்கம்



அன்னதானக் குழு



தன்னார்வத் தொண்டர்கள்



Pre KG.



L.K.G.



U.K.G.



1–ம் வகுப்பு



2–ம் வகுப்பு



3–ம் வகுப்பு



4–ம் வகுப்பு



5–ம் வகுப்பு



6–ம் வகுப்பு



7-ம் வகுப்பு A



7-ஆம் வகுப்பு B



8-ஆம் வகுப்பு



9-ம் வகுப்பு



10-ஆம் வகுப்பு



11-ஆம் வகுப்பு



12-ம் வகுப்பு



13-ஆம் வகுப்பு



13-ஆம் வகுப்பு B



14-ம் வகுப்பு



15-ஆம் வகுப்பு A



15-ஆம் வகுப்பு B



16 -ம் வகுப்பு A பிரிவு



16-ஆம் வகுப்பு B பிரிவு



16-ஆம் வகுப்பு C பிரிவு



16 -ம் வகுப்பு D பிரிவு



16-ஆம் வகுப்பு E பிரிவு



16-ஆம் வகுப்பு F பிரிவு



16 –ம் வகுப்பு H பிரிவு



16–ஆம் வகுப்பு E பிரிவு





1980-1990–களில் பங்கில்
உதவி புரிந்த அருட்சகோதரிகளுடன்
செல்வி. ஆனிலெட்

# மறைக்கல்வி மன்றம்



**நோக்கம் :**

மறைக்கல்வி மனமாற்றத்தை உருவாக்கும் அனுபவக்கல்வியாகும். கிறிஸ்துவின் மனநிலையைப் பெறுவதே மறைக்கல்வியின் நோக்கம். அத்தகைய மனமாற்றம், கிறிஸ்து விரும்பிய இறையாட்சி என்னும் அன்புச் சமூகம் படைத்திட நீதிக்காகவும், உண்மைக்காகவும் உழைத்திடும் அர்ப்பண வாழ்வாக மிளிர வேண்டும் என்பதே மறைக்கல்வியின் நோக்கமாகும்.

**தொடக்ககால மறைக்கல்வி :**

13.6.1981 ஆம் ஆண்டு எம் பங்கில் 1981 – ஜூன் மாதம் அருட்பணி தனிஸ்லாஸ் அவர்களின் வழிகாட்டுதலின்படி 8 மாணவர்களைக் கொண்டு உபதேசியார் திரு. தேவதாஸ் அவர்களால் ஒரே ஒரு மறைக்கல்வி வகுப்பு மட்டும் ஞாயிறு மாலை 3 முதல் 4 மணி வரை நடத்தப்பட்டது. முதல் முறையாக முதல் திருவிருந்து, மற்றும் உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள் ஆயர் ஆரோக்கிய சுவாமி அவர்களால் வழங்கப்பட்டபோது, பயிற்சி வகுப்புகளை உபதேசியார் திரு. தேவதாஸ் அவர்களும் பின்னர் அவருடன் இணைந்து திருத்துவபுரத்தின் அருட்சகோதரி ஒருவரும் நடத்தினார்கள். பின் 1982 – ம் ஆண்டு ஆண்டு இறுதியில் திரு. தேவதாஸ், திரு. தனிஸ்லாஸ், திரு. மரிய தாஸ் மற்றும் அருட்சகோதரி ஒருவர் ஆகிய 4 ஆசிரியர்களுடன் மறைக்கல்வி வகுப்புகள் நடத்தப்பட்டன. இன்று 30 ஆசிரியர்கள் 320 மாணவர்களைக் கொண்டு சிறப்புடன் வளர்ந்துள்ளது.

**பெற்றோர் வகுப்பு உதயம் :**

9.8.1992 அன்று அருட்பணி சேகர் மைக்கிள் அவர்கள் தொடங்கிய பெற்றோர் கலந்துரையாடல் வகுப்பானது பெற்றோர் மறைக்கல்வி வகுப்பாக மாற்றம் பெற்று அருட்சகோதரி. ஈடா அவர்களால் நடத்தப்பட்டது. இன்று பல பெற்றோர்களைக் கொண்ட 8 வகுப்புகளாக அது பரிணமித்து நிற்கின்றது.

1996 – ஆம் ஆண்டு பங்கு அருட்பணி பேரவைக்கு முதல்முறையாக திரு. தனிஸ்லாஸ் அவர்கள் மறைக்கல்வி பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**வட்டார பொறுப்புகளில் எம்பங்கு நிர்வாகிகள்:**

1996 – 1998 –ல் எம் மறைக்கல்வி மன்றத்தலைவர் திரு. அருள் பிரகாஷ் திருத்துவுரம் வட்டார மறைக்கல்வி மன்றத் தலைவராகத் தேர்வுச் செய்யப்பட்டு அரும் பணியாற்றினார். 2013 – 2016 வரை எம்மறைக்கல்வி மன்றச் செயலர் திருமதி. ஜாக்குலின் வட்டாரத் துணைச் செயலராக சிறப்புடன் பணிச்செய்தார். 2016 –2019 வரை எம் மறைக்கல்வி மன்றச்செயலர் திருமதி. விஜிலா றோஸ் வட்டாரச் செயலராகச் சிறப்புடன் பணிசெய்தார்கள்.

- சிறப்புச் செயல்பாடுகள்
- எமது மறைக்கல்வி மன்ற ஆசிரியர்களின் 10 பேர் இறையியல் பட்டயப் பயிற்சியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றுள்ளனர்.

- மறைமாவட்ட அளவில் நடைபெறும் ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சியில் 18 ஆசிரியர்கள் பங்கேற்று சான்றிதழ் பெற்றுள்ளனர். மற்ற ஆசிரியர்களும் அடுத்தக் கட்டத்தில் பங்கேற்பர்.
- தற்போது மாணவர்களிடம் போட்டி மனப்பான்மையைத் தவிர்க்க தரத்தின் அடிப்படையில் (grade bare) பரிசுகள் வழங்கப்படுகின்றன.
- ஆசிரியர்கள் மாணவர்களின் அன்புறவினை வெளிப்படுத்த பங்கு அருட்பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து இன்பச்சுற்றுலா நடத்தப்படுகிறது.
- மறைக்கல்வி பயிலும் மாணவர்களில் முதல் திருவிருந்து பெறுவோருக்காக ஒரு தனிவகுப்பு ஒதுக்கி சிறப்பாக பயிற்சி வழங்கப்படுகிறது.
- கோட்டாறு மறைமாவட்ட மறைக்கல்வி மன்றப்போட்டிகள், தேர்வுகள், குழித்துறை மறைமாவட்ட மறைக்கல்விமன்றப் போட்டிகள் மற்றும் தேர்வுகளில் எமது மாணவர்கள் பல பரிசுகளைப்பெற்று பங்கிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.
- கடந்த2020 ஜனவரி 15–ஆம் நாள் திருத்துவபுர வட்டார அளவில் நடந்த கலைப்போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பதக்கம் பெற்று பாராட்டைப் பெற்றோம்.
- கடந்த 2021 –ஆம் ஆண்டு முதல், முதல் திருவிருந்து பெறும் மாணவர்களின் காணிக்கை பணத்தை V.S.C.S. வங்கியில் வைப்புநிதியாக வைத்து கிடைக்கும் வட்டியை மறைக்கல்வியிலுள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி உதவிக்காக பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.
- 13.11.1992 –ல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு வேளையிலும் இதர பேரிடர் நேரங்களிலும், கொரோனா காலங்களிலும் எம் மறைக்கல்வி மன்ற ஆசிரியர்களும், மாணவர்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிச் செய்துள்ளோம்.
- ஆசிரியர்களின் தரத்தை மேம்படுத்த வட்டார, மறைமாவட்ட பயிற்சிகளில் மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்கின்றோம் இதைத்தவிர ஆண்டிற்கு குறைந்தது 3 பயிற்சிகளாவது பங்களவில் நடைபெறுகிறது. திருப்பலியின் போது சிறு பிள்ளைகளை ஒழுங்குபடுத்தியும் அமைதியுடன் பக்தியோடு திருப்பலியில் பங்கேற்க 2 ஆசிரியர்கள் பணிசெய்கிறார்கள்.

### தற்போதுள்ள நிர்வாகிகள்

தலைவர் – திரு. மரிய சிசில்
செயலர் – திருமதி. பிளாரன்ஸ் விஜிலா
பொருளர் – திரு. பிரசாந்த்
துணைத்தலைவர் – திரு. மரிய பெஸ்கி
துணைச் செயலர் – திரு. தேவராஜ்

இவ்வாறாக எம்மறைக்கல்வி மன்றம் வளர்ச்சி அடைந்து வருவதோடு சிறப்பாகச் செயல்பட்டு எம் பங்கின் எதிர்காலம் ஏற்றம் பெற வழிகாட்டி வருகிறது.



# புனித வின்செண்ட் தே பவுல் சபை



கோட்டாறு மறைமாவட்ட வின்சென்ட்தே – பவுல் சபை மத்திய சபை தலைவராக திரு. செலஸ்டின் இருந்தபோது, திருத்துவபுரம் தனி நிர்வாக சபை தலைவர் திரு. ஐயாவு நாடார் அறிவுரைபடி 25,04,1987 – ல் வட்டுவெந்நி புனித அந்தோணியார் குருசடியில் வின்சென்ட் தே பவுல் சபையின் கிளை ஆரம்பிக்கப் பட்டது. 22.05.1989 சுவிகாரம் பெற்ற சபையாக மாற்றம் பெற்றது.

அதன் தலைவராக சகோ. V. மரியதாஸ், செயலர் சகோ. S. சேவியர், பொருளாளர் சகோ. R. தன்சிலாஸ், **உறுப்பினர்களாக** சகோ. K. ராஜப்பன், சகோ. M.மரியசிசில், சகோ. A.அம்புறோஸ், சகோ. S.ராஜன், சகோ. S. கிறிஸ்துராஜ், சகோ. A. பாபு, சகோ. K.தேவதாஸ், சகோ. G.டென்னிஸ், சகோ. M.கிறிஸ்டோபர், சகோ. R.ஜாண்றோஸ், சகோ. கிறிஸ்டடஸ் ஆகியோர் செயல்பட்டனர்.

1993 – ல் வின்சென்ட் தே பவுல் சபை விதிமுறைப்படி நிர்வாகம் மாற்றி அமைக்கப்பட்டது. தொடர்ந்து தலைமைப்பணியாளர்களாக சகோ. தங்கையன், சகோ. மரியதாஸ், சகோ. மரியசிசில், சகோ. தேவராஜ், சகோ. ராஜன் தொடர்ந்து தற்போது சபை தலைவர் சகோ. D. கிறைஸ்ட் எட்வின் ராஜ், உதவிதலைவர் சகோ. E. மரிய சிசில், செயலர் சகோ. E. ஜெபகுமார், பொருளர் சகோ. T. தேவராஜ், து. செயலர் சகோ. P. குமார், மற்றும் உறுப்பினர்களாக சகோ. ஜோஸ், சகோ. ராஜன், சகோ. கிறைஸ்ட் ஜஸ்டின் ராஜ், சகோ. ஜெயசிங், சகோ. மோகன், சகோ. ஜோஸ்பின், சகோ. கௌதம், சகோ. வர்கீஸ், சகோ. வர்கீஸ் ராஜ், சகோ. சத்தியராஜ், சகோ. கிறிஸ்டோபர், சகோ. பென்ஸ் லால், கொண்டு செயல்பட்டு வருகிறது.

**செயல்பாடுகள்**

1987 முதல் வீடுசந்திப்பின் மூலம் வீடு வீடாக சென்று 60 –க்கு மேற்பட்ட குடும்பங்களை ஆலயம் வர முயற்சி எடுத்தோம். 1990 – ல் 11 வார்டுகளிலும் 109 குடும்பங்களாக விரிவாக்கம் அடைய வின்சென்ட் தே – பவுல் சபை அளப்பரிய தொண்டாற்றியுள்ளது. மேலும் உணவு, உடை, கல்வி, மருத்துவம் ஆகிய அன்றாட செலவு செய்ய இயலாத குடும்பங்களுக்கு சிறு, சிறு உதவிகள் செய்து ஏழை குடும்பங்கள் ஏழ்மையில் இருந்து மீண்டு வர எங்களால் முடிந்த அளவு தொண்டாற்றியுள்ளோம்.

1988 – ல் கண்ணக்கோடு கண்ணு நாடாச்சியின் ஒலைவீடு, ஒட்டு வீடாக சரி செய்து உதவியாக ரூபாய் 2000 உதவி செய்தோம்.

பழவாறு ராஜம்மாள் வீடு சரிசெய்ய வின் சென்றியர்களாகிய நாங்கள் உழைத்ததோடு தேவையான பொருட்கள் கொடுத்து உதவி உள்ளோம்.

1989 வரை வெட்ட வெளியில் மண் தரையில் உட்கார்ந்து திருப்பலி பார்த்த எங்களுக்கு 100 பேர் அமர்ந்து திருப்பலி பார்க்கும் அளவுக்கு முதல் ஆலய விரிவாக்கம் நடைபெற்றபோது வின்சென்றியர்கள் முழு மூச்சுடன் இரவு, பகல், பாராமல் உழைத்து அரும் பணியாற்றியுள்ளோம்.

1990 – ல் மக்கள் குருசில் எண்ணை ஊற்றி அதை புனித எண்ணையாக வடித்து செல்வார்கள். இதை கவனித்த வின்சென்றியர்கள் கூடி ஆலோசனை செய்து 1 லிட்டர் நல்ல தேங்காய் எண்ணை வாங்கி குருசில் ஊற்றிய புனித எண்ணையாக 1 பாட்டில் 5 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது. புனித எண்ணை வாங்க வருபவர்கள் ஜெபமாலை இருக்கா என கேட்க ஆரம்பித்தார்கள். இதையும் வின்சென்டியர் கூட்டத்தில் ஆலோசித்து 200 ரூபாய் முதலீட்டில் ஜெபமாலை, உத்திரியமும் போன்ற திருபண்டங்களும் வாங்கி மக்களின் இறைநம்பிக்கையில் தொண்டாற்றி உதவி செய்தோம்.

8.9.1992 – ல் பகல் பணியாளர் ஜார்ஜ் நியமிக்கப்பட்டார். அதுவரை வின்சென்றியர்களும், செல்வி ஆனிலற்றின் உதவியோடு நடைபெற்ற விற்பனையை பகல் பணியாளர் ஜார்ஜிடம் கொடுத்து விற்பனை செய்ததோடு, அவருக்கு ஊக்கத் தொகையாக ரூபாய் 35 முதலில் கொடுத்தோம். 1

லிட்டரில் ஆரம்பித்த புனித எண்ணை 2,3... 10 லிட்டராக வளர்ச்சியடையவே வாரம்தோறும் எண்ணை மற்றும் புனித பொருட்களை அருட்தந்தை யூஜின் குழந்தை அவர்காளல் மந்திரிக்கப்பட்டு விற்பனை கூடமாக மாற்றி வளர்ச்சி கண்டோம்.

13.11.1992 – ல் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் 100–க்கு மேற்பட்ட வீடுகள் சுற்றுவட்டாரத்தில் சேதமடைந்தது. வீடு சந்திப்பு மூலம் கிடைத்த தகவலை ஆயர் லியோண் தர்மராஜ் அவர்களுக்கு தெரிவிக்கவே, அவர் "காரிதாஸ் ஆப் இந்தியா" வை எங்களுக்கு தொடர்பு ஏற்படுத்தி தந்தார். "காரிதாஸ் ஆப் இந்தியா" மூலம் வீடு இழந்த கண்ணக்கோடு இன்னாசிமுத்து, பந்தல்விளை அருள்ராஜ், தெக்குவிளை பீட்டர் பெர்ணாடஸ், படியன்விளை மரியதாஸ், பழவார் புஷ்பம் ஆகியவர்களுக்கு ரூபாய் 20000 மதிப்பிலும் படியன்விளை தங்கராஜ், பழவார் லில்லி ஆகியவர்களுக்கு 13500 ரூபாய் மதிப்பிலும் ஆக 7 வீடுகளும் மற்றும் சபை சார்பில் வீடுவாசல் இழந்த மக்களுக்கு உணவு, உடை என எங்களால் இயன்ற அளவு உதவி செய்தோம்.

1992 பெருவெள்ளத்திற்கு வின்சென்றியர்களின் பணி, அப்போதைய பங்குபேரவையும் மிகதுடிப்பாக செயல்பட்டதால் 1990 ல் 109 ஆக இருந்த குடும்பங்கள் 173 ஆக உயர்ந்தது. இதற்கு வீடு சந்திப்பு, மற்றும் ஏழைகளுக்கு உணவு, உடை, கல்வி, மருத்துவம், உதவி என வின்சென்ட் தே – பவுல் – ம் திட்டம் போட்டு பணியாற்றினர். பங்கு பேரவை உறுதுணை யாக இருந்தது.

1996 – ல் பழைய குருசடியை இடித்து செம்பரத்தி வடிவில் கட்டியபோது வின்சென்றியர்கள் அதற்கான ஒத்தாசைகளை செய்து ஊக்கமளித்தோம். 4.2.1997 – ல் மேதகு ஆயர் லியோன் தர்மராஜ் அவர்களால் அர்ச்சிப்பு நடைபெற்றது. அன்று 5 குடும்பங்களுக்கு 5 ஆடுகள் வழங்கி அவர்களுக்கு வழிகாட்டி உதவியுள்ளோம். 5 தத்து குடும்பங்களுக்கு உதவிகளும் செய்தோம். இக் காலகட்டத்தில் சுமார் 374000 ரூபாய் ஏழைகளுக்கு உதவி உள்ளோம்.

1999 வெட்டுவெந்நி புனித அந்தோணியார் உருவம் பொறித்த காலண்டர் அச்சிட்டு விற்பனை செய்தோம்.

கிளைசபை உள்ளூர் பிரிவு, சிறிது சிறிதாக சேமித்த பணம், நன்கொடையும் சேர்த்து ரூபாய் 60000 FD போடப்பட்டது.

1999 to 2004 வரை வீடுசந்திப்பு செய்து ரூபாய். 407600 உதவி ஏழைகளுக்கு செய்யப்பட்டுள்ளது.

புனித எண்ணெய், திருப்பண்டம் முதலியவை வைப்பதற்கு இடம் தட்டுப்பாடாக இருந்ததால் ஒரு பெட்டிக்கடை செய்து அதில் வைத்து விற்கவும் செய்யலாம் என்று முடிவெடுத்து ரூபாய் 25600 செலவில் ஒரு இருப்புப்பெட்டி கடைசெய்து வைக்க முயற்சி எடுத்தோம். பெட்டிக்கடை வைத்து விற்கக்கூடாது என பங்குத் தந்தை அறிவுறுத்திய தால் அந்த முயற்சியை கைவிட்டு அந்தப் பெட்டி கடையை ஒரு ஏழைக்கு கொடுத்து உதவினோம்.

1990 ல் சபையால் துவங்கபட்டு 13 வருடங்களாக புனித எண்ணை, திருப்பண்ட விற்பனையை செய்து வந்தோம். பங்கு ஏற்று நடத்துவது என பங்குபேரவையில் முடிவெடுத்து தகவல் பணிக்கப்பட்டதின் அடிப்படையில் 01.06.2003 – ல் பங்கு பேரவையிடம் ஒப்படைத் தோம். திருப்பண்ட பொருட்களின் மதிப்பாக ரூ. 40000 சபைக்கு தரப்பட்டது. புனித எண்ணை மற்றும் திருபண்டத்தை பங்குப்பேரவை நடத்தினார்கள்.

2006 – 2007 ஆண்டுகளில் தற்போது காட்சிதரும் அழகிய கோயில் கட்ட பங்கு மக்கள், இயக்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் அரும்பாடுபட்டு உழைத்தார்கள். செங்கல்சூளை அதிபர் திரு. டென்னிஸ் அவர்களை நமது வின்சென்றியர்கள் சந்தித்து 2 டாறஸ் மணல் நன்கொடையாக பெற்றுக் கொடுத்தோம். 100 க்கு மேல்பட்ட மூடை சிமென்டுக்கு பணம் நன்கொடையாக பெற்றுக் கொடுத்தோம். மணல் அரித்து கொடுப்பதில் அன்பிய மக்களும், வின்சென்றியர்களும் மிகவும் ஈடுபாடுடக் செயல்பட்டனர். பாடுபட்ட சுரூபம் செய்ய ஆலப்புழாயில் உள்ள சம்பருளம் சென்று பாடுபட்ட சுரூபம் செய்து வாங்கி வர உதவினோம். 17.4.2007 –ல் இந்த அழகிய கோயிலை அப்போதைய மறைமாவட்டப் பரிபாலகர் Fr. மரியதாஸ் அர்ச்சித்து திருப்பலியும் செய்தார்கள். இந்த காலகட்டங்களில் சுமார் 90000 ரூபாய் ஏழைகளுக்கு உணவு, உடை, வீடு, கல்வி, மருத்துவம் என உதவி செய்துள்ளோம்.

23–8–2009 அன்று அப்போதைய பங்குத்தந்தை, மெழுகுதிரி ஷெட்டுகட்ட இடம் ஒதுக்கி தந்தார்கள். பழையமெழுகும் வேறு யாருக்கும் கொடுக்கக்கூடாது வின்செண்ட் தே பவுல் சபைக்கு தான் கொடுக்க வேண்டும் என பேரவையில் பேசி நமக்கு ஊக்கம் அளித்தார். ரூபாய் 125000 செலவில் தொழில் கூடம்

கட்டப்பட்டது. 18.10.2009 அன்று தொழில் கூடம் திறந்து பணி ஆரம்பம் ஆனது. பாக்கெட் மெழுகுதிரி 5 ரூபாய், 10 ரூபாய் மெழுகுதிரி உற்பத்தி செய்ய ஆரம்பித்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

2009 – 2013 வருடம் வரை உணவு, உடை, கல்வி மருத்துவ உதவியாக ரூபாய் 282635 உதவிகள் செய்து உள்ளோம்.

22.12.2014 அன்று 6400 ரூபாய்க்கு 2 ஆடுகள் வாங்கி 2 ஏழைகளுக்கு கொடுக்கப்பட்டது. குறிப்பாக கோயில் சுத்தம் செய்வது, கூண்டிற்கு வர்ணம் பூசுவது போன்ற பணிகளை சில ஆண்டுகளாக செய்து வந்தோம்.

2015 –2018 ஆம் ஆண்டுகளில் ஏழைகளுக்கு உணவு, மருந்து, உடை மற்றும் அறுவை சிகிச்சைக்காக ரூபாய் 3,22300 உதவி செய்துள்ளோம்

கோவில் தூண் சுத்தம் செய்ய ரூபாய் 30000 செலவு செய்துள்ளோம். 14 சுரூபங்களும் வர்ணம் அடிக்க ரூபாய் 19000 செலவு செய்துள்ளேன்.

கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு 785 கிலோ அரிசி மற்றும் 673 பேருக்கு ரூ. 100 ரூபாயும் அரிசியும் கொடுத்து உதவியுள்ளோம்

84 நபர்களை கோவா அழைத்து சென்று புனித சவேரியார் அழியா உடலை கண்டு தரிசிக்க உதவி உள்ளோம்.

5.5.2019 அன்று C C உதவித்தலைவர் திரு. மரியசிலுவை, CC பெண்கள் பிரதிநிதி வனஜா நமது சபை ஆத்மீக ஆலோசகர் Fr. மரியமார்டின் ஆகியவர்கள் முன்னிலையில் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

2019 வருடம் கல்வி, உணவு, மருத்துவம், நல்லடக்கம் போன்றவற்றிற்கு ரூ. 113290 உதவிகள் செய்யப்பட்டது.

7.6.2020 கொரோனா காலத்தில் உணவுக்காக ரூ. 65030, மாஸ்கு கொடுத்தது ரூ. 5375, தத்துக்குடும்பம் ரூ. 15000, மருத்துவம் ரூ. 29000, வாழும் குடில் கட்ட ரூ. 50000, மூலிகைத் தேனீர் ரூ.25000

1.2.2021 – திருவிழா முடிவு நாளில் சமபந்தி இல்லாததால் 160 liter தயிர் வாங்கி அதற்கு சேருமானம் சேர்த்து மோராக்கி வின்சென்ட் தே பவுல் சபை பக்தர்களுக்கு வினியோகம் செய்தது. கல்வி உதவி ரூ. 26000 மருத்துவம் ரூ. 30000 உணவு ரூ. 25000 தத்துக்குடும்பம் 9000 செல்வ மகள் திருமணநிதி இரண்டு பேருக்கு ரூ. 25000 என ரூ. 50000 vscs வங்கியில் வைப்பு நிதி வைத்து கொடுக்கப்பட்டது,

சபையானது 22 உறுப்பினர்களுடன் சீரும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

# என் தந்தை



S.T. Akshaara Sharon
சாலியன்விளை அன்பியம்.



எனக்கு கிடைத்த மணிமகுடம் என் தந்தை.
ஆனால் அந்த அன்பின் பரிமாற்றம் தொலைபேசியிலே முடிகிறது.
எப்போது முடியும் தொலைபேசியில் தொடர்வு கொள்ளும் நாட்கள்
அப்பா என்றாலே எனக்கு ஞாபகம் வருவது என் தந்தையின் புன்சிரிப்பு
ஆனால் எனக்கு தெரியாமல் எத்தனையோ கவலைகளும் கண்ணீரும் உங்களுள்
கடல் கடந்த எனக்காக உழைக்கும், தியாகத்தின் சிகரம் என் தந்தை
எத்தனையோ பேர் என்னிம் வந்து
உன் தந்தையைப் பற்றி எனக்கு தெரியாதா? என்பர்
என்னை இளவரசியாக பார்க்கும்
மணிமுடி சூடா மன்னன் என் தந்தை
போதும் இந்த வெளிநாட்டு வாழ்க்கை
முற்றுப்புள்ளி வைப்போம்
தொலை பேசியில் தொடர்பு கொள்ளும் நாட்களுக்கு

# மரியாயின் சேனை



அமைப்பின் பெயர் – புனித வியாகுலமாதா பெண்கள் பிரசீடியம்

நோக்கம் – மரியாள் வழி நின்று உறுப்பினர்களைத் தூய்மைபடுத்துவதன் வாயிலாக கடவுளை மகிமைப்படுத்துவதே சேனையின் நோக்கமாகும்.

தொடங்கப்பட்ட ஆண்டு – 23.8.1993

தொடங்கிய போது இருந்த நிர்வாகிகள்

அருட்பணியாளர்கள் – யூஜின் குழந்தை

தலைவர் சகோ. ஜாஸ்மின் செல்வி

செயலர் சகோ. ராஜம்

பொருளர் சகோ. தெரசம்மாள்

வட்டாரம் / மறைமாவட்ட அங்கீகாரம் கிடைத்த பதிவு செய்த ஆண்டு – வட்டார அளவில் கொமித்சியத்திலிருந்து நிர்வாகிகள் வந்து தேர்வு செய்து 28.3.1993 அங்கீகாரம் கிடைக்கப்பட்டு துவங்கப்பட்டது.

பங்கு பேரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்த ஆண்டு 10.8.2009

## தற்போதைய நிர்வாகிகள் :-

தலைவர் – சகோதரி L. வசந்த குமாரி

செயலர் – சகோ. D. விஜி

பொருளர் – சகோ. மரிய செல்வம்

துணை தலைவர் – சகோ. ரோசம்மாள்

வழிபாட்டு குழு உறுப்பினர் – சகோ. வல்சலா

மொத்த உறுப்பினர்கள் – 34 பேர்

## சிறப்புச் செயல்பாடுகள்

1. மருத்துவமனையில் நோயாளிகளைச் சந்தித்து ஜெபித்து ஆறுதல் கூறுவது.
2. வீடுகளில் நோயாளிகளைச் சந்தித்து ஜெபித்து ஜெபமாலை செய்து ஜெபம் செய்தல்
3. ஆதரவற்றோருக்கு ஆறுதல் கூறுதல்
4. இறந்த வீடு சந்தித்து ஜெபமாலை செய்து வேண்டுதல்
5. ஒவ்வொரு வருடமும் தவக்காலத்தின் போது 14 ஆலயங்களை சந்தித்து சிலுவைப்பாதை செய்து ஜெபிக்கின்றோம்.
6. வருடத்திற்கு 1 முறை முதியோர் இல்லம் அல்லது அனாதை இல்லம் சென்று சந்திக்கிறோம்.
7. நமது சேனை சகோதரிகள் 17 பேர் செவ்வாய் மற்றும் வெள்ளி நடக்கின்ற நவநாள் திருப்பலியில் தன்னார்வத் தொண்டர்களாக பணியாற்றி வருகின்றனர்.
8. அன்னைமரியா பாத்திமாவின் காட்சி கொடுத்த நூற்றாண்டு விழா சகோதரர் பிராங்ஃபி வணக்கத்துக்குரிய ஆலபி லாம்பி சகோதரர் எடலக்குயின் ஆகியோராது விழாவையும் இணைந்து முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்ட நாள் சேனை 'சகோதரிகள் கலந்து கொள்கின்றனர்.
9. 2017–ம் ஆண்டு எமது ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்ட மூத்த குடிமக்கள் விழாவில் எமது சேனை சகோதரிகள் முதியவர்களுக்குத் தேவையான எல்லா உதவிகளும் செய்துள்ளோம்.
10. 10.7.2015–ல் நடைபெற்ற பொதுநிலை யினர் விழாவிலும் எமது சகோதரிகள் பங்கேற்றனர்.

# கிராம முன்னேற்றச் சங்க வரலாற்று அறிக்கை

## 1. கிராம முன்னேற்றச் சங்கம்

1992–ம் ஆண்டு ஆகஸ்ட் 9–ம் நாள் அருள்பணி யூஜின் குழந்தை அவர்கள் தலைமையில் 25 உறுப்பினர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

## 2. முதல் நிர்வாகிகள்

தலைவர் – திரு. கிறிஸ்துதாஸ்
செயலர் – திரு. நிருப குமார்
பொருளர் – திரு. ராஜையன்

## 3. நோக்கம்

“எல்லோரும் எல்லாம் பெற்று மனித மாண்போடும், சமத்துவத்தோடும், பங்கேற் போடும் உழைத்து வாழும் சூழலை உருவாக்குதல்.”

## 4. தற்போதைய நிர்வாகிகள்

தலைவர் – B. திருமதி விஜிலா
துலைத்தலைவர் – திருமதி. L. வசந்தகுமாரி
செயலர் – திருமதி . A. சுபா
துணைச்செயலர் – திருமதி. மரிய மல்லிகா
பொருளர் – திருமதி . V. ஜெசிந்தா மேரி

## செயல்பாடுகள்

1. 1992 – ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீடு சேதமடைந்த 5 குடும்பங்களுக்கு ரூ. 15000 வீதம் உதவி வழங்கப்பட்டது.

2. 2006 – ம் ஆண்டு முதல் 2009 –ம் ஆண்டு வரை சங்கத்தின் வழியாக சங்க உறுப்பினர்களுக்கு பசுமாடு வாங்க கடன் கொடுத்து அந்த நபர் வழியாக பால் சங்கத்திற்கு கொண்டு வந்து சங்கம் வழியாக விற்பனை செய்து ஏழைகளுக்கு உதவி செய்யப்பட்டது.

3. ஏழைகளின் நலன் காக்க சங்க உறுப்பினர்களுக்கு சேமிப்புக்கடன், சிறப்புக் கடன், கல்விக்கடன் என 10 மாதத்திற்கு ஒரு முறை சுழற்சி முறையில் கடன் கொடுத்து உதவி வருகிறோம்.

4. ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் வேறொணிக்கா கல்வி உதவித் திட்டத்தின் கீழ் சங்க உறுப்பினர் ஒருவரின் பெண் குழந்தைக்கு கல்வி உதவி வழங்கப் படுகிறது.

5. சங்க உறுப்பினர்கள் வாசிக்கும் திறனை அதிகரிக்க ரூ. 4000 மதிப்பிலான நூலக புத்தகங்கள் வாங்கி படித்து பயன்பெற்று வருகிறோம்.

6. மார்ச் 8 பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகளைக் கண்டித்து நடைபெறும் பேரணியில் சங்க உறுப்பினர்கள் பங்கேற்று வருகிறோம்.

7. இறப்பு கால நிதித் திட்டத்தின் கீழ் 2021 –ம் ஆண்டு கொரோனா காலத்தில் உயிரிழந்த சங்க உறுப்பினர் திருமதி. ராகினிக்கு ரூ. 10000 பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.

## 6. சேவைகள்

1. 2009–ம் ஆண்டு தெருவிளக்கு போடவும், சாலை செப்பனிடவும் நகராட்சிக்கு மனு கொடுக்கப்பட்டது.
2. கழிவு நீர் ஓடை தூர்வார நகராட்சியை வலியுறுத்தியதன் பேரில் தூர் வாரப்பட்டது.
3. இறப்புகால நிவாரண நிதித்திட்டத்தில் 17 உறுப்பினர்களை இணைத்துள்ளோம்.
4. ஏழைப் பெண்களின் திருமண உதவி பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.
5. கல்விக்கென நன்கொடை பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.
6. புற்றுநோய் உதவி நன்கொடை பெற்றுக் கொடுத்திருக்கிறோம்.
7. இறந்தவர்களின் இல்லம் சந்தித்து ஜெபித்து ஆறுதல் கூறி வருகிறோம்.

# அடித்தள முழு வளர்ச்சி சங்கம்

அமைப்பின் பெயர் : அடித்தள முழுவளர்ச்சி சங்கம்

### 1. நோக்கம்

சாதி, மத, இன வேறுபாடின்றி பங்கு எல்லைக்குட்பட்ட அடித்தட்டு மக்களுக்காகவும், விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு ஓரங்கட்டப் பட்ட மக்களின் நீடித்த ஒருங்கிணைந்த வளர்ச்சிக் காகவும் மனித நேய உணர்வோடு பணியாற்றுதல்

### 2. இலட்சியம்

நற்செய்தி காட்டும் மானிட சமுதாயத்தில் இறை மதிப்பீடுகளான அன்பு, அமைதி, நீதி, சமத்துவம் சகோதரத்துவம் போன்ற விழுமியங்களின் அடிப்படையில் மனித நேயம் பேணும் நீடித்த நீதியான சமுதாய அமைப்பினை உருவாக்குவது.

### 3. தொடங்கப்பட்ட ஆண்டு :

1997 (25.1.1997)

### 4. தொடங்கப்பட்டதன் நோக்கம்

விளவங்கோடு தாலுகாவிற்கு உட்பட்ட, திரித்துவபுரம் மறைவட்ட மக்கள் மிகவும் பின் தங்கியவர்களாக காணப்பட்டதால், அவர்களின் நீடித்த ஒருங்கிணைந்த வளர்ச்சிக்காக தொடங்கப் பட்டது.

### 5. தொடங்கிய போது இருந்த நிர்வாகிகள் அருட்பணியாளர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | – | திரு. வின்செண்ட் தேவராஜ் |
| து. தலைவர் | – | திரு. ராஜையன் |
| செயலர் | – | திரு. T. ஜாண்சன் |
| து. செயலர் | – | திரு. ஜோசப் |
| பொருளர் | – | திரு. S. கிறிஸ்து ராஜ் |
| அருள்பணியாளர் | – | V. இராபர்ட் |

வட்டாரம் / மறை மாவட்ட அங்கீகாரம் கிடைத்து பதிவு செய்த ஆண்டு : 1997

பங்கு அருட்பணிப்பேரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்த ஆண்டு : 1997

1. பங்கு அருட்பணி பேரவையால் ஒதுக்கப்படும் நிதியை பெற்று பங்கு மக்களுக்கு கல்வி உதவி, மருத்துவ உதவி, திருமண உதவி, வீடுகட்ட என பயனாளர்களை தேர்வு செய்து பங்கு பேரவை மூலம் உதவி வழங்குதல்
2. சேமிப்பை ஊக்கப்படுத்தி – சிறு சேமிப்பு நடைபெறுகிறது
3. மக்களின் தேவைக்கேற்ப கடன் வசதி வழங்குதல்
4. R D – வசூலித்து வழங்குதல்
5. ஏழைகளுக்கு வீடு கட்ட வட்டாரத்தோடு இணைந்து செயல்படுதல்

### தற்போதைய நிர்வாகிகள்

| | | |
|---|---|---|
| தலைவர் | – | திரு. P.மரிய பென்சிலால் |
| து. தலைவர் | – | செல்வன். நிஷாந்த் |
| செயலர் | – | திருமதி . A. ஜாக்குலின் |
| து. செயலர் | – | திருமதி . சந்தியா |
| பொருளர் | – | திரு. G. ஆன்றனி ஜியோ |

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தல பங்கில் குருசடியின் முன்புறம் இருக்கும் சிலுவை கல்வெட்டில் பொறிக்கப்பட்டிருக்கும் வரலாற்றுக் குறிப்பு. 1833–ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 17–ஆம் தேதி திங்கள்கிழமை பகல் 11 மணிக்கு வெங்களூரில் இருக்கும் சவரிமுத்து மகன் சவரிமுத்து கிருஸ்துவின் கிருபை மரணம் அடைந்தான். வயது 22. மேலே வாசிப்பவர்கள் அவனுடைய ஆத்மத்திற்காக பரமண்டலமும் (உச்சரிக்கவும்).

*என எழுதப்பட்டுள்ளது.*
*செந்தி நடராசன் அவர்களின் குறிப்புகள்.*





C. ஜெரிஷ் பெஃல்ட்டன்

# வழிபாட்டு குழு



இயேசுவின் பணியைத் தொடரும் சீடராவோம்,
என்ற கருத்துடன் இன்றும் சிறப்புடன் எம் வழிபாட்டுக்குழு
செயல்பட்டு வருகிறது.

**துவங்கிய போது இருந்த நிர்வாகிகள் :**

வட்டார முதன்மை பணியாளர் – அருள்பணி. ராபர்ட்
தலைவர் – திருமதி. R. லில்லிபாய்
செயலர் – செல்வி. D. பியூலா மலர்
வட்டாரம், மறைமாவட்ட அங்கீகாரம் கிடைத்த ஆண்டு – 06.10.1996

**தற்போதைய நிர்வாகிகள் -**

தலைவர் – திருமதி. வல்சலா
செயலர் – திருமதி. விஜி
அருள்பணி – அந்தோணி M. முத்து
அருள்பணி – S. மரிய மார்ட்டின்

**செயல்பாடுகள் -**

- வழிபாட்டுக்கு ஒரு குழு உருவாக்கப்பட்டு வழிபாட்டிற்கு 1 மாதத்திற்கு தேவையான மையச்சிந்தனைகள் தேர்வுச் செய்யப்பட்டு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பொது முன்னுரை, வாசக முன்னுரைகள், மன்றாட்டுகள் எழுதி அருள்பணியாளர்களின் திருத்தம் பெற்று, சிறப்பிக்கும் அமைப்புகள் வாசித்து பழகி வழிபாட்டை சிறப்பிக்கிறோம்
- வழிபாட்டுக்குழு கூட்டமானது ஒவ்வொரு மாதத்தின் 3–வது வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும்
- 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு 1 மாதத்திற்கான மையச்சிந்தனைகள் எடுக்கப்படும்.
- வழிபாட்டுக்குழுவில் 23 உறுப்பினர்கள், 12 பீடச்சிறார்கள் 2 வழிகாட்டிகள் என சிறப்பாக செயல்படுகிறது
- 26.11.2016 –ம் ஆண்டு எமது பங்கில் மேதகு ஆயர் பீட்டர் ரெமிஜியுஸ் தலைமையில் முதல் முறையாக 102 மாணவச் செல்வங்களுக்கு உறுதி பூசுதல் அருள் அடையாளம் வழங்கப்பட்டது.
- எல்லா மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமையும் உயிர்ப்பு திருவிழா அன்றும் திருமுழுக்கு அடையாளம் திருப்பலிக்கு பின் வழங்கப்படுகிறது.
- ஆண்டுதோறும் பாதுகாவலர் திருவிழாவின்போது 6–ம் திருவிழா ஞாயிற்றுக்கிழமை காலைத்திருப்பலியின் போது முதல் ஒப்புரவு வழங்கப்படுகிறது. 2021 ம் ஆண்டு முதல் முதல் திருவிருந்து பங்கு அருட்பணியாளரால் வழங்க வேண்டும் என்று அருள்பணிப் பேரவையில் முடிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.
- அதற்கு முந்தைய நாள் ஒரு நாள் பயிற்சியும் ஒப்புரவும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.
- அனைத்து செவ்வாய் மற்றும் ஞாயிறு மாலை 4.30 மணிக்கு ஜெபமாலையும் 5 மணிக்கு திருப்பலியும் நடைபெறும். வெள்ளித் தவிர மற்ற அனைத்து நாட்களும் மாலை 5.30 மணிக்கு ஜெபமாலையும் 6 மணிக்கு திருப்பலியும் நடைபெற்று வருவதோடு ஒருங்கிணைத்து வருகிறோம்.
- மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்பலி குணமளிக்கும் செபம், நற்கருணை ஆசீர் நடத்துவது என தீர்மானித்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

- செவ்வாய்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் காலை 10.30 மணிக்கு செபமாலை, நவநாள், திருப்பலி நடைபெறுவதை ஒருங்கிணைத்து வருகிறோம்.
- சிறப்பாக பங்கின் பாதுகாவலர், கிறிஸ்து பிறப்பு, புத்தாண்டு விழா, தவக்கால நிகழ்வுக்கான திருநீற்றுப் புதன் தொடங்கி உயிர்ப்புப் பெருவிழா வரை அனைத்து நிகழ்வுகள் மற்றும் பங்கு பாதுகாவலர் விழா தொடக்ககாலத்தில் 3 நாள், 5 நாள் என ஆரம்பித்து தற்பொழுது 8 நாட்கள் திருநீற்றுப் புதனுக்கு முந்தைய நாள் செவ்வாய்க் கிழமை நிறைவு பெறும். மேலும் ஜூன் 13 அந்தோணியார் திருவிழா, மே 16 பங்கு உதயநாள், முக்கிய புனிதர்கள் விழாக்கள் இவை அருட்தந்தையர்கள், வழிபாட்டுக்குழு நிர்வாகிகள் உறுப்பினர்கள் சிறப்பிக்கும் அமைப்புகள் இணைந்து திட்டமிட்டு பங்கு பேரவையின் முடிவின்படி சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆண்டின் இறுதிநாள் இரவு நன்றி வழிபாடு, இரவு 10 மணிக்கும் தவக்கால தொடக்க நாளான சாம்பல் புதன் திருப்பலி மாலை 6 மணிக்கு நடைபெறும். திருப்பாடுகளின் சிலுவைப்பாதை தவக்கால வெள்ளிக்கிழமைகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும். இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து வருகிறோம்.

திருப்பலித் தொடக்க முன்னுரை, வாசக முன்னுரை மன்றாட்டுகள் எழுதுவது பற்றிய வட்டார அளவில் நடைபெறும் பயிற்சிகளில் எமது வழிபாட்டுக் குழுவினர் கலந்து பயன் பெறுகின்றனர். ஆண்டிற்கு ஒரு பயிற்சி பங்களவிலும் நடத்தப்பட்டு வருகிறது.

தேவையின் பெயரில் ஒப்புரவு அருள் அடையாளம், ஆன்மீக வழிகாட்டுதல், ஆற்றுப்படுத்துதல் ஆகியவை நடத்தப்பட்டு வருகிறது.

அருள்பணியாளர்களின் வழிகாட்டுதலில் பீடப்பூக்களுக்கு ஆண்டிற்கு இருமுறை பங்களவில் பயிற்சி நடைபெறுகிறது. இது தவிர தேவைக்கேற்ப பயிற்சிகள் அவ்வப்போது அளிக்கப்படுகிறது.

இறைமக்களுக்கு நிறைவை வழங்கும் வழிபாட்டுத் தலமாகவும் அமைந்துள்ளது.

எமது திருவழிபாட்டுக்குழு பங்கு மக்களுக்கும், பக்தர்களுக்கும், ஆன்மீகத்தையும் இறை நம்பிக்கையையும், வழிபாட்டில் முழு ஈடுபாடு கொள்ள இசையுடன் கூடிய பாடல்கள், உள்ளத்தை தொட்டு இறையாசீர் பெற நமது ஆலய வழிபாட்டுக்குழு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.



# மகிழ்ச்சியான வாழ்க்கை

குருவே, என் வாழ்க்கையில் மகிழ்ச்சியே இல்லை, என்று குருவிடம் சிஷ்யன் வருத்தப்பட்டான். குரு அவனை ஒரு தோட்டத்திற்கு அழைத்து வந்தார். அங்கே வண்ணநிற பட்டாம் பூச்சிகள் அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. இதோ இவற்றில் ஒன்றை பிடித்துக் கொண்டு வருமாறு சிஷ்யனிடம் குரு சொன்னார். பட்டாம்பூச்சிகளைத் துரத்திக் கொண்டு ஓடினான் சிஷ்யன். ஆனால் ஒன்றை கூடப் பிடிக்க முடியவில்லை. பரவாயில்லைடா, வா நாம் இந்தத் தோட்டத்தின் அழகை நடுவே நின்று ரசிக்கலாம். தோட்டத்தின் அழகை கண்கள் விரிய கண்டு ரசித்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் பட்டாம் பூச்சிகள் பல சுவர்களை சுற்றி பறக்கத் தொடங்கின. மேலும் இரு பட்டாம் பூச்சிகள் அவன் கைகளிலேயே வந்தமர்ந்தன. குரு சிரித்துக் கொண்டே கூறினார். இதுதான் வாழ்க்கை. மகிழ்ச்சியை தேடித் துரத்துவது அல்ல வாழ்க்கை வாழ்க்கையை அமைதியாக நின்று ரசிக்கும் போது மகிழ்ச்சி நம்மிடம் தானாக வந்து சேரும்.

By. திருமதி. மரிய செல்வீனம்மாள்

# வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப் பங்கு இளைஞர் இயக்கம்

### இயக்க வரலாறு :

வெட்டுவெந்நி தூய அந்தோணியார் இளைஞர் இயக்கமானது 1998 – 1999 ஆண்டு அருட்பணி. செபாஸ்டின் அவர்களின் வழிகாட்டுதலில் 10 உறுப்பினர்களைக் கொண்டு, முதல் தலைவர் திரு. ரோஜர் ராஜேஷ் அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. பின்னர் 2000 ஆம் ஆண்டில் திரு. ஜெஸ்டின் ராஜ் அவர்கள் தலைவராக இருந்தபோது வட்டார இளைஞர் இயக்க KT 375 / 2000 என்ற எண்ணுடன் பதிவு செய்யப்பட்டு தற்போது KTH 7I/2000 என்ற புதிய எண்ணுடன் செயல்பட்டு வருகிறது.

### இயக்க நோக்கம் :

“இளைஞர்களை ஒருங்கிணைத்து மனித மாண்புடன் முழு மனித விடுதலைக்காக நிறைவாழ்வை நோக்கி மலரும் இறையரசை உருவாக்குதல்”

### இயக்கத்தின் முதல் நிர்வாகிகள்

தலைவர் : தோழர். ரோஜர் ராஜேஷ்
செயலர் : சசி
பொருளர் : சுனில்
இயக்குநர் : அருட்பணி. செபாஸ்டின்

### 2020 முதல் தற்போது வரை

வழிகாட்டி : திரு. ரோஜர் ராஜேஷ்
இயக்குநர் : அருட்பணி. அந்தோணி M. முத்து
தலைவர் : தோழர். சிமு
செயலர் : தோழி. அஷிபா
பொருளர் : தோழர். நிஷாந்த்
துணைத் தலைவர்: தோழி. ஷாபி ரிஜின்
துணைத் செயலர் : தோழர். ஆகாஷ்

### ஆண்டுதோறும் நடக்கும் சிறப்புச் செயல்பாடுகள்

திருவிழாவின் போது
முன்பகுதி அலங்காரம் செய்தல்
இயக்க ஆண்டுவிழா பொதுக்கூட்டம் நடத்துதல்
தேர் அலங்காரம் செய்தல்

2008 முதல் திருவிழா பொதுக்கூட்டத்தின்போது ஒரு நாள் நிகழ்வாக இரண்டு மணிநேர நாடகம் அரங்கேற்றப்பட்டு வருகிறது.

சமபந்தி விருந்திற்கான தயாரிப்பில் உதவி செய்தல் மற்றும் உணவு பரிமாறுதல்

இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பை அறிவிக்கும் வகையில் பங்கை சுற்றியுள்ள மக்களின் இல்லம் சென்று பஜனை நடத்தி கிறிஸ்து பிறப்பை அறிவித்து வருகிறோம்.

ஆண்டுதோறும் 1998 முதல் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு எமது இயக்க உறுப்பினர்களால், நமக்காக ஏழ்மை நிலையில் பிறந்த நம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் குடில் அமைத்து வருகிறோம்.

1998 – ம் ஆண்டு முதல் ஆகஸ்ட் 15 சுதந்திர தினத்தை சிறப்பிக்க கொடி ஏற்றி இனிப்பு வழங்கப்படுகிறது. தொடர்ந்து 2007–ம் ஆண்டு மரியா விண்ணேற்பு மற்றும் அந்தோணியார் பிறந்த நாளையும் சேர்த்து முப்பெரும் விழாவாக திருப்பலியுடன் சிறப்பித்து வருகிறோம்.

2009–ம் ஆண்டு முதல் இயேசுவின் உயிர்ப்புக் காட்சியை சித்தரிக்கும் வகையில் உயிர்ப்புக் காட்சி எமது இயக்க உறுப்பினர்களால் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

2009 முதல் பெரிய வியாழன் ஒரு மணி நேர ஆராதனைக்காக தற்காலிக பீடம் அமைத்து வருகிறது.

2011 முதல் ஆதரவற்ற குழந்தைகளுடன் ஒரு நாள் முழுவதும் இருந்து உணவு மற்றும் அவர்களுக்கு தேவையான சிறு பொருட்கள் அளித்தும் ஆதரவுடன் பேசி வருகிறோம்.

மாணவர்களின் திறமையை வெளிப்படுத்த 2012 முதல் ஆண்டுதோறும் Pre. K.G முதல்

பெற்றோர் வகுப்பு மற்றும் ஆசிரியர்களுக்கும் கலைப்போட்டிகள் நடத்தி திருவிழாவின்போது பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

2015 முதல் ஆதரவற்றோர் நலனுக்காக குலுக்கல் நடத்தி வருகிறோம்.

**செயல்பாடுகள் :**

2000 – வது ஆண்டில் ரூ. 1250 செலவில் ஆலய வளாகத்தில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

2002–ஆம் ஆண்டு விரைவுப்பேருந்தை வெட்டுவெந்நி சந்திப்பில் நிறுத்தும் ஆணையைப் பெற்று அதற்கான அறிவிப்பு பலகை இயக்கம் சார்பாக வைக்கப்பட்டது.

2003–ம் ஆண்டு 48 அடி உயர 'புல்குடில்' அமைத்து தினமலர் நாளிதழ் நடத்திய குடில் போட்டியில் முதல்பரிசு பெற்றுள்ளோம்.

2004 –ம் ஆண்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடைகள், நோட்டு புததகங்கள் வழங்கப்பட்டது.

2007–ம் ஆண்டு 'தொடர்பு ஊடகங்கள்' என்ற கையெழுத்து பிரதி புத்தகம் வெளியிடப்பட்து.

2002 –ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு 35 அடி உயரம் 33 அடி அகலம் கொண்ட புல்குடில்அமைக்கப்பட்டு மின்கம்பத்தில் லாரி மோதி அதனால் ஏற்பட்ட மின்கசிவால் எரிந்த 'புல்குடில்' தீயணைப்பு துறையினரால் 45 நிமிட போராட்டத்திற்கு பின்னர் அணைக்கப் பட்டது. அந்த வழக்கு 2008 –ம் ஆண்டு முடிவடைந்து அதன் மூலம் வந்த இழப்பீட்டு தொகை ரூ. 1,31,836 கல்வி உதவிக்கு நிரந்தர வைப்பு நிதியாக பங்கில் கொடுக்கப்பட்டது.

2009 – ம் ஆண்டு கண்தான முகாம் Dr.சுரேஷ் தலைமையில் இளைஞர் இயக்கம் சார்பாக நடத்தப்பட்டு 90 பேர் கண்தானம் செய்துள்ளனர்.

திருத்தலப் பங்கில் மின்விளக்கு மற்றும் அறிவிப்புப் பலகை, இயக்க பரிந்துரையின் பெயரில் அமைக்கப்பட்டது.

குஜராத்தில் பூகம்பம் ஏற்பட்டபோது அங்குள்ள மக்களுக்காக பணம் திரட்டி முதலமைச்சர் பூகம்ப நிவாரண நீதிக்காக செலுத்தியுள்ளோம்.

2010 –ம் ஆண்டு இறந்தவர் நினைவாக YCS – யுடன் இணைந்து நமது பங்கில் டிசம்பர் 25 முதல் ஜனவரி 1–ம் தேதி வரை ஸ்டார்கள் எரியவிடப்பட்டன.

2009 டிசபம்ர் மாதத்தில் மார்த்தாண்டம் CSI ஆலயத்திலிருந்து வெட்டுவெந்நி திருத்தலப் பங்கு வரை கிறிஸ்துமஸ் தாத்தா ஊர்வலம் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன.

2009 ஆண்டு முதல் பங்கு வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு பாதுகாத்து வருகிறோம்

2017–ஆம் ஆண்டு வந்த ஒகிப்புயல், தொடர் மழையால் வெள்ளப்பெருக்கு காலங்களில் பல வீடுகளில் பொருட்கள் மாற்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் செய்து கொடுத்துள்ளோம்.

2021–ம் ஆண்டு பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து பங்கு அருட்பணியாளர்களுடன் இணைந்து ஆலய வளாகத்தில் போராட்டம் நடத்தப்பட்டது.

மேலும் இதுவரையில் மருத்துவ உதவியாக ரூ. 54800 மற்றும் கல்வி உதவியாக ரூ. 6800 வழங்கியுள்ளோம். சுழற்சி முறையில் திருத்தலப் பங்கில் திருப்பலி சிறப்பித்து வருகிறோம்.

வட்டாரச் செயல்பாடுகள்:

2000 –வது ஆண்டில் எமது இயக்கமானது முழு அங்கீகாரமுடன் வட்டாரத்தில் பதிவு செய்யப்பட்டது. அதன்பிறகு எமது இயக்க நிர்வாகிகள் வாரம்தோறும் வட்டாரக் கூட்டத்தில் கலந்துக் கொண்டு வருகிறோம்.

2007–ம் ஆண்டு நடைபெற்ற வட்டார இளைஞர் இயக்க கலைவிழாவிற்கு மதிய உணவுக்காக 30 Kg அரிசி வழங்கியுள்ளோம்.

2019 ஆண்டு முதல் பொங்கலை முன்னிட்டு வட்டார அளவில் நடைபெறும் கலை மற்றும் கலாச்சார போட்டிகளில் பங்கு பெற்று பரிசுகளைப் பெற்றுள்ளோம்.

வட்டாரத்தில் குழு புதுப்பித்தல் ஆண்டுதோறும் தவறாது செய்து வருகிறோம்.

வட்டார அளவில் நடத்தப்படும் மூன்று கட்ட பயிற்சியில் கலந்துக் கொண்டு பலர் நிறைவு செய்துள்ளனர்.

எமது இயக்க உறுப்பினர்கள் மருத்துவ சிகிச்சைக்காக தேவைப்படும்போது இரத்ததானம் செய்து வருகின்றனர்.

3.6.21 எமது இளைஞர் இயக்கத்திலிருந்து கொரோனாவால் பசியில் வாடும் ஏழைகளுக்காக மருத்துவமனைக்கு 127 பார்சல் உணவுகள் வழங்கியுள்ளோம்.

17.10.21 அன்று திறந்த வட்டார நூலகததிற்கு 57 புத்தகங்கள் இயக்கம் சார்பில் வழங்கப்பட்டது.

2.4.2022 அன்று மறைமாவட்ட இளைஞர் இயக்கம் மற்றும் YCS தியானமானது எமது பங்கில் நடந்தபோது மதிய உணவாக கஞ்சி வழங்கியுள்ளோம்.

இவ்வாறாக எமது இயக்கம் "ஆலமர விழுதுபோல" நல் அறுவடை தரும் நெற்பயிர் போல, சீரும் சிறப்புமாய் தூய அந்தோணியார் திருத்தலப் பங்கில் எமது பாதுகாவலராம் புனித அந்தோணியாரின் நல்லாசியுடன் கம்பீரமான தோற்றத்துடன் மிகுந்த பலமுடன் செயல்பட்டு வருகிறது.

# பூமித்தாயின் அழுகை



பூமித்தாய் விம்மி அழுகின்றாள்
பொல்லாத மனிதர்களே! என்னைக்
கொல்லாமல் கொல்லாதீர் என
பூமித்தாய் விம்மி அழுகின்றாள்

உனக்கு உணவு உண்டு பண்ண ஒருதேக்கரண்டி மண்ணில்
அஞ்சுகோடிக்குமேல் நுண்ணுயிரும், பாசியும் வளர்த்தேனே
செயற்கை உரத்தாலும், பூச்சிகொல்லி மருந்தாலும்
அத்தனை உயிர்களையும் கொன்று குவித்தாயே (பூமித்தாய் விம்மி)

காட்டை அழித்தாய், கழனிநிலம் வறண்டது
மழை பொய்த்தது; மரமெல்லாம்பட்டது.
உன் வாழ்வுக்காய் நான் வளர்த்த அரியவகை
மருந்துச் செடிகளையும், தாவர இனங்களையும் அழித்தாய் (பூமித்தாய் விம்மி)

அறுசுவை உணவு தரும் தாவரங்களை அழித்தாய்
கொடிய நோய்களை நீயே வாங்கிக்கொண்டு
தினமும் மருத்துவமனைக்கு அல்லும் பகலும்
நாயாய், பேயாய் அலைகின்றாய் (பூமித்தாய் விம்மி)

மகனே! காட்டை அழிப்பதை நிறுத்து
கழினியில் இயற்கை கரத்தால் பயிற்செய்
மானிடருக்கு உதவும் மரங்களை வளர்த்திடு
காற்று, நிலம், நீர் மாசுபடுத்துவரை நிறுத்து, அப்போது
பூமித்தாய் மெல்லச் சிரிப்பாள்

By. திரு. M. மரியசிசில்,
சாலியன்விளை.

# இளம் கிறிஸ்தவ மாணவர் இயக்கம்

இளம் கிறிஸ்தவ மாணவ மாணவியரை ஒருங்கிணைத்து அவர்கள் தங்களை ஆன்மீக வழிபாட்டில் முழுமையாக ஈடுபடுத்தி தங்களை சுற்றியுள்ள மாணவ மாணவியரை ஏழை, பணக்காரன் ஜாதி, மத பேதமின்றி சமூகப் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து அதற்கு முடிவு காண இணைந்து செயல்பட வேண்டும் என்பதே இவ்வியக்கம் நமது பங்கில் செயல்பட காரணம் ஆகும்.

**இயக்கத்தின் நோக்கம்:**

இறை ஆட்சி மதிப்பீடுகளின் படி தன்னை உருவாக்கி பிறரை உருவாக்கி புதிய சமுதாயம் உருவாக்குதல், அனுபவம் ஆய்வு திரும்பி பார்த்தல் என்று வழிமுறைகளை கொண்டு இவ்வியக்கம் செயல்படுதல். இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1998–1999.

**ஆரம்ப நிர்வாகிகள்:**

தலைவர் – அஜிதா குமாரி, செயலர் – சேவியர் ராஜ், பொருளர் – செல்வன். சுனில் பிரகாஷ், வழிகாட்டி – திரு. அருள் பிரகாஷ்.

## செயல்பாடுகள்:

1. ஏழை மாணவ மாணவியர்களுக்கு நோட்டுக் எழுது பொருள்கள் வழங்கப்பட்டது
2. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு பஜனை பாடல் பாட இயக்க மாணவர்கள் பஜனை குழுவினருடன் இணைந்து சிறப்பித்தனர்.
3. இலங்கை தமிழர்கள் கொடுமைபடுத்தப்படுவதை கண்டித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நோக்கி சென்று கண்டன பேரணியில் பங்கு கொண்டனர்.
4. இளைஞர் இயக்கத்துடன் இணைந்து சுரேஷ் கண் மருத்துவமனை டாக்டர் சுரேஷ் கண் தானத்தின் நோக்கம் பற்றியும் தொடர்ந்து கண் தான முகாமும் நடைபெற்றது. எமது இயக்க 16 மாணவ மாணவிகள் கண்தானம் செய்தனர்.
5. சிக்கன் குனியா பற்றி விழிப்புணர்வு ஏற்பட, கொசு ஒழிக்க வீடுகள் தோறும் சுத்தம் சுகாதாரமாக்க பிரச்சாரம் செய்யப்பட்டது.
6. திருவிழா திருப்பலி தயாரிப்பு மற்றும் சமபந்தி முன் தயாரிப்பு சமபந்தி விளம்புதலில் எமது இயக்க மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.
7. எமது வழிகாட்டி அருள் பிரகாஷ் தலைமையில் ஒரு நாள் சுற்றுலா துவங்கப்பட்டது. அது தற்போது வரை வழிகாட்டிகளால் ஒவ்வொரு வருடமும் சிறப்பாக நடைபெறுகிறது.

8. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு இளைஞர் இயக்கத்துடன் இணைந்து ஆலய வளாகத்தில் ஸ்டார் அணி வகுப்பு டிசம்பர் மாதம் நடத்தப்பட்டது.

9. கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு இளைஞர் இயக்கத்துடன் இணைந்து 20 12 2009 இல் எமது வழிகாட்டி அருள் பிரகாஷ் தலைமையில் பிரம்மாண்ட கிறிஸ்மஸ் தாத்தா பேரணியை சிஎஸ்ஐ சபையில் இருந்து துவங்கி நமது ஆலயம் வரை வந்தது சிறப்பு. இதில் கலந்துகொண்ட 47 கிறிஸ்துமஸ் தாத்தாக்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன அதில் 11 பேர் எமது இயக்க மாணவர்கள். இந்நிகழ்ச்சி சன் டிவி உட்பட்ட பல்வேறு தொலைக்காட்சிகள் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிகள், பல்வேறு நாள் இதழ்களில் சிறப்பு செய்தியாக வெளிவந்தது.

10. இளம் கிறிஸ்தவ மாணவ மாணவியர்களுக்கு 1. இந்திய கலாச்சாரம், 2. எட்டும் தூரமா கல்வி, 3. திருச்சபையும் இளம் கிறிஸ்தவ மாணவர்களும், 4. உடலும் உள்ளமும், 5. கலைகளும் விழிப்புணர்வும், 6. இந்திய அரசியலும் நாளைய தலைவர்களும் 7. சமூகத் தொண்டும் ஆன்மீகமும், 8. அன்னை தெரசா செயல் தலைவி, 9. கிறிஸ்தவம் தழைக்குமா, 10. அனாதை குழந்தைகளும் அனாதை பெற்றோரும், ஆகிய தலைப்புகளில் பயிற்சிகள் நடத்தப்பட்டது.

11. பாம்பு பண்ணையாகும் குழித்துறை நகராட்சி பூங்கா, மின்விளக்கு எரியுமா? குழித்துறை பாலத்தில்? குடிநீருக்கு திண்டாடும் வெட்டு வெந்தி மக்கள், குண்டும் குழியுமாக இருக்கும் மார்த்தாண்டம் சாலை அரசு கவனிக்குமா? போன்ற செய்திகள் பத்திரிகைகளில் இயக்கம் சார்பாக வெளியிடப்பட்டு பாராட்டு பெற்றோம்.

12. எமது இயக்க நண்பர்கள் கதை, கட்டுரை, கவிதை, படங்களின் கையெழுத்து பிரதிகள் இரு மாதங்களுக்கு ஒரு முறை போடப்பட்டு நான்கு நகல்கள் சுழற்சி முறையில் இயக்க உறுப்பினர்களுக்கும் மறை மாவட்ட உறுப்பினர்களுக்கும் வாசிப்பு திறனும் எழுதும் திறனும் அதிகரிக்க வழங்கப்பட்டது.

13. கிராமிய விழிப்புணர்வு நடன பயிற்சி மே மாதம் பத்து நாட்கள் நடத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

14. மேற்படிப்புக்கான வழிகாட்டுதல் பயிற்சி நடத்தப்பட்டது.

15. பத்தாம் வகுப்பு 12 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற எமது இயக்க மாணவ மாணவிகளுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது.

16. எமது ஆலய கட்டுமான பணிகளின் போது இளைஞர் இயக்கத்துடன் இணைந்து பங்கு அருட்பேரவையால் வழங்கப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

17. ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு தலைப்பில் கருத்துரை வழங்கும் வகையில் உறுப்பினர்கள் திறன் வளர்ப்பு பயிற்சி கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தி வருகிறோம்.

18. பெண் குழந்தைகள் வாழ்க்கை கல்வி குறித்து தனிப் பயிற்சியும் கவுன்சிலிங் –ம் வழங்கப்படுகிறது. எமது இளம் கிறிஸ்தவ மாணவ இயக்கம் தற்போது கீழ்க்கண்ட நிர்வாகிகளுடன் பங்கு அருட்பணி பேரவையின் வழிகாட்டுதல் படி சிறப்பாக செயல்படுகிறது. தலைவர் – செல்வன் ராகுல், துணைத்தலைவர் – சால்பி டிஞ்சுவின், செயலர் – செல்வி ஆசினி, துணைச்செயலர் – ஏஞ்சல் பென்ஸ், பொருளர் – செல்வன். ஜெபிட்டோ, வழிகாட்டிகள் – திரு. ஜெபக்குமார், திருமதி ஜெயபாய்.

# பாலர் சபை சிறார் இயக்கம்



விருதுவாக்கு : “அன்பினால் அவனியை ஆண்டவரில் ஆட்கொள்வோம்”

நோக்கம் : 13 வயதுக்குட்பட்ட சிறார்களை ஒருங்கிணைத்து பண்படுத்தி, அவர்களின் திறமைகளை வளர்க்கவும் நல்ல ஆளுமையில் வழிநடத்தவும் செய்தல்.

எம் பங்கில் தொடங்கப்பட்ட ஆண்டு – 12.3.1998 –ல் அருட்பணி அந்தோணி M. முத்து அவர்களால் தொடங்கப்பட்டது. 2002 –ஆம் ஆண்டு பங்கு அருட்பணி பேரவையில் திருமதி. ஜாக்குலின் அவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றார்.

### தொடக்க கால நிர்வாகிகள் -

இயக்குநர் – அருட்பணி. அந்தோணி M. முத்து

வழிகாட்டிகள் – திருமதி. ஜாக்குலின், திருமதி. லைசம்மாள்

நிர்வாகிகள் – பாலர் சபை

தலைவர் – அன்பின் சுபாஷினி

செயலர் – அன்பின் ஜெனிபர்

பொருளர் – அன்பின் அருண் V. கரோல்

### சிறார்.

தலைவர் – அன்பில் பிரிய சாந்தினி

செயலர் – அன்பின் டெல்மா

பொருளர் – அன்பின் சுனில் பிரகாஷ்

### சிறப்பு செயல்பாடுகள் -

இயக்க கூட்டத்தில் காணிக்கை சேகரிக்கப்பட்டு ஆண்டுதோறும் இயக்கத்துள்ள ஏழைச் சிறார் ஒருவர் தேர்வுச்செய்யப்பட்டு அவருக்கு கிறிஸ்மஸ் பரிசாக அத்தொகை வழங்கப்படும்.

ஆண்டுதோறும் கிறிஸ்துபிறப்பு விழாவை முன்னிட்டு வட்டாரத்தோடு இணைந்து ஒரு காப்பகத்திற்கு சென்று ரூ. 5000 அளவிலான உதவிகள் செய்வதோடு அங்கு எம் சிறார்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெறும். 2021 – ஆம் ஆண்டு ஒரு குழந்தையின் மருத்துவ செலவிற்காக ரூ. 6,700 வழங்கியுள்ளோம்.

ஆண்டுதோறும் நவம்பர் 2–ஆம் தேதி நடைபெறும் சிறார் மாநாட்டில் வெளியிடப்படும் ‘திருத்துவ தென்றல்’ மழலை இதழில் எம் இயக்க சிறார்களின் படைப்புகள் பல வெளியாகும் அன்று கலை நிகழ்ச்சிகளும் கொடுக்கப்படும்.

ஆண்டுதோறும் எம் பங்கில் பெப்ரவரி 10– ஆம் நாள் அகில உலக சிறார்தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். அந்தவார ஞாயிறு திருப்பலியை எமது சிறார்கள் மிகச்சிறப்பாக சிறப்பிப்பார்கள். குறிப்பாக 2022 –ஆம் வருடம் திருப்பலி பாடல்கள் இசைக்கருவிகள் வாசித்தது என அனைத்தையும் மிக நேர்த்தியாகச் செய்து அனைவரின் பாராட்டையும் பெற்றார்கள்.

ஆண்டுதோறும் அகில உலக சிறார் தின பொதுக்கூட்டம் கிறிஸ்மஸ் விழா பொதுக்கூட்டம் இவை சிறார்களால் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும். பங்கு அருட்பணியாளர்கள் அருட்பணி பேரவை நிர்வாகிகள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள்.

ஆண்டு தோறும் ஒரு நாள் இன்பச்சுற்றுலா சிறார்கள், வழிகாட்டிகள் மற்றும் அருட்பணியாளர்கள் ஆகியோர் சேர்ந்து திட்டமிட்டு சென்று வருகிறோம்.

ஆண்டுதோறும் பங்களவில் 3 பயிற்சிகளாவது நடைபெறும் இதில் பெரும்பாலான மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.

வட்டார அளவில் நடைபெறும் கூட்டங்களிலும், செயல்தள பயிற்சிகளிலும் ஒவ்வோர் ஆண்டும் 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்வார்கள்.

வழிகாட்டிகளுக்கான அனைத்துகூட்டங்கள், பயிற்சிகளிலும் எம் இயக்க வழிகாட்டிகளும் தவறாது கலந்து கொள்கிறோம்.

திருமதி. ஜாக்குலின் அவர்கள் திருத்துவபுர வட்டார சிறார் இயக்கச் செயலராக 2011 – 2016 வரை சிறப்பாக பணிசெய்தார்கள் 2017 –2022 வரை வட்டார களப்பணியாளராக பணி செய்தார்கள்.

### இப்போதுள்ள நிர்வாகிகள்:-

இயக்குநர்கள் – 1. அருட்பணி. அந்தோணி M. முத்து, 2. அருட்பணி. M. மரிய மார்ட்டின்

### வழிகாட்டிகள்

1. திருமதி. M.S. பிளாரன்ஸ் விஜிலா
2. திருமதி. D. ஷீலா மலர்
3. திருமதி. ஜாஸ்மின் ஷைலி
4. திருமதி. பென்சா குமாரி
5. திருமதி. விஜிலா றோஸ்

### நிர்வாகிகள் - சிறார்:-

தலைவர். அன்பின் ஸ்டெனி ஜாஸ்
செயலர் அன்பின் அனுஷ்கா ஜூவி
பொருளர் அன்பின் சால்வின் டிஞ்சுவின்
து. தலைவர் அன்பின் . அஸ்வின்
து. செயலர் அன்பின் ரோஜர் தோமஸ்

### பாலர் சபை :

தலைவர். அன்பின். பெல்டன்
செயலர். அன்பின். ஆக்னலா
பொருளர். அன்பின். பிறைட்லின்
து. தலைவர். அன்பின். ஷெகின்
து. செயலர். அன்பின் லாவண்யா

எமது வழிகாட்டி : திருமதி. M.S. பிளாரன்ஸ் விஜிலா அருட்பணி பேரவை பிரதிநிதியாகவும், திருமதி. ஜாஸ்மின் ஷைலி வழிபாட்டுக்குழு பிரதிநிதியாகவும் உள்ளார்கள்.



# மரம் வளர்ப்போம்

– By. ஆஷிகா மோள். ரா

மனித கலாச்சாரத்தின் ஆரம்பம் முதலே மரங்கள் மனிதர்களின் வாழ்வாதாரத்திற்கு பல வகையில் பயன் அளிக்கின்றன. மரங்கள் நாம் சுவாசிப்பதற்கு ஆக்ஸிஜனை வெளியிடுகின்றன. பூமியைக் குளிர்விக்கின்றன. விலங்குகளுக்கு வாழ்விடமாகவும், உண்பதற்கு உணவும், மண்ணுக்கு பசும் போர்வையாகவும், பல நோய்களுக்கு மருந்தாகவும், மன அழுத்தத்தைப் போக்கி மன அமைதியையும் அளிக்கின்றன. ஆனால் இன்றைய சூழலில் மரங்களை நம் தேவைக்காக வெட்டும் பழக்கம் அதிகமாக உள்ளது. இது மாறிவரும் பருவ நிலைக்கு மிக முக்கிய காரணம். இந்நிலைத் தொடர்ந்தால் பல நாடுகள் இன்னும் பத்து வருடங்களில் பாலை வனமாகிவிடும். இந்நிலையைப் போக்குவதற்கு நாம் மரங்களை நடுவது மிகவும் அவசியமானது. கொரோனா நோய்தொற்று மனிதர்களுக்கு மரங்கள் வெளியிடும் ஆக்ஸிஜனின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. இயேசுவும் இயற்கையைச் சார்ந்தே வாழ்ந்தார். மரங்கள் இயற்கையின் வரங்கள். எனவே நாம் ஒவ்வொருவரும் மரக்கன்றுகள் நட்டு மரம் வளர்க்க வேண்டும். இயேசுவைப் போன்று இயற்கையோடு இணைந்து வாழ்வோம்.

“மனிதனின்றி மரங்கள் வாழும்
மரங்களின்றி மனிதனால் வாழ முடியாது”

# அன்பிய ஒருங்கிணையம்

முதல்முதலில் அன்பியங்களை 2000 – ல் நமது பங்கில் துவங்கியவர் அருள்பணி. அந்தோணி M. முத்து முதல் அன்பிய ஒருங்கிணைய நிர்வாகிகள்

2000 – 2003

தலைவர் – திரு. ராஜாமணி
செயலர் – திரு. ஜாண்சன்
து. செயலர் – திருமதி. ஜாக்குலின்
து. தலைவர் – திருமதி. தங்கம்
பொருளர் – திருமதி. மேரி ஹெலன் றோஸ்

### தற்போதைய நிர்வாகிகள்

தலைவர் – திரு. A.C. செல்வராஜ்
செயலர் – திருமதி. பிறேமலதா
பொருளர் – திருமதி. றோஸ்லெட்
து.தலைவர் – திருமதி. ஜெனட்
து. செயலர் – செல்வன். ராஜேஷ்

1. 11 அன்பியங்களாக துவங்கப்பட்ட அன்பியங்கள் 2000–ம் ஆண்டில் 6 அன்பியங்களாக குறைக்கப் பட்டு பின்னர் 7 அன்பியங்களாக பங்கில் செயல்படுகிறது.
2. அன்பியங்களில் அடித்தளம் வாசிக்கப்பட்டு விளக்க உரையாடல், ஜெபித்து ஒருங்கிணைத்து மக்களின் இன்ப, துன்ப வேளைகளில், ஆறுதலையும், பொருளாதார மேம்பாடு அடையவும், மனம் விட்டு பேசவும், குழந்தைகளை உருவாக்கி, திறமைகளை வளர்க்கவும், அன்பியம் கருவியாக செயல்படுகிறது.

### செயல்பாடுகள் -

- கோவிட் – 19 காலகட்டங்களில் பங்குப்பேரவை உதவியுடன் 120 குடும்பங்களுக்கு காய்கறி, அரிசி, மளிகைப்பொருட்கள் தேங்காய் முதலிய பொருட்கள் வாங்கி கொடுக்கப்பட்டது.
- கோட்டைக்காட்டுவிளை தூய அல்போன்சம்மாள் அன்பிய மக்கள் இணைந்து “ஓசானம்” முதியோர் இல்லம் சென்று சந்தித்து ரூ. 15000/– மும் 1000/– ரூ. மதிப்பில் பொருட்களும் கொடுத்தார்கள்.
- தச்சன் பரம்பு ஆலய கட்டுமான பணிக்காக அனைத்து அன்பிய மக்களும் இணைந்து ரூ. 86000/– கொடுத்துள்ளார்கள்.
- எம்மாவூஸ் பெண்கள் மனநல காப்பகத்திற்கு ஒருங்கிணையம் சார்பாக ரூ. 1750 கொடுக்கப்பட்டது.
- ஒருங்கிணையம் சார்பாக பெருஞ்சிலம்பு காப்பகம் சென்று ரூ. 17500 மற்றும் 5000 ரூ. மதிப்பில் பொருட்களும் வழங்கப்பட்டன.
- ஆண்டுதோறும் தவக்கால திருப்பலி மற்றும் இறந்த ஆன்மாக்களுக்கான திருப்பலி அன்பியங்களில் வைத்து நடைபெறுகிறது.
- 13 வருடமாக மே 26 பங்கு உதய விழாவை சிறப்பாக கொண்டாடி வருகின்றோம்.
- சிறுபான்மையினர் பெண்கள் பாலியல் வன்கொடுமையை எதிர்த்து 14–4–2015 அன்று வெட்டுவெந்நி முதல் குழித்துறை வரை மனித சங்கிலி போராட்டம் நடத்தப்பட்டது.
- ஆண்டுதோறும் 10 மற்றும் 12–ம் வகுப்பில் முதல் இரண்டு இடங்களை பெறும் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கி வருகிறோம்.
- மாதத்தின் 3–ம் ஞாயிறு, மாலை 3 மணிக்கு நடைபெறும் வட்டார நிகழ்வுகளில் ஒருங் கிணைய நிர்வாகிகள் கலந்து கொள்கின் றோம்
- மறைமாவட்டம் பிரிந்த முதல் மாநாட்டிலே ரூ. 100000– மேல் உதவிகள் செய்து வட்டார அளவில் கேடயம் பெற்றுள்ளோம்.
- அன்பியங்கள் வழியாக ஒரு ஆண்டு திட்டம், ஒருங்கிணையம் சார்பாக ஒரு ஆண்டு திட்டமும், திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம்
- தவக்கால தியானம் மற்றும் தவக்கால திருப்பயணம் நடத்தி வருகின்றோம்.
- ஒருங்கிணையம் சார்பாக புற்று நோயாளி இருவருக்கு ரூ. 152200/– கொடுக்கப்பட்டது.

- திருத்துவபுரம் வட்டார அன்பிய ஒருங்கிணைப்பில் கிட்னி நோயால் பாதிக்கப்பட்ட நபருக்கு ஒருங்கிணையம் சார்பில் ரூ. 11,000 கொடுக்கப்பட்டது.
- 2020 வாழும் குடில் திட்டத்தின் கீழ் மாத்தூர் பங்கை சார்ந்த கண்காணிப்பின்றி இருந்த மூதாட்டி ஒருவருக்கு ரூ. 25,000/– வழங்கப்பட்டு அப்பங்கின் உதவியுடன் இணைந்து வீடு கட்டி கொடுக்கப்பட்டது.

### அன்பிய ஒருங்கிணையச் செயல்பாடுகள்

2013–2014 சிறப்புச் செயல்பாடுகள்

கல்வி உதவி – 389000

நோயாளிகளுக்கான உதவி 7750

திருமண உதவி – 4000

உடை – 5000

### 2014-2025 சிறப்பு செயல்பாடுகள்

ஏழைகளுக்கு உதவியது – 14660

ஏழை நோயாளிகளுக்கு உதவியது – 27500

கல்வி உதவி – 19000

முதியோர் இல்லம் சந்திப்பு –10000

### 2015 - 2016 சிறப்புச் செயல்பாடுகள்

ஏழைகளுக்கு உதவியது – 18945

மருத்துவ உதவி – 34335

கல்வி உதவி –16000

### 2016 - 2017

ஏழைகளுக்கு உதவியது – 22520

மருத்துவ உதவி – 25300

கல்வி உதவி – 16000

வீடு கட்டுவதற்கு உதவியது – ரூ. 80000

450 சிமெண்ட் கற்கள்

15 மூடை சிமெண்ட், டைல்ஸ்

### 2017 -2018 சிறப்பு செயல்பாடுகள்

இரண்டு இளைஞர்கள் ஒரு நோயாளிக்கு இரத்தம் கொடுத்துஉதவியுள்ளார்கள்.

ஒரு ஏழை பாட்டிக்கு தேவையான உதவிகளை செய்துள்ளார்கள்.

உயர்கல்விக்கு போக முடியாமல் இருந்த மாணவிக்கு அன்பிய உறுப்பினர் ஒருவர் உதவிகள் செய்து உயர் கல்விக்கு அனுப்பியுள்ளார்.

அன்பிய உறுப்பினர் ஒருவர் வீடு கட்டுவதற்காக 1300 கல் கொடுத்துள்ளார்கள்.

நமது பங்கு சபை மற்றும் பிற மதத்தை சார்ந்த இறந்த இல்லங்களை சந்தித்துள்ளார்கள்.

ஏழைகளுக்கு கொடுத்தது – 54480

நோயாளிகளுக்கு கொடுத்தது – 16900

கல்வி உதவி – 5500

திருமண உதவி – 8000

120 குடும்பங்களுக்கு காய்கறி, அரிசி, மளிகைப் பொருட்கள் தேங்காய் முதலிய பொருட்கள் வாங்கி கொடுக்கப்பட்டது.

### 2018-2022

மருத்துவ உதவி – 46000

கல்வி உதவி 10000

ஏழைகள் நல உதவி – 61100

திருமண உதவி – 14000

பொருள் உதவி – 50 கிலோ அரிசி

### 2013 முதல் 2022 வரை அன்பியம் சார்ந்த உதவிகள்

1. கல்வி உதவி – 467500/–
2. திருமண உதவி – ரூ. 26000
3. நோயாளிகளுக்கான உதவி ரூ. 189305
4. ஏழைகளுக்கு உதவி – 2,28,705
5. பொருள் உதவி – 50 கி. அரிசி
6. உடை – 5000
7. முதியோர் இல்லம் சந்திப்பு – 10000
8. வீடு கட்ட தேவையான பொருட்கள் – 450 சிமெண்ட் கற்கள் 15 மூடை சிமெண்ட், டைல்ஸ்.



# கத்தோலிக்க சேவா சங்கம்

1. அமைப்பின் பெயர் (இயக்கம்)
   கத்தோலிக்க சேவா சங்கம்
2. சங்க விருது வாக்கியம் –
   “கிறிஸ்து அரசர் வாழ்க!
   அவரது அரசு வருக!”
3. நோக்கம் :
   1. “அனைத்தையும் கிறிஸ்துவில் புதுப் பித்தல்” நற்செய்தியை அறிவித்து, மக்களைப் புனிதப்படுத்தி, கிறிஸ்தவ மனசாட்சியை உருவாக்கி, நற்செய் தியின் உட்கருததால் உலகை ஊடுருவி நிறைவுறச் செய்தல்.
   2. தூய ஆவியின் வரங்களையும், கனிகளையும் அருங்கொடைகளையும் பெற்று அடிப்படை கிறிஸ்தவ வாழ்வு வாழுதல்.
   3. திரு ஆட்சியாளர்களின் திருத் தூதுப்பணியில் பொது நிலையினர் பங்கேற்று உதவி செய்தல்.
   4. தொடங்கப்பட்ட ஆண்டு : 27.09.2015
   5. தொடங்கிய போது இருந்த நிர்வாகிகள் / அருட்பணியாளர்கள்

தொகுதி இயக்குனர் : அருட்பணி. அருள் தேவதாசன்
தொகுதி ஆலோசகர் : அருட்பணி. மரியதாஸ்
தலைவர் : திரு. தங்கையன்
செயலர் : திருமதி R. பிறேமலதா
பொருளர் : திரு. R. தனிஸ்லாஸ்
துணைத்தலைவர் : திருமதி. M. வில்சி
துணைச் செயலர் : செல்வி. A. மெர்லின்

6. தொடக்ககாலச் சிறப்புச் செயல்பாடுகள்:

எங்கள் தொகுதியிலிருந்து (திருமதி. R. பிறேமலாதா அவர்கள் மார்த்தாண்டம் மண்டலத்தின் செயலராக ஜூன் மாதம் 2016 – அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்) அன்று முதல் ஒவ்வொரு மாதமும் முதல் வியாழக்கிழமை கத்தோலிக்க சேவா சங்க அலுவலகம் உண்ணாமலைக் கடையில் நடைபெறும் மத்திய பேரவைக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டார்கள்.

(25.06.2016 அன்று மத்திய பேரவை கோட்டாறு மறைமாவட்டம் மற்றும் குழித்துறை மறைமாவட்டம் இணைந்து, அசிசியில் கத்தோலிக்க சேவாசங்கத்தின் பவளவிழா நிகழ்ச்சியில் நடைபெற்ற வினாடிவினாப் போட்டியில் திருமதி R. பிறேமலதா செல்வி A. மெர்லின் ஆகிய இருவரும் கலந்து கொண்டு முதல் பரிசினைப் பெற்றுள்ளார்கள்)

7. ஊரில் பிற சமூகத்தோடு இணைந்த செயல்பாடுகள்:

தேவைப்படுவோருக்கு உதவி செய்தல், வருத்தத்தில் இருப்போருக்கு ஆறுதல் கூறுதல், அவர்களுக்காக ஜெபித்தல், குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளுதல், இல்லம் சந்தித்தல், இயேசு அனுபவம்

8. மறைமாவட்ட அங்கீகாரம் கிடைத்த ஆண்டு: 27.09.2015
9. பதிவு செய்த ஆண்டு : 27.09. 2015
10. பங்கு அருள்பணிப்பேரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்த ஆண்டு : 16.06.2019
11. தற்போதைய நிர்வாகிகள் :

தேர்தல் நாள் : 17.02.2022
தலைவர் திரு. K. தங்கையன்
செயலர் . திருமதி. A. பிறேமலதா
பொருளர் திருமதி. A. சுபா
துணைத்தலைவர் திருமதி. S.R. சோனியா
துணைச்செயலர் திரு. A.C.செல்வராஜ்

(03.04.2022 அன்று நடைபெற்ற மார்த்தாண்டம் மண்டலக் கூட்டத்தில் திருமதி R. பிறேமலதா அவர்கள் மார்த்தாண்டம் மண்டலச் செயலராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.)

**செயல்பாடுகள் :**

| | | |
|---|---|---|
| ஏழைகளுக்கு உதவியது | – | 4900 |
| திருமண உதவி | – | 10700 |
| மருத்துவ உதவி | – | 18100 |

கொரோனாவில் இறந்த ஒருவரின் அடக்க செலவு ரூ. 20000/– மதிப்பில் சங்க உறுப்பினர் ஒருவர் செய்துள்ளார்.

ஒரு ஏழை திருமணத்திற்கு தேவையான பந்தல், பாத்திர வகைகள் உறுப்பினர் ஒருவர் அன்பளிப்பாக செய்துள்ளார்.

ஒரு உறுப்பினர் 10 ஏழைகளுக்கு மதிய உணவு வழங்கியுள்ளார்.

சங்க வளர்ச்சிக்காக மாத சேமிப்பு ஒன்று நடத்தினோம். அதன்தொகையில் ரூ. 10000/– மூன்று நோயாளிகளுக்கு கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு வழங்கியுள்ளோம்.

சேவாசங்கம் சார்பாக பங்கு குடும்ப விழா சமபந்தி விருந்திற்கு ரூ. 6800 மதிப்பில் 500 ஸ்டீல் கப் வாங்கி கொடுத்துள்ளோம்.

ஏழை விதவை ஒருவரின் குடும்பத்திற்கு ரூ. 4000/– மதிப்பில் மளிகைப் பொருட்கள் வாங்கி கொடுக்கப்பட்டது.

மாதத்தின் முதல் வியாழக்கிழமை நடைபெறும் மறைமாவட்ட சங்கத்திற்கு ஒரு நபரும் மாதத்தின் மூன்றாவது ஞாயிறு மதியம் 2.00 மணிக்கு நடைபெறும் மண்டல கூட்டத்திற்கு தொகுதி நிர்வாகிகள் ஐந்து பேரும் கலந்து கொள்கின்றோம்

நோயாளிகளை சந்தித்து ஆறுதல் கூறி ஜெபித்தல், இயேசு அனுபவம் செய்தல், இல்லம் சந்தித்தல் போன்ற சங்கப் பணிகளையும்செய்து வருகின்றோம்.

# இருளகற்றிய கலங்கரை கல்



சவரிமுத்து என்னும் கிறிஸ்தவ நம்பிக்கையுடைய நபரின் கல்லறை அருகில் இருந்த கல்லின் மேல் எண்ணைய் ஊற்றி எரிய வைத்து, அதை அப்போது காட்டுப் பகுதியாக இருந்த வெட்டுவெந்நி வழியாக செல்லும் மக்களுக்கு கலங்கரை விளக்காக, நடுக்கடலில் தொலைந்து போன கலங்களுக்கு வழி காட்டுவது போல, மக்களுக்கு ஒளி தந்து உதவியது. 1974 ஆம் ஆண்டில் நமது வெட்டுவெந்நி புனித அந்தோணியார் குருசடி சுமார் 15 நபர்கள் கூடி ஜெபிக்கும் இடமாக திகழ்ந்தது. அதன் பிறகு மின்சாரம் வந்ததால் அந்த கல்லானது தீர்த்த நீரை சுமக்கும் கல்லாக பயன்பட்டு வந்தது. இப்போது அந்தக் கல் இருந்ததின் அடையாளமாக நமது ஆலயத்தின் முன்னே காட்சியளிக்கிறது. குழித்துறைக்குச் செல்லும் வழியாகிய, சப்பாத்து பாலம் கடப்பதற்கு, பேருதவி புரிந்த, இருளகற்றிய, இந்தக் கல்லானது நம் ஆலயத்தின் முன்னால் இருப்பது சாலச் சிறப்பு.



C. M. Ejoe

# பெண்கள் இயக்கம்



1. **அமைப்பின் பெயர்**
   பெண்கள் இயக்கம்
2. **இலட்சியம் / நோக்கம் :**
   ஆண், பெண் சமத்துவம் பேணிக்காத்து, சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சார ரீதியாக பெண்களை அடிமைப்படுத்துகின்ற முற்போக்கு அமைப்பு முறைகளை மாற்ற இணைந்து செயல்பட்டு இறைவன் விரும்பும் பெண்விடுதலைக்காக, துணிச்சலோடு இறையாட்சி சமூகம் அமைப்போம்.
3. **தொடங்கப்பட்ட ஆண்டு :** 08. 10.2017
4. **தொடங்கப்பட்டதன் நோக்கம் :**
   பெண்கள் முழு விடுதலை பெற்று, சமூகத்தில் சமமாக நடத்தப்பட்டு இறையாட்சி சமூகம் மலர உழைக்க.
5. **தொடங்கப்பட்டபோது இருந்த நிர்வாகிகள்**
   அருட்பணி. அருள்தேவதாசன்
   தலைவர் – திருமதி தீபா தமிழ்வாணி
   துணைத்தலைவர் – திருமதி அம்பிகா
   துணைச் செயலர் – திருமதி பியூலா
   பொருளர் – திருமதி சுனிதா
6. மறைமாவட்ட அங்கீகாரம் பெற்ற ஆண்டு 2017
7. பங்கு அருட்பணிப் பேரவையின் முதல் பிரதிநிதி : S. லீமா ஜெஸிந்தா
9. பங்கு அருள்பணிப் பேரவையில் பிரதிநிதித்துவம் கிடைத்த ஆண்டு : 2019
10. **தற்போதைய நிர்வாகிகள் :**
   தலைவர் – திருமதி அம்பிகா
   துணைத்தலைவர் – திருமதி லிஜி ராஜ்
   செயலர் – திருமதி பியூலா
   துணைச் செயலர் – திருமதி லீமா ஜெசிந்தா
   பொருளர் – திருமதி ஜெஸ்லெட்
   வழிபாட்டுக்குழு – திருமதி விஜிலா றோஸ்

**சிறப்புச் செயல்பாடுகள்:**

- நோயாளிகளுக்கு மருத்துவ செலவுக்காக ரூ. 22000 கொடுத்துள்ளோம்.
- கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு 50 கிலோ அரிசியும், 5000 ரூபாயும் கொடுத்துள்ளோம்
- வாழும் குடில் திட்டத்திற்கு ரூ. 3500 கொடுத்துள்ளோம்.
- வட்டார துணைத்தலைவராக எமது பங்கின் சார்பாக திருமதி. அம்பிகா அவர்கள் செயல்பட்டு வருகிறார்.
- ஒவ்வொரு வருடமும் தவக்காலத்தை முன்னிட்டு உறுப்பினர்களின் வீடுகளுக்கு சென்று சிலுவைப்பாதை தியானித்து வருகிறோம்.

# மாதர் தன்னம்பிக்கை கைகள் இயக்கம்

சமூகத்தில் புறந்தள்ளப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக தொடங்கப்பட்ட மாதர் தன்னம்பிக்கை கைகள் இயக்கம் பெயருக்கேற்றவாறு வீட்டில் முடங்கி கிடக்கும் பெண்களுக்கு மறுவாழ்வு உண்டு என்று நம்பிக்கையூட்டும் வகையில் சாதி மத, இன வேறுபாடுகளைக் களைந்து உருவாக்கப்பட்டது. பெண்கள் மாண்போடும் கண்ணியத்தோடும், சம உரிமைகளோடும், அச்சமின்றியும், ஆற்றலோடும் நிறைமனிதர்களாக வாழும் ஒரு சமூகம் என்பதுதான் இதன் இலக்காகும் குழித்துறை மறைமாவட்டத்தில் 1.1.2020 அன்று துவங்கப்பட்ட எமது அமைப்பு 7.11.2022 அன்று பங்குத்தந்தை அந்தோணி M. முத்து, இணைப்பங்கு தந்தை மரிய மார்ட்டின் அவர்கள் தலைமையில், கிட்ஸ் இயக்குனர் ஆசிரியை ரெத்தினம், வட்டார வழிகாட்டி திருமதி. சகாய மேரி அவர்கள் முன்னிலையில் துவங்கப்பட்டது. அன்றைய தினமே எமது இயக்கத்தின் தலைவராக திருமதி. சத்யகலா அவர்களும், செயலராக திருமதி மேரிஜெனட் அவர்களும், பொருளராக திருமதி ஜெயபாய் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். கிறிஸ்மஸ் விழாவினை முன்னிட்டு எமது அமைப்பின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பங்கிலிருந்து நல உதவிகள் வழங்கி ஊக்குவித்தார்கள். மேலும் பங்கின் வேலை வாய்ப்புகளில் எமது அமைப்பின் உறுப்பினர்களின் தகுதிக்கேற்றவாறு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. எமது அமைப்பின் நிர்வாகிகள் சமூகத்தால் கைவிடப்பட்ட பெண்களைச் சந்தித்து, தன்னம்பிக்கையோடு வாழ ஊக்கமூட்டி வருகிறார்கள். 12 உறுப்பினர்களைக் கொண்டு துவங்கப்பட்ட எமது அமைப்பு தற்போது 24 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எமது அமைப்பு 2022 ஜனவரி மாதம் குழித்துறை மறைமாவட்டம் கிட்ஸ், தேடல் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. கிட்ஸ் அமைப்பால் நடத்தும் அனைத்து விழிப்புணர்வு பயிற்சிகளிலும் எமது அமைப்பின் அங்கத்தினர்கள் கலந்து கொண்டு பயன்பெற்று வருகின்றனர். எமது அமைப்பின் பொருளாளர் திருமதி ஜெயபாய் அவர்கள் வட்டார பொருளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

# சிறப்பு நிதிக்குழு

சிறப்பு நிதிக்குழு 19.03.2003–ல் பங்குப்பணியாளர் ஜார்ஜ் தலைமையில், வட்டார முதன்மைப் பணியாளர் ஹிலாரியூஸ் முன்னிலையில், பங்குப்பேரவை உதவித்தலைவர் பேராசிரியர் வின்செண்ட் தேவராஜ், சிறப்பு நிதிக்குழு செயலர் திரு.S. கிறிஸ்துராஜ், கணக்கர் திரு.டென்னிஸ் இணைந்த முதல் கூட்டம் நடைபெற்றது. அதன்பின்னர் தொடர்ச்சியாக திரு.V.மரியதாஸ், திரு.K.தங்கப்பன், திரு. ரோஜர் ராஜேஷ், ஆகியோர் செயலராக செயல்பட்டு வந்தனர். 2019–ல் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி M. முத்து, இணை பங்குத்தந்தை அருட்பணி. மரிய மார்டின், பொருளர் பணி. அகஸ்டின், பங்குப்பேரவை உதவித்தலைவர் திரு.ஜோசப் கிரேசியஸ், பங்குப்பேரவை செயலர் திருமதி. லில்லி பாய், சிறப்பு நிதிக்குழு செயலர் திரு. மரியசிசில், கணக்கர் திரு. ரோஜர் ராஜேஷ், உறுப்பினர்கள் Sister. நிர்மலா, திரு. எழில் சேவியர், திரு. எப்ரேம் பாபு, ஆகியோருடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை திருத்தல பங்கு அருட்பணி பேரவையில் கணக்குகள் வாசிக்கப்படும்.

# மனதுளிகள்

G. ஆன்றனி ஜியோ



என்னுடைய என்னவளை நான்
முதல் முறையாக பார்த்த போது
எனக்கு ஒரு தேவதை போல காட்சியளித்தாள்
ஒரு காதலியாக இதயத்திற்கு இணக்கமானாள்
மணம் ஆனவுடன் அவள் முழுமையாக என்னவளானாள்
நான் சோர்ந்து போன போது
எனக்கு ஊக்கம் அளித்து ஒரு தோழியானாள்
என்னை குறை கூறுபவர்களிடம்
எனக்காக வக்கீலானாள்
நான் தவறு செய்யும் போது அறிவுரை
கூறும் ஆசான் ஆனாள்
நான் நோயுற்ற போது அருகிருந்து
ஒரு மருத்துவரானாள்
நான் பசியில் இருந்தபோது எனக்கு
பசியாற்றும் அன்னையானாள்
அன்பும் அக்கறையும் காட்டி என்
அம்மாவானாள்
என் வாழ்க்கைத் தடுமாற்றத்தில்
வழிகாட்டும் தந்தையானாள்
எனக்கு உணர்த்திய என்னவள்
என்றும் என் நினைவில் ஆனாள்




Angcica Jane





தெக்குவிளை அன்பியம்





தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்




தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



தெக்குவிளை அன்பியம்



Oviya
சாலியன்விளை அன்பியம்











அல்கின் V.










ஏஸ். ஜெ. ஸ்டெபி ஜாஸ்
கோட்டைக்காட்டுவிளை அன்பியம்



அ.ரா. ஓவியா ஷேரோன்
சாலியன்விளை அன்பியம்



R.J. Astalin
படியன்விளை அன்பியம்



Adlin S.P. Sujishma
மறைசாட்சி தேவசகாயம்பிள்ளை அன்பியம்






S. Dina









# எம் புனிதர் பேரழகு

வாரீர் எல்லோரும் விரைந்து வாரீர்
எங்கள் கோடி அற்புதரின் புதுமைகளைப் பாரீர்
மழைக்கால ஏழு வண்ண வானவில் அழகென்றால்
இயேசு பாலனைக் கையில் ஏந்தும், கோடி அற்புதர் பேரழகு!
புல்வெளியில் படர்ந்திருக்கும் பனித்துளிகள் அழகென்றால்,
மக்களுக்காய் இறையிடம் பரிந்து பேசும் எம் புனிதர் பேரழகு!
ஆர்ப்பரித்து மண்ணை முத்தமிடும் கடலின் அலை அழகென்றால்
நோய் தீர்க்கும் பதுவை மகன் கருணைக் கண்கள் பேரழகு!
விண்ணின்று மண் விழும் எண்ணிலா மழைத்துளி அழகென்றால்
எண்ணிலா பக்தர்களின் கண்ணீர் துடைக்கும் புனிதரின் இதயமோ பேரழகு!
உயர்ந்து நிற்கும் மலையை வருடும் மேகக்கூட்டம் அழகென்றால்,
நிமிர்ந்து நாங்கள் வாழ அருள் தரும் எங்கள் தூயவர் பேரழகு!
எதனோடும் ஒப்பிட இயலா எம் பங்கின் உயிர் மூச்சாம் கோடி அற்புதர் பேரழகு!

– by ஜெனிகா



# மறைக்கல்வி ஒரு கலங்கரை விளக்கு

இன்றைய சமுதாயத்தில் அறிவியலின் அளவற்ற வளர்ச்சி, தொழில்நுட்பத்தின் உயர்ச்சி இதனால் உருவாகும் தொலைத்தொடர்பு சாதனங்கள் இவற்றுக்கு அடிமையாய் வாழும் மனிதர்கள் ஊடகத்தோடு ஒன்றித்துவிட்ட இளைஞர்கள் கடவுளை நினைப்பதற்கும் நேரமில்லை. இப்படியாக கடவுளை மறந்து, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் இன்றைய சமுதாயத்தைக் காப்பாற்றி, நேரிய முறையில் வாழ கற்றுக் கொடுப்பது தான் மறைக்கல்வி. இது இன்றைய சமுதாயத்துக்கு கட்டாயமான அவசரத் தேவை. எனவே இந்த மறைக்கல்வியின் நோக்கம், அதன் இன்றியமையாமை, அதன் பயன்கள் அதை கற்றுக் கொடுப்பது யார்? எவ்வாறு கற்றுக் கொடுப்பது? அவர்களின் இயல்பு இவற்றைச் சுருக்கமாக இக்கட்டுரையில் காண்போம்.

மறைக்கல்வி என்பது சில ஜெபங்களை மனப்பாடம் செய்வதோ அல்லது அருட்சாதனங்கள் பெற நம்மைத் தயாரிக்கும் வகுப்பு என்பதோ முற்றிலும் தவறானது திருமறைபற்றிய பல உண்மைகளையும் விவிலியத்தையும் கற்றுத் தருவது சிலர். ஆனால் வாழ்விற்கான கல்விதான் மறைக்கல்வி.

நோக்கம் : கிறிஸ்தவ வாழ்வில் இறைநம்பிக்கையை உருவாக்கி வளர்ப்பதும், கிறிஸ்தவர்களாக வாழ பயிற்றி அளிப்பதும், அன்றாட வாழ்வில் உறவு வாழ்வை வெளிப்படுத்த இறை அனுபவங்களைத் தந்து வழிகாட்டுவதும் மறைக்கல்வியின் நோக்கமாகும்.

உலகின் கடை எல்லைவரைச் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள் என்ற இயேசு பெருமானின் கட்டளையை இதயத்தில் ஏற்று அதனைச் செயல்படுத்துவதே மறைக்கல்வி.

## மறைக்கல்வியின் இன்றியமையாமை

இறைவனை நேசி, பிறரை நேசி என்ற இரண்டுமே கிறிஸ்தவ வாழ்வின் சாவிகள். இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை இதைத்தான் இயேசு நானே திராட்சைக்கொடி நீங்கள் அதன் கிளைகள் என்றார். இப்படிப்பட்ட வாழ்வுக்கு நம்மை தயாரிப்பது தான் மறைக்கல்வி. கிறிஸ்துவின் வாழ்வைப் பிரதிபலிப்பது. இது வெறும் வார்த்தைகளால் மட்டுமல்ல செயலில் வெளிப்பட வேண்டும். இதையே புனித பவுல் “செயலில்லாத விசுவாசம் செத்த விசுவாசம்” என்றார்.

மறைக்கல்வியால் தான் திரு முழுக்கின் போது நம்மில் விதைக்கப்பட்ட விசுவாச வாழ்வை வளர்த்து, நம்மில் கிறிஸ்துவை உருவாக்கி, இயேசுவின் மதிப்பீடுகளை வளர்த்து, இறையாட்சி சமுதாயத்தை மண்ணில் மலரச் செய்வதேயாகும். இப்பணியை யார் செய்வது?

பெற்றோரே முதல் ஆசிரியர் – குழந்தை பிறந்தது முதல் பெற்றோரைப் பார்த்து அவர்களின் அரவணைப்பிலேதான் வளர்க்கின்றது. பெற்றோரிடம் காண்பதும் கேட்பதும் பிள்ளையின் மனதில் பசுமரத்தாணி போல பதிகிறது. எனவேதான் "தாயின் இதயம் தான் குழந்தையின் பள்ளி" என்றார் பிரேர் என்ற அறிஞர். திரைப்படப் பாடகர் எல்லா குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நலலவராவதும் தீயவராவதும் அன்னை வளர்க்கையிலே" என்று பாடினார். அது உண்மை தான். நமக்கு எல்லாம் தெரிந்த ஒரு கதை ஒரே நாளில் கத்தரிக்காய் திருடிய இரு சிறுவர்களின் கதை வழியாக நல்ல தாயின் அறிவுரைபடி வளர்ந்தவன் நல்லவனாக மாறியதும் குற்றத்தைக் கண்டிக்காமல் வளர்த்திய தாயின் மகன் திருடனாக மாறியதும் நாம் அறிந்ததே. எனவே சிறு பருவத்திலிருந்தே குழந்தைகளுக்கு பக்தியை ஊட்டி, நற்பண்புகளைக் கற்றுக் கொடுத்து நல்லாசிரியர்களாயத் திகழ வேண்டும். மட்டுமல்ல சிறு குழந்தைப்பருவத்திலிருந்தே குழந்தைகளை தங்களோடு ஆலயத்துக்கு கூட்டி வந்து , மறைக்கல்வி வகுப்பு, பாலர்சபை, சிறார் இயக்கம் போன்றவற்றில் பங்கேற்க வைப்பதும், இரவு நேரங்களில் பிள்ளைகளைச் சேர்த்து வைத்து குடும்ப செபம் செய்வதும் குழந்தைகள் நன்முறையில் வளர உதவும்.

**மறைக்கல்வி ஆசிரியர்** : தன்னிடம் பயிலும் ஒவ்வொரு மாணவரிலும் கிறிஸ்துவை உருவாக்க வேண்டும். திருத்தூதர் பவுல் "என்பிள்ளைகளே உங்களில் கிறிஸ்து உருவாகும்வரை நான் மீண்டும் பேறுகால வேதனையுறுகிறேன்" (கலா 4:19) என்று கூறுவதுபோல, மறைக்கல்வி ஆசிரியர்களும் மறைக்கல்வி மாணவர்களை சொந்த பிள்ளைகளாகப் பாவித்து அவர்களின் வளர்ச்சி, செயல்பாடுகளில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். ஒருமணி நேரம் மறைக்கல்வி பாடங்களை கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல, கற்றுக்கொடுத்தவற்றை தனது செயலில் வெளிப்படுத்த வேண்டும் . நமது சமூகத்தில் வாழும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் ஒரு மாதிரி. ஆசிரியரின் செயல்பாடுகளை மாணவர்களும் பின்பற்றுவர்.

**இயேசு ஒரு நல்லாசிரியர்** :

மாணவர்களை கடவுள் பக்தியில் இணைக்க ஆசிரியரே உறவு பாலமாவார். எனவே மாணவர்களைப் பற்றியும் அவர்களின் செயல்பாடுகள் பற்றியும் ஆசிரியர் நன்கு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் பெற்றோரிடமும் உறவைப் பேண வேண்டும். இயேசு ஒரு நல்லாசிரியர். குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர் என்றார் இயேசு. அவர் போதிக்கும் போது மக்களுக்குத் தெரிந்த உவமைகளையும், பொருட்களையும் காட்டி, வாழ்க்கை அனுபவங்களோடு இணைத்து பேசி விளக்கினார் எ.கா. நல்ல சமாரியன், விதைப்பவர் உவமை, ஊதாரி மைந்தன், கடுகுவிதை, புளிப்புமாவு இன்னும் பல. மட்டுமல்ல, இயேசு உயிர்த்தபின் எம்மாவுஸ் செல்லும் பாதையில் சீடர்களோடு உரையாடிக் கொண்டு சென்றார். பின்னர் இயேசு அவர்களோடு தங்குவதற்குச் சென்றார். அங்கு அப்பத்தைப் பிட்கையில் சீடர்கள் கண்டு கொண்டனர். அப்போது தான் அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் உருகவில்லையா?" என்றனர்.

**ஆர்வமூட்டும் மறைக்கல்வி**:

இவ்வாறே மறைக்கல்வி ஆசிரியர்களும், மாணவர்களுக்குப் வாழ்க்கை அனுபவங்களோடு இணைந்து எளிமையான துணைக்கருவிகளைக் காட்டி, எளிய விவிலியக் கதைகள், பாடல்கள் இவைகளைப் பயன்படுத்தி மாணவர்களைக்கவரக்கூடிய முறையில் வகுப்புகள் அமைந்தால் மாணவர்கள் விரும்பி மறைக்கல்வி பயில்வர். மட்டுமல்ல வாழ்க்கையில் மாற்றம் காணலாம். எதிர்கால

சமுதாயம் ஏற்றம் பெறும், போதிப்பவர் பலர் வாழ்பவரோ சிலர். அந்த சிலரே போற்றுதற்குரியவர் என்றார் பெர்னாட்ஷா. இதுவே மறைக்கல்வி ஆசிரியர்களின் வாழ்வாகட்டும். "கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பவரின் மலரடிகள் எத்துணை இனிமையானவை" என்றார் புனித பவுல்.

**மறைக்கல்வியின் பயன்கள்:**

மனித வாழ்வுக்கான அடிப்படைப் பண்புகளைக்கற்றுத் தருகிறது. படைப்பாற்றல், கலைத் திறன்களை வளர்க்கிறது அறநெறி வாழ்வுக்கான பயிற்சி தருகிறது. மாணவரிடத்தில் உறவு வாழ்வை மலரச் செய்கிறது. சாதி சமய வேறுபாடுகளை நீக்குகிறது. இறை அன்பும், பிறரன்பும் இணைந்து வளர்க்கிறது. ஒற்றுமையை உருவாக்கி வளர்க்கிறது, பகிர்ந்து வாழக் கற்றுக்கொள்கின்றனர் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்க பயிற்சி தருகிறது. கிறிஸ்துவின் மனநிலையைப் பெற்று வாழ வழிகாட்டுகிறது இறைவன் படைத்த இயற்கையைப் பேணவும், பாதுகாக்கவும் துணை புரிகிறது.

**முடிவுரை:**

மறைக்கல்வியே ஒரு பங்கின் வளர்ச்சிக்கும், செயல்பாட்டிற்கும் உயிர் நாடியாகும். சிறார், இளையோர், முதியோர்அனைவரும் இணைந்தே மறைக்கல்வி கற்கின்றோம். நாம் எல்லோரும் இறைமகனைப் பற்றிய அறிவிலும் நம்பிக்கையிலும் ஒருமைப்பாட்டையும் அடைவோம்" எபேசியர் 4:13. இது நமது பங்கின் இலட்சியமாகட்டும் மறைக்கல்வியால் நமது பங்கும், எதிர்கால சமுதாயமும் ஒளிபெறட்டும். ஏனைய பங்குகளுக்கும் நமது பங்கு வழிகாட்டும் கலங்கரை தீபமாகட்டும்.!

**இரா. லில்லிபாய்**
மறைக்கல்வி ஆசிரியர்

# அன்று முதல் அன்னையுடன்...



காலை விடியலை காணும் முன்பே
என் வாழ்வின் விடியலை காண்பித்தவள் நீ
அன்பு என்னவென்று அறியும் முன்பே
உன் கருவைறையில் அன்பை உணர்த்தியவள் நீ
உலகின் அழகை இரசிக்கும் முன்பே
உன் குரலால் அழகை இரசிக்க வைத்தவள் நீ
வாழ்வின் இடர்களைக் கண்டு அஞ்சும் முன்பே
உன் அரவணைப்பால் அச்சத்தைப் போக்கியவள் நீ
வாழ்க்கைப் பாதையில் தடுமாறும் முன்பே
என் விரல்களைப் பிடித்து வழிநடத்தியவள் நீ
அன்று முதல் இன்றும் என்றென்றும்
நீயே என் அன்பு தாய் அன்றோ..
என்றும் உன் அன்பின் பிடியில் நான்...

by. J. மேரி புஷ்பலதா

# வெட்டுவெந்நி திருக்கோவில் புகழாரம்

– ம. ஹெலன் ஷீலா

இயற்கை எழிலொழுகும் தென் தமிழக மதிலே!
இதய தெய்வம் இறையாகும் திருக்கோயிலே!
வெந்நி நிறை புகழாரம் புண்ணிய பூமியிலே
வெட்டு வெ ந்நியில் உதயமாகிய அருள் ஜோதியே!

முக்கடல் முத்தமிழும் கன்னியாம் முத்து குமரியே!
முக்தியாய் எழுந்தருளிய எம் குருசே!
முத்தாய் மண்ணில் மலர்ந்திட்ட மங்கா ஒளியே!
முத்திரையாய்த் தடம் பதித்த கோடி அற்புதர் கோயிலே!

கிழக்கே சோலைவன குயில்கள் இசைந்தாட
வடக்கே வனப்பாய் தாமிரபரணி தவழ்ந்தோட
மேற்கே மேன்மையாய்மேம்பாலம் தாலாட்ட
தெற்கே திருசன்னதி வாயில் தடம் காட்ட
தென்றலாய் வாரீர் இன்னலெனும் வெந்தழலோட்ட




மாந்தர் உளமறிந்து உருகும் எம் ஒளி சுடரே
மனக்கலக்கமடைந்தவர் தம்கலங்கரை விளக்கே
மாபிணி துயர் நீக்கும் பரம் பொருளே
மாசற்றோராய் நம்மை நடத்தும் நல்ல நாதரே!

சாதி சமயம் கடந்து சமத்துவராகும் நல் சம்மன்னரே!
சங்கடமும் சகலமும் நீக்கும் எங்கள் சாந்த சொரூபியே!
உறவுகளைத் தாண்டி நம்மை காக்கும் உன்னதரே!
உண்மையாய் நம்மை நேசிக்கும் அன்பு நேசரே!

வரமாகி, அன்பாகி, அருளாகி, ஒளியாகி – நாடி
வந்தவர் வாழ்வை வளமாக்கி வழிகாட்டி
தலைமுறை தலைமுறையாய் உம்புகழ் தழைத்தோங்கிட
திருக்கோயிலே வளர்க, உம் ஆசீர் என்றும் பெருகுக – உம்
திருவுளம் நிறைவேற வாழ்த்தும் பங்கு இறைமக்கள்

# ஆவணங்கள் மற்றும் வாய்மொழிகள்



**எஸ். தர்மநாதன்**

களப்பாறை தாய் வீடு

அமரர் திரு. வியாகன் நாடார் பேரன்

வெட்டுவெந்நி புனித அந்தோணியார் குருசடி அமைந்து இருக்கும் இடம் 13 சென்ட் தான் உள்ளது. இந்த 13 சென்ட் திரு வியாகன் நாடார் கைவசம் ஒற்றியில் இருந்தது. இந்த சொத்து ஜென்ம அவகாசம் அமரர் திரு. குட்டன் பிள்ளை குடும்பத்தை சேர்ந்தது.

வெட்டுவெந்நி குருசடியின் அடியில் ஒரு கல்லறை உள்ளது. அந்த கல்லறையில் அடக்கம் செய்து இருப்பது வில்லுக்குறி மாடத்தட்டு விளையை சேர்ந்த அமரர் திரு. சபரிமுத்து நாடார் என்பவரது உடலாகும்.

வில்லுக்குறி மாடத்தட்டுவிளையில் பிறந்தவர் அமரர் திரு. சபரி முத்துநாடார். கள்ளித்தட்டு களப்பாறை தாய் வீட்டில் எனது தாத்தா அமரர் திரு. வியாக நாடார் குடும்பமும், அமரர் திரு. சபரிமுத்து நாடார் குடும்பமும் உறவினர்கள் ஆவார்கள். அமரர் திரு. சபரிமுத்து நாடார் திருமணம் ஆகாதவர். கிறிஸ்தவ சன்னியாச வாழ்க்கை வாழ்ந்தவர், அவருடைய தொழில் காளை வண்டி ஓட்டுபவர். அவர் நாகர்கோவிலில் இருந்து திருவனந்தபுரத்திற்கு கருப்புக்கட்டி பாரம் ஏற்றி, காளை வண்டியில் ஓட்டி செல்வது வழக்கம். முற்காலத்தில் வெட்டுவெந்நி சப்பாத்து வழியாக தான் வண்டிகள் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. அமர் திரு. சபரிமுத்து நாடார் திருவனந்தபுரத்தில் கருப்புக்கட்டி பாரத்தை இறக்கிவிட்டு ஊருக்கு வெட்டுவெந்நி வழியாக வரும்போது அவருடைய உறவினராகிய என்னுடைய தாத்தா அமரர் திரு.வியாகன் நாடார் வீட்டிற்கு வந்து ஓய்வு எடுத்து காளைமாட்டிற்கு தேவையான உணவுகள் கொடுத்து ஓய்வு எடுத்து போகிறது வழக்கம். ஓய்வு நாட்களில் கிறிஸ்தவ மதத்தை பற்றி விளக்கி உண்மை யான ஆண்டவர் இயேசு கிறிஸ்து தான் என்று முந்தைய காலத்தில் போதனை செய்து வந்தாராம்.

இப்படி வருடங்கள் போய் கொண்டு இருந்தது. ஒருநாள் அமரர் திரு. சபரிமுத்து நாடார், காளை வண்டி ஓட்டி ஊருக்கு வரும்போது அவர் வண்டியில் இறந்து கிடந்து இருக்கிறார். அவர் இறந்த உடலைக் கொண்டு காளைகள் வண்டியை கொண்டு வந்து இன்றைய தினம் உலக மக்கள் போற்றும் புண்ணிய ஸ்தலமாகிய புனித அந்தோணியார் ஆலயத்தில் முன் பக்கம் ரோட்டில் காளை படுத்துக் கொண்டது. 2 காளை மாடுகளும் அந்த இடம் விட்டு அசையவில்லை.

என்னுடைய தாத்தா அமரர் திரு. வியாகன் நாடாருடைய உறவினராகிய திரு. சபரிமுந்து நாடார் இறந்து கிடப்பதையும் காளை மாடுகள் படுத்து கிடப்பதையும் அந்த வழியாக வரும் ஆட்கள் எனது தாத்தா அமரர் திரு. வியாகன் நாடாரிடம் வந்து கூறினார்கள்.

உடனே எனது தாத்தா அமரர் திரு. வியாகன் நாடார் ஆட்களோடு வெட்டுவெந்நி சென்று அமரர் திரு. சபரிமுத்து நாடார் இறந்து கிடப்பதை பார்த்து காளை மாடுகள் படுத்து இருந்த ரோட்டின் அருகில் உள்ள சொத்து திரு.வியாகன் நாடார் கைவசம் அனுபவம் இருந்ததால், அந்த இடத்தில் தான் அமரர் திரு.சபரிமுத்து நாடார் உடலை அடக்கம் செய்ய வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சித்தமாயிருக்கும் என்று தீர்மானம் செய்து சொந்த ஊருக்கு உடலை கொண்டு போகாமல் குருசு நிற்கும் இடத்தில் நல்லடக்கம் செய்தார்கள்.

அமரர் திரு. சபரிமுத்து நாடாரின் கல்லறையில் தலைபாகம் நாட்டியிருக்கும் குருசுதான் கல்லறை, இந்த குருசில் எழுதியிருப்பது அமரர் திரு. சபரிமுத்து நாடாரின் ஊர் பெயர் மற்றும் ஆண்டு தேதி களப்பாறை தாய்வீடு அமரர் திரு.வியாகன் நாடாரால் கட்டப்பட்டது. என்பதை தெளிவாக கல்லறை கல்லில் செதுக்கி எழுதி உள்ளார்கள். அதைப் படித்து பார்த்தால் உண்மைகள் தெரிய வரும்.

அமரர் திரு.சபரிமுத்து நாடாரின் கல்லறையில் சிறிய குருசடியாக கட்டி அதில் புனித அந்தோணியார் படத்தை ஸ்தாபித்தார்களாம். முதல் முதலில் வெட்டுவெந்நி புனித அந்தோணியார் குருசடி கட்டியவர் கள்ளித்தட்டு களப்பாறை தாய்வீட்டில் எனது தாத்தா அமரர் திரு. வியாகன் நாடார் என்பதை இந்த மனு வாயிலாக தெரியப்படுத்தி கொள்கிறேன். அதற்கு உண்மை சாட்சி கல்லறையில் உள்ள குருசில் எழுதியிருக்கும் எழுத்துக்களாகும். மேற்குறிப்பிட்ட குருசடி கட்டிய பிறகு வெட்டுவெந்நி அமைந்து இருக்கும் இந்து கோவிலில் 10 நாட்கள் திருவிழா எடுக்கும்போது எனது தாத்தா இந்த 10 நாட்களும் காலையில் இருந்து சாயங்காலம் வரை திருவிழாவிற்கு வரும் ஆட்களுக்கு கஞ்சி ஊற்றி வந்தாராம். எனது தாத்தா வாழ்ந்த காலம் வரை கஞ்சி காய்ச்சி பக்தர்களுக்கு கொடுத்து வந்தார்.

(களப்பாறை – 08.11.2015)



தூய அந்தோணியாருக்கு புகழ்

## R. தனிஸ்லாஸ்

சாலியன்விளை அன்பியம்

நான் கடந்த 80 ஆண்டுகளாக வெட்டுவெந்நியில் வாழ்ந்து வருகிறேன். என் குடும்பம் என் தாத்தா சவரிமுத்து 1880– காலகட்டத்தில் கள்ளித்தட்டு பங்குட்பட்ட காரவிளையில் வசித்து வந்தனர். தாத்தா கள்ளித்தட்டு பள்ளிக்கு உறுப்பினர் ஆவர். என் அப்பா திரு. ராயப்பன் அரசு சுற்றுலா மாளிகை (தற்போதை அரசு மருத்துவமனை) வெட்டுவெந்நி 1923–ல் வேலைக்கு வந்ததால் 1942–ல் வெட்டுவெந்நியில் வீடு வைத்து குடிபெயர்ந்தோம்.

என் தாத்தாவுக்கு கள்ளித்தட்டு கத்தோலிக்க நண்பர்களுடன் பழக்கம் இருந்ததால் அவர்கள் சிறு குருசுடன் கூடிய குருசடியை சுத்தம் செய்வதும் பிறகு சாஸ்தா கோயில் விழா காலத்தில் இங்கு கஞ்சி விடுவதும் தாத்தா வழியாக எங்கள் குடும்பத்திற்கு தெரிய வர என் அப்பாவுக்கு குருசடி மீது பற்று ஏற்பட்டது. கள்ளித்தட்டு கிறிஸ்தவர்களுக்கு தலைமுறைகள் மாற மாற இக்கல்லறையுடன் கூடிய குருசடியின் ஈர்ப்பு குறைந்து 1950 கால கட்டங்களில் அதே நேரத்தில் ஒரு வயதான தேவ சகாயம் வைத்தியர் சுத்தம் செய்யும் பணியை செய்ததாகவும், பட்லர் பவஸ்தீன், அர்ஜுன் நாடார், செல்லையன் ஆசான், பீற்றர், சாலியன்விளை, ராமசாமி என் அப்பா மற்றும் கார் ஓட்டுநர்கள் பல வருடங்கள் சுத்தம் செய்து வெள்ளை அடித்தனர்.

1955–ல் என் அப்பா வேலை மாற்றம் பெற்று புலியூர்குறிச்சி சென்றதால் நாங்கள் குடும்பமாக அங்கு சென்று விட்டோம். எனக்கு 1965 ஆண்டு வேலை கிடைத்து திருநெல்வேலிக்கு சென்றேன். 1975–ல் வேலை மாற்றுதல் கிடைக்கும் வரை என்னால் முழுமையாக குருசடி பணியில் செயல்பட முடியாத நிலை இருந்து வந்தது. 1976–77–களில் நான் மீண்டும் செயல்பட துவங்கினேன். அப்போது 1972–ல் மூன்றுநாள் திருவிழா பலசமய நண்பர்களால் எடுக்கப்பட்டு ஆயர் ஆரோக்கிய சாமி அவர்கள் கலந்து கொண்டு செவ்வாய் நவநாள் திருப்பலிக்கு அனுமதியும் அளிக்கப்பட்டு தொடர்ந்து செவ்வாய் திருப்பலி நடைபெற்று வந்தது. 2 அருட்சகோதரிகள் மற்றும் திரு. தேவதாஸ், திரு. மதன்லால், திரு. மத்தியாஸ். திரு. மைக்கேல் பிரான்சிஸ், திரு. A. யேசுதாஸ் ஆகியோர்கள் தேவையான பணிகளை அருட்பணி. தனிஸ்லாஸ் அவர்கள் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு 14.02.1974 அன்று குருசடிக்கு முன் 10 நபர்கள் இருக்கும் வண்ணம் முகப்பு புனரமைக்கப்பட்டு ஆயர் ஆரோக்கியசாமி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது. கி.பி. 1972 முதல் 1980 வரை அருட்பணி. M. தனிஸ்லாஸ் அவர்கள் பணியாற்றினார்கள். 1973–1980–களில் பல்சமய நண்பர்கள் கமிட்டியில் இருந்த கிறிஸ்தவ நண்பர்களும், திரு. தேவதாஸனும் முழு பணிகளையும் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை தொடர்ந்து 1980–1981–களில் அருட்பணி யேசுதாசன் தாமஸ் பொறுப்பேற்கவே என்னையும் திரு. தேவதாஸ் உடன் சேர்ந்து பணியாற்ற பணித்தார்கள்.

திரு. தேவசாஸ் 1979– முதல் திருவிருந்து வகுப்பை துவங்கி... அருட்சகோதரிகளின் இறுதிகட்ட பயிற்சியை முடித்து 13.06.1981 நாள் 14 நபர்கள் திருத்துவபுரத்தில் வைத்து திருவிருந்து பெற்றனர். 1940–1960 உட்பட்ட காலத்தில் வெட்டுவெந்நி எல்லைக்கு உட்பட்ட பகுதியில்... கத்தோலிக்க குடும்பங்களே வாழ்ந்து வந்தனர். 1980–களில் அருள்பிரகாஸ், சுனில் பிரகாஷ், எழில் பிரகாஷ், கிறைஸ்ட் எட்வின் ராஜ், கிறைஸ்ட் ஜஸ்டின் ராஜ், பியூலா மலர், ஜீவா, ஆனிலெட் ஆகிய 8 மாணவர்களுக்கு திரு. தேவதாஸ் அவர்களால் மறைக்கல்வி தொடங்கப்பட்டது. நானும், திரு. தேவதாஸ் அவர்களும் சேர்ந்து வளர்ச்சி கமிட்டி துவங்க வேண்டும் என்ற கனவோடு பலரை கலந்தாலோசித்து முடிவை அருட்பணி. யேசுதாசன் தாமஸ் அவர்களிடம் கொண்டு சென்றோம் அதை அவர் ஏற்று 1982–ல் ஞாயிறு திருப்பலி கிடைத்தது. அருட்பணி யேசுதாஸ் தாமஸ் அவர்களால் 1982– 300 நபர்களை கொண்டு கிளைப்பங்கு அந்தஸ்து கிடைத்தது. 1984–ஆம் ஆண்டு காணிக்கை மற்றும் பங்கு உறுப்பினர்களிடம் நன்கொடையாக கிடைத்த 10150 ரூபாய் சேர்த்து 50,000 ரூபாய்க்கு அருட்பணி. யேசுதாசன் தாமஸ் அவர்கள் காலத்தில் குருசடி இருக்கும் 12 1/2 சென்ட் நிலத்தை வாங்கினோம்.

### 1982-2022 வரை எனக்கு ஆற்ற கிடைத்த பணிகள்

1) வளர்ச்சிக்குழு, கிளைப்பங்கு, பங்கு பொருளராக 24 ஆண்டுகள் சேவை புரிந்துள்ளேன்

2) 1987 முதல் பங்கு தளத்தில் வின்செண்ட் தே பவுல் சபையை துவங்கி வீடு சந்திப்பு மூலம் ஏறக்குறைய 100 குடும்பங்கள் பங்கில் ஈடுபட நாங்கள் துணை புரிந்துள்ளோம்

3) விளவங்கோடு வளர்ச்சி சங்க–RD பொறுப்பாளராக செயல்பட்டு வருகிறேன்.

4) மாலை நேர பொறுப்பாளராக செயல்பட்டு வருகிறேன்.

5) 1983–முதல் மறைக்கல்வி ஆசிரியராக செயல்பட்டு வருகிறேன். இன்றுவரை எனக்கு உடல் நலத்தை கொடுத்து வெட்டுவெந்நி பங்கு வளர்ச்சியில் ஒவ்வொரு படிகளிலும் என் பங்களிப்பை ஆற்ற வாய்ப்பளித்த தூய அந்தோணியாருக்கும், ஆண்டவருக்கும் நன்றிகள்.



### அந்தோணியார் ஆசியுடன்

## திரு. பர்ணபாஸ்

வெட்டுவெந்நி

### படியன்விளை அன்பியம்

நான் குந்நுவிளை, வெட்டுவெந்நியில் வசித்து வருகிறேன். என் அப்பா காலஞ்சென்ற அருத்தன் குஞ்சுபிள்ளை பூர்வகுடி வெட்டுவெந்நியை சார்ந்தர் 1945–களில் திருமுழுக்கு மூலம் திரு. ஏசுதாஸ் என்னும் பெயர் பெற்று திருமணத்தின் மூலம் கத்தோலிக்க முறையை தழுவினார். எனக்கு 1972–முதல் குருசடியோடு ஈடுபாடு ஏற்பட்டது. அதற்கு காரணம் என் அண்ணன் திரு. தேவதாஸ் 1972–ல் பல்சமய நண்பர்கள் கமிட்டியோடு சேர்ந்து குருசடிக்கு ஆற்றிய பணிகளில் நானும் ஒருசில சமயங்களில் இணைந்து செயல்பட்டு உள்ளேன். என் அம்மா திருமதி. மரிய தாசம்மாள் எங்களை திருத்துவபுரம் ஆலயத்துக்கு அழைத்து செல்வதும், கத்தோலிக்க முறையில் வளர்த்தும் வந்தார்.

1972–ல் இருந்து என் அண்ணன் திரு. தேவதாஸ் குருசடி வளர்ச்சியில் தந்தையர்களோடு இணைந்து செயல்பட்டு வந்தார். 1974–ல் குருசடி விரிவாக்கத்திலும் 1978–1979– முதல் திருவிருந்து, உறுதிபூசுதல் வகுப்பை துவங்கி, வெட்டுவெந்நி, பழவார் சுற்றுவட்டார பகுதியினரை இணைத்து 13.06.1981 திருத்துவபுரம் மூவொரு இறைவன் நடந்த விழாவில் 14 நபர்கள் முதல் திருவிருந்து மற்றும் உறுதி பூசுதல் எடுத்தனர். இறுதி கட்ட பயிற்சிக்கு அருட்சகோதரிகள் பங்கெடுத்தார்கள். 1992–வெள்ளப் பெருக்கில் சுரூபத்தில் கை விரல் உடைந்த போது என் அண்ணன் குழித்துறை பாலம் கட்டிய போது இத்தாலி, பெல்ஜியம் நாட்டை சார்ந்தார்கள் இச்சொரூபத்தை இவ்விடம் நிறுவியதாக கூறியது இன்றும் நிலையில் உள்ளது. 1972–களில் என் அண்ணனுடன் அன்னதானத்திற்கு உதவி செய்தேன். அண்ணனின் மறைவுக்கு பிறகு இன்றளவும் அப்பணியை தொடர்ந்து செய்து வருகிறேன். நானும் என் அப்பா, பெரியப்பா வழி வந்த அனைத்து குடும்பங்களும் அன்றிலிருந்து இன்று வரை குருசடியின் அனைத்து வளர்ச்சியிலும் பல பொறுப்புகளில் இருந்து செயல்பட்டு உள்ளோம் என்பது மட்டற்ற மகிழ்ச்சி.



### என்றும் புனிதரின் வழியில்

## திரு. M. கிறிஸ்டோபர்

வெட்டுவெந்நி

### தெக்குவிளை அன்பியம்

என் தாத்தா திரு. கபிரியேல் குளச்சலை சார்ந்தவர், கத்தோலிக்க குடும்பத்தை சார்ந்த என் அப்பா திரு. மத்தியாஸ் 1943–ல் கரவிளாகத்தில் வந்து வாழ்ந்து வந்தார். 1963–ல் வெட்டவெந்நிக்கு குடிபெயர்ந்தார். 1972–களில் பல்சமய நண்பர் குழுவில் இடம் பெற்று, குருசடியின் வளர்ச்சியில் பங்குப் பெற்றார். அன்றிலிருந்து எனக்கும் குருசடி மீது தொடர்பு ஏற்பட்டது. 1978–1979–ல் திருவிருந்து வகுப்பில் கலந்து கொண்டு 1981–ல் திருவிருந்து, உறுதிபூசுதல் பெற்றேன். பங்கு அருள்பணி பேரவை, வின்செண்ட் தே பால் சபை, ஆலயத்தில் பணியாளர் என ஒரு முழு நேர பணியாளராக பல வளர்ச்சி பணிகளில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி.



## திரு. சி. கிறிஸ்துராஜ்

பந்தல்விளை

### கண்ணக்கோடு அன்பியம்

இப்பகுதியின் பூர்வகுடி மக்களாகிய என் தாத்தா அமரர். திரு. மனுவேல் அவர்கள் தனது திருமணத்தின் போது 1880–களில் அதிருமுழுக்கு பெற்று கத்தோலிக்க முறையை தழுவினார். அதனைத் தொடர்ந்து இப்போது நாங்கள் பல குடும்பங்களாக வெட்டுவெந்நி பங்குத்தளத்தில் வாழ்ந்து வருகிறோம் என்பதில் பெருமகிழ்ச்சி. எனது தாத்தாவின் வாரிசுகளானவர்கள் திருமதி. அன்னமரியாள், திருமதி. மரியம்மா, திரு. கபிரியேல், திரு. சிங்கராயன் மற்றும் திரு. ஆபிரகாம். இவர்களில் திரு. சிங்கராயன் அவர்களது மூத்த மகன் நான். நான் 1987–ஆம் ஆண்டு அமைந்த வளர்ச்சி கமிட்டியில் துணைச் செயலாளராக செயல்பட்டதுடன், 1989 முதல் சுமார் 18 வருடங்கள் மறைக்கல்வி மன்றத்திலும், ஏறக்குறைய 13 வருடங்கள் கிராம முன்னேற்ற சங்கத்திலும், இரண்டு முறை அடித்தளம் முழு வளர்ச்சி சங்க பொருளாளராகவும், ஐந்து வருடங்கள் பங்கு நிதி குழுவில் தணிக்கை குழு உறுப்பினராகவும், ஒரு முறை சிறப்பு நிதிக்குழு உறுப்பினர் என பல தளங்களில் நம் பங்கிற்காக செயலாற்ற வாய்ப்பு தந்த இறைவனுக்கு நன்றியை உரித்தாக்குகின்றேன்.



## திரு. A. ராஜசேகர்
பந்தல்விளை

### கண்ணக்கோடு அன்பியம்

67 வயதாகிய C. பேபி ஆகிய நான் பூர்வீகமாக BOC தெரு, சிவ கண்டான்விளை, மார்த்தாண்டத்தைச் சேர்ந்தவள். என் திருமணத்தின் மூலம் கத்தோலிக்க கிறிஸ்தவத்தை தழுவினேன். என் கணவர் திரு. V. மரியதாஸ், களப்பாறை காப்புக்காட்டை பூர்வீகமாகக் கொண்ட கத்தோலிக்க கிறிஸ்தவர். 1945– இல் அவருக்கு ஏற்பட்ட உடல்நல குறைவால் சிவக்கண்டன் விளையில் அவரின் ஒன்றுவிட்ட பார்வதியம்மா என்ற பாட்டியிடம் வந்து மருத்துவம் பார்த்து, இங்கேயே தங்கி இருந்து பயின்று வந்தார். இருவரும் குருசடியில் வணக்கம் செலுத்தி வந்தாலும் 1980–களில் முழு ஈடுபாடு ஏற்பட்டு அனைத்து வளர்ச்சி பணிகளிலும் ஈடுபட்டார். முதல் வளர்ச்சிக்குழு, பங்குப்பேரவை, சிறப்பு நிதிக்குழு, வின்செண்ட் தே பவுல் போன்றவற்றில் சிறப்பாக செயல்பட்டார். இன்றளவும் எனது குடும்பத்தினர், நம் ஆலயத்தின் வளர்ச்சியில் பங்காற்றுகின்றனர் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.



## திருமதி. C. பேபி என்ற C. மரிய செல்வி
சிங்கிளேயர் தெரு, கண்ணக்கோடு

### தெங்கன்குழிவிளை அன்பியம்

நான் பந்தல் விளையில் வசித்து வருகிறேன். 1880– களில் பூர்வீக இந்துவாக இருந்த எங்கள் குடும்பம், என் தந்தை அமரர் மனுவேல் திருமணத்தின் மூலம் கத்தோலிக்க கிறிஸ்தவராக மாறினார். என் அப்பா திரு. ஆபிரகாம், அண்ணன் A. அம்புரோஸ் ஆகியோர் வளர்ச்சி குழுவில் பங்கெடுத்து செயல்பட்டு வந்தனர். 1984–இல் குருசடியை சுற்றி உள்ள நிலம் வாங்கிய போது நன்கொடை கொடுத்த குடும்பங்களில் ஒன்று என்பதில் பெரும் மகிழ்ச்சி. என் அண்ணன் A. அம்புரோஸ் 1982 வளர்ச்சி கமிட்டியில் பங்கெடுத்து முதல் அன்னதான குழுவின் பொறுப்பாளராக செயல்பட்டார். பல ஆண்டுகள் சமபந்திக்கு பொறுப்பாளராக இருந்துள்ளேன். தற்போதைய பங்கு பேரவையில் தோட்ட பராமரிப்பு பொறுப்பாளராக செயல்படுவதில் மட்டற்ற மகிழ்ச்சி.



## செல்வி. ஆனிலெட்
பழவார்

68 வயதாகும் நான் 1979–ஆம் ஆண்டு Amla தேவதாஸ் அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட முதல் திருவிருந்து, மறைக்கல்வி வகுப்பின் போது இணைந்து 1980–முதல் மறைக்கல்வி வகுப்பிலும் பயின்றேன். தொடர்ந்து ஜெபமாலை சொல்வது, அன்னதான கஞ்சி தயார் செய்ய உதவி செய்வது, ஆலயத்தை சுத்தம் செய்வது போன்ற பணிகளை செய்து வந்த நிலையில் திருத்துவபுரத்திலிருந்து உதவிக்கு வரும் அருட்சகோதரிகளிடம் பீடம் அலங்கரிக்கும் வேலையை கற்று இன்றுவரை அந்தோணியாரின் ஆசியால் திறன்பட செய்து வருகிறேன். தற்போது நம் பங்கில் இப்பணிகளை பயின்று அர்ப்பணிப்போடு செய்பவர்கள் பலர் இருக்கிறார்கள். ஏறக்குறைய 42 ஆண்டுகள் ஜெபமாலை, பீடம் அலங்கரித்தல், கோயிலை சுத்தம் செய்தல் என்று கோயிலாயி பணியை செய்ய எனக்கு கிடைத்த இந்த பெரும் பாக்கியத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி.



## திரு. மரிய சிசில்
சாலியன் விளை, வெட்டுவெந்நி

1970–இல் இருந்து வெட்டு வெந்நியில் தொடர்பு இருந்தாலும் 1973–இல் தான் நட்டாலம் குடும்ப வீட்டில் இருந்து இங்கு குடியேறினேன். அந்தக் காலகட்டத்தில் உபதேசியார் தேவதாஸ் மற்றும் தனிஸ்லாஸ் ஆகியவர்கள் தீவிரமாக கோயில் வேலைகளில் ஈடுபடுவதை காண முடிந்தது. நான் போக்குவரத்து கழகத்தில் பணி செய்ததால் காலை, மாலை நேரங்களில் குருசடி சென்று ஜெபம் செய்யவும், அங்கு வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடிந்தது. குருசடியை சுற்றியுள்ள நிலத்தை வாங்கினால் தான் ஏதாவது முன்னேற்ற பாதையில் செல்ல முடியும் என்று அனைவரும் உறுதி எடுத்து, அதை வாங்க உண்ணி என்று அழைக்கப்படும் ராதாகிருஷ்ணன் நாயரை நான் தொடர்பு கொண்டேன். 1981– இல் ஆரம்பித்த

தொடர்பு 1984–இல் இந்த இடம் வாங்க உதவியது. குருசடியை சுற்றிய 12.5 சென்ட் நிலம் வாங்க ஊர் மக்களாகிய நாங்கள் 10,000 ரூபாய் பிரித்து கொடுத்தோம். அதில் 2000 ரூபாய் நான் தனியாக பிரித்துக் கொடுத்து, வளர்ச்சி குழுவில் ஆரம்பித்த பயணம் முதல் ஆலய விரிவாக்கம், செம்பருத்தி வடிவ குருசடி அமைத்தல், தற்போது வழிபடும் ஆலயம் கட்டுமானம், பணியாளர் இல்லம் கட்டியது என மட்டுமின்றி ஒரு சென்ட் நிலம் கூட இல்லாத நிலையில் இருந்த நிலை மாறி ஏழு ஏக்கர் நிலம் சொந்தமாக கொண்டுள்ளது வெட்டுவெந்நி திருத்தல பங்கு என்று நினைக்கும் போது உள்ளம் பூரிப்படைகிறது. இந்த புண்ணிய பூமியின் மகிமையே எப்போது பார்த்தாலும் 25 நபராகிலும் இருந்து ஜெபம் செய்து கொண்டிருப்பது தான். செவ்வாய், வெள்ளி கூட்டம் அதிகம் வருவதால் மழை, வெயிலிலிருந்து பக்தர்களுக்கு பாதுகாப்பாக முன்பக்கமும் அரங்கமும் ஷெட்டு அமைத்தோம். இவ்வாறு வளர்ச்சி பாதையில் வெட்டுவெந்நி திருத்தல பங்கு பயணிக்க மனமார்ந்த வாழ்த்துகள்.







ஆயர் ஆரோக்கிய சாமி அவர்களை Adv. சாந்தகுமார் வரவேற்கும் காட்சி



1976–வரை ஒளி வீசிக் கொண்டிருந்த விளக்குக்கல் அதன் பின் புனித நீர் தாங்கிய கல்லாக இருந்தது.



பாண்டி மண்டல

மான வீர நாடு



DIRECTORY

OF THE

DIOCESE OF KOTTAR

The Directory Committee



செந்தீ நடராசன்
நிர்வாக இயக்குநர்
செம்பவளம் ஆய்வுத்தளம் அறக்கட்டளை
122, 'செந்தீ' கல்படித்தெரு,
நாகராசர்கோவில் அருகில்,
நாகர்கோவில் - 629 001.
பேச : 94421 38856, [redacted]
e-mail : chenthee@yahoo.com

Research Areas : FOLKLORE, SOCIO - ANTHROPOLOGY, EPIGRAPHY, ICONOGRAPHY...

சிலுவைக் கல்வெட்டு

இடம் – குமரி மாவட்டம், மார்த்தாண்டம் ,வெட்டுவென்னி அந்தோணியார் தேவாலயம், குருசடி

| | கண் படி - EYE COPY | நேர் வாசிப்பு |
|---|---|---|
| 1 | ௲அளரு | 183 |
| 2 | யருவ | 3 வருடம் |
| 3 | சபபடம | சப்பிட்டம் |
| 4 | பாா்மாதம் 17 திஙக கிளமை | பார் மாதம் 17 தியதி திங்க கிளமை |
| 5 | பகலயக மணிககுவெஙக | பகல் 11 மணிக்கு வெங்க |
| 6 | ருாரிலிருககும சவரிமுது | ரூரிலிருக்கும் சவரிமுத்து |
| 7 | மகன சவரிமுது கிரிஸ து | மகன் சவரிமுத்து கிரிஸ்து |
| 8 | வின கிருபையால மரண | வின் கிறுபையால் மரண |
| 9 | மடைநதா | மடைந்தா |
| 10 | ன வயசு 22 | ன் வயசு 22 |
| 11 | மெலவாசி | மேல வாசி |
| 12 | ககிறவாகள | க்கிறவர்கள் |
| 13 | யிவனுடை | யிவனுடை |
| 14 | ய ஆறுமது | ய ஆற்றுமத்து |
| 15 | ககாக பறம | க்காக பறம |
| 16 | ணடலமும (உ* | ண்டலமும் (உ |
| 17 | சசரிககவும)* | ச்சரிக்கவும்) |

கல்வெட்டுச் செய்தி – 1833 -ம் வருடம் செப்டம்பர் மாதம் 17 ந் தேதி திங்கள்கிழமை பகல் 11 மணிக்கு வெங்கரூரில் இருக்கும் சவரிமுத்து மகன் சவரிமுத்து கிருஸ்துவின் கிருபை மரணமடைந்தான். வயசு 22. மேலே வாசிப்பவர்கள் அவனுடைய ஆத்துமத்திற்காக பரமண்டலமும் (உச்சரிக்கவும்)

* திருவிதாங்கோடு அரசர் சுவாதி திருநாள் (1829 – 1847) அதற்குமுன் ராணி பார்வதிபாய் (1815 - 1829)

* எழுத்து தெளிவில்லை

பதிவு எண்: 954/10

செந்தீ நடராசன்
18/05/2022.

Chenthee natarajan, mg. director, chembavalam research base trust,
122, kalpadi st, near nagaraja temple, nagercoil - 629 001. Cell : 94421 38856, [redacted]




1989–விரிவாக்கத்துக்கான கல்




2007 புதிய விரிவாக்க ஆலயத்துக்கான கல்






1915–களில் வேலை நடைபெற்ற
பழைய பாலம்



18–ம் நூற்றாண்டுகளிலிருந்து வெட்டுவெந்நி
குழித்துறையும் இணைத்த ஆற்றுப்பாலத்தின்
தற்போதைய நிலை

# இணைந்து பயணிக்கும் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப்பங்கு





**ம. ஜோசப் கிரேஸியஸ்,**
துணைத்தலைவர், பங்கு அருட்பணி பேரவை

## முன்னுரை

சிறு சுடராய்த் தோன்றி நானிலத்தை நன்மைகளால் நிரப்பிக் கொண்டிருக்கும் வெட்டுவெந்நி தூய அந்தோணியார் திருத்தலப் பங்கில், திருப்பலித் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவு பெற்று பொன்விழா ஆண்டு தடம் பதிக்கும் இவ்வேளையில் பாசமிகு அருட்தந்தையர்கள், பங்கு மக்கள் பக்தர்கள் அனைவருக்கும் பொன்விழா நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூபிலி ஆண்டு 1972–2022 வரை கடந்து வந்த பாதையைச் சிந்திக்கவும், கடந்து செல்லவிருக்கின்ற வழிகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும் இறைவன் தரும் ஒரு வாய்ப்பு. இத்தருணம் வரை நாம் அனைவரும் இணைந்து பயணித்ததால் எண்ணிலடங்கா நன்மைகளையும், அபார வளர்ச்சியையும் பெற்றுள்ளோம்.

## இணைந்த பயணம்:

இணைந்த பயணம் என்பது கூட்டுப்பொறுப்புடன் முன்னேறிச்சென்று, கடவுளின் கொடைகளை அனைவரும் துய்ப்பதற்கான அணுகு முறையாகும். பங்கின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை இலக்காகக் கொண்டு அதனை அடைவதற்கான திட்டங்கள் பல வகுத்து அனைவரையும் ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டும். அவற்றைத் தேர்ந்து தெளிதலிலும், முடிவுகள் எடுத்தலிலும் இணைந்து பயணிப்பது என்பது சவால் மிக்கது. துணிச்சல் இருந்தால் மட்டுமே இவற்றில் இணைந்து பயணிக்க முடியும்.

## இயேசு நமக்கு முன் மாதிரி

நமது பங்கிலுள்ள இறைமக்கள் உப்பாக, புளிக்காரமாக செயல்படக்கூடியவர்கள், இதனால் தான் இங்குவரும் மக்கள் சமயம், சாதி, மொழி, இவற்றில் வேறுபட்டவர்களாய் இருந்தாலும் கல்வி, பொருளாதாரம் வேலைவாய்ப்பு முதலியவற்றில் பல ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் எல்லோருடனும் இணைந்து பயணம் செய்கின்ற பரந்த மனப்பான்மையும் வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர்ந்த உள்ளமும் நாம் பெற்றுள்ளோம். எல்லோரும் நிறைவாக வாழ வேண்டும். அதற்கு எதிரான அனைத்து அநீதிகளும், ஆதிக்கங்களும், ஏற்றத்தாழ்வுகளும் ஒழிக்கப்பட வேண்டும். இயேசு தனித்து செயல்பட்டவர் அல்லர் தன்னை முன்னிலைப்படுத்தியவரும் அல்லர்.

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வே” என்றார் பாரதியார். நமது பங்கிலுள்ள மறைக்கல்வி முதல் திருத்தூது கழகங்கள் வரை அதிலுள்ள அனைத்து உறுப்பினர்களும் இணைந்துசெயல்படுகின்றோம். இந்நிலை என்றும் தொடர வேண்டும். தனிமரம் தோப்பாகாது' தனிமனிதமனால் சாதிக்க முடியாதவற்றை இணைத்து செயல்பட்டால், நமது இணைந்த கூட்டுமுயற்சியால் சாதிக்க முடியும். 2017– 2018 – ல் நமது பங்கின் அசாதாரண சூழ்நிலையில் இணைந்து பயணித்ததால் சில தெளிவுகள் கிடைத்தன என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. நாம் அனைவரும் இயேசுவில் இணைந்தவர் ஒன்றானவர் என்பதை இயேசு “நானே திராட்சை செடி; நீங்கள் அதன் கொடிகள்” என்றார்.

### பயணத்தின் படி நிலைகள்:

1992 – ல் ஏற்பட்ட பெருவெள்ளம், 2004 – ல் ஏற்பட்ட சுனாமி, 2014 – ல் ஏற்பட்ட ஒகிப்புயல், 2019–2021 கொரோனா காலகட்டம் இச்சமயங்களில் நமதுபங்கு மக்கள் சாதி, மதம் இனம் கடந்து அனைவருக்கும் தாராள மனதுடன் செய்தபண உதவி, பொருளுதவி, தியாக மனப்பான்மையுடன் களம் இறங்கி செயல்பட்டது இவையனைத்தும் இணைந்த பயணங்களே ஆகும்.

நமது பங்கில் ஏழை மாணவர் கல்வித்திட்டம், ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டம், மருத்துவ உதவி திட்டம், ஆண்டுதோறும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு 'வாழும் குடில்' திட்டம் இவ்வாறு நலிந்தோர் மீது நாம்காட்டும் கரிசனையும் இணைந்து பயணத்தின் வெளிப்பாடே ஆகும். மறைமாவட்டத்தில் ஒரு பங்கு அதன் வருவாயில் 10% ஏழைகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று வரையறை இருக்கும்போது நமது பங்கு 20% ஒதுக்கியுள்ளோம் என்பது இணைந்த பயணத்தின் உயர்ந்த படியே ஆகும்.

இணைந்து பயணிக்க மன உறுதி வேண்டும். மன உறுதி என்ற பண்பு எதையும் சாதிக்கும் தன்மையுடையது. முயற்சி என்னும் படிக்கட்டில் பயணிக்க வேகமும், விவேகமும் தேவை. விவேகமாயச் சிந்தித்து, வேகமாகச் செயலாற்றினால் வெற்றிக்கனியை எளிதில் பெறலாம். உறுதியான வேர்கள் உடைய மரங்கள் பொதுவாக எந்தப் புயலுக்கும் சாய்ந்து விழுவதில்லை.

### வளர்ச்சிப்பாதையில் :

விட்டுக்கொடுத்தலும், வினா எழுப்புதலும், கலந்துரையாடலும் கருத்துப்பரிமாற்றமும் எந்தப்பங்கு சமூகத்தில் இருந்தாலும் அதுவளர்ச்சியை நோக்கி நடைபோடுகிறது எனலாம். நாமும் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்ட தலைமையுடன் இணைந்து பயணித்தால் சாதனைப் படைப்போம். சோதனைகள் வரும் நேரத்தில் மன ஆற்றலும், மனித ஆற்றலும் கொண்ட உறுதியுடன் இணைந்து செயல்படுவோம்; வெற்றி நிச்சயம். வெற்றியைப்பெற எதிர்வரும் இடர் பாடுகளை இணைந்து தகர்த்தெறிந்து, வரும் வாய்ப்புகளைக் கண்டறிந்து சரியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மும்மதமும் சங்கமிக்கும், இயற்கை எழில் கொஞ்சும் தாமிரபரணி ஆற்றங்கரையில் இணைந்து பயணிக்கும் நாம் இயற்கை நமக்குத் தந்த அழகிய நிலம், நீர், காற்று இவற்றைப்பாதுகாப்பதோடு இயற்கை வளங்களையும் பயன்படுத்திப் பயணிப்போம். அடுத்தத் தலைமுறையும் அனுபவிக்கட்டுமே! வழிகாட்டுவோம்.

### முடிவுரை:

ஆன்மீக பொருளாதார வளர்ச்சிகளைக் குறிக்கோளாகக் கொண்டு பயணித்து வரும் நாம் வேற்றுமை களைந்து ஒற்றுமையுடன், அன்புநீர் பாய்ச்சி, நற்பண்புகளாம் எருவிட்டு இறையாட்சியின் மதிப்பீடுகளை மண்ணில் மலரச் செய்வோம் நம் திருத்தலப் பங்கின் பெருமையும், தூய அந்தோணியாரின் புகழும் பாரெங்கும் பரவட்டும். ஏனைய மறைமாவட்டப் பங்குகளுக்கு நமது திருத்தலப்பங்கு வழிகாட்டியாய் அமையட்டும் இணைந்த பயணத்தைத் தொடர்வோம். அதற்காக புனிதரின் பரிந்துரையும் இறைவனின்ஆசீரும் என்றும் நம்முடன் இருந்து, வழிகாட்டட்டும் !



## மழையின் வருகை

கொளுத்தும் வெயில் சட்டென தணிந்தது,
வானம் இருண்டது, வாடைக்காற்று வீசியது
ஆமாம்! அது மழையின் வருகை
கண்ணீர் துளிபோல் நீர்துணி மண்ணில் விழ
மண்ணின் வாசம் பூமியெங்கும் நெகிழ வருகின்றான் !
இதோ வருகின்றான் ! உழவனின் கவலை தீர்க்க

-தீபா
சாலியன் விளை அன்பியம்

# விவிலியத்தில் பெண்கள்






M.S. பிளாரன்ஸ் விஜிலா

இறைநிலையானது எத்தகைய ஆற்றலை பெண்களுக்குக் கொடுத்திருக்கிறது என்றால் உலகில் மனிதனை உருவாக்கி, சுமக்கும் சக்தி பெண்களுக்குத் தான் கிடைத்துள்ளது. இறைநிலைக்கு அடுத்தபடியாக போற்றப்படக் கூடியவள் பெண்தான். பெண் இனத்திற்கு எவ்வாறு மதிப்புக் கொடுக்கின்றோமோ அதற்கேற்பதான் நமது சமூக வாழ்வு வளர்ச்சியடையும். பழைய ஏற்பாட்டுக் காலத்திலும் சரி, புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் சரி, பெண்கள் ஒரு இரண்டாம் குடிமக்களாகத்தான் கருதப்பட்டார்கள். பாவம் செய்தவர்கள்தான் பெண்ணாகப் பிறப்பார்கள் என்றும் கருதினார்கள். இந்நிலையிலும் தங்கள் பெயர்களைச் சரித்திரத்தில் இடம்பெறச்செய்த பல பெண்கள் விவிலியத்தில் காணப்படுகிறார்கள். எல்லோரைப் பற்றியும் இங்கு குறிப்பிட இயலாவிட்டாலும் சிலரைப் பற்றிப் பார்ப்போம்.



**முதல் பெண் நீதிபதி :** தெபொராள் முதல் பெண் நீதிபதியாக இருந்து மக்களுக்கு நீதி வழங்கினார். கடவுளின் வாயாக இருந்து முதல் பெண் இறைவாக்கினராகவும் செயல்பட்டவர். தெபொராள் என்பதற்கு தேனீ என்று பொருள். இவள் தேனீயைப் போன்று எப்பொழுதும் சுறுசுறுப்பாக செயல்படக் கூடியவள். ஒரு நல்ல குணசாலி, தைரியமானவள். 20 ஆண்டுகளாக இஸ்ராயேல் மக்கள் கானானேயருக்கு அடிமைகளாக இருந்தபோது சிசெரா ஒருபெண்ணின் கையால் தான் கொல்லப்படுவார் என்று வாக்குச் சொன்னவர். இஸ்ரயேல் மக்களிடையே பலம் வாய்ந்த ஆண்கள் பலர் இருந்தும் ஒருவரும் கானேயரை எதிர்க்க, படையில் தலைமை ஏற்க தயாராக இல்லை. அப்பொழுது தெபொரோள் பாராக்குடன் சேர்ந்து இஸ்ராயேல் படையைத் தலைமை ஏற்று வெற்றி பெற்ற இரும்புப்பெண். ஒரு தாய் தன்பிள்ளைகள் தவறு செய்யும் போது திருத்துவது போல், இஸ்ரயேல் மக்களை திருத்தி பாரபட்சமின்றி நீதி வழங்கியவர். ஒரு பெண்ணுக்கு இது தேவையா? என எத்தனையோ பேர் தெபொராவை இகழ்ந்திருக்கலாம். ஆனால் தீமைகளைக் களைய விழித்தெழவேண்டும்



**விவிலியத்தின் சிங்கப்பெண் :** – 'எஸ்தர்' என்றால் நட்சத்திரம் என்று பொருள். தன் நாட்டுமக்களுக்காக தியாக உள்ளம் கொண்டு செயல்பட்ட பெண் எஸ்தர். 127 நாடுகளிலுள்ள மொத்த யூதர்களையும் அழிக்க ஆமான் அரசராகிய அர்த்தக் என்பவன் சாஸ்தாவிடமிருந்து ஒப்புதல் பெற்றான். இதை அறிந்த மொனதக்கா மன்னனின் கட்டளை நகலை எஸ்தரிடம் கொடுத்து யூதமக்களை காப்பாற்றச் சொல்கிறான். எஸ்தர் தான் ஒரு யூதப்பெண் என்று அதுவரை ஒருவரிடமும் சொல்லவில்லை. அரசன் அழைக்காமல் அவனிடம் சென்றால் எந்த பேரழகியான அரசியாக இருந்தாலும் கொல்லப்படுவர், என்பதை எஸ்தர்

அறிந்தும் தன் யூத மக்களுக்காக ராஜ உடையணிந்து சென்று அரசனுக்கும் ஆமானுக்கும் விருந்து வைக்க ஒப்புதல் பெறுகிறாள். 2– வது விருந்தில் இருந்த அரசனிடம் யூதமக்களுக்காகப் பரிந்து பேசி அவர்களைக் காப்பாற்றி சதிகார ஆமானைக் கொல்ல செய்கிறாள். இதுவரை பயந்த எஸ்தர் சிங்கப்பெண்ணாக மாறினாள். எஸ்தரின் ஜெபம் துணிவு, நாட்டு மக்களுக்காக தன்னை அர்ப்பணித்த விதம் மிகவும் பாராட்டத்தக்கது. நாமும் எஸ்தரைப் போல ஞானமுள்ள பெண்ணாவோம். நமக்கு இறைவன் தந்துள்ள கல்வி, பொருளாதாரம், பதவி, வசதி, வாய்ப்புகள் இவற்றை மற்றவர்களுக்காகவும் பயன்படுத்துவோம்.



**நல்ல மருமகள் :-** ரூத், நிலையான எண்ணம் கொண்ட பெண்மணி மனித வரலாற்றின் துயரக் கட்டங்களையெல்லாம் கடவுள் வெற்றி மகுடமாக மாற்றித் தருவார் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெண்மணி. எலிமலேக் நகோமி தம்பதியருக்கு இரு மகன்கள், ஒருவன் மக்லோன், மனைவி பெயர் ஓர்பா. மற்றவன் கிலியோன் மனைவி ரூத். இந்தக் குடும்பம் பிழைப்பிற்காக மோவாபு நாட்டிற்கு சென்றபோது தந்தையும் இரு மகன்களும் இறக்க மாமி நகோமி தன் இரு மருமகள்களையும் அவரவர் வீட்டிற்கு செல்க என்கிறாள். ரூத் செல்ல மறுக்கிறாள். அடுத்த வேளைச் சோற்றுக்கு வழியில்லாத நகோமியிடம் நான் உம்மை விட்டு பிரிந்து செல்லமாட்டேன் என்கிறாள். வயதான மாமியாரை கரிசனையோடு கவனித்தாள். வயல்களில் குனிந்து கதிர்களைப் பொறுக்கி இருவர் வயிற்றையும் நிரப்பினாள். குனிந்து தானியம் பொறுக்கியதால் அவள் அவமானமாகத் தலைகுனியவில்லை. தன்மானத்தை இழக்கவில்லை. ஒரு வேளை மானம் மரியாதைக்கு சவாலாக இருந்திருக்கலாம். ஆனால் அவள் மாமியாரை மதித்து அவர் சொல்லைக் கேட்டதால் ஓர் அறுவடைக் காலம் முடியும் முன்பே போவாஸ் மூலமாக அவளுக்கு ஒரு குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. ரூத்தின் கொள்ளுப்பேரன் தான் தாவீது அரசன். இந்த தாவீது வம்சத்தில் தான் இயேசு பிறந்தார். இன்றைய சமுதாயத்தில் பெற்ற தாய் தந்தையரையே வயதான காலத்தில் வீட்டில் வைத்து பராமரிக்காமல் முதியோர் இல்லங்களில் தள்ளும் அவலநிலையில், மாமனார் மாமியாரை எப்படி கவனிப்பார்கள் சிந்தியுங்கள் ரூத்தின் மனநிலை நம்மிலும் மிளிரட்டும்.

## திறமையுள்ள பெண்மணிகள்:-

அபிகாயில் : அபிகாயில் என்றால் மகிழ்ச்சிக்கு உரியவள் என்பது பொருள். மகாபுத்திசாலியான பெண். கணவன் நாபால் மிகப்பெரிய பணக்காரன். அத்துடன் 24 மணிநேரமும் போதையில் மிதப்பவன்.



தாவீது அரசனின் வேலையாட்கள் நாபாலிடம் சென்று உதவிக்கேட்க அவன் அவர்களை உதாசீனப்படுத்துகிறான். இதைக் கேள்விப் பட்ட அபிக்காயில்தன் கணவருக்காக தாவீதிடம் மன்னிப்பு கேட்டது மட்டுமின்றி, புத்திசாலிதனமாக தாவீது தன் கணவரிடம் கேட்டதற்கும் மேலான பொருட்களை தாவீதுக்கு அனுப்பி வைக்கிறாள். தன் கணவரின் குற்றத்தை தன் குற்றமாக உணர்கிறாள். இக்கட்டான அந்தச் சமயத்தில் என்னசொல்ல வேண்டும் என்பதைஉணர்ந்தவள். ஞானமும், நிதானமும், நாவடக்கமும் உடையவள். ஒரு நல்ல மனைவி தன்னுடைய நன்னடத்தையால் கணவனை காப்பாற்றுகிறாள். ஆனால் இன்று நமது அன்றாட வாழ்வில் அவசர வார்த்தைகளால், அவசர புத்தியினால், அனுப்பும் குறுஞ்செய்திகளால் எத்தனையோ உறவுகளை உடையச் செய்கிறோம். இந்நிலை மாறி நமது நண்பர்கள், அருகில் வாழ்வோர் குற்றங்களை மன்னித்து வாழ்வோம்.

## குறிப்பறிந்து உதவும் பெண் :-

ரெபேக்காள் : – ரெபேக்காள் ஈசாக்கின் மனைவி. இவள் இரக்க குணம் உடையவள் உபசரிக்கும் குணம் உடையவள், கடின உழைப்பாளி, கடவுளுக்கு அஞ்சும் பெண் ஆபிராம் தன் மகனுக்கு ஏற்றத்துணையைத் தேட எலியேசரை அனுப்பிய போது முன்பின் அறியாத அந்நியனாகிய எலிசேயர் ரெபாக்காளிடம் சென்று தண்ணீர் கேட்டபோது எலியேசருக்கு தண்ணீர் கொடுத்தது மட்டுமல்ல. அவர் கேட்காமலேயே அவருடைய 10 ஒட்டகங்களுக்கும் தண்ணீர் இறைக்கின்றாள். பிறரை உபசரித்து குறிப்பறிந்து உதவிச் செய்ததால் ஆபிரகாம் தன்மகனுக்கு அவளை மணம் முடிக்கிறார். ஈசாக், ரெபேக்காள் கணவன், மனவை என்பதைவிட்டு நல்ல நண்பர்களாக விளங்கினார்கள். ரெபேக்காள் ஒரு



பிள்ளையை பெற்றெடுக்க முடியாதவள் என அறிந்தும், தன் அப்பாவுக்கு ஒன்றுக்கு மேல் மனைவி இருந்தும் தன் மனைவியை கைவிடாமல், அவளுக்காக இறைவனிடம் ஈசாக் வேண்டி இரட்டைப் பிள்ளைகளைப்பெற்றுக் கொண்டார். ரெபேக்காளும் தன் கணவரை அதிகமாக நேசித்தாள். தன் கணவரிடம் அன்பு, பணிவு போன்ற பண்புகளை கொண்டு வாழ்ந்தார். நாமும் கடவுள் நம்பிக்கை, பணிவு உபசரித்தல், தாராளக்குணம் உடையவர்களாக வாழ்ந்து நல் உறவுள்ள கணவன் மனைவியாக வாழ்வோம்.

## இஸ்ரயேல் இனத்தை கட்டியெழுப்ப தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் :- லேயாள்

லாபானுக்கு 2 மகள்கள் மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். லேயாள் கூச்சப்பார்வையும் அழகு அற்றவளுமாக இருந்தாள். ராகேல் பேரழகி. யாக்கோபு தன் மாமன் லாபானிடம் 7 வருடம் வேலைசெய்து கூலியாக 2 வது மகனாகிய ராகேலைத் திருமணம் செய்து கேட்கிறார் அவரும் சம்மதிக்கிறார். ஆனால் திருமண நாளில் மூத்தமகள் லேயாளை மணமுடித்து வைக்கிறான். அன்றைய வழக்கப்படி முழுமுக்காடு அணிந்திருந்தால் யாக்கோபும் இதனை அறியவில்லை. பின் தன் மாமனிடம் நியாயம் கேட்க அவர் திரும்பவும் 7 வருடம் வேலை செய்தால் ராகேலைத் திருமணம் செய்து கொடுப்பதாகக் கூற அதன்படியே வேலை செய்து ராகேலையும் மணமுடிக்கிறார். யாக்கோபு லேயாளை அற்பமாக எண்ணினான் ராகேலை பெரிதும் நேசித்தான். லேயாள் எதிர் நடவடிக்கை எதுவுமின்றி தன்



கணவரின் அன்புக்காக ஏங்கி காத்திருந்தாள். இறைவன் மீது மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்தாள். இதன் பயனாக லேயாள் மீது கடவுளின் கருணை வெளிப்பட்டு லேயாள் யாக்கோபுக்கு ஒன்றல்ல, இரண்டல்ல, 6 மகன்கள் ஒரு மகளையும் பெற்றெடுத்தார். இஸ்ரயேல் குலத்தில் பாதிபேரை உருவாக்கிய பெருமையை இறைவன் அவளுக்குக் கொடுத்தார். ராகேல் குழந்தைப் பேறு அற்று காணப்பட்டாள். அதனால் லேயாள் மீது ராகேல் பொறாமைப்பட்டாள். பிறகு ராகேல் ஒருமகனை பெற்றாள். 2–வது குழந்தையைப் பெற்றெடுக்கும் போது அவள் இறந்து விடுகின்றாள். லேயாளின் 4–வது மகன் யூதாவின் வழிமரபில்தான் இயேசு பிறந்தார். இறைவன் தாழ்நிலையில் இருந்தவர்களைக் கண்ணோக்குகின்றவர். எழில் ஏமாற்றம்; அழகு அற்றுப்போகும், ஆண்டவரிடம் அச்சம் கொண்டு வாழும் பெண்ணே சிறந்தவள் என்பதை நாம் இதன் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## சிறந்த தாயாக விளங்கிய பெண் : அன்னா

அன்னா எல்கானாவின் மனைவி அவளுக்கு குழந்தையில்லாத காரணத்தால் 2–வது பெனீனாவை திருமணம் செய்கிறார். இவளுக்கு குழந்தைகள் உள்ளனர். ஆனால் எல்கானா தன்முதல் மனைவி மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தார். ஆண்டுதோறும் இவர்கள் சீலோவில் இருக்கும்

ஆலயத்திற்குச் சென்று பலி செலுத்துவர். அப்பொழுதெல்லாம் பெலீனா அன்னாவைத் துன்புறுத்தி வதைத்தாள். இதனால் அன்னா ஆண்டவர் திருமுன் சென்று அழுது புலம்பி தனக்கு ஒரு மகனைத் தந்தால் அவனை உமக்கு அர்ப்பணிப்பேன் என்று சொல்லி புலம்பிக் கொண்டிருந்தாள். இவள் புலம்புவதைக் கண்ட ஆலயக்குரு, ஏலி அவள் குடித்துவிட்டு புலம்புவதாக நினைத்து கடிந்து கொள்கிறார். உடனே அன்னா தன்னுடைய மனக்குமுறலை ஏலியிடம் கூறுகின்றாள். இதன் பிறகு கடவுள் அன்னாவிற்கு ஒருமகனைக் கொடுக்கிறார். அவருக்கு சாமுவேல் என்ற பெயரிட்டு பால்குடி பருவம் முடிந்தவுடன் ஏலியிடம் கொண்டு ஆண்டவருக்காக கையளிக்கிறார். திரும்பவும் கடவுள் அன்னாமீது இரக்கம் கொண்டு 3 மகன், 2 மகள்களைக்கொடுக்கிறார். அன்னா அல்கானா இருவரும் ஆண்டுதோறும் சாமுவேலைப்பார்க்கச் செல்வார்கள். தன் மகனை கடவுளுக்கு ஏற்ற வழியில் வாழப்பணித்தாள். நாமும் நமக்கு கடவுள் தந்த பிள்ளைகளை நல் வழியில் வாழப் பயிற்றுவிப்போம்.

### மானிடத்தின்தாய் : மரியாள்



இஸ்ரயேல் நாட்டில் பல பெண்கள் இருந்தாலும் அதில் மரியாள் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு இறைமகனைப் பெற்றெடுத்தவள். மரியாள் திருமணத்தை எதிர்நோக்கி இருந்த காலத்தில், வானதூதர் கபிரியேலின் செய்தி அவர்களுக்கு பயத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்திருக்கலாம். திடீரென ஒரு வாலிபப்பெண்ணிடம் இப்படிச் சொல்லும் போது எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். ஆனால் மரியாள் இறைவனின் சித்தத்திற்குத் தன்னை ஒப்புக் கொடுத்தார். ஒருபெண்ணாக மரியாள் பலருடைய பரிகாசத்திற்கு உட்பட்டிருப்பாள். ஒரு கன்னிப்பெண் திருமணத்திற்கு முன்பே கருவுறுதலால் ஏற்படக்கூடிய அவமானத்தைச் சகித்து, பொறுமையுடன் தாங்கினாள். தன்னை இறைவன் தேர்ந்தெடுத்தார் என்று மரியா ஒருபோதும் பெருமைப்படவில்லை. இறைமகன்தன்னிடம் பிறந்ததால் மட்டும் மரியாளுக்கு சிறப்பல்ல. இறைத்திட்டத்திற்கு 'ஆம்' என்று தன்னையே அர்ப்பணித்ததால்தான் மரியாளுக்கு சிறப்பு. கிறிஸ்துவுக்கு அடுத்து இந்த உலகிற்கு கிடைத்த மிகப்பெரியக்கொடை மரியாள். இறையாட்சி இம்மண்ணில் மலர, மானிடம் மகத்துவம் பெறநாமும் மரியன்னை காட்டிய வழிதடத்தில் நடக்க வேண்டும். மரியாள் போற்றப்படுவதன் மூலம் பெண்ணினம் தலைநிமிர்கிறது. பெண்ணியம் போற்றப்படுகிறது. சமூக கருத்தியல் ரீதியாகவும், சமயச்சடங்குகள், கலாச்சார பிற்போக்கு நிலைகள் ரீதியாகவும் பெண்களை அடிமைப்படுத்தியிருந்த காலகட்டத்தில் எதிர்சிந்தனைப் பெற்று ஆண், பெண் சமத்துவ இறையாட்சி மலர, மலர்ந்த மரியாளின் புரட்சிகர இலட்சிய வாழ்வு நம்மை நாளும் பற்றிக்கொள்ளட்டும் மக்கள் பணி நம்மில் மையங்கொள்ளட்டும் சமூக மாற்றம் நம்மால் நிகழட்டும்.

### சமாரியாவின் முன் மாதிரிப்பெண் :

சமாரியப்பெண் மதிய நேரத்தில் யாரும் வராத நேரத்தில் தண்ணீர் எடுக்க வருகின்றாள் எனில் அவள் அந்த சமுதாயத்தால் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருப்பாள் என்பதை நம்மால் அறிய முடிகிறது. இதனால்தான் இவள் தன்னை யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற நோக்கத்துடனே மதிய நேரத்தில் வந்திருப்பாள் சமாரியர் என்பவர் ஒரு கலப்பு இனம். இயேசுவின் காலத்தில் அவர்கள் தீண்டதகாதவர்கள். யூதர்கள் சமாரியரிடம் பேசினால், பழகினால் பாவம் என்று கருதப்பட்டது. இதை அறிந்தும் இயேசு அவளிடம் பேசுகிறார். அந்தக் காலத்தில் ஒரு திருமணமான பெண்ணிடம் அடுத்த ஆண் ஒருவர் பேச வேண்டுமெனில் அவள் கணவர் அவளுடன் இருக்க வேண்டும் அதனால் இயேசு அப்பெண்ணிடம் அவளது கணவனை



அழைத்துவரக் கூறுகிறார். அதற்கு அவள் தனக்கு கணவர் இல்லை என்றவுடன் உனக்கு 5 கணவர்கள் இருந்தார்கள் ஆனால் இப்போது உன்னோடு இருப்பவன் உன் கணவன் அல்ல என்கிறார். உடனே அவள் மறைக்காமல் எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டாள். இயேசு அவளது அந்தரங்க வாழ்க்கையைப்பற்றி கேட்டதால் அவள் தலை குனிந்து அவமானத்தால் ஓடவில்லை. அதனால் தான் இயேசு சமாரியாவில் முதன்முதலில் அப்பெண்ணிடம் உயிருள்ள, வாழ்வு தரும் தண்ணீரைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கின்றார். அவள் நற்செய்தியில் இடம் பிடிக்கின்றாள். தன் பாவத்தை மறைப்பவன் வாழ்வுபெற மாட்டான். மாறாக அதை அறிக்கை இட்டு மன்னிப்பு கேட்பவனை இறைவன் மன்னிக்கின்றார் உயர்த்துகின்றார்.

எனவே, விவிலியத்தில் கூறப்படும் இப்பெண்களைப் போன்று நாமும் இறை நம்பிக்கையோடும், ஆற்றலோடும் வாழ்வோம்.



# மெய்காக்கும் உயிரோனே



ராஜன்

அந்தோணி மா முனியே
ஆசை வைத்தோம் யாம்தனியே
அல்லலுற்ற வேளையிலே
ஆதரவாய் இருந்தாயே!

இன்னலுற்ற வேளையிலே
ஈசனருள் பெற்றுத்தந்தாயே
இவ்வுலக வாழ்விற்கு
ஈடில்லாநண்பரானாயே!
உறவுகள் ஒதுங்கிய வேளை
உறங்காமல் நான்தவித்தேன்
ஊழியின் வினையகற்றி
ஊன்று கோலாய் நீ வந்தாய்!
எப்படி நான் வாழ்வேன்!
ஏங்கித்தான் தவித்தபோது
என்னுடனே நீ இருந்து
ஏற்றமிகு வாழ்வளித்தாய்
ஐயமிகு என் வாழ்வில்
ஐயனே எனைக்காத்தருள்வாய்
ஒருபோதும் உமை விட்டு
ஓடி நானும் ஒளியாமல்
அவ்வளவு ஆசை கொண்டு
அத்தனையும் நிறைவாய் தருவாயே!
உயிர் எழுத்தில் உனை வடித்தேன்
மெய்வருத்தாமல் காத்திடுவாய்!

M.R. குணசேகர்



# குழந்தை வளர்ப்பு

குடும்பம் ஒரு கோயில், அன்பென்னும் எண்ணெயில் சுடர்விட்டு அதில் தீபமாய் ஒளிர்வது குழந்தைகள். குடும்பத்தை அழகுபடுத்துவதும் மகிழ்ச்சியில் திளைக்க வைப்பதும் குழந்தைகளே, குழந்தைப் பருவ வளர்ச்சி என்பது ஒருமனிதனின் வாழ்வில் பொன்னான காலம் குழந்தைகள் மதிக்கப்பட வேண்டும். அன்போடும், அரவணைப்போடும் ஊக்கப்படுத்தப்பட்டும் வளர்க்கப்பட வேண்டும். மேலும் குழந்தைகள் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டு, பெற்றோரால் வளர்க்கப் பட்டால், தன்னம்பிக்கையுள்ள மாமனிதர்களையும் நல்ல தலைமை பண்புகளையுடையத் தலைவர்க ளையும் உருவாக்க இயலும்.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் நல்ல உணவு குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படை. குழந்தைகளுக்கு இயற்கையான உணவுகளான கீரைகள், பழங்கள், பச்சை காய்கறிகள், விதைகள், முளைகட்டிய தானியங்கள், பருப்பு வகைகள் இவற்றை பிள்ளைகளுக்குக் கொடுத்து பழக்குங்கள். இயற்கையோடு ஒன்றித்து விளையாட அனுமதியுங்கள்.

## அறிவு வளர்ச்சியில் பெற்றோர் :

உங்கள் குழந்தைகளுக்காக நேரம் ஒதுக்குங்கள் "குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" எனவே பெற்றோரே, உங்கள் பொன்னான நேரத்தை குழந்தைகளோடு செலவிடுங்கள். பாடம் கற்றுக்கொடுக்க நல்லொழுக்கம் கற்றுக்கொடுக்க, விளையாட, பொழுது போக்க, சரி எது, தவறு எது என்ற பகுத்தறிவை நல்க, நல்லவை பேச, வேலைகள் கற்றுக்கொடுக்க, குடும்பமாய் அமர்ந்து உணவு உண்ண, இணைந்து ஜெபிக்க என நீங்கள் நேரத்தை குழந்தைகளோடு செலவிட்டால் அவர்கள் நல்வழியில் வாழ கற்றுக் கொள்வார்கள்.



குழந்தைகள் பெற்றோரைப் பிரதிபலிக்கின்ற நிலைக்கண்ணாடிகள். எனவே நல்ல வார்த்தைகளைப் பேசுங்கள். நீங்கள் பேசுவதைக் குழந்தைகள் தனதாக்கிக் கொள்வார்கள். அதையே அவர்கள் வாழ்வும் வாயும் வெளிப்படுத்தும். உங்கள் குழந்தைகளின் புரிந்து கொள்ளும் திறனுக்கேற்ப அறிவுரை கூறுங்கள். அதைச் செய்யாதே, அதைச் செய்யாதே என்று சொல்வதைவிட எதைச் செய்ய வேண்டும் என்றும், ஒவ்வொரு செயல்களின் பின்விளைவுகளையும் எடுத்துக்கூறி இணைந்து செயல்பட வைப்பது குழந்தைகளிடம் முதிர்ச்சியான மனநிலையை உருவாக்கும். முடிவுகள் எடுக்க கற்றுக்கொடுங்கள். பகிர்ந்தளிக்கக் கற்றுக்கொடுங்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற நல்ல மதிப்பீடுகளை கற்றுக்கொள்ளுங்கள்.

## உளவளர்ச்சியில் பெற்றோர் :-

உங்கள் குழந்தைகளுக்கு அன்பு வார்த்தைகளாலும், செயல்களாலும் நல்லதை உணர்த்துங்கள். குழந்தைகளை முத்தமிடுதல், அரவணைத்தல் இவற்றைச் செய்யுங்கள் ஏனெனில் அன்பு செய்யும் போது உறுதியும்

தன்னம்பிக்கையும் பாதுகாப்பும் கிடைக்கிறது. உங்கள் குழந்தைகளுக்கு உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஊட்டுங்கள். உன்னால் முடியும் என்று ஒவ்வொரு சூழ்நிலையிலும் நம்பிக்கையை ஊட்டுங்கள். குழந்தைகளின் முதல் ஆசிரியர் பெற்றோர். குழந்தைகளுக்கு தேவையான அனைத்தையும் கற்றுத்தரும் விளையாட்டுக் கூடம் தாயின் மடிதான். தாயின்மடிக்கு ஈடு இணை இவ்வுலகில் ஏதுமில்லை. உங்கள் குழந்தைகளை நம்புங்கள் "உன்னை நான் நம்புகிறேன் நீ நல்ல செயல்களைச் செய்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்ற நம்பிக்கைத் தரும் வார்த்தைகளைக்கூறி, அவர்களை நாம் நம்ப வேண்டும். தைரியமாக நண்பர்களுடன் விளையாட அனுமதியுங்கள். "அங்கு போகாதே, அதைச் செய்யாதே, வெளியே போகாதே" என்று அளவுக்கு அதிகமான நிபந்தனைகளையும் சட்டங்களையும் வகுத்து அவர்கள் திறமைகளை முடக்கிவிடாதீர்கள். இதனால் அவர்களின் மனபலம் இழக்கப்படும். மனச்சோர்வும், விரக்தியும் அவர்களை ஆட்கொள்ளும். எக்காரணம் கொண்டும் பிற குழந்தைகளோடு ஒப்பிடாதீர்கள். குழந்தைகள் கூறுவதற்கு செவிமடுங்கள். அவர்களின் தகுதிக்கு மேல் எதிர்பார்க்காதீர்கள். குழந்தைகளை அடித்துத் திருத்த நினைக்காதீர்கள். இதனால் அவர்கள் உள்ளத்தில் பயம் ஏற்படுகிறது. இதனால் பொய், களவு, பிடிவாதம் பிறரை அடித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். ஒருபோதும் பிறர் முன்னிலையில் தண்டிக்காதீர்கள். தனியாக அழைத்து அமைதியாக, அன்பாக தவறுகளைச் சுட்டிக் காட்டுங்கள். பின்விளைவு களையும் எடுத்துக்கூறுங்கள். குழந்தைகளுக்கு எதில் ஆர்வம் உள்ளது என கண்டு அந்தத் திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுங்கள்.

### சமுதாய வளர்ச்சியில் பெற்றோர் :

குழந்தைகள் தங்கள் பெற்றோரையே முதல் மாதிரியாகப் பார்க்கின்றனர். எனவே பெற்றோர் குழந்தைகள் முன்பாகச் சண்டையிடுதல், பொய் பேசுதல் பிறரைக் குறைகூறுதல், ஊடகங்களுக்கு அடிமையாதல் (தொலைகாட்சி பெட்டி, அலைபேசி இணையத்தளம்) திருடுதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், போன்றவற்றைச் செய்யாதீர்கள் பெற்றோர் உண்மையாகவும், நேர்மையாகவும், அன்பாகவும் அமைதியாகவும், ஒழுங்காகவும் நடந்து கொள்ள வேண்டும். பெற்றோர் ஒருவரையொருவர் மன்னித்து விட்டுக்கொடுத்து மதித்து அவரவர் தனித்தன்மையை ஏற்று வாழுங்கள். உறவு வாழ்வின் மேன்மையை உங்களிடமிருந்தே உங்கள் பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள். சமூக உணர்வோடு வாழ ஊக்கப்படுத்துங்கள். வரவுக்கு ஏற்ற செலவு செய்து வாழுங்கள். பெற்றோரின் பொறுப்புணர்வால் குழந்தைகளும் தங்களது வாழ்வைத் திட்டமிடுவர். ஒருபோதும் பெற்றோர் தங்கள் வேதனைகளை குழந்தைகள் மேல் சுமத்தாதீர்கள் கோபம், கவலை, வேதனை, இயலாமை, துன்பம் போன்றவற்றை குழந்தைகளிடம் காட்டாதீர்கள். கணவன் – மனைவியருக்கிடையே மனத்தாங்கல் உறவுச்சிக்கல்கள் ஏற்பட்டால் தன்னலம் துறந்து குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டு இணைந்து வாழப்பழகுங்கள். பெற்றோரின் பிளவுப்பட்ட, பழுதடைந்த வாழ்வால் குழந்தைகளின் மனநிலையில், ஆளுமையில் பாதிப்பு ஏற்படும்.

### ஆன்மீக வளர்ச்சியில் பெற்றோர் :

பெற்றோரே நீங்கள் உங்கள் பெற்றோரை மதியுங்கள். அனுபவம் மிகுந்த பெரியோரின் அறிவையும், ஞானத்தையும் ஆசீர்வாதத்தையும் தினமும் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் குழந்தைகளும் உங்களுக்கு மதிப்பு தருவர். உங்கள் ஆசீர்வாதங்களைப் பெற்று பணிந்திருப்பர். நம்பிக்கையே மனித வாழ்வின்ஆணிவேரும் அடித்தளமும் ஆகும். முழுமையான மகிழ்ச்சியான வாழ்வு வாழ இரண்டு கைகள் மனிதனுக்குத் தேவை. ஒன்று நம்பிக்கை. இன்னொன்று கடவுள் நம்பிக்கை இந்த இரண்டு கைகளும் இணைந்து செயல்படும்போது முழுமையான வாழ்வு

பிறக்கிறது. தடைகளைத் தாண்டி சவால்களை எதிர்கொண்டு, மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்து பிறந்த பயனை அடைய முடியும். பாலர்சபை, சிறார், இளம் கிறிஸ்தவ இயக்கம் போன்ற அமைப்புகளுக்கும், மறைக்கல்வி, நன்னெறி வகுப்புகளில் நடைபெறும் வழிகாட்டுதல் பயிற்சிகளிலும், அருள்வாழ்வு வளர்ச்சிக்கான பயிற்சிகளிலும் பங்கேற்க வேண்டும். உங்கள் பிள்ளைகளை கடவுள் நம்பிக்கையில் வளருங்கள்; ஜெபிக்க கற்றுக்கொடுங்கள்; ஜெபம் செய்யத் தூண்டுங்கள், தியானம் செய்ய கற்றுக் கொடுங்கள், வாழ்வை அர்த்தமுள்ளதாக வாழ சிறந்த மதிப்பீடுகளை உருவாக்கும் நல்ல கதைகளைச் சொல்லிக் கொடுங்கள். அன்பும் நட்பும் உள்ள இடத்தில் இறைவன் இருக்கிறார். அன்பின் வெளிப்பாடு நட்பாகும் என்ற உண்மைக்கேற்ப தன்னோடும் பிறரோடும், இறைவனோடும் இயற்கையோடும், உலகோடும் நட்புக்கொண்டு வாழ கற்றுக்கொடுங்கள்.

**முடிவுரை :**

"எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னையின் வளர்ப்பினிலே" என்பது ஒரு பாடல். குழந்தைகள் பெற்றோரின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட பொம்மைகளோ அடித்து விளையாடும் பந்துகளோ அல்ல. மாறாக உயிருள்ள கடவுளின் கொடைகள் என்பதை மனதில் கொண்டு குழந்தை வளர்ப்பிற்கான பொறுப்பையும் தியாகத்தையும் பெற்றோர் உணர்ந்து செயல்பட வேண்டும்.





# எம்மண்ணின் புகழ்பரப்பும் புதுமை நாயகன்

ஆல்ரின் R.G. சேகர்

பாலன் இயேசுவை கரத்தில் ஏந்தி - வெட்டுவெந்நி
பாலத்தின் அடியோரமாய் அற்புதம் பலபுரிந்திட
பகலிரவாய் விழித்திருக்கும் எம்பங்கு
பாதுகாவலரே புதமையின் நாயகனே - உம்மை

பார்க்க வருவோரின் பிரச்சனையைக் கேட்டு
பரிவோடு வரமருளும் எம்பாதுகாவலரே -உம்மைப்
பார்க்க வரும்பக்தர்களால் தான் எம் ஊரின் பெயர்
பாரெங்கும் பரவி உயர்ந்து வருகிறது

படிக்கும் ஏழைபிள்ளைகளுக்கு உயர்கல்வி உதவி - திருமண
பந்தத்தில் இணைய ஏழைப்பெண்கள் திருமண உதவி
பாதுகாப்பாய் வாழ்ந்திட வாழும் குடில் திட்டம்
பாழாய் போன நோய்களை நீக்க மருத்துவ உதவி

பங்கு மக்களுக்கு மட்டுமல்ல பலதிசைகளுக்கும்
பற்பல உதவிகள் வழங்கி எம்பங்கு புகழ்
பரப்பும் வெட்டுவெந்நியின் புதுமை நாயகனே
பாதை இழந்தோர்க்கு பாதைகாட்டுபவரே - உம்

புதுமை கஞ்சியையும், எண்ணெயையும் மருந்தாக
பயன்படுத்தும் மக்கள் ஏராளம், ஏராளம் என்பதை - நீர்
புரிந்துதானோ எண்ணிலடங்கா புதுமைகளை அதன்வழியாய்
புரிந்து வருகின்றீர், வெட்டுவெந்நி புண்ணிய பூமியிலே

# விவிலியத்தில் ஏழைகள்

M. Jese Durai
Kodumkulam





"ஆண்டவர் இயேசு செல்வராய் இருந்தும் உலக மக்களுக்காக ஏழையானார்" விவிலியம் புதிய ஏற்பாடு பழைய ஏற்பாடு என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. பழைய ஏற்பாடு யூதர்களின் புனித நூலாகும். கிறிஸ்தவர்களால் "பழைய ஏற்பாடு" என்றும் யூதர்களால் 'தனக்' என்றும் அழைக்கப்படுகிறது. விவிலியம் பல நூல்களின் தொகுப்பு. ஏற்பாடு என்னும் சொல் "உடன்படிக்கை" என்றும் பொருள்படும்.

**பழைய ஏற்பாட்டில் கடவுள்:**

விவிலியத்தின் முதல் பகுதியான பழைய ஏற்பாட்டில் கடவுள் தமக்கென ஒரு மக்களினத்தை உருவாக்கி, அவர்களுக்கு தாம் கடவுளாக இருப்பதாகவும், அவரது கட்டளைகளைக் கடைபிடித்து ஒழுக வேண்டும். அப்போது இஸ்ராயேல் மக்கள் கடவுளின் மக்களாக இருப்பார்கள் என்று ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தத்தை கிறிஸ்தவர்கள் உடன்படிக்கை என்று அழைக்கின்றனர்.

**புதிய ஏற்பாட்டில் கடவுளின் மகன் இயேசு:**

**"ஏழை கூவி அழைத்தான் ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்"**

"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" என்னும் இறைவார்த்தைகள் ஏழைகளுக்கு வழங்கப்பட்ட உயிரோட்டமிக்க வாழ்வு தரும் வார்த்தைகள்.

விவிலியத்தில் ஏழைகள் என்று சொல்லப் படுகிறவர்கள் யார்? விவிலியத்தில் ஏழைகளை நாம் இரண்டு வகையாகப் பார்க்கலாம். 1. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களை ஏழைகள் என்று நாம் சொல்கிறோம். 2. அதேப்போல் கடவுள் மீது முழுமையான நம்பிக்கை வைக்கிறவர்களையும் ஏழைகள் என்று சொல்கிறோம். இவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. பணம் இருந்தாலும், தாழ்ச்சியும் கடவுளுக்கு முன்னுரிமையும் கொடுப்பதால் இவர்களையும் ஏழைகள் என்று கூறுகிறோம். 3. இனி மூன்றாம் ரக ஏழைகளும் உண்டு. இவர்கள்தான் மிக ஏழைகள் அதிக செல்வம் இருந்தும் எதிலுமே திருப்தியற்றவர்கள் நிறைவடையமாட்டார்கள் இன்னும் இன்னும் வேண்டும் என்று வரையறை இல்லாமல் பணத்துக்காவும், பொருளுக்காகவும், சொத்துக் காகவும், ஆடம்பர மோகத்துக்காகவும் ஏங்கி பேராசையுடன் வாழ்பவர்கள். இவர்கள் எப்போதுமே மனதளவில் பரம ஏழைகள்.

**ஏழைகளை வஞ்சித்து அவர்கள் வயிற்றில் அடிப்பவன் ஒருநாள் வஞ்சிக்கப்படுவது உறுதி.**

1. நீதிமொழிகள் 28: 3–ல் ஏழைகளை ஒடுக்கும் கொடிய அதிகாரி விளைச்சலை அழிக்கும் பெருமழைக்கு சமமாகிறான். முறை கேடாய் நடக்கும் செல்வரை விட மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல் என்கிறார் ஆண்டவர்

2. நீதித்தலைவர்கள் 6:15–ல் கிதியோன் ஆண்டவரிடம் என் தலைவரே எவ்வழியில் நான் இஸ்ரயேலை விடுவிப்பேன். இதோ மனாசேயிலே நலிவுற்று இருப்பது என்குடும்பம் என்கிறார். ஆண்டவர் அவரிடம் நான் உன்னோடு இருப்பதால், நீ இனி ஒரு ஆளாக பிதியானியரை வெல்வாய் என்றார்.

**கடைத்தேங்காயை எடுத்து தெருபிள்ளையாருக்கு உடைக்காதே**

3. 2 சாமுவேல் 12: 1–4 –ல் ஆண்டவர் நாத்தானை தாவீதிடம் அனுப்பினார். நாத்தான் அவரிடம் கூறியது ஒரு நகரில் இருமனிதர்கள் இருந்தனர் ஒருவன் செல்வன் மற்றவன் ஏழை. செல்வனிடம் ஆடு மாடுகள் ஏராளம் இருந்தன. ஏழையிடம் ஓர் ஆட்டுக்குட்டி மட்டுமே இருந்தது வழிப்போக்கன் ஒருவன் செல்வனிடம் வந்தான். அவனுக்கு உணவு தயார் செய்ய தன் ஆடுமாடுகளை விட்டுவிட்டு ஏழையின் ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்து வழிப்போக்கனுக்கு உணவு தயாரித்தான்.

**இறைவனுக்கு கொடுக்க நினைப்பதை சிலநேரமாவது இல்லாதவருக்கு கொடுங்கள்**

4. (1 அரசர் 17: 8–16 எலியா புறப்பட்டு சாரிபாத்துக்குப் போனார். நகரின் நுழைவாயிலை அடைந்த பொழுது அங்கே ஒரு கைம்பெண் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவர் அவளை அழைத்து குடிக்க கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா என்றார். அவர் அதை எடுத்துவரச் செல்கையில், அவரைக் கூப்பிட்டுக் கொஞ்சம் அப்பமும் கொண்டுவா என்றார். கைம்பெண்ணோ வாழும் உம் கடவுளாகிய ஆண்டவர் மேல் ஆணை. என்னிடம் அப்பம் ஏதும் இல்லை. பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணையுமே உள்ளன. இப்போது இந்த இரண்டொரு சுள்ளிகளைக் கொண்டு போய் சமைத்து நானும் என் மகனும் சாப்பிடுவோம். அதன் பின் சாக வேண்டும் என்றார்).

**“ஏழையின் சிரிப்புக்கு முன் இறைவனே தோற்றுவிடுவார்”**

5. 2 அரசர் 4:1–7 –ல் இறைவாக்கினர் குழுவைச் சார்ந்த ஒருவரின் மனைவி எலிசாவிடம் வந்து கதறி அழுது உம் அடியவனாகிய எம் கணவர் இறந்து விட்டார். அவர் ஆண்டவருக்கு அஞ்சி நடந்தவர் என்பது உமக்குத் தெரியும். அவருடைய கடன்காரன் என் இரண்டு பிள்ளைகளையும் தனக்கு அடிமைகளாக எடுத்துக்கொள்ள வந்திருக்கிறான் என்றாள். எலியா அவரை நோக்கி நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? உன் வீட்டில் என்ன இருக்கிறது? என்றுகேட்க, உம் அடியவளாகிய என்னிடம் கலயத்தில் சிறிது எண்ணெய் நிறைந்தவற்றை ஒரு பாத்திரத்தில் எடுத்துவை என்றார். அவ்வாறே அவரும் தம் புதல்வருடன் வீட்டினுள் சென்று கதவை மூடிக் கொண்டார். அவர்கள் எடுத்து வந்த கிண்ணங்களில் அவர்கள் எண்ணெயை ஊற்றினர். எல்லா பாத்திரங்களும் நிறைந்த பின் அவர் தம்மகன் ஒருவனை நோக்கி இன்னும் பாத்திரம் கொண்டு வா என்றார். அதற்கு அவர் வேறு பாத்திரம் இல்லை என்றான். அதோடு எண்ணெய் வருவதும் நின்றது. கடவுளின் அடியவரிடம் அவர் வந்து அதை அறிவித்தார் அதற்கு அவர் நீ போய் எண்ணெயை விற்று உன் கடனைத் தீர்த்துவிடு எஞ்சியதைக் கொண்டு நீயும் உன் புதல்வர்களும் பிழைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

6 மத்தேயு 5:1

இயேசு மக்கள் கூட்டத்தைக்கண்டு மலைமீது ஏறி அமர அவருடைய சீடர் அவரருகே வந்தனர் அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை. ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது என்றார்.

7. மாற்கு 12: 41–43

இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக அமர்ந்து கொண்டு மக்கள்அதில் காணிக்கைப் போடுவதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். செல்வர் பலர் அதில் மிகுதியாகப் போட்டனர். அங்கு வந்த ஏழைக் கைம்பெண் ஒருகோதிராந்துக்கு இணையான இரண்டு காசுகளைப்போட்டார். அப்பொழுது அவர் தம் சீடரை வரவழைத்து இந்த கைம்பெண் காணிக்கைப்பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரையும்விட மிகுதியாக போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே ஏன் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டு விட்டார் என்று அவரிடம் கூறினார்.

லூக்கா 6:20 வாழ்வு தரும் வார்த்தை

இயேசு சீடர் மீது தம் பார்வையைப் பதித்துக் கூறியவை: ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள் ஏனெனில் இறையாட்சி உங்களுக்குரியதே இப்பொழுது பட்டினியால் இருப்பவர்களே நீங்கள் பேறுபெற்றோர். ஏனெனில் நீங்கள் நிறைவு பெறுவீர்கள். இப்பொழுது அழுது கொண்டிருப்பவர்ளே நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் சிரித்து மகிழ்வீர்கள் என்றார்.

லூக்கா 16: 20–22

வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்

இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவர் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாயிருந்தது அவர் செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். அவர் செல்வருடைய மேசையிலிருந்து விழும் ரொட்டித் துணடுகளால் தம்பசியாற்றி வந்தார். நாய்கள் வந்து அவர் புண்களை நக்கும். அந்த ஏழையும் இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகமாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வைக்கப்பட்டபோது அண்ணார்ந்து பார்த்து தொலைவில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரையும் கண்டார். அவர் தந்தை ஆபிரகாமே எனக்கு இரங்கும். இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து எனது நாவை குளிரச் செய்ய அவரை அனுப்பும், நான் தீப்பிழம்பில் மிகுந்த வேதனைப்படுகிறேன்'' என்று கத்தினார். அதற்கு ஆபிரகாம் மகனே நீ உன்வாழ்நாளில் நலன்களையே பெற்றாய். இலாசரோ இன்னல்களையே அடைந்தார் அதை நினைத்துக் கொள். அன்றியும் உங்களுக்கும் எங்களுக்கும் இடையே பெரும் பிளவும் உள்ளது என்று ஆபிரகாம் கூறினார்.

லூக்கா 4:16

# காற்றுக்கு எங்கே போவாய்



JEFFERI RYAN (VI)
Chalianvilai, Vettuvenni,
Marthandom.



மானிடா! மரத்தை அழித்தாய் நீ
இனி சுவாசிக்க எங்கே போவாய்
செவ்வாய்கிரகம் செல்வாயோ!
மரத்தைவெட்டி வீட்டை கட்டினாய்
வீட்டைவிட்டு வேறெங்கு செல்கிறாய்
நீ அழித்ததைத் தேடி!
செவ்வாய் கிரகத்தில் மரம் வளர்க்க
ஆராய்கின்றாய்
நீயே கொன்று விட்டு உயிர்கொடுக்க
நினைக்கின்றாயே மானிடா!

# இயேசுவின் தேடல் : நீதியின் பால் பசிதாகம் கொள்வோம்.





**J.L. Jenifer Josi**
Kodum Kulam

'நீதி' நிலைநாட்டுவது நேர்மையாளர்க்கு மகிழ்ச்சி தரும். தீமை செய்வோருக்கு அது திகிலுண்டாக்கும். நீதி என்றால் என்ன? தெரியுமா? உங்களுக்கு? மனிதன் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கம்தான் நீதி.

கடவுள் ஆதாம் ஏவாள் தொடங்கி நீதி தவறாமல் ஆட்சிபுரிந்தார். போகப்போக மக்கள் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதைக் கண்டு மனம் வெதும்பி இந்த உலக மக்களை மீட்க தம் ஒரே மகனான இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

மக்கள் சீரழிந்து சின்னாபின்னமாகிப் போகும் நிலையைக் கண்டு அவற்றை சீர்செய்ய பல புரட்சிகளை மேற்கொண்டார் இயேசு. நீதியின்பால் வேட்கை கொண்டு சமூக அநீதிகளையும் அக்கிரமங்களையும், அடக்கு முறைகளையும் கண்டித்தார். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கினார். ஏழை எளியோருக்கும் சமூகத்தில் வஞ்சிக்கப்பட்டோருக்கும் நிலை வாழ்வு தந்தார். தன் தந்தையின் வீடாகிய ஜெருசலேம் ஆலயத்தைக் கள்வர் கூடாரமாக்கிய வர்களைக் கண்டு வெகுண்டெழுந்து அவர்களைச் சாட்டையால் அடித்துத் துரத்தினார். இவற்றை எல்லாம் பொறுக்காத பலர் இயேசுவைப் போஞ்சு பிலாத்தின் ஆணைக்கு உட்படுத்தி மரணதண்டனைக்கு ஆளாக்கினர்.

## நீதியை நிலைநாட்டிய தலைவர்கள் :

அன்றிலிருந்து தொடர்ந்தது தான் இன்றுவரை பல இரத்த சாட்சிகளும் பல புரட்சியாளர்களும் சமூக அநீதிகளையும் அக்ரமங்க ளையும் உடைத்தெறிந்து நீதியை நிலைநாட்டி புதுமை படைத்துள்ளனர். இன்னும் எத்தனையோ நாட்டுத் தலைவர்கள் பல சீர்த்திருத்தச் சட்டங்களை இயற்றியுள்ளனர். லெனின் இவர் விவசாயிகளுக்கான நில உரிமைச் சட்டம் கொண்டுவந்தவர். சட்ட வல்லுநர் டாக்டர் B.R. அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கும் குரல் கொடுத்தவர். நெல்சன் மண்டேலா இன ஒடுக்கு முறையை எதிர்த்தவர். டாக்டர் முத்துலெட்சுமி பெண்களுக்கான சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தவர். இன்னும் சுதந்தரத்திற்காக, பெண் கல்விக்காக போராடியவர்கள் எத்தனையோபேர், சொல்லிக் கொண்டே போகலாம். இவர்களெல்லாம் இன்னொரு இயேசுவாகவே தென்பட்டவர்கள் போராடி, வாதாடி தங்களை இவ்வுலகிற்கு அர்ப்பணித்தவர்கள்.

"தீமையை தீமையால் எதிர்க்காதே" என்ற இயேசுவின் போதனையை இவ்வுலகம் கடைபிடிக்கவில்லை. அதனால்தான் இவ்வுலகம் இவ்வளவு தீமையுள்ளதாக இருக்கிறது என்றார் விவேகானந்தர். இதைக்கண்ணுற்ற கவியரசு கண்ணதாசன் அழகான பாடலொன்றை பாடியுள்ளார்.

"கடவுள் ஏன் கல்லானார் மனம் கல்லாய் போன மனிதர்களாலே" என்று. ஆமாம்! சீர்திருத்தவாதிகள் இன்று சிலையாக்கப் படுகிறார்கள் பழைய ஏற்பாட்டில் நீதிமொழிகள் என்னும் நூலில் குடும்ப உறவு, பொருளீட்டும் முயற்சி, சமூக உறவு, நன்னடத்தை மனத்தாழ்வு,

பொறுமை, ஏழைகள்பால் அன்பு பற்றி அழகாக எடுத்துக் கூறுகிறது.

**நீதி கூறும் நூல்கள்:**

திருவள்ளுவரின் சான்றான்மை என்னும் 99–வது அதிகாரத்தில் 3–வது குறளில், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை இவை ஐந்தும் சால்பு ஊன்றிய தூண் என்கிறார். சங்க காலத்திலிருந்தே தமிழில் பல நீதி நூல்கள் உள்ளன. திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி நானூறு இன்னும் பல. இவை எல்லாம் யாருக்கு சொல்ல? யார் கேட்கிறது? என்ற நிலையாகிவிட்டது.

கி.மு 235 –ம் ஆண்டில் சோழநாட்டை ஆண்டுவந்த மனுநீதிச் சோழனின் நீதி தவறாத ஆட்சி. தனது மகன் பசுவின் கன்றை தேர்கால் ஏற்றி கொன்றுவிட்டான் என்று பசு துடித்ததால் தனது மகனையும் அவ்வாறே தேர்கால் ஏற்றியே கொன்றது மாமன்னனின் நீதியின் சிறப்பு. அதனால் அம்மன்னனின் சிலையைச் சென்னை உயர்நீதி மன்றத்தில் இன்றும் வைத்து பாதுகாப்பது சிறப்பு வாய்ந்ததே.

அவ்வாறே மரணதண்டனை வழங்கிய நீதிபதி தான் கையெழுத்திட்ட பின் அந்த பேனாவின் முனையை உடைத்து விடுவது ஏன் தெரியுமா? Nip – ஐ உடைப்பது சட்டம் கிடையாது. நீதிபதி கையெழுத்திட்டபின் அந்த தீர்ப்பை ரத்து செய்வதற்கோ அல்லதுமறு பரிசீலனை செய்வதற்கோ அவருக்கு அதிகாரம் இல்லை என்பதற்கும், இந்தபேனா ஒரு மனிதனின் உயிரைப் பறித்ததால் இனிமேல் இதை பயன்படுத்த வேண்டாம் என்பதற்காகவும் தான்.

என்னதான் புரட்சியும் சீர்திருத்தங்களும் கொண்டு வந்தாலும் இன்றுவரை குடும்பத்தில் கணவன் மனைவி பிரச்சினை, பெற்றோர் பிள்ளைகள் பிரச்சினை, அண்ணன்தம்பி பிரச்சினை, பாலியல் ரீதியான பிரச்சினை இன்னும் சொத்து பிரச்சினை, அரசியல், ஏமாற்று, கொலை, கொள்ளை, பொறாமை, சதி இன்னும் என்னவெல்லாம் புதுபுது டெக்னிக்கை பயன்படுத்தி மனிதனை வீழ்த்துகிறார்கள். கேடுகெட்ட மனிதர்கள் இதைத்தான் பாரதியும் பாடினார்.

“நெஞ்சு பொறுக்குதில்லையே இந்தநிலைகெட்ட மனிதனை நினைத்துவிட்டால்”என்று

இன்று மனிதர்கள் உலக நுகர்வு வெறிகளுக்கும் உலகக் கவர்ச்சிக் குள்ளும் சிக்கித் தவிக்கின்றனர். இதயமே இல்லை என்ற நிலை இன்று மனிதர்களுக்கு.

“நெஞ்சுக்குத் தேவை மனசாட்சி அது நீதி தேவனின் அரசாட்சி” என்பது பாடல் வரிகள் தூய ஆவியாரின் கனிகளான அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம், பணிவு தாராள குணம். நிறை அன்பு இவற்றை இதயத்தில் சுமந்து வாழ்தலே நீதி தேவனாகிய இயேசுவின் விருப்பம். நிலையானதும் நிலை வாழ்வைத் தருவதும் உண்மை ஒன்றே. நீதி ஒன்றே, இதை கண்டடைவோம். இயேசுவின் தேடலை வழி. நன்றி.

## நம்பிக்கை நாயகன் புனித அந்தோணியார்





ஆஷிகா மோள். ரா.

வாழ்க்கை என்னும் பயணத்திலே
தடுமாற்றம் சூழ்ந்த நாட்களிலே
விடியலுக்காய் காத்திருந்த பொழுதினிலே
வாழ்வின் அரும்பெரும் விடியலாய்
தோன்றிய புனித அந்தோணியாரே!
எம் வெட்டுவெந்நி திருத்தலப் பங்கினை
நாடி வந்தோரின் ஆறுதலே
குழந்தை இயேசுவை கையில் ஏந்தியவராய்
ஏழைகளின் நம்பிக்கை நாயகனாய்
உம் வியத்தகு புதுமைகள்
எத்துணைப் பெரிது!
எத்துணைப் பெரிது!!

# புனித அந்தோணியாரின் அற்புதங்கள்





B. விஜிலா

### 1. தன் தந்தைக்கு உதவிய புனிதஅந்தோணியார்

தனது தந்தை செய்யாத கொலைக்காக சிறையில் அடைக்கப்படுகின்றார். சாட்சிகள் தனது தந்தைக்கு எதிராக அமைய கொலை செய்ததாக கூறப்பட்டவரை உயிரோடு எழுப்பி சாட்சி கூற வைக்கின்றார்.

### 2. மீன்களுக்கு நற்செய்தி போதித்தார்

ரமணி என்ற நகருக்கு மறையுரையாற்றச் செல்கின்றார். புனித அந்தோணியார், அவருடைய போதனையை கேட்க யாரும் முன்வரவில்லை. அதனால் அவர் கடலுக்குச் சென்று மீன்களுக்கு மறையுரையாற்றினார். மீன்களும் கூட்டமாக அவரது உரையைக் கேட்க தொடங்கியது. இதைக்கண்ட மக்களும் மனம் மாறினார்கள்.

### 3. பணப்பெட்டியில் இருந்த இதயம்

ஒரு செல்வந்தர் இறந்து போகின்றார். தூய அந்தோணியாரோ இறந்துபோனவரின் இதயம் அவரது உடலில் இல்லை. பணப்பெடடியில் தான் இருக்கின்றது என்றார் இதை நம்பாத மக்கள் மருத்துவரை வரவழைத்து சோதனை 'செய்த போது அவரது இதயம், அவரது உடலில் இல்லை என்றார்.. அந்தோணியார் கூறியபடி பணப்பெட்டியில் போய்ப் பார்த்தபோது அங்கு இருந்ததைக்கண்டு மலைத்துப் போய் அவருக்குப்பின் சென்றார்கள்.

### 4. உடையாத கண்ணாடிக்குடுவை

அலோட்டியாவுடைய நண்பர்கள் அந்தோணியார் செய்த அற்புதத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது அலோட்டியாவோ அதெல்லாம் ஏமாத்து வேலை என்று கூறி ஏளனம் செய்தார். மேலும் அவர்தன்னிடம் இருக்கின்ற கண்ணாடிக் குவளையை தூக்கி எறிவதாகவும், அது உடையாமல் இருந்தால் நம்புவதாகக் கூறிவீசி எறிந்தார். அப்போது கண்ணாடிக குடுவை உடையாததைக் கண்டு வியந்து அந்தோணியாருக்குப் பின் சென்றார்.

### 5. முரடன் மனமாற்றம்

கல்மனம் படைத்த படைவீரரான முரடன் ஒருவன் இருந்தான். பலரை அடித்து துன்புறுத்தி வந்தான். ஒருமுறை தனது மனைவியை அடித்து குற்றுயிராக கிடத்தினான். இதைக்கண்டு பயந்து போன படைவீரன் அந்தோணியாரிடம் வருகின்றார். அந்தோணியாரும் அவருடைய மனைவிக்கு சுகம் கொடுக்கின்றார். படை வீரரும்மனம் மாறுகின்றார்.

### 6. துண்டிக்கப்பட்ட கால் இணைக்கப்படுதல்

ஒருமுறை லியோன்னாறோ என்ற வாலிபர் பாவ சங்கீர்த்தனம் செய்ய வந்தார். அப்போது தனது தாயை காலால் எட்டி உதைத்ததாகக் கூறினார். அப்போது அந்தோணியார் தாயை எட்டி உதைத்த காலை வெட்டி எடுக்க வேண்டும் என்று எதார்த்தமாக கூறினாராம். உடனே வாலிபர் வீட்டிற்குப் போய் தனதுகாலை வெட்டி எடுத்தாராம். அதைஅறிந்த அந்தோணியார் அவனது காலை ஒட்ட வைத்தார்.

### 7. சுழல் காற்றில் சிக்கிய சிறுவன் உயிர் பெற்று எழுதல்

பாரிசோ என்ற சிறுவன் நண்பர்களுடன் படகு சவாரி செய்த போது படகு கவிழ்ந்தது. அனைவரும் தப்பிவிட பாரிசோ என்ற சிறுவன் உயிர்விடுகின்றான். அவனது தாயாரே இறந்த உடலை ஆலயத்தில் கொண்டு செல்லாமல் அந்தோணியாரிடம் மனமுருக வேண்டினார். அவன் உயிர் பெற்றால் பிரான்சிஸ்கன் துறவியாக மாற்றுவேன் என்று மனமுருக, அந்தோணியார் அவனுக்கு உயிர் கொடுக்கின்றார். பாரிசோவும் துறவியாக மாறி அனைவருக்கும் சாட்சியாக மாறுகின்றான்.

### 8. கொதிநீரில் விழுந்த குழந்தை உயிர் பெறுகிறது

டோமி என்ற 2 வயது குழந்தை கொதிநீரில் விழுந்து விடுகிறது. அப்போது புனித அந்தோணியாரின் மறையுரையைக் கேட்கச் சென்றிருந்த தாய் குழந்தையை வந்து பார்த்தபோது சுடுதண்ணீரில் விழுந்து இறந்தது. தெரிந்து குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு குழந்தைக்கு எடையாக ரொட்டித்துண்டுகளை காணிக்கையாக கொடுப்பேன் என்று மனமுருகி வேண்டினாள். குழந்தையும் தூக்கத்திலிருந்து போல எழுந்தது.

1231 ஆம் ஆண்டு புனித அந்தோணியாரின் அடக்க சடங்கின் போது முதுகில் கட்டியுடன் மிகுந்த வேதனையுடைய பெண் அந்த இறுதிச்சடங்கில் பங்கேற்றார். புனித அந்தோணியாரை ஜெபித்து விட்டு குனிந்து நிமிரும் போது தன் முதுகில் இருந்த கட்டியில் வலி நீங்கியிருப்பதாகவும் முழுவதுமாக சுகம் பெற்றிருப்பதாகவும் அவர் உணர்கிறார். இது கோடி அற்புதரான புனித அந்தோணியார் இறந்த நிலையிலும் செய்த புதுமையாக அறியப்படுகிறது.

கோடி அற்புதர்புனித அந்தோணியாரின் புதுமைகள் இன்னும் பல கோடி எழுதி முடியாதது. இன்றும் பல கோடி சொல்லி முடியாதது.



# தூய அந்தோணியாரும் புதுமை வாழ்வும்



திருமதி. R. பிறேமலதா

கோடி விண்மீன் கண்டேன் வானத்திலே!
கோடி அற்புதங்கள் கண்டேன் என் வாழ்வினிலே!
புவி ஆள வந்த மன்னவனே – நான்
கவிபேச வந்தேன் உன்புதுமைகளை!
வழிகாட்டும் அன்பு புனிதரே – உன்
நாவினில் உதிர்த்திடும் நல் வார்த்தைகளை!

1195 – ஆம் ஆண்டிலே
ஆகஸ்டு திங்கள் 15 – ஆம்நாளிலே
லிஸ்பன் நகரிலே மார்டின் மேரி தம்பதியருக்கு பிறந்த
மூன்றாவது நல்முத்தே!
அரண்மனை தனிலே ஆடம்பர வாழ்வு
கண்முன் இருந்தும்
ஏழையர் வாழ்விலே ஒளிஏற்றி மகிழவே!
இல்லறம் துறந்து துறவறம் ஏற்றவரே!
நன்மைகள் நல்கி இன்னுயிர் தந்தவரே!
புதுவையின் புனிதரே புதுமையின் நாயகனே!

சிறுவயதிலேயே அலகை சோதித்திடவே!
மனத்துணிவுடன்! சலவைக்கல்மேல்
திருச்சிலுவை அடையாளத்தை வரைந்து!
அலகையை துரத்தி திருச்சிலுவை அதிகம் நேசித்தவரே!
கடல் மீன்களும் உன்ஆசிர் வேண்டி
அலையாக வந்து அற்புதமும் கண்டதுவே!
நற்கருணை நாதரை நம்பிக்கையுற்றோர் மறுத்திடவே!
கழுதையும் உம் வார்த்தைக்கு கீழ்படிந்து
நற்கருணை நாதர்முன் மண்டியிட்டதுவே!

துறவியர் மடமும் பொறாமை கண்டிடவே!
புதுமையின் எண்ணிக்கை தினம் 13 ஆனதுவே!
'அந்தோணியாரே என்னைக் காப்பாற்றும்' – என்ற
கட்டிடத்தொழிலாளியின் அலறலிலே!
'அப்படியே நில்' என்று பணித்து
அந்தரத்திலே தொங்கவைத்து
மட தலைமைக்குருவிடம் அனுமதி பெற்று
பத்திரமாக தரை இறக்கிய மாபெரும் புனிதரே!
ஒரே நேரத்தில் இரு இடங்களில் போதித்தவரே!

1219– ஆம் ஆண்டிலே  தனது 24 – ஆம்வயதிலே
துறவற சபையிலே குருபட்டம் பெற்றவரே!
1231 – ஆம் ஆண்டிலே ஜூன்மாதம் 13 – ஆம் நாளிலே
தனது 36–வயது வயதிலே இறையடி சேர்ந்தவரே!
இறந்தமறு ஆண்டிலே புனிதர் பட்டம் பெற்றவரே!
1680 – ஆம் ஆண்டிலே ஆஸ்திரியா நாட்டிலே!
ஆலயத் திருநாளிலே! காணிக்கையாக படைத்த
லில்லி மலரை வாடாமல் பாதுகாத்து,
புதியபூக்களைப் பூக்கச்செய்தவரே!
1946 – ஆம் ஆண்டிலே திருத்தந்தை  12–ஆம் பத்திநாதர்

அன்பையும்! ஏழ்மையும் ! தாழ்ச்சியையும் !
ஞானத்தையும்! அணிகலன்களாக அணிந்தவரே!
நாவாலும்! நற்சொல்லாலும் ! வாழ்வாலும்!
வார்த்தையாலும்! வாழ்ந்து காட்டி
336 ஆண்டுகள் கடந்த பின்னும் நாவழியாமல்
தன் நாவைக் காத்தவரே !
இன்றும் காக்கின்றவரே!

குழந்தை இயேசுவைக் காட்சியில்  கண்டு!
கையில் ஏந்தி, மற்றொரு கரத்தில்
திருமறை ஏந்தும் பேறு பெற்றவரே! தூய அந்தோணியாரே!
தாழ்பணிகின்றேன் நின்திருவடியில்!



# வெட்டுவெந்நி தூய அந்தோணியாரின் அற்புதத்தால் வாங்கிய நிலம் (பங்கு பேரவை அறிக்கை எண் 5 2.7.1995)



**M. மரிய சிசில்**
சாலியன்விளை, வெட்டுவெந்நி, மார்த்தாண்டம் P.O

வெட்டுவெந்நி சரித்திரம் என்பவரின் மகன் சதாசிவன் நாயர். இவரின் மருமகன் தான் சடகோபன்நாயர் சதாசிவன் நாயருக்கு தற்போது வின்சென்ட் தே பவுல் சங்கம் நடத்தும் மெழுகுதிரி ஷெட்டு இருக்கும் இடம் உள்ளடக்கிய 66 சென்று நிலம் சொந்தமாக உள்ளது. அந்த நிலத்தை அவர் தன் மனைவி பேருக்கு விலையாக இஷ்டதானம் எழுதி கொடுத்திருந்தார். 1993 – ல் இந்த இடத்தை விற்பதாக பரவலாக பேசப்பட்டது. இதை அறிந்த நான்அன்று அந்தோணியார் பங்கில் செயலராக இருந்தேன் அந்தோணியார் பங்கு பொருளாளர் திரு. R. தன்ஸ்லாஸ் உதவித் தலைவர் R. ராஜையன் பங்குதந்தை V. ராபர்ட் அடிகள் ஆகியவர்களிடம் தெரிவித்தேன்.அனைவரும் அந்த சொத்தை வாங்க முடிவு செய்து அவர்களை சந்திக்க முயற்சி எடுத்தோம். அப்போது சதாசிவன் நாயர் குடும்பம் திருவனந்தபுரம் மாவட்டம் வெங்கானூர் என்ற இடத்தில் அவருடைய மனைவி வீட்டில் இருப்பதாக பால்மணி என்பவர் வழியாக தகவல் கிடைத்தது.

அப்போது வெளிநாட்டிற்கு காய்கறி ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு வாங்க பால்மணியும், கோயிலுக்கு வாங்க நாங்களும் மாறிமாறி வெங்கானூர் போய் பேசிவந்தோம்.

அப்போது நான் ராணி தோட்டம் தொழிற் கூடத்தில் Time Keeper (காலம் காப்பாள்) ஆகவும், திரு ராஜய்யன் K.S.R.C ஆய்வாளர் (செக்கர் ஆகவும்) தன்சிலாஸ் நாகர்கோவிலில் கால்நடைதுறை அலுவலகத்திலும் வேலை பார்த்து கொண்டிருந்த காலத்தில் மூவரும் குழித்துறையில் மாலை 5 மணிக்கு பிறகு வேலை முடித்துவிட்டு குழித்துறையில் ஒன்று சேர்ந்து வெங்கானூர் சென்று பேசிவிட்டு வீடுவரும் போது இரவு 10 மணி, 11 மணி ஆகும் இவ்வாறு 49 முறை1993 – ல் ஆரம்பித்து 1994 முழுக்க நடயா நடந்தோம். 49–வது சந்திப்பின் போது சென்றிற்கு 8000 ரூபாய் வைத்து தருவதாக ஒத்துக் கொண்டார்கள். மறுநாளே Fr. ராபட்டிடம் கூறி 1 லட்சம் ரூபாய் அட்வான்ஸ் கொடுக்க வேண்டும் என்றோம். அவர்களும் சேமித்து வைத்திருந்த ரூபாயை எடுத்து தந்தார்கள். மூன்றாவது நாள் மிகவும் சந்தோஷமாக 1 லட்சம் ரூபாயுடன் அட்வான்ஸ் கொடுக்க வெங்கனூருக்கு மூன்றுபேரும் புறப்பட்டு சென்றோம். சுமார் இரவு 7.45 மணிக்கு சென்று சேர்ந்து அட்வான்ஸ் கொண்டு வந்துள்ளோம் என்றும், என்று பிறமாணம் பதிக்கலாம் என்றும் கேட்டோம்.

உடனடியாக அந்த பெண் சென்று 10000 ரூபாயில் குறச்சு கொடுக்கவில்லை என்று கூறினார்.. சென்றிற்கு 8000 என்று பேசி சம்மதித்தாய் அல்லவா நாங்கள் அட்வான்ஸ் கொண்டு வந்தோம் என்றோம். அதற்கு 10000–க்கு கீழ் குறைத்து கொடுக்க மாட்டேன் என்று திட்டவட்டமாக கூறிக் கொண்டேயிருந்தார். அப்போது அவருடைய புருஷன் திரு. சதாசிவன் நாயர் “ எடீ கோயலினு கொடுக்கலாம்னு பறஞ்சது கொடுக்கணும்” என்று மலயாளத்தில் கூறினார். அதற்கு அவள் தன்றே ஜோலியை நோக்கணும். ஞான் நோக்கி கொள்ளாம் என்று மலையாளத்தில் பதில் சொன்னாள். இரவு 7.45 மணி முதல் இரவு 10.30 மணி வரை மன்றாடி கேட்டும் தர மறுத்து அட்வான்ஸ் தொகை திருப்பி கொண்டுவர நேர்ந்தது.

திரு. ராஜய்யன், திரு. தனிஸ்லாஸ் ஆகியவர்கள் வீட்டில் இருந்து வேதனையோடு இறங்கினார்கள் கடைசியாக நான் ஒருமுறை கூட மலயாளத்தில் "சேச்சி பறஞ்ச வாக்கு பலிக்க" என்றேன். மறுமொழியாக ஒக்குதல்லா படி குறங்சிபொக்கோடோ என்று நீ அனுபவிக்கு என்று சத்தமாக பேசினாள். நாங்கள் வந்து சேர்ந்தபோது இரவு 12 மணி மறுநாள் காலை பங்குத் தந்தையை சந்தித்து நடந்ததை கூறி பணத்தை அவரிடம் திருப்பி கொடுத்தோம்.

நாங்கள் அட்வான்ஸ் பணம் கொடுக்காமல் வேதனையோடு திரும்பி வந்த 15 வது நாள் அந்த சொத்தின் உரிமையாளர் அந்த பெண்மணி குருசடியில் வந்து மெழுகுவத்தி கொழுத்தி வைத்து ஜெபித்துவிட்டு இவ்விடத்தை செக்கறியுடை வீடு எவிடே என்று கேட்டு எனது வீட்டில் வந்தார்கள். எனது தோட்டத்தில் குலை ஒடிந்த கிடந்த இளனி வீட்டில் இருந்ததால் ஒரு இளநீ வெட்டி குடிக்க கொடுத்தேன். இளநீ குடித்துவிட்டு "சாறே இனி நமக்கு பறஞ்சதுக 8000 ரூபாய்க்கு இடவாடு நடத்தோம்" என்றார்கள். நான் ஆண்டவருக்கு நன்றி மனதில் நினைத்துவிட்டு "நிங்களுடே எடவாடு நெங்கக்கு வேண்டா பணத்தினை திரிச்சு கொடுத்தேன் என்றேன். உடனடியாக சற்றும் எதிர்பாராத விதமாக அவர் தெவத்தினானு சார் ஞான் உறங்க 15 திவசமாகுந்நூ என்னை ரச்சிக்கணும்" என்று என் காலில் விழுந்தார்.

பின் நான் பொருளாளர் R. தன்சிலாஸ், உதவி தலைர் K. ராஜையன் இவர்களை அழைத்து கொண்டு எல்லோருமாக திரித்துவபுரம் Fr. V. ராபர்ட் அடிகளை சந்தித்து பத்திர பதிவு தேதி குறிப்பிட்டு அவர் சொன்னதற்கு இணங்க அருமனை ரெஜிஸ்டர் அலுவலகத்தில் வைத்துமுன்பிரமாணத்தில் சென்று நிலம் பத்திர பதிவு செய்தோம் ஆனால் அந்த நேரம் 60 சென்று தான்இருந்தது அதற்கு ரூபாய் 480000 கொடுத்தோம்.

இந்தசொத்து வாங்க நாகர்கோவில் சவுத்து இந்திய வங்கியில் இருந்து 1,00,000 ரூபாய் கடன் ஆயர் இல்லம் வழியாக பெற்றதற்கு M. மரிய சிசில், R. தனிஸ்லாஸ் ஆகிய இருவரும் செயலர், பொருளர் என்ற முறையில் ஜாமீன் கை ஒப்பம் போட்டு கொடுத்து பணம் பெற்றோம்.

இவ்வாறு அந்தோணியாரின் அதிசமயத்தால் வாங்கிய பூமி இது.

## புனித அந்தோணியாரால் பெற்ற உதவி



திரு. B. தனுஸ்லாஸ்,
சாலியன்விளை அன்பியம்

1952 – ல் திருத்துவபுரத்தில் வசிக்கும் எனது பெரியம்மா மகள் S.S.L.C தேர்வு மூன்று முறை எழுதி தோல்வி அடைந்தார் அவனது சங்கடம் கண்டு எனது அம்மா வெட்டுவெந்நியில் எங்கள் இல்லத்தில் அழைத்து வந்து அவள் நிலமையை எனது தந்தையிடம் கூற அவரும் மார்த்தாண்டம் அரசு பள்ளியில் சேர்த்து படிக்க வைத்தார். எனது தந்தை அந்தோணியாரிடம் தனிப்பற்று வைத்தவர். ஆற்றிற்கு குளிக்க செல்லும் போது புனிதரிடம் எனது அக்கா தேர்வில் வெற்றி பெறவும் வெற்றி பெற்றால் ஐந்து பக்கா அரிசி, ஒரு பக்கா பயறுக்கு கஞ்சித் தர்மம் செய்வதாக வேண்டினார். எனது தந்தை அப்போது அரசு மருத்துவமனை இருக்கும் இடத்தில் அரசு பயணிகள் விடுதி இருந்தது. அதில் எனது தந்தை பணி செய்து வந்தார். எனது அக்கா தேர்வில் அதிக மதிப்பெண்களோடு வெற்றி பெற்றார்.

புனிதரிடம் வேண்டி கொண்டதின் படி புனிதரின் திருமுன் அன்னதானம் வழங்கி புனிதருக்கு நன்றி செலுத்தினார் எனது சிறு வயதிலே புனிதரிடம் நம்பிக்கையோடு வேண்டுவோருக்கு உதவிகள் வழங்கியுள்ளனர். புனிதருக்கு கோடி, கோடி நன்றி.

# வெட்டுவெந்நி புனிதரின் புதுமைகள்



1. வள்ளவிளையை சார்ந்த சாபு என்பவரது மகள் S. ஜெனிபர் 22/6/2005 அன்று இரவு 8.30 மணியளவில் 2–வது மாடியில் விளையாடி கொண்டிருக்கும் போதுதவறி கீழே விழுந்தாள். மயக்கமாக இருந்த மகளை வெட்டுவெந்நி புனிதரிடம் ஜெபித்துக் கொண்டே திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனையில் சேர்த்தோம். புனிதர் அற்புதமாகக் குணப்படுத்தினார்.

2. மேல்புறம் ஆலுவிளையைச் சேர்ந்த M. கனகராஜ், M. ஆக்சலிஸ் மேரி தம்பதியருக்குத் திருமணமாகி 15 வருடங்களாகக் குழந்தைகள் இல்லை பல மருந்துகள் எடுத்தும் பலனில்லை இங்கு வந்து நம்பிக்கையுடன் ஜெபித்து 20.6.2005 அன்று அழகான ஒருஆண் குழந்தை அந்தோணியார் பரிந்துரையால் கிடைத்தது.

3. புத்தன் சந்தையைச் சேர்ந்த தட்டான்விளை குமாரபுரம் முந்தரி ஆலையில் கனகம் என்பவர் நின்று கொண்டிருந்த போது அவரது 4 வயது பேத்தி ஷீபாவை காலை 9 மணியளவில் காணவில்லை. 2.30 மணிக்கு ஒரு முனகல் சத்தம் கேட்க, அங்கு பார்த்தபோது 80 மூடை முந்திரி தோடுகள் இவள்மீது விழுந்து அதன் அடியில் கிடந்தாள். அந்தோணியாரிடம் வேண்டி அற்புதமாக நலம் கிடைத்தது. அவளது கழுத்து நிமிர்ந்து இருக்க முடியாத நிலையில் குழந்தையை வெட்டுவெந்நி அந்தோணியார் பாதத்தில் கொண்டு வந்து, கூண்டில் முத்தம் செய்து வணங்கியதால் பேத்தி ஷீபாவுக்கு முழு சுகம் கிடைத்தது.

4. வயக்கரை கப்பியறைப் பகுதியைச்சேர்ந்த K. ரெத்தினதாஸ், T. கீதா தம்பதியரின் 3 1/2 வயது மகனுக்கு கையில் ஒரு கட்டி. மருத்துவர் பார்த்ததில் முதுகு எலும்புக்கு இடையிலும் ஒரு கட்டி. பரிசோதனையில் அதுபுற்று நோய் கட்டியாக இருந்தது. மருத்துவமனையில் ஆப்பரேஷன் நடக்கும் போது நாங்கள் வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் ஜெபித்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது என்மகன் பக்கத்தில் ஒருவர் கையில் குழந்தையுடன் வந்து காட்சி கொடுத்துள்ளார். அது அந்தோணியார் அவரால் மகனுக்கு முழுசுகம் கிடைத்து என்றும் அந்த குழந்தை அதன்தாயிடம் நமதுவீட்டில் வளர்க்கும் ஒரு ஆடும், ஒரு மூடை அரிசியும் வெட்டுவெந்நி கோயிலுக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னான். அதன்படியே நாங்கள் கொடுத்தோம்.

5. அண்டுகோடு, ஈந்திகாலையைச் சேர்ந்த புஷ்பலீலா கணவர் ஜானுக்கு 21 ஆண்டுளாக ஒருவேலைக்கு வழக்கு நடைபெற்றது. அவ்வழக்கில் 7 தடவை வெற்றி பெற்றும் வேலை கிடைக்காத நிலையில் அந்தோணியார் பாதம் ஜெபித்து அதே வருடம் அந்த வேலை கிடைத்தது.

6. கப்பியறை, செல்லங்கோணத்தை சேர்ந்த T. மத்தியாஸ் ஸ்டெல்லா தம்பதியருக்கு 8 வருடங்களாக குழந்தையில்லை. மருந்து எடுத்து பயனில்லை. புனிதரிடம் வந்து ஜெபித்து கருவுற்று 7–வது மாதத்தில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. ஏழு மாதத்திலே பிறந்தாலும் அந்தோணியார் எவ்விதக் குறையுமின்றி அவனைக் காத்து வருகின்றார்.

7. தூய அந்தோணியார் மீது நம்பிக்கைக் கொண்ட திக்குறிச்சியை சேர்ந்த மச்சிங்காவிளை கமலபாய் மகன் ராஜேஷ் கேரளாவில் சிற்றாள் வேலைக்குச்சென்றிருந்த போது 2–வது மாடியில் இருந்து கீழே தவறி விழுந்தான். அவன் விழுந்த இடத்தில், கருங்கல், செங்கல், கம்பி இவைகள் கிடந்தும், அவனுக்கு எந்தவித அடியும் இல்லாமல் வெட்டுவெந்நி அந்தோணியார் காப்பாற்றினார்.

8. அதங்கோடு மேலூர் விளை S.T மங்காடு அஞ்சலைச் சேர்ந்த நேசையன் –றீத்தா தம்பதியருக்கு

திருமணமாகி 16 வருடங்களாகக் குழந்தை இல்லை. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் ஜெபித்து 27.11.2007 –ல் அழகிய ஆண் குழந்தை கிடைத்தது.

9. மடிச்சலைச் சேர்ந்த ரோஸ் ஜேனட் அங்கன்வாடி பணியாளர் வேலைக்கு 120000 கொடுத்தும் 6 மாதம் ஆகியும் வேலையும் இல்லை. பணமும் இல்லை என்ற நிலையில் வருத்தமுற்றனர். அந்தோணியார் பாதத்தில் வந்து விண்ணப்பம் எழுதி ஜெபித்து இரண்டாம் நாளில் பணம் திரும்பக் கிடைத்தது.

10. இரவிபுதூர் கடையைச் சேர்ந்த ஜாண்சன் மனைவி P. ஸ்ரீமதி 30 வருடமாக இழுப்பு நோய் இருந்தது. வாங்காத மருந்து இல்லை. போகாத மருத்துவமனை இல்லை. பணம் போனதுதான் மிச்சம் கடைசியாக வெட்டுவெந்நி புனிதர் பாதம் வந்து ஜெபித்து இழுப்பு நோய் முற்றிலுமாக நீங்கியது.

11. திக்குறிச்சியில் மாத்திரவிளை வீடு வேளச்சேரியைச் சேர்ந்த P. தங்கம் என்பவரது மனைவி S. லூர்துமேரி 4 1/2 வருடமாக நடக்க முடியாமல் இடுப்பு விளங்காமல் படுத்தபடுக்கையாக இருந்தார். மகளும், கணவருமாக தூக்கித்தான் வெளியில் கொண்டு வரக்கூடியநிலை. அறுவை சிகிட்சைச் செய்தாலும் பயனில்லை என மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் வெட்டுவெந்நி புனிதரிடம் கணவர் வந்து கண்ணீர் விட்டு செபித்துவிட்டு புனித எண்ணெய் வாங்கி தினமும் 3 வேளை மருந்துபோல கொடுக்க, 4 மாதத்தில் எழுந்துநடக்கத் தொடங்கினார். இபபொழுது யாருடைய உதவியும் இன்றி வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் செவ்வாய், வெள்ளி நாட்களில் தவறாமல் வந்து நன்றி செலுத்துகிறார்.

12. கொடுங்குளத்தைச் சேர்ந்த பெபியான், புளோறன்– சியாள் மகன் அஸ்வின்பெர்டினல் தீராத தலைவலி, வாந்தியால் அவதிப்பட நாகர்கோவில், திருவனந்தபுரம் என பல பிரபல மருத்துவமனைகளில் சென்று மருத்துவசோதனை செய்து மருந்து வாங்கியும் தீரவில்லை. இந்நிலையில் வெடடுவெந்நி புனிதரிடம் வந்து புனித எண்ணையும், புதுமைக் கஞ்சியும் கொடுத்து, வாந்தியும் தலைவலியும் தீர்ந்தது. இவனுக்கு கொடுத்த மருந்துகளின் பக்கவிளைவாக இருகண்களின் பார்வையும் முற்றிலுமாகப் போய்விட்டது. திருநெல்வேலியிலுள்ள பிரபல கண்மருத்துவ மனையில் பரிசோதனைச் செய்த போது கண்பார்வை கிடைப்பது இனி கடினம் எனக்கூற வெட்டுவெந்நி புனிதரிடம் மகனைக் கொண்டு வந்து திருப்பலி ஜெபவேளையில் ஜெபித்துவிட்டு வீட்டிற்கு சென்றோம், அவன் செய்தித்தாளை எடுத்து வாசிக்கிறான். அதை பார்த்த எங்களுக்கு ஒரே அதிசயம். திகைத்துப்போய் அடுத்தநாள் திரும்பவும் திருநெல்வேலிக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவர்கள் பரசோதனைச் செய்துவிட்டு பையனுக்கு இரண்டு கண்களும் நன்றாகத் தெரிகிறது என்றார்கள். புதுமை செய்த புனிதருக்குக் கோடி நன்றிகள்.

13. திருவட்டார் அருகே கேசவபுரம் நெடியவிளையைச் சேர்ந்த ஜாண்சன் செல்வி தம்பதியரின் 3–வது பெண் குழந்தை 3 3/4 வயது வரை நடக்காமல் இருந்தாள். கொண்டு போகாத மருத்துவமனை இல்லை. வாரம் தோறும் மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதுதான் அவர்களது வேலை. மருத்துவர்கள் கைவிட்ட நிலையில் பக்கத்திலுள்ள ஒரு உறவினர் வெட்டுவெந்நி புனிதரிடம் கொண்டு போகச் சொல்லி 6 மாதமாக புனிதரின் புதுமை எண்ணெயைக் காலில் தடவியும், 3 வேளை மருந்து போல உள்ளே குடித்தும் வந்தாள். என்ன அதிசயம்! சட்டென ஒரு நாள் பிள்ளை எழுந்து நடந்தாள். அந்தோணியார் அதிசயம் செய்தார்! நன்றிகள்!!

15. நான் விழுந்தயம்பலத்தைச் சேர்ந்த M. ஜாண்சிபாய் C.S.I சபையை சார்ந்தவர். நெஞ்சுவலியால்

கஷ்டப்பட்டு மருத்துவமனையில் சென்று பரிசோதனைச் செய்து, இதயத்தில் ஒரு மருத்துவ உபகரணம் பொருத்த வேண்டும். அதன்விலை ரூ. 3 லட்சம் ஆகும் என சொல்ல, எனக்குப் பணமில்லாததால் வெட்டுவெந்நி புனிதர் பாதம் வந்து கண்ணீருடன் ஜெபித்தேன். சில மாதங்களாக மருந்து சாப்பிட்டேன். மருந்துவாங்க காசும் இல்லாததால், மருந்தை நிறுத்திவிட்டு புனிதரிடம் ஜெபித்தேன். பிறகு கிம்ஸ் மருத்துவமனையில் சென்று பரிசோதனைசெய்த போது எந்த நோயும் இல்லை என மருத்துவர்களே ஆச்சரியப்பட வைத்த புனிதருக்கு நன்றிகள்.

16. செங்கொடியை சேர்ந்த சிவான்ஸ், சரோஜா தம்பதியருக்கு திருமணமாகி 10 ஆண்டுகள் குழந்தையில்லை. செல்லாத மருத்துவமனையில்லை. இறுதியில் தூய அந்தோணியாரிடம் வந்து செபித்தனர். புனிதர் அதிசயம் செய்தார். குழந்தை செல்வம் பெற்று மகிழ்ச்சியாக வாழ்கின்றனர்.

18. மூலச்சலைச் சேர்ந்த வில்சன், கிளாடிஸ்ட் தம்பதியரின் மகனுக்கு பத்மநாபபுரம்கோட்டைப் பக்கத்தில் வைத்து நடந்த விபத்தில், ஆசாரிபள்ளம் மருத்துவக் கல்லூரியில் இருந்து திரும்ப விட்டநிலையில் வெட்டுவெந்நி அந்தோணியாரே உமது சமூகம் வழியாக அனந்தபுரி மருத்துவமனைக்குப் போகின்றோம். எங்கள் பிள்ளைக்கு உயிர் பிச்சைத்தாரும் எங்கள் மகன் கூட வரும் என வேண்டினோம். கண்ணில் ( 1 நரம்பும் , மூளையில் இரத்தக் கட்டும், மண்டை ஓடு பொருத்து விட்டும்) என மூன்று ஆப்பரேஷன் நடந்தது. அவனுக்கு உயிர் பிச்சைக்கொடுத்தது அந்தோணியார்தான் என நம்பிக்கையோடு இன்றும் நன்றி செலுத்துகின்றோம்.

19. முள்ளூர் துறையைச் சேர்ந்த சலோமியின் மகன் லினோ கடலில் மீன்பிடிக்கச் சென்றபோது புயலில் சிக்கிக் காணாமல் போய் விட்டார். வெட்டுவெந்நிக்கு வந்து வேதனையோடு செபிக்க மறுநாள் அவர் பத்திரமாக இருப்பதாகத் தகவல் கிடைத்தது. அடுத்தநாள்அவர் வீடு வந்தார். நன்றிகள்.

20. குழித்துறை பாலவிளை குளத்தடிவிளையைச் சேர்ந்த J. றோசினி 2008 ஜூன் 13 திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது. எங்களிடமிருந்து கடன்வாங்கியவர்கள் தருவதாக வாக்களித்தவர்கள் யாரும் பணம் தரவில்லை. திருமணம் நடைபெற 1 வாரமே இருக்க கணவர், மனைவி 3 பிள்ளைகள் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுததனர். அந்நேரத்தில் வெட்டுவெந்நியைப் பற்றிக் கேள்விப்பட்டு தினமும் வந்து அழுது ஜெபித்தனர். என்ன ஆச்சரியம்! திருமணத்திற்கு முந்தய நாள் ஒவ்வொருவராக வந்து நகை, பீரோ, கட்டில் பணம் என கொடுத்து உதவி செய்து எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றினர். நன்றியாக என்னிடமிருந்த தங்கச்சுட்டியை காணிக்கை வைத்திருக்கின்றேன்.

21. ஆறுகாணி சருவிளையைச் சேர்ந்த ஞானசெல்வத்தின் கணவர் செல்லையன் பாறசாலை S.P. மருத்துவமனையில் இனி 1 மணி நேரம் தான் உயிருடன் இருப்பார். எனவே மெடிக்கல் காலேஜ் மருத்துவமனைக்கு கொண்டு போங்கள். நாடித்துடிப்பு குறைந்தது. எனவே 1மணி நேரத்திற்குள் மெடிக்கல் காலேஜ் செல்லவும் முடியாது எனக்கூற மனைவி ஞானச் செல்வம் வெட்டுவெந்நி அந்தோணியாரே என் கணவரைக் காப்பாற்றும் என்று கதறி அழுதார். மருத்துவருக்கெல்லாம் மேலான மருத்துவராகிய அந்தோணியார் அற்புதம் செய்து 4 நாட்களில் கணவர் எழுந்து உட்கார்ந்தார்.

22. மாத்தூரைச் சேர்ந்த தேவதாஸ் சரஸ்வதி என்பவரின் மகன் கல்லுபாலம் என்னுமிடத்தில் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டதும் அங்கு நின்றவர்கள் அவன் இறந்து போய் விட்டான் என நினைத்தனர். பிறகு மருத்துவமனையில் சேர்ந்தனர். 3 நாட்கள் ஞாபகம் இல்லை. அந்தோணியாரிடம் ஜெபித்து சுகம் கிடைத்தது. கோடி நன்றிகள்.



# நமதாலயம்



*R. மேரி ஜெயந்தி*



நால்வகை நிலங்கள்
கொஞ்சி மகிழும்
தேன் தமிழும் – பூந்
தேனும் அள்ளி வழங்கும்.....
மார்த்தாண்டம் மாநகரில்
வெட்டுவெந்நி ஊரினிலே
பல் சமய ஒற்றுமையாய் ஓங்கி நிற்கும்
புனித அந்தோணியார் திருத்தலப்பங்கே,
சங்கடங்கள் தீர்க்கின்ற தாய்நிலமே...
நின் வரலாற்றை அறிவோமா!

தூய தோமையார் வந்ததாலே
குமரி மண்ணும் கிறிஸ்தவத்தில் மலர்ந்ததுவே
வருடங்களின் வளர்ச்சியிலே
நமதூரின் நம்பிக்கை நங்கூரமாய்
முன்னோரின் மொழிகளில் அறிந்தோமே!

வெட்டு வெந்நியின் அமைவிடம்
மார்த்தாண்ட வர்மா ஆண்டவிடம்
டச்சு தளபதி டிலனாயால் மன மாற்றம்
நீலகண்ட பிள்ளை தேவசகாயமாய் மதமாற்றம்...
அரண்மனை சுவர்களும் அறிந்தது
ஆழமாய் கிறிஸ்தவம் தழைத்தது.

வழிப்போக்கர் இளைப்பாற
சப்பாத்து பாலம் துணையாக
சத்திரமும் சுமை தாங்கியும் சாட்சி சொன்னது
நமதூரின் குருசடி காட்சியானது.

வனங்களின் அடர்த்தி பயமூட்டும்
குருசடி அகலோ வழிகாட்டும்
கலங்கரைக் கல்லாய் நின்றபடி
காவல் காத்தது முன்னாடி.

காட்டு வழியில் கொள்ளையர் நடமாட
குருசடி பகுதியில் மக்கள் காக்கப்பட
குருசடி மீது நம்பிக்கை மேலோங்க
புனித அந்தோணியார் திரு படத்தையும் வைத்திட
புனிதப்பட்டது நம் புண்ணிய பூமி.

பக்தியின் பாதை விசாலப்பட
பக்தியாய் மக்கள் வழிபட
சுரூபத்துடன் கூடிய கூண்டு அமைக்கப்பட,
குழித்துறை பால இத்தாலி, பெல்ஜிய ஊழியர்கள்
அகன்ற குருசடி உருவாக்கி
அந்தோணியார் சொரூபம் நிறுவினர்
ஆண்டவன் புகழ் சாற்றினர்.

ஆண்டுகள் பல இவ்விடமே
மத நல்லிணக்க இடமாக இருந்ததுவே,
பல் சமய நண்பர்களின் நட்பினிலே
பராமரிப்பு கமிட்டியும் வந்ததுவே..

"ஜாதி மத பேதுமின்றி
வெட்டுவெந்தி அந்தோணியார் குருசடி திருவிழா"
சிறப்பாய் மூன்று நாட்கள் நடந்ததுவே..
அன்னதானமும் அருமையாய் சிறந்ததுவே...

கிறிஸ்தவ நம்பிக்கை ஓங்கிடவே...
குருசடி சிற்றாலயமாக உருவானதே,
கோபுரத்துடன் சிற்றாலயம் விரிவானது.
திருவிழா நாட்கள் அதிகமானது.

குடும்பங்கள் எண்ணிக்கை அதிகமானது.
முதல் திருவிருந்து உறுதி பூசுதல் நடைபெற்றது.
மறைக்கல்வி மன்றம் தொடங்கியது.
திருத்துவபுர கிளை பங்காக
நம் பங்கு உருவானது.

கோட்டாறு மறைமாவட்ட ஜூபிலி வந்ததுவே
கோடி அற்புதர் அந்தோணியார் ஆலயம்
திருத்தல நிலைக்கு உயர்ந்ததே
2009–ம் ஆண்டிலே குமரியின் முதன்மை திருத்தலமாய்
தீரா நம்பிக்கை ஆழமாக
தனிப்பங்காய் ஜொலிக்கிறதே!

சபைகள், இயக்கங்கள் தொடங்கப்பட..
ஆலயம் நன்றாய் வளர்ச்சி பெற..
நிலங்கள் முறையே வாங்கப்பட..
விதிகள் முறையாய் வகுக்கப்பட..
திட்டங்கள் பலவும் சேர்க்கப்பட..
நிமிர்ந்து நிற்கிறது நமதாலயம்!

# நினைவலைகள்















































ST. ANTONY'S SHRINE
VETTUVENNY
EXTENSION BLESSED BY
The Most Rev Leon A. Tharmaraj DD
BISHOP OF KOTTAR














# சமய நல்லிணக்கம்










# அன்னதானம்













# சமபந்தி துவக்கம் 2000 ஆண்டு


















# கிறிஸ்மஸ் குடில்















D.R. பிரியதர்சினி

# கரை சேர்க்கும் ஓடம்
## எம் பாதுகாவலர்

வற்றாத வளங்கொழிக்கும் தாமிரபரணி
ஆற்றின் கரையில் கண்கவர் சோலைகள் நடுவில்
மேம்பாலத்தில் செல்வோர்க்கும் மேலான காட்சியாகி
பல்சமய மக்களும் பாங்குடனே வாழ்ந்திட
எதிர்புறம் கண்டன்சாஸ்தா கோயிலும் காட்சிதர
சாதிமத பேதமின்றி ஒற்றுமையாய் உறவாட
தேடிவருவோர்க்கெல்லாம் நாடியே வரங்களை
வாரிவாரி வழங்கிடும் புதுமை வள்ளல்
வெட்டுவெந்நி திருத்தலத்தில் விரும்பியே குடிகொண்ட
எங்கள் பாதுகாவலர் புனித அந்தோணியார்.

அண்டி வந்தோர்க்கு அடைக்கலமே! என்றும்
அமைதி இழந்தோர்க்கு ஆனந்தமே! அற்புதமே!
நற்கருணை பக்தியில் நாட்டம் மிக்கவரே!
நற்கருணை நாதரைக்கரத்தினில் ஏந்தி வந்து
கழுதையைக் கூட மண்டியிடச் செய்தவர்நீர்
கர்த்தர் இயேசுவின் மகிமையை உணர்த்தினீர்
நாத்திகனும் இதனால் இறை பக்தனானார்
தவறு செய்யாத தந்தைமனம் வாடியே உம்மைத்
தேடிட இறந்த குழந்தையை எழும்பவைத்து
உண்மையை உரைக்க வைத்த உத்தமரே!

நோயுற்றோருக்கு அருமருந்தே! மருத்துவரே!
உயிர்க்கொல்லி நோய்களால் உருக்குலைந்தோருக்கு
உயிர்கொடுத்துக் காக்கும் கருணை மருத்துவர்நீர்!

மக்கட் செல்வமின்றிமனம் வாடியே
மீளாத் துயரோடு வருவோர்க்கெல்லாம்
குழந்தைவரங்கொடுத்து குதூகலிக்கச் செய்கிறீர்!
மணம் முடிக்க வாய்ப்பின்றிவருவோரெல்லாம்
மணம் முடித்து மகிழச்செய்கின்றீர்!

கடன்சுமை கஷ்டங்கள் எனக்கதறுவோரைக்
கரைச்சேர்க்கும் ஓடமாய் உதவுகின்றீர்!
காணாமல்போன பொருளைத் தேடி
கண்ணீர்சிந்தி வருவோர்க்கெல்லாம்
காட்டித் தந்துகளிப்புறச் செய்யும்
கலங்கரைத் தீபமாய்த் திகழ்கின்றீர்!
அன்னதானம் வேண்டி உண்போர்
ஆயிரம் ஆயிரம் பேர் நலம் பெறுகின்றார்!

அற்புதங்களை விளக்கும் சாட்சியக்கடிதங்கள்
போற்றுதற்குரிய உம்புகழைப் பாரெங்கும்
பரப்பி வரும் இந்நாட்களில் உம்திருமுன்
ஏற்றமுடன் காட்சிதரும்திருச்சிலுவை அற்புதம்
புனித எண்ணெய்புனிதப்பொருட்களாய் நாளும்
புனிதமைடையும் பக்தர்களோ பல்லாயிரம் பேர்
இறைமக்களே! பக்தர்களே! இணைந்த வாருங்கள்!
எம்பாதுகாவலர் அந்தோங்ணியார் அருள் பெறுங்கள்!!



# இயற்கை – இறைவனின் ஓவியம்



திரிஷா ஷாரன்

**குறிப்புச் சட்டகம் :-**

முன்னுரை

இயற்கை இறைவனின் ஓவியம்

மலைமுகடின் அழகு – இறைவனின் பிரதிபலிப்பு

வயலும் நதிகளும்

கடற்கரை காட்சி

இயற்கை ஓர் இணையற்ற ஆசிரியர்

முடிவுரை

**முன்னுரை :-**

“இயற்கை இறைவனின் ஓவியம்” ஆஹா! என்ன ஒரு அற்புத வரி. இந்த ஒற்றை வரியில் நமக்கு பல விஷயங்களை விவரித்துள்ளார் கவிஞர் “டாந்தே அலிகியரி” இவர் கவிஞர் மட்டுமல்ல. மாறாக எழுத்தாளர் மற்றும் அரசியல் கருத்தாளர். தனது ரசனையால் நம்மைச் சிந்திக்க வைத்தவர். இவர் கி.பி. 1265 ம் ஆண்டு இத்தாலியிலுள்ள பிளாரன்ஸ் எனும் இடத்தில் பிறந்தார். 23 பாடல்களைப் பாடிய இவர் தனது “டிவைன் காமெடி” எனும் கவியின்பால் பிரபலமானார். இவரது உன்னத வரியே “ இயற்கை இறைவனின் ஓவியம்” ஆகும். இவர் தனது 56 – ம் வயதில் 1321 –ம் ஆண்டு இத்தாலியிலுள்ள ராவனெல்லா எனும் இடத்தில் இன்னுயிர் நீத்தார்.

மனிதன் என்றுமே இயற்கையோடு ஓர் ஆழமான உறவு கொண்டுள்ளான். ஏனெனில் இயற்கை அந்த இறைவனின் சாயல் இயற்கையோடு நாம் இரண்டற கலந்து நம்மை நாமே உயிர்ப்பித்து கொள்ளுதல் இதற்குச் சான்றாகும்.

காடுகளில் குயிலின் கூக்குரலும்...

மயிலின் தேன் நடையும்...

இயற்கை தரும் தென்றல் குளிரும்...

ஆஹா! என்னே விந்தை. அதனோடு கலரும் போது என்றும் உடல் மட்டுமல்ல; உள்ளமும் உருகுகிறது.

பூக்கள் விட்டு பூக்கள் சென்று அயராது தேன் எடுக்கும் வண்ணத்துப்பூச்சி; சில்லென்ற வண்டுகள்; இமைகளை மெல்லத் திறந்து ஒளிக்கற்றையை நம்மேல் பாய்ச்சும் சூரியன், தங்கி நிற்கும் துளி நீரின் மீது பட்டு தன் வண்ணங்களால் போர்வை போத்தி வானவில் சூடிடும் ஒளி; இன்னிசை இசைக்கும் கடற்கரை; சப்தம் சூடாத விண்வெளி பாதை.

ஆஹா! என்னே இறைவனின் படைப்பு. அவன் இதனை படைப்பதற்கு முன் என்னே கற்பனைக் கொண்டிருப்பான்!

இறைவா! எண்ணிலடங்கா ஓவியக் கவிகளைக் கண்டு வியந்து போகிறேன். எனை மறந்து போகிறேன்

**இயற்கை இறைவனின் ஓவியம் :**

இயற்கையில் கலந்திருக்கும் அத்தனை அழகையும் நம் சொற்களால் கூட அள்ள முடியாது. அதில் ஒளிந்து இருக்கும் புதுமைகளை நம் வாயால் சொல்ல முடியாது. ஆனால் ஒற்றை வரியில் அதனின் அத்தனை வர்ணனையும் ஒருங்கே அமைய கூறிவிட்டாள். இத்தாலிய கவிஞர் “டாந்தே அலிகியரி”. ஆஹா! இயற்கையின் புதுமைகளை அவர் கூறிய “இயற்கை இறைவனின் ஓவியம் எனும் ஒற்றை வரியில் புகுத்திவிடலாம் அன்றோ எனவே தான்

**“இறைவன் தான் இயற்கை**

**இயற்கை தான் இறைவன்”**

என்ற இணையற்ற உண்மையைப் பறைசாற்றலாம். தன் அளப்பரிய அழகால் நம் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட கள்வனும் இறைவனே...

இறைவா!

இதயத்தைப் பாதுகாக்க அரண் அமைத்த நீ அந்த அரணை தவிடுபொடியாக்கி இயற்கையைக் கொண்டு.. என் இதயத்தைக் கொள்ளை கொண்டு விட்டாயே...''

பௌர்ணமி வானின் தோற்றம். கடற்கரை மணல் போல் வானும், அதில் வெள்ளித் தட்டு போல் நிலவும், அதன் மேனியை முடிக்கொள்ளும் மேகமும், மின்மினிப் பூச்சிகள் போல் விண்மீன்களும்... ஐயோ! உன்னைக் கண்டு மதிமயங்கிப் போனேன். இறைவா! உன் படைப்பைக் கண்டு நான் பிரம்மித்துப் போனேன்.

**மலை முகடின் அழகு - இறைவனின் பிரதிபலிப்பு :**

அதோ, அந்த மலையின் உயரம்! மயிர்க் கூச்செறியச் செய்கிறது.. அந்த மலையின் மீது ஒய்வெடுக்கும் சில்லென்ற மேகம். நம்மை அதன் மேல் அமர அழைக்கிறது. மலைகளின் நடுவில் நின்று வானையும் மண்ணையும் எட்டிப் பார்த்தால்—என்னே இறைவனின் கற்பனைத் திறன்! அவன் கற்பனைக்கு முற்றுப்புள்ளி வைக்க அவனாலும் முடியாதோ ?

**"அரணினும் மேலான மலையே**
**உன் பாறை உடலில் – ஆஹா**
**வதைத்தானே பல வளங்கள்!"**
**உனைப் பார்க்கும் போது அடடா**
**இறைவனின் ஓங்கிய எண்ணம் தோன்றுதே..."**

அன்று டாந்தே கூட உன் அழகில் மதிமயங்கி சொக்கிப் போயிருப்பாரோ? அவர் அதனை விளக்க கட்டுரையோ, கவிதையே ஏதும் கூறவில்லை என்றாலும் மூன்றே வார்த்தைகள், "இயற்கை இறைவனின் ஓவியம்'' என இறைவனின் வர்ண ஜாலத்தை வர்ணித்தார். அது போதுமே.

பச்சைப் புற்களால் மூடிய ஆடையும், நீல குடையால் ஆன வானும், பஞ்சு போல் பறக்கும் பனிமூட்டமும், கண்ணாடி போல் பிரதிபலிக்கும் நீரோடையும், வீணையின்றி இசைக்கும் காற்றின் ஓசையும்.. அடடா! இறைவனின் கைவண்ணம், அவர் வரைந்து வைத்த ஓவியம்.

**வயலும் நதிகளும்:-**

இயற்கை என்ற இறைவனின் ஓவியத்தில் மிக அழகிய ஓவியம் மலை இடுக்கின் இடையினில் வெள்ளி உருகி ஓடி வருவது போல வளைந்து நெளிந்து ஓடிவரும் காட்டாறு. பின் சமதளத்தை நனைத்து பச்சை பட்டு விரித்தது போல் வயல் வெளிகளை உலகில் இறைவன் படைத்த படைப்புகளுக்கு உணவு உற்பத்தி செய்யும் விளை நிலமாக மாற்றி ஓடி ஓடி கடலில் போய் சங்கமமாகும் காட்சி இறைவனின் மிகப்பெரிய ஓவியமே!

பல வண்ணப் பூக்கள், எண்ணில் அடங்கா அழகு படைத்த வண்ணத்து பூச்சிகள் தேன் நுகரும் காட்சிகள். பலப்பல வடிவங்களில் பறந்து திரியும் பறவைகள், அவைகள் கட்டும் பலவடிவ புகலிடங்கள், விதவிதமான வண்ணமிகு விலங்குகள் வேறு எந்த ஓவியனும் வரைய முடியாத ஓவியங்கள்! அண்ட சராசரத்தில் அசையும் அசையா அத்தனைப் படைப்புகளுக்கும் படைத்த அனைத்து உறுப்புகளும் இனிய ஓவியமே. அந்த ஓவியத்திலும் கொண்ட பல வளங்கள் ஆஹா என்னே அழகு !

**கடற்கரைக் காட்சி :-**

அதிகாலையில் சூரியனின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அமைதியான கடற்கரை மணல்களும் கூட ஏங்கி நிற்கும் ரம்மியமான சூழல். நீலக் கடலின் ஓரத்தில் நீங்காக காவியமாய் ஆங்காங்கே காத்திருக்கும் படகுகள். கடலோரம் வீசும் தென்றல் காற்று இந்த ரம்மிய சூழலில் கடலின் உள்ளிருந்து வெட்கப்பட்டு மெல்ல நோக்கும் சூரியன்.

ஆஹா! அள்ள நினைக்கும் வண்ணம். கண்கள் குளிரும் காட்சி. கடல் நீரே நீ மெல்ல வந்து தொட்டு ஓடுகிறாயே... நாணமா என தோன்றுகிறது.

காரிருள் மூடிய வானின் நிலவும் அந்த கடற்கரையை ரசிக்கிறது. கட்டுடல் நிலாவே இயற்கையை ரசிக்கும் உன் ரசனையினால் நீயும் பிறை நிலவானாய்.

"கோடையின் தாகம் தீர்க்கும்
    வானின் அமுதம் மழை!
சில்லென்ற காற்றிற்கு
    இதமான சூரியன்!
பல வண்ண ஜரிகை பட்டை வானில்
    உடுத்திருக்கும் பானவில்!''
என எண்ணிலடங்கா ஓவியங்கள்.

தென்றலாய் நம்மை வருடிச் செல்லும் காற்றே! என்னுயிர் மூச்சாய் சுவாசிக்கப்பெற்று என்னவளானாய். என்னவளை என்னுள் செலுத்தும் அந்த இனியவன் மரமே.

## இயற்கை ஓர் இணையற்ற ஆசிரியர்:-

இத்தனை இனிய சூழல் கொண்ட இயற்கையை மேலோட்டமாய் காணும் போதே நாங்கள் மிதக்கிறோம். அதனை உற்று நோக்குபவன் அறிஞனினும் அறிஞனன்றோ! மரத்திலிருந்து விழும் கனி கூட விஞ்ஞானி ஐசக்குக்கு புவியீர்ப்பைப் பற்றி பாடம் கற்பித்தது. இறைவனின் ஓவியம் நமக்கு கற்பிக்கும் பாடங்கள் பல. அந்த நிழல்கூட பல நிஜங்களை நமக்கு புரிய வைக்கிறது.

## முடிவுரை : -

இறைவனின் ஒவ்வொரு படைப்பும் ஓர் அளப்பரிய ஓவியமே. அந்த ஓவியத்தின் அழகை விவரிக்க நம்மால் ஒரு போதும் முடியாது. ஆனாலும் அவரது ஓவியங்களுள் சிறந்த ஓவியம் என்பது மானிடன். மானிடன் இறைவனின் முதன்மை மற்றும் கனவுப் படைப்பு.

“கடவுளின் முதன்மை மற்றும் அரிய ஓவியம்... “மானிடன்” என்பது மறுக்க முடியாத உண்மை. டாந்தே கூட அதை விளக்கியே “இயற்கை இறைவனின் ஓவியம்” என்றார். ஓவியத்தைப் பாதுகாப்போம் – ரசிப்போம்!



# ஒரு பெண்ணின் பெருமை

| | | | |
|---|---|---|---|
| கருவறையில் | தாங்கினாள் | ஒருபெண் | தாயாக |
| உதிரத்தை | பாலாக்கினாள் | ஒரு பெண் | தாயாக |
| பலஇரவுகள் | தூக்கம்தொலைத்தாள் | ஒரு பெண் | அன்னையாக |
| பாசத்தில் | தாலாட்டினாள் | ஒரு பெண் | அன்னையாக |
| வகுப்பறையில் | தாங்கினாள் | ஒரு பெண் | ஆசிரியராக |
| நல்சமூகத்தை | உருவாக்கினாள் | ஒரு பெண் | ஆசிரியராக |
| அக்கரை | காட்டுவதில் | ஒரு பெண் | சகோதரியாக |
| மகிழ்ச்சியை | இறைப்பதில் | ஒரு பெண் | மகளாக |
| அழகில் | வியக்கவைக்கும் | ஒரு பெண் | தேவதையாக |
| இளைஞனை | ஈர்த்த | ஒரு பெண் | காதலியாக |
| மனதோடு | கரைவதில் | ஒருபெண் | மனைவியாக |
| கணவரின் | வளர்ச்சியில் | ஒருபெண் | ஆசானாக |
| அறிவில் | வழிநடத்தும் | ஒருபெண் | மந்திரியாக |
| சுமைகளைப் | பார்ப்பாள் | ஒருபெண் | சுகங்களாக |
| குடும்பத்திற்காக | உழைப்பவள் | ஒருபெண் | குலவிளக்காக |
| உடைந்த | மனங்களுக்கு | ஒருபெண் | நல்மருந்தாக |
| தோழமைக் | காட்டுவதில் | ஒருபெண் | தோழியாக |
| தியாகத்தின் | மறுவுருவானாள் | ஒருபெண் | தியாகியாக |
| விண்வெளி | சென்றாள் | ஒருபெண் | வீராங்கனையாக |
| போராடி | ஜெயித்தாள் | ஒருபெண் | போராளியாக |
| மனதளவில் | பலமானவள் | ஒருபெண் | சாமர்த்தியசாலியாக |
| கடவுள் | படைப்பிலே | ஒருபெண் | சிறந்தவளாக |
| நமக்காக | வாழ்பவள் | ஒருபெண் | அன்பு தெய்வமாக |
| இறைமையின் | உருவில் | ஒருபெண் | தாயாக |
| ஏனோ | இந்தப்பாக்கியம் ஆண்களுக்குக் கிடைக்கவில்லை | | |

# முயலும் ஆமையும்



## போட்டியின்றி இலக்கைத் தொடுவோம்



D. ஷீலாமலர்

*எம் சிறார் இயக்க மாணவர்களுக்கு ஒரு சிறுகதை*

ஒரு நாள் சும்மா இருந்த ஆமையை ஓட்டப்பந்தயத்திற்கு அழைத்தது முயல். போட்டி ஆரம்பமானது. முயலானது 5 நொடிகளில் பாதி தூரத்தைக் கடந்து விட்டது. ஆமையைப் பார்த்து புன்னகைத்து விட்டு ஒரு ஓரமாய் சென்று இளைப்பாறியது. இளைப்பாறிய முயல் தூங்கி விட்டது. நிதானமாக வந்த ஆமை வெற்றிப் படியைத் தொட்டுவிட்டது.

நீதி : செருக்கில்லாத நிதானம் வெற்றிதரும்.

தோற்றுப் போன முயல் திரும்பவும் போட்டி வைத்தது. தன் தோல்வியின் காரணத்தை ஆய்ந்தது. இந்த முறை மிக விரைவாக ஒடி வெற்றியடைந்தது.

நீதி : சுயதிறனாய்வு செய்தால் வெற்றி கிடைக்கும்.

தோற்று போன ஆமை திரும்பவும் போட்டிக்கு அழைத்தது. அதே நேரத்தில் தோற்ற சூழலை ஆராய்ந்தது. தரையில் முயலால் ஒடமுடியும். ஆனால் தண்ணீரில் என்னால் தானே நீந்த முடியும்.

இந்த முறை போட்டியின் இடத்தை முயல் தேர்வு செய்தது. எதிரே இருந்த காட்டுக்குள் தூரத்தில் இரந்த ஆலமரத்தைச் சென்றடைய வேண்டும். இரண்டும் போட்டியில் பங்கேற்று ஓடினது. பாதி தூரம் சென்றதும் அக்கரைக்குச் சென்று ஆலமரத்தைத் தொட்டு வெற்றி பெற்றது.

நீதி உன் எதிரியின் பலவீனமே உனக்கு பலமாக வாய்ப்புண்டு.

அதன் பிறகு ஆமையும் முயலும் நண்பர்களாயினர். அதே சூழல் அதே இலக்கு போட்டி ஆரம்பமானது சமதளத்தில் ஒடிய போது முயலின் முதுகில் ஆமையும், ஆற்றில் நீந்திய போது ஆமையின் முதுகில் முயலும் ஏறிக் கொண்டன. ஒரே நேரத்தில் இரண்டும் இலக்கை அடைந்தன. இருவரும் வெற்றிக்களிப்பில் கூவினர்.

நீதி நம் பலங்கள் இணைந்தன பலங்கள் தொலைந்தன. இலக்கை இணைந்து தொடுவதே இன்பம்.

போட்டி என்றாலே ஏன் ஒருவரே வெற்றி பெறவேண்டும் இருவருமே வெற்றிபெறக் கூடாதா? போட்டி மனப்பான்மையை ஒழிப்போம்!!



# அழகு



G. ராதிகா கிறிஸ்டாபல்



கருப்பு அழகா?
சிகப்பு அழகா?
பட்டிமன்றம் நடக்கிறது...
காகமும் அழகுதான்!
கார்மேகமும் அழகுதான்!

வெண்முயலும் அழகுதான்!
வான்முகிலும் அழகுதான்!

புறத்தின் அழகு என்றும் நிரந்தரமில்லை..
அகத்தின்அழகே... நிலையான அழகு!!!

# வெட்டுவெந்நியில் புதுமையின் நாயகன் ஆற்றிய புதுமைகளில் சில சாட்சியங்கள்

தொகுப்பு M.S. பிளாரன்ஸ் விஜிலா

1. ஆற்றூரை சார்ந்த அனிதா சபின் தம்பதியருக்கு திருமணமாகி 11 ஆண்டுகளாக குழந்தை இல்லை. பார்க்காத மருத்துவமும் இல்லை. இறுதியாக வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் ஜெபித்து குழந்தை வரம் கிடைத்தது.
2. பாகோடு பகுதியைச் சார்ந்த பிளவர் என்பவர்களது மகள் அஸ்வினியைப் பாம்பு கடித்து 15 நாட்களாக அவசர சிகிட்சைப் பிரிவில் மிகவும் கவலைக்கிடமாக இருந்து வந்தார்கள். வெட்டுவெந்நி அந்தோணியார் பாதத்தில் 22.9.2017 அன்று செவ்வாய் திருப்பலியில் அவளுக்காக ஜெபித்து அற்புதமாக உ யிர் பெற்றாள்.
3. வள்ளியூரைச் சேர்ந்த ராஜன் – அனிதா தம்பதியர் கணவர் ராஜனுக்கு உடல்நிலை மோசமாகி பிழைப்பது கடினம் என்ற நிலையில் கணவருக்கு சுகம் கிடைத்தால் தாலி செயினை வெட்டுவெந்நி அந்தோணியாருக்கு காணிக்கையாக வைப்பேன் என வேண்டி அற்புத சுகம் கிடைத்தது.
4. பனிச்சமூடு நல்லுகுழியை சேர்ந்த ஷீபா, மோகன் தம்பதியருக்கு திருமணமாகி 17 வருடங்களாக குழந்தை இல்லை. போகாத மருத்துவமனையும் இல்லை, போகாத இடங்களும் இல்லை. இறுதியாக வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் வந்து ஜெபித்து குழந்தைச் செல்வம் கிடைத்தது.
5. திருவரம்பு மாம்பள்ளிவிளை ரமேஷ் மகன் ஆகாஷ் மாடியில் விளையாடி கொண்டிருக்கும் போது மாடியிலிருந்து கீழே விழுந்தான். அவன் தாய் அந்தோணியாரே என கூப்பிட ஆகாஷிற்கு எந்தவித அடியோ, காயமோ இல்லாமல் அந்தோணியார் காத்தார்.
6. குழித்துறையை சேர்ந்த போற்றவிளை T. மேரி மேயர் மகளுக்கு 3 ½ ஆண்டுகளாக இரத்தபோக்கு தொடர்ந்து இருந்தது பல மருத்துவமனைகளுக்கு சென்று சுகம் கிடைக்காமல் இறுதியாக வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் வந்து சுகம் கிடைத்தால் 10000 ரூபாய் காணிக்கை வைப்பேன் என வேண்டி சுகம் கிடைத்தது
7. நட்டாலத்தைச் சார்ந்த சகாயராணி, ஜாண் தம்பதியர் திருமணமாகி 18 வருடங்கள் குழந்தை இல்லை. பல மருத்துவ மனைகளுக்கு சென்றும் பயனில்லை. இறுதியாக வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் வந்து ஜெபித்து குழந்தை கிடைத்தது.
7. பூட்டேற்றியை சேர்ந்த G. ராஜகுமாரின் மனைவி மெர்லின் சுபா முதுகுவலியால் அவதிப்பட்டு பல பிரபல மருத்துவமனைகளில் அறுவைசிகிட்சை செய்ய வேண்டுமென்று கூறி வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் வந்து ஜெபித்து அறுவை சிகிட்சை இல்லாமல் அந்தோணியார் நலமளித்தார்.

# பெண்மையைப் போற்றுவோம்

– லிசிஜாய்



அந்திப் பொழுதினிலே
அன்னையுடன் வந்தவளே!
அனைவரையும் கவர்ந்து விட்டு
அமைதியாய் இருப்பவளே!
நீல வண்ணச் சோலையிலே
நீ நடந்துப் போகையிலே
நிலவொளியில் நானிருந்து
நிதம் உன்னைப் பார்க்கின்றேன்!

கண்களுக்கு விருந்தாக
காத்துக்கு மருந்தாக
வாழ்க்கைக்குத் துணையாகக்
கன்னியரைப் பார்க்கிறேன்!
பாவையர் இவர் இல்லையென்றால்
பாரினுக்கேது இன்பமென்று
பரமனை எண்ணி நானும்
பரவசம் அடைகின்றேன்
பெண்மையை போற்றுவதில்
பெருமை கொள்கின்றேன்
பெண்கள் வாழ்வு பெற
பேதங்கள் அகற்றிடுவோம்

# தூய அந்தோணியாரின் நாவன்மை





திருமதி A. ஜாக்குலின்

*'எல்லா நதிகளும் கடல் வந்து சேர்வதில்லை*
*எல்லா பூக்களும் கோவில் வந்து சேர்வதில்லை*
*எல்லா விதைகளும் விருட்சங்கள் ஆவதில்லை*
*எல்லா மனிதர்களும் கடவுளின் சாட்சியாய் வாழ்வதில்லை'*

பதுவைப் புனிதர் என்று செல்லமாக அழைக்கப்படும் தூய அந்தோணியார் தனது நாவன்மையால் கடவுளுக்கு சாட்சியாக வாழ்ந்தவர். கோடி அற்புதரும், நன்னாக்கணியாதவரும், திருக்குழந்தை இயேசுவை தம் திருக்கரத்தில் ஏந்தும் பாக்கியம் பெற்றவருமான அந்தோணியார் பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்த போது ஒரு முறை புதிதாக குருபட்டம் பெற்ற ஒருவர் முதல் திருப்பலி நிறைவேற்றுவதற்காக அருகில் இருந்த ஊருக்கு வந்தார். திருப்பலியில் மறையுரை நிகழ்த்த வேண்டிய குருவரவில்லை. பங்கு குரு கலங்கினார். மறையுரையாற்ற பலரைக் கேட்டார். பயந்து பின் வாங்கினார்கள். அந்தோணியாரின் தலைமைக்குரு உமக்கு தூய ஆவி சொல்லும் படி பேசும் என்றார். அந்தோணியார் கீழ்படிந்து மறையுரை நிகழ்த்த ஒப்புக்கொண்டார். அவரது மறையுரையைக் கேட்டவர்கள் அவரது நாவன்மையை நினைத்து பிரமித்து போனார்கள். குருபட்ட மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க நியமித்தார்கள்.

ஒரு முறை ரீமின பட்டணத்திற்குச் சென்று நற்செய்தி அறிவித்தார்கள். மக்கள் அவரை எள்ளி நகையாடினார்கள். யாரும் அவரது போதனையைக் கேட்க தயாராய் இல்லை, அந்தோணியார் கடற்கரைக்குச் சென்றார். கடலை பார்த்து 'என் சகோதரமீன்களே' என்றழைத்தார். என்ன ஆச்சரியம்! என்ன விந்தை! மீன்களெல்லாம் கடலின் ஆழத்திலிருந்து வந்து அலைமட்டத் திற்கு மேலே தலையை உயர்த்தி மறையுரையை கேட்க ஆரம்பித்தன. கேலியாக பேசிய மக்கள் கூட்டம் என்னநடக்கிறது என்று பார்ப்போம் என வந்தார்கள். அப்போது மீன்கள் எல்லாம் அந்தோணியாரின் நாவை உன்னிப்பாக கவனித்தது மெய்மறந்து மறையுரையை கேட்டன. மக்கள் அவரது நாவன்மையால் மனம் மாறினார்கள். அந்தோணியார் கால்நடையாக ஊர் ஊராய் சென்று அன்னை மரியாவைப் பற்றியும் இயேசுவைப்பற்றியும் போதித்தார். இறைவனின் வார்த்தையை முழக்கமிட்டார். கிறிஸ்துவை நம் பாதவர்களை தனது நாவன்மையால் நம்ப வைத்தார் இவ்வாறு தூய அந்தோணியார் தனது நாவன்மையால் கடவுளுக்காகவே வாழ்ந்து கடவுளுக்குச் சாட்சியாகவே இறந்து, அருஞ் செயல்களால் நம்மோடு வாழ்கிறார்.

## வாழ்க்கை என்பது

| | | |
|---|---|---|
| ஒரு கனவு | - | முயற்சி செய்யுங்கள் |
| ஒரு சந்தர்ப்பம் | - | நழுவ விடாதீர்கள் |
| ஒரு கடமை | - | நிறைவேற்றுங்கள் |
| ஒரு லட்சியம் | - | சாதியுங்கள் |
| ஒரு சோகம் | - | தாங்கிக் கொள்ளுங்கள் |
| ஒரு போராட்டம் | - | வென்று காட்டுங்கள் |
| ஒரு பயணம் | - | நேர்வழியில் வாழுங்கள் |

By
J.L.Jenifer Josi



# என்று மாறும் இந்த நிலை



லீமா ஜெசிந்தா

நாளைய உலகம் மாணவர் கையில் இன்றைய மாணவர்களோ நம் கையில் ஒரு ஆசிரியரின் விடியல் மாணவனை நோக்கியது. மாண் + அவன் = மாணவன். மாண் என்றால் பெருமை. மாண+ அவர்கள் – மாணவர்கள், என்று, மாணவர்களைப் பெருமைப்படுத்தி வருகின்றோம். மண்ணைக் குழைத்தால் தான் பாண்டம் வரும். கல்லைச் செதுக்கினால் தான் சிற்பம் வரும் மாணவர்களை செம்மைப்படுத்தினால் தான் நாடு உயரும் அன்று தேசத்தலைவர்கள், அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் இன்னும் பலர் தங்கள்இளமைப்பருவத்திலிருந்தே விடாமுயற்சியுடன் போராடி ஜெயித்தவர்கள். இப்போது இவை மாறி பிள்ளைகளின் சொகுசு வாழ்வுக்காகப் பெற்றோர்கள் போராடி ஜெயிக்க வைக்கிறார்கள். இன்று அறிவியல் விரிகிறது. அறிவியல் சுருங்குகிறது. அழிவு மேலோங்குகிறது.

“எந்தக் குழந்தையும் நல்லக்குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அது நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பதிலே” இது பாடல் வரிகள். அன்னை வளர்த்தால் மட்டும் வளமை ஆகாது. தாய்பெற்று தந்தை வளர்க்க வேண்டும். தாய் ‘தால்’ ஆட்டி வளர்ப்பவள் தந்தை ‘சீர்’ படுத்தி வளர்ப்பவன். சீர் இல்லை என்றால் அது ‘தறுதலை’ என்பார்கள். 5 – ல் வளையாதது 50–ல் வளையாது. மாணவரை உருவாக்கும் முதல் பொறுப்பும் கடமையும் பெற்றோர்களுக்கும் இரடண்டாவது ஆசிரியருக்கும் உண்டு.

ஆசிரியரின் ஆசீர் இல்லை என்றால் ஏற்றமிகு இந்தியாவை ஏட்டில் கூட எழுத இயலாது. ஆசு+ இரியர் = ஆசிரியர். ஆசு– என்றால் குற்றம். இரியர் – என்றால் நீக்குபவர் குற்றம் நீக்குபவர் என்று பொருள். உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை. மற்றொன்று ஆசிரியரின் வகுப்பறை. தாயின் கருவறையில் ஒருவன் உயிரைப் பெறுகிறான் ஆசிரியரின் வகுப்பறையில் அவன்அறிவைப் பெறுகிறான். ஆசிரியர் ஓர் ஆளுமைச் சிற்பி. ஆசிரியர் ஏங்கினால் இந்த நாடும் ஏங்கும் – ஆசிரியர் தேங்கினால் இந்த நாடும் தேங்கும்.

ஆசிரியர்கள் ஓயாத உழைப்பவர்கள். வீட்டில் தன்னை உருவாக்கி, பின்பு வகுப்பறையில் மாணவர்களை உருவாக்குகிறவர்கள் ஓய்வு என்பது அவர்களுக்கு இல்லை. தன் பிள்ளைகள், வயதான பெற்றோர், குடும்பத்தை அரைகுறையாக தவிக்கவிட்டு விட்டு ஓடாய் உழைப்பவர்கள். அவர்கள் வாங்கும் சம்பளத்தை எடைபோடும் மக்கள் அவர்களின் துன்பத்தை ஒருநாள் கூட சிந்தித்துப் பார்த்ததில்லை. எந்தத் துறையில் பணிபுரிபவருக்கும் இப்படி ஒரு சிரமம் இருப்பதில்லை. வீட்டில் வந்து நிம்மதியாக தூங்குவார்கள். ஆனால் ஆசிரியர் ஒரு கட்டு தேர்வுத்தாள், ஒரு கட்டு நோட்டுக் திருத்தம் செய்வதற்கென்று மேலும் அடுத்த நாள் வகுப்பிற்கு தன்னை தயார் படுத்துதல் இப்படி இரவு 12 மணிக்கு படுக்கையறைச் சென்று காலை 4 மணிக்கு எழுந்து மறுநாள் பணியைத் தொடரும் ஆசிரியருக்கு, இன்று வகுப்பறையில் ஏமாற்றமே. பூப்போன்ற முகங்களின் புன்னகையை எதிர்நோக்கி வரும் ஆசிரியரை எதிர்த்து மாணவர்கள் செயல்படுவதும் தீய வழிகளில் செல்வதும், கொலை, கொள்ளை அடிதடி செயல்களில் ஈடுபடுவது ஆசிரியர்களை அடிப்பது, கத்தியால் குத்துவது, ஆசிரியரை தரக்குறைவாகப் பேசுவது, கேலிகூத்து செய்வது, வகுப்பறையில் ஆசிரியர் முன் குத்தாட்டம் போடுவது போதைப் பொருள்கள் போன்றவற்றை பள்ளி வளாகத்திற்குள்ளும் வெளியிலும் பயன்படுத்துவது போன்ற நிகழ்வுகள் சில ஆண்டுகளாக அரங்கேறுவது கொடுமையிலும் கொடுமை. பெற்றோரே சிந்திப்பீர்! உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் என்னவென்று ?

பெற்றோரே! தட்டிக்கொடுத்து பயிற்றுவிக்கத் தெரிந்த ஆசிரியருக்கு தட்டிக்கேட்டு திருத்தவும் தெரியும். ஆனால் தட்டிக் கேட்கும் ஆசிரியரக்கு இன்று ஜெயில் தண்டனை. பிள்ளைகள் செய்யும் தவறுக்கு ஆசிரியர் தண்டனை பெறும் நிலை தொடர்கிறது. அரசின் சட்டதிட்டங்கள் இன்று பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் சாதகமாக உள்ளது. பெற்றோரே உங்கள் பிள்ளைகளின் எதிர் காலத்துக்காகச் சொத்து சேர்த்து வைப்பது அல்ல நல்ல புகழை சேர்த்து வைக்க கற்றுக் கொடுங்கள் பிள்ளைகளின் முன் வைத்து தயவு செய்து ஆசிரியரை ஒருமையில் திட்டாதீர்கள். நீ

என்ன சொன்னாய்? ஏன் செய்தாய்? இப்படி செய்யலாமா? என்ற கேள்விக்குள் தங்கள் பிள்ளைகளை வளர்த்துக் கொள்ளுங்கள்

மாணவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை என்றால் தாங்க முடிவதில்லை. பெற்றோர்களுக்கு பிள்ளைகளை பசாசுகள் உயிரை வாங்குதுக என்றெல்லாம் திட்டிதீர்க்கின்றனர். ஆனால் ஆசிரியர்கள் முழுநேரமும் கற்பிப்பதும், கண்காணிப்பதும் பஞ்சாயத்து நடத்துவதுமாக உள்ளனர். இப்படிப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நீங்கள் செய்யும் நன்றிக் கடன் என்ன? உங்கள் பிள்ளைகள் கொடுக்கும் மன உளைச்சலும், தண்டனையுமா?

எல்லா பெற்றோரையும் குறை சொல்லமுடியாது. சிலர் தங்கள் பிள்ளை தவறு செய்யும் போது அதற்கான தண்டனையைக் கொடுங்கள் என்று கூறுகிறார்கள். படிப்பு ஏறாது மாணவனாக இருந்தாலும் பரவாயில்லை. அவன் ஆசிரியரின் கண் பார்வையில் 8 மணி நேரம் இருந்து பக்குவப்பட்டு வருவான் என்று கூறுபவர்களும் உண்டு.

மனிதனை மனிதனாக்கும் இடம் வகுப்பறை மாணவனை பக்குவப்படுத்துகிற இடம் வகுப்பறை. உணர்ச்சிகள் சங்கமிக்கும் இடம் வகுப்பறை. ரத்தமும் சதையுமான ஒரு மனிதனின் உணர்வலையை உணர்கின்ற இடம் வகுப்பறை. 'On line' வகுப்போ 'U' Tube Video பாடமும் ஒரு மாணவனை சிறந்த மனிதனாக்க முடியாது. இன்று மாணவர்கள் கை நழுவி போகக் காரணம் பெற்றோரும் அரசும் தான். ஆகவே பெற்றோருக்கு அரசும் இந்த சமூகமும் இணைந்து இதற்கு சரியான சட்ட திட்டங்களை வரையறை செய்தால் மட்டுமே மாணவ சமுதாயத்தைக் காப்பாற்ற முடியும்.

சிந்திப்பீர்! செயல்படுவீர்!

# பார்போற்றும் புனிதர்

ஆதியிலே சிலுவை இருந்தது
அதனருகில் குருசடி வந்தது
கவனிப்பார் யாருமின்றி காடுபிடித்தது
பூசை இன்றி பூச்செடி பூத்திருந்தது

பாதசாரிகள் பலர் பார்வைபடவே
பதுவையிலே பிறந்தவருக்கு
புதுமையிலே சிறந்தவருக்கு
புதுப்பொலிவை கொடுத்தார்கள்

அருகுபோல் ஆரம்பித்த ஆலயம்
குமரியில் மங்கா புகழ் பரவிட
முதன்மைத் திருத்தலமாய் உருவெடுத்தது

தாயைத் தேடும் சேயைப்போல
தன்னைத் தேடும் மாந்தருக்கு
தாய்போல் இருந்து தேற்றிடுவார்
தந்தையாய் தினம் சுமந்திடுவார்

சாதிமத பேதம் நீங்கி
வரங்களால் நிறைந்திடுவார்
வளமுடன் வாழ்வோம்
அவர் பெயரால்

நோய்கள் நீக்கிடுவார்
தீமை அகற்றிடுவார்
குழந்தை வரம் கொடுத்திடுவார்
கண்ணீர் துடைத்திடுவார்





R. கியாறிஸ்ட் விஜிலாறோஸ்



# மதநல்லிணக்கத்திற்கு வெட்டுவெந்நி



J.L. காலின் ஜோஷில்

முத்தமிழ் கவிபாடும் தமிழ் நாட்டில்
முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில்
முக்கனியின் வாசம் வீசும் மார்த்தாண்டம் நகரில்
மத நல்லிணக்கததிற்கு பெயர் பெற்ற வெட்டுவெந்நியில்

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில்
அசைந்தாடும் மேம்பாலத்தில் மேகத்தின் நிழலில்
மின்னலைத் தொட்டு மகிழ்ந்து நிற்க - இயற்கையின்
எழிலைக் கண்டு கவிதையில் சொக்கி நின்றேன்.

ரசித்தேன் ருசித்தேன், கீழே பார்த்தேன் எட்டிப் பார்த்தேன்
சலசலக்கும் தாமிரபரணி ஆற்றின் அழகைக் கண்டேன்
விழியை அகல விரித்துப் பார்த்தேன் என்னே செழுமை ! என்னே வளமை !
விழியை சுருக்கிப் பார்த்தேன் தென்னங்கீற்றினூடே கோபுர குருசினைக் கண்டேன்

அந்தோணியார்கோயிலின் வாயிலை அடைந்தேன்
குருசடி சென்றேன் வாசம் குறையா வனப்பைக் கண்டேன்
வீசும் தென்றலாய் விடியலின் வெளிச்சம் கண்டேன்
உற்றுப் பார்த்தேன் மும்மத மனிதரின் தொழுகைக் கண்டேன்

பார்த்தேன் பார்த்தேன் உறைந்தே போனேன்
கேட்ட வரமும் பெற்றேன் - கேட்கா வரமும் பல பெற்றேன்
தெற்கே பார்த்தேன் இந்து கோயில்
கிழக்கே பார்த்தேன் அல்லா பள்ளி

சுற்றும் முற்றும் பார்த்தேன் கல்விக் கூடம்
ஆற்றின் மறுகரை பார்த்தேன் நீதி மன்றம்
மேம்பாலம் நின்று பார்த்தேன் கோயில் மூன்றும் ஒன்றாய் கண்டேன்
காற்றும் கார்மேகமும் என்னை வருடிக் கொண்டே

எல்லாம் ஒன்றே என்றது
எல்லாம் நன்றே என்றது
நன்றே செய் என்றது - அதுவும்
இன்றே செய் என்றது

# எம் புனிதர் அந்தோணி மாமுனி

- K. மேரி பசுமதி



நாடி வந்தோரை
இன்புறச்செய்தாய்;
நஞ்சுண்டும்,
நல்லது செய்தாய்;
நீதியைக் காக்க
மரித்தோனை எழுப்பினாய்;
இறந்த பாலகனுக்கு
உயிர் கொடுத்தாய்;
உம்மை ஆராதிக்க
என் தவம் புரிந்தோமோ?
அருள் சூர்வாய்
தயை செய்தே...
அந்தோணி மாமுனியே!!!

# இதய தலைவா...



பதுவைப் பதியர் எம் திருத்தலப் புனிதர் !
சலவைக் கல்லில் சிலுவை வரைந்து
அலகையை அலரச்செய்துஅஞ்சா நெஞ்சர் !
கோயில் சுவர் விலக - நற்கருணை எழுந்தேற்றத்தை
தோட்டத்திலிருந்தே கண்டு பேரானந்த
மறைசாட்சியாய் மரிக்க அசிசி சபையில் இணைந்து
நற்செய்தி பணியாற்ற விளைந்தவர் !
வெர்செல்லியின்மரித்த இளைஞனை - பெற்றோரின்
வேண்டுதலுக்கிணங்க உயிருடன் எழுப்பிய அற்புதர் !
திருட்டுப்போன கையெழுத்துப் பிரதியை
கைப்பற்றியவரான பகைவருக்கும் அன்பர் !
அரசதிகாரியான செல்வந்தனும் கர்ப்பிணித்தாயின் மகனும்
மறைசாட்சியாய் மரிக்கவிருப்பதை முன்னறிவித்த இறைவாக்கினர்
பட்டினியாய் இருந்த கழுதையை
நற்கருணைமுன் மண்டியிட வைத்தவர் !
இல்லற வாழ்வில் நாட்டங்கொண்ட துறவியை
துறவறத்தில் நிலைத்திருந்து நற்பணியாற்றி உதவியவர் !
குழந்தை இயேசுவைக் கையிலேந்திய இறையன்பர் !
ஏழைப்பெண்ணின் உடைந்த பாத்திரத்தை
ஒட்டவைத்த இரக்கமே உருவானவர் !
கேட்போரின் உள்ளத்தை ஊடுருவிப் பாயும்
போதனைகள் ஆற்றும் நற்செய்தியாளர் !
கடல்வாழ் மீன்களுக்கு இறைவார்த்தை
அறிவித்திட்ட அருஞ்செயல்களின் வேந்தர் !
பெற்ற தந்தையை காப்பாற்ற வாதாடி
நீதி நிலைநாட்டச் செய்த நீதியின் வேட்கையாளர் !
செய்த பாவத்திற்காக மனம்வருந்தி காலை துண்டித்துக்கொண்ட
இளைஞனின் காலை ஒட்டவைத்த ஒப்பற்ற மருத்துவர் !
கள்வர் கூட்டத்தை மனந்திரும்பி நல்வழிப்படுத்திய
ஆற்றல் மிக்க பேச்சாளர் !
இறந்தபின்னும் பணப்பெட்டிக்குள் துடித்துக்கொண்டிருந்த
செல்வந்தனின் இதயத்தை வெளிப்படுத்திய அருளாளர் !
படைத்தலைவன் அனுப்பிய வெகுமதிகளை உதாசீனப்படுத்தி
அனுப்பிய தரித்திரருக்கு இரத்தினமானவர் !
மனைவிமீது சந்தேகங்கொண்ட செல்வந்தனுக்கு - குழந்தையை
சாட்சி கூறவைத்த சமாதானத்தின் காவலர் !
ஏழைகளுக்காக கடன் நிவாரணச் சட்டம் இயற்றவைத்து
அவர்களுக்கு ஆறுதலும் பாதுகாவலுமானவர் !
இறந்த பல வருடங்களாகியும் அழியாத
உன்னத நாவைப் பெற்றவர் !
தம்மை நாடி வருவோருக்காக இறைவனிடம்
பரிந்து பேசும் நேசத் தந்தையவர் !
இன்று பொன்விழா காணும் எம் திருத்தலப் பங்கின்
கோடி அற்புதர் தூய அந்தோணியாரவர் !



**S. மேரி ஷைனி**

# வர்மக்கலை

கு. தங்கப்பன். எம்.ஏ
புனித சூசையப்பர் அன்பியம்
குழித்துறை



வர்மக்கலை என்பது குமரிமாவட்டத்திலும் கேரளாவுக்கும் சொந்தமான கலை. வர்மக் கலையோடு சேர்ந்ததுதான் அடிமுறை என்ற தற்காப்புக்கலை. அடிமுறையில் 18 அடவுகள் உள்ளன. அதில் ஒற்றைச் சுவடு 4 முக்குச்சுவடு, 8 முக்குச்சுவடு. 16 முக்குச் சுவடு, 32 முக்குச் சுவடு, 64 முக்குச் சுவடு என உள்ளன. எதிரிகளின் தாக்குதலிலிருந்து எப்படி நம்மை பாதுகாக்க வேண்டும் என்பது தான் தற்காப்பு பயிற்சி.

தற்காப்பு பயிற்சியில் வர்மங்களும் புகுத்துகின்றனர். வர்மங்கள் புகுத்தும் போது கவனமாக செயல்பட வேண்டும். ஏனெனில் படுவர்மத்தில் அடி, இடி, குத்து, கை பட்டால் எதிரி நேரம் செல்ல செல்ல மயக்கமடைந்து மரணமடைவார். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னால் நாம் அவரை தட்டி எழுப்பிவிடவேண்டும். ஆபத்துக்காலத்தில் தங்களை காப்பாற்ற எதிரியின் வர்மத் தகவல்களைக் குறிபார்த்து அடித்தோ, தட்டியோ எதிரியை நொடிப்பொழுதில் நினைவிழக்கச் செய்து நம்மை காப்பாற்றிக் கொள்ள முடியும். வர்மத்தில் அடிபட்டவருக்கு மயக்கம். இரத்தக் கட்டு, உடல் சோர்ந்து உறுப்புகள் சேதமடையும். அதற்கு பச்சிலை மருந்துகளும் உள்ளன. தரம் அறிந்த பச்சிலையை எடுத்து வர்மம் பட்ட நபருக்கு கொடுத்தால் பழைய நிலைக்கு வருவார்.

எனவே நமக்குச் சொந்தமான இந்த கலையை அழிய விடாமல் பாதுகாப்பது நமது ஒவ்வொரு வரின் கடமையாகும். அழிந்து போகும் இக்கலையைப் பேணிகாத்து, இனிவரும் சந்ததியருக்கு பயனடையச் செய்வோம்

வர்ம சூத்திரம் என்ற ஏட்டில் ஒரு மனிதனின் உடலில் 72000 நாடி நரம்புகளும், 201 எலும்புகளும் 108 வர்மங்ளும் உள்ளன.

**மனித உடலில் உள்ள எலும்புளின் விபரத்தைக் கூறுகிறேன்**

| | |
|---|---|
| தாக்குகின்ற கை எலும்புத் துண்டு | –4 |
| தாங்குகின்ற கால் எலும்புத்துண்டு | –4 |
| ஆளுகின்ற உறுப்புச் சக்தி துண்டு | –2 |
| அடவான குறுக்கெலும்பு துண்டு | –62 |
| தாக்குகின்ற பரி எலும்பு | –16 |
| சிரசிலே துண்டு | –3 |
| நாக்கின் மேல் நரம்படியில் துண்டு | –4 |
| நலம் பெறவே கழுத்தில் கண்டம் | –6 |
| கண்டம் என்ற கொக்கிதனில் உறுப்பு | –100 |

108 வர்மங்களும் வர்ம சூத்திரத்தில் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

I

| | | | |
|---|---|---|---|
| வாதம் | – 64, | பித்தம் | – 24 |
| சிலேத்துமம் | – 6, | ஊர்வர்மம் | – 6 |
| தட்டு வர்மம் | – 8, | மொத்தம் | – 108 |

II

| | | | |
|---|---|---|---|
| படுவர்மம் | – 12, | தொடுவர்மம் | – 96 |
| மொத்தம் | – 108 | | |

வர்மக்கண்ணாடி என்ற ஏட்டில் 108 வர்மங்க ளையும் எது முதல் எதுவரை என பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. அவை

சிரசு முதல் கண்டம் வரை – 25
கண்டம் முதல் உந்திவரை –45
நாபி முதல் மூலம் வரை – 9
கைகளில் –14, கால்களில் –15
மொத்தம் – 108

**படுவர்மம் 12 அவையாவன**

1. திலதக்காலம், அல்லது சிரசர்காலம்
2. நட்சத்திரகாலம், 3. செவிக்குற்றி காலம்
4. பிடரிக்காலம், 5. உறக்க காலம்
6. தும்பிக்கை காலம், 7. நேருவர்மம்
8. முட்டெல்லு வர்மம் அல்லது அடக்ககாலம்
9. உறுமிக்காலம்
10. சுருக்குவர்மமம் அல்லது வலிய அஸ்தி சுருக்கி
11. செறிய அஸ்திசுருக்கி, 12. கல்லடக்காலம்

வர்ம வெற்றி என்ற நூலில் சொல்லப்பட்டுள்ள வர்மங்களும் அதன் பச்சிலை மருந்தும்

1. படுவர்மம் :– அடங்கல் காலம்
   இதற்கு பச்சிலை மருந்து, வேலிப்பருததி.
2. தொடுவர்மம் :– மத்தடக்காலம்
   இதற்கு பச்சிலை மருந்து விசுவல்லாரை
3. மெய்தீட்டாகாலம் : இதற்கு பச்சிலை மருந்து, குப்பைமேனி.

அழிந்து வரும் தற்காப்புக்கலை மற்றும் வர்மக்கலையைக் குரு என்ற ஆசான்மார்கள் தான் பயின்ற அனைதூது கலைகளையும் ஒளிவு மறைவின்றி பயின்று வரும் சீடர்களுக்கு பயிற்சி அளித்து எதிர்காலத் தலைமுறையினருக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும் என்றும் கலைகள் சிறக்க வேண்டும் என்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

# எமது பங்கு மக்களுக்கு வெட்டுவெந்நி தூய அந்தோணியார் செய்த புதுமைகள்

1. கண்ணக்கோடு தூய தோமையார் அன்பியத்தை சார்ந்த திரு. சுந்தர் திருமதி. பிறேமலதா தம்பதியருக்கு திருமணமாகி முதல் குழந்தை பிறந்து 5 நாட்களில் இறந்து விட்டது. பிறகு 8 ஆண்டுகளாக பிள்ளைகள் இல்லாத நிலையில் போகாத மருத்துவமனையும் இல்லை சாப்பிடாத மருந்துகளும் இல்லை. போகாத ஆலயங்களும் இல்லை. கடைசியாக நம் புனிதர் பாதத்தில் விழுந்து ஜெபித்ததன் வழியாக அந்தோணியார் இரண்டு பிள்ளைகளைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.

2. கோட்டை காட்டுவிளை தூய அல்போன்சம்மாள் அன்பியத்தை சார்ந்த திரு. டேனியல் மனைவி திருமதி. வசந்தகுமாரி. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு 4-வது நிலையில் இருந்தார். 6 மாதம் தான் உயிர்வாழக் கூடிய நிலை என மருத்துவர்கள் கூறிய நிலையில் பங்கு மக்கள் அனைவருமாக சேர்ந்து அவர்களுக்காக தூயவர் பாதம் ஜெபித்து அதிலிருந்து அவருக்கு அற்புத விடுதலை அடைந்தநிலையில் கொரோனா மற்றும் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். அந்நிலையிலும் அவரும் பங்கு மக்களும் தூயவர் பாதம் நம்பிக்கையுடன் ஜெபித்ததன் வழியாக தூய அந்தோணியார் சுகம் கொடுத்து, அவருக்கு கொடுத்த பணியான புனித கஞ்சி காய்க்கும் பணியை மிக நிறைவாகச் செய்யும் அளவுக்கு அவரை ஆசீர்வதித்துள்ளார். பேரவையின் ஓர் உறுப்பினராக இருந்து பணிச் செய்யக்கூடிய அளவில் தூய அந்தோணியார் அற்புதம் செய்துள்ளார்.

4. கோட்டைக்காட்டுவிளை அன்பியத்தை சார்ந்த பிறசமயத்தை சேர்ந்த ஓர் ஏழைத்தாய் பெயர் திருமதி. தங்கம் கணவர் பெயர் திரு. தங்கராஜ் தனது மகளை திக்குறிச்சியில் திருமணம் செய்து வைத்து 14 வருடங்களாக குழந்தைகள் இல்லை. வெட்டுவெந்நி அந்தோணியாரிடம் ஜாதி, மதம் பேதமின்றி வருகின்ற மக்களை கண்ட இத்தாயும் தன்மக்களுக்காக ஜெபித்தார். தன்மகளுக்கு அந்தோணியார் ஓர் குழந்தை கொடுத்தால் தானும் தன் கணவர் மகள், மருமகன், மகன், மனைவி, பேரப்பிள்ளைகள் அனைவரும் இப்பங்கு உறுப்பினராக சேருவோம் என ஜெபித்தார். அதே ஆண்டு அந்தோணியார் அக்குடும்பத்திற்கு ஓர் ஆண் குழந்தையை கொடுத்தார். அந்தோணியாரின் பெயரை வைத்து குழந்தைக்கு ஆன்றோ என பெயர் வைத்து அனைவரும் திருமுழுக்குப் பெற்று எமது பங்கு உறுப்பினர்கள் ஆனார்கள். திருமதி. தங்கம் பேரக்குழந்தைக்கு அணிவித்தது போன்று அந்தோணியாருக்கும் 1 பவுன் தங்கச்செயின் காணிக்கையாகக் கொடுத்தார்கள். திருமதி. சந்திரி அரைபவுன் தங்கக் கொலுசு காணிக்கை யாகக் கொடுத்தார்கள்.

5. சாலியன்விளை அன்பியத்தைச் சார்ந்த திரு. தனிஸ்லாஸ் திருமதி. தெரசம்மாள் இவர்களது 2-வது மகள் திருமதி. ஷீலா மலர் திருமணமாகி 6 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லை. பல மருந்துகள் எடுத்தும் பலனில்லை. தூயவர் பாதம் ஜெபித்து தூய அந்தோணியாரின் பரிந்து பேசுதலால் அழகான ஓர் பெண்குழந்தையைக் கொடுத்தார்.

6. சாலியன்விளை அன்பியத்தைச் சார்ந்த திரு. மரியசிசில் தொண்டையில் புற்றுநோய் ஏற்பட்டு முதிர்வயதிலும் அந்தோணியார் அவருக்கு அதிசயம் செய்து அற்புத சுகம் கொடுத்தார். பங்கின் பலபொறுப்புகளில் பல ஆண்டுகளாக தன்னை ஈடுபடுத்தியவர். தற்பொழுதும் முழு சுகம் பெற்று பல பொறுப்புகளிலும், பல பணிகளையும் உற்சாகத்துடன் முழு பொறுப்புடன் செய்ய அந்தோணியார் அருள் புரிந்தார்.

7. தெக்குவிளை அன்பியத்தை சார்ந்த R. வின்ஸ்டன், மூளைக் கட்டி அறுவை சிகிட்சை முடிந்து எந்த பக்க விளைவுகளும் இல்லாமல் நோயிலிருந்து முழுமையான விடுதலை கிடைக்க மருத்துவ சிகிட்சையின் போது செவ்வாய்கிழமை தோறும் தொடர்ந்து திருப்பலி கருத்து கொடுத்து புனிதரிடம் பரிந்துரைக்காக மன்றாடி புனிதரும் நற்கருணை நாதரிடம் பரிந்து பேசி நோயிலிருந்து முழுமையான விடுதலையும் அதிசயங்களையும் பெற்றுக் கொடுத்தார். புனிதருக்கு எங்கள் நன்றி. இந்நேரத்தில் ஜெப உதவி செய்த அனைவருக்கும் புனித

அந்தோணியார் வழியாக நன்றி.

8. படியன்விளை அன்பியத்தைச் சேர்ந்த திரு . கிறிஸ்டோபர் திருமதி. வர்க்கீஸம்மாள் இவர்கள் மகன் அபின்வர்ஷத் பைக்கில் சென்றபோத ஏற்பட்ட விபத்தில் உயிர் பிழைக்கமாட்டான் என அனைவரும் கைவிட்ட நிலையில் அந்தோணியாரிடம் அனைவருமாக வேண்டி நலம் பெற்றான்.

9. குழித்துறை அன்பியத்தை சேர்ந்த திரு. தங்கப்பன் திருமதி. லில்லிபாய் இவர்கள் மகன் பயஸ். இவர் கார் ஓட்டிக் கொண்டு செல்லும் போது ஏற்பட்ட விபத்தில் கார் கட்டுப்பாட்டை இழந்து செல்லும் போது அந்தோணியாரே என கூப்பிட வில்லுகுறி அந்தோணியார் குருசடியின் முன் பக்கத்தில் ஒரு கம்பத்தில் மோதியதில் கார் அப்பளம் போல் உடைந்தது. ஆனால் அவனுடைய உடம்பில் ஒரு கீறல் கூட விழாமல் அந்தோணியார் காத்தார்.

பயசின் மனைவி பிரியதர்சினி கருத்தரித்த போது ஒரு பெரிய கட்டியும் கூடவே இருந்தது. அது குழந்தை வளரவே கட்டியும் வளர்ந்தது. அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுக்க முடியாத நிலை இறுதியில் 5 டாக்டர்கள் சேர்ந்து கட்டியை நீக்கி குழந்தையை எடுத்தார்கள். அந்த மருத்துவர்களே அதிர்ந்து போய் இது கடவுளால் தான் ஆனது என்றார்கள். அற்புதம் புரிந்த இறைவனுக்கும் புனிதருக்கும் அன்னை மரியாவுக்கும் கோடி நன்றிகள்.

---



# நியாயம் கேட்க வா கிளியே

மலரை எரிய விட்டு
மடையர்கள் சிரித்தார்கள் – கிளியே
மானம் போன தென்று நம் நாட்டில்
மாண்டவர்கள் எத்தனையடி – கிளியே
உழைப்பவனுக்கு உணவில்லை
உடையும் எடுத்தாரடி – கிளியே
உத்தமர் போல் நடித்து இந்த
உலகத்தையே கெடுத்தாரடி – கிளியே
வேசம் போட்டு தேசிய ஆட்சிக்கு
வேதாளம் புகுந்ததே – கிளியே
வெடிகுண்டை வீசிவிட்டு
வெந்தணலில் சிரித்ததெடி – கினியே
நம் நாட்டின் சட்டமெங்கே
நலிவு கண்ட மக்கள் கோடி – கிளியே
நான் பேசி என்ன செய்ய
நாம் பேச வேண்டுமடி – கிளியே
நீ இங்கு வர வேண்டும்
நியாயத்தைக் கேட்போம் – கிளியே



– ராஜன்



# மண்வாசம்

லீமா

புனிதரே! புதுமைகள் பொழியும் அந்தோணியாரே!
பாராளும் புனிதரே! பார்போற்றும் புனிதரே!
எம் வெட்டுவெந்நி புனித அந்தோணியாரே!
எம் ஊருக்குப் பெருமை சேர்த்தாயே !

தூயவரே! தூய உள்ளம் கொண்டவரே
மழலை ஏசுவைப் கையில் ஏந்தியவரே!
உம்மை நாடி வரும் மக்களுக்கு
நலம் பல புரிந்திடவே!

அதிசயங்கள் அற்புதங்கள் செய்ய - எம்
வெட்டுவெந்நி மண்ணில் ஆவலாய் உதித்தவரே!
அன்பயையும் அருளையும் பொழிந்து - எம்மை
அலங்கரிக்க வந்தாயே...

துன்பத்தில் உழல்வோரை தூக்கி அரவணைப்பவரே
தீவினைகள் தகர்த்தெறிந்து திடமாய் எம்மைக் காப்பவரே !
உலகெலாம் வணங்கும் தூயவரே - எம்
ஊருக்கு ஒளிவிளக்காய் வந்தாயே...

அண்டி வந்த மக்களுக்கு அடைக்கலாமாய் நிற்பவரே
ஆபத்துக் காலத்தில் அரணாய் வலம் வருபவரே
தேடிவரும் மக்களுக்கு தேனமுதம் பொழிபவரே
தெவிட்டாத தீஞ்சுனையே ! தேனே கற்கண்டே!

மார்த்தாண்டம் நகரிலே தடம் பதித்த நாயகனே!
மும்மத மக்களும் தொழுதிட கோடி வரம் பொழிபவரே
வெட்டுவெந்நி மக்களை இன்னலின்றிக் காப்பவரே!
பஞ்சம் பசி கொள்கை நோயினின்றி பாதுகாப்பாயே!

புதுமைகள் பொழியும் அந்தோணியாரே - எம்
வாழ்வுக்கு வழித்துணையே! எம் பாதைக்கு
ஒளி விளக்கே நீயின்றி நானில்லை உன் நினைவின்றி வாழ்வில்லை
பார்போற்றும் புனிதரே ! உமது புகழைப் பாடுவதா?
நீர் கோயில் கொண்ட எம் ஊரில் பெருமையைப் பாடுவதா?

# சமூகத்தை மாற்றுவோம்



V.S Chalfi Tinjiuin
Class : VIII, சிறார் இயக்கம்

ஒரு பாட்டி பல வருடங்களாக ஒரே இடத்தில், பழ வியாபாரத் செய்து கொண்டு இருந்தார். அவ்வழியாக செல்வோர் பழங்களை வாங்குவர்.

ஒரு நாள் அவ்வழியாகச் சென்றவர் பழம் வாங்க முற்பட்டார். எழுபது ரூபாய்க்கான மாம்பழத்தை ஐம்பதைந்து ரூபாய்க்கு பேரம் பேசி வாங்கினார். விலை குறைவாக கிடைத்ததால் மகிழ்ச்சியாக வீடு திரும்பினார். சில நாட்களுக்கு பிறகு அந்த ஊரில் உள்ள கார்பரேட் பழ விற்பனை நிலையத்திற்குச் சென்றார். அந்த பாட்டியிடம் வாங்கிய அதே மாம்பழம் கிலோ எண்பது என்று எழுதியிருந்தது. இங்கு பேரம் பேச முடியாது. அப்போது பாட்டியிடம் பேரம்பேசி விலை குறைத்து வாங்கியது மனதை வலிக்க செய்தது. மாலை அவ்வழியாக வரும்போது அந்த பாட்டியைப் பார்த்தார் மெலிதான தேகம். சுருக்கம் நிறைந்த முகம். நடுங்கும் கைகளுடன் வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். அப்போது அந்த பாட்டியின் அருகில் சென்று பாட்டி ஏதாவது உதவி வேணுமா? பணம் ஏதாவது வேணுமா? என்று கேட்டார். அப்போது பாட்டி வேணாம் கண்ணு எனக்கு கடவுள் கொஞ்சம் படியளக்கிறார் அது போதும் என்று கூறினார். பாட்டியின் வறுமையிலும் நேர்மை, ஏழ்மையிலும் தர்ம சிந்தனை என்னை சிந்திக்க வைத்தது. அடுத்த நாள் அந்த பாட்டியிடம் பழம் வாங்கச் சென்றேன். மூன்று கிலோ ஆப்பிள் 350 என்று கூறினார்கள். ஆனால் கார்பரேட் கடையில் 450 ரூபாய் நானும் 450 ரூபாய் குடுத்தேன். ஆனால் பாட்டி வாங்க மறுத்தார்கள். இருந்தாலும் பணத்தை குடுத்து விட்டு நகர்ந்தேன்

இன்னும் நம்மில் பலர் ஏழை எளியவரோடும் வறுமையில் இருப்பவரோடும் பேரம் பேசுகிறோம் ஆனால் கார்பரேட் பழ விற்பனைக் கடைகளில் பேரம் பேசாமல் வாங்குகிறோம் இனி வீதியில் வியாபாரம் செய்பவர்களிடம் பேரம் பேசவே கூடாது. பாவம் அவர்கள் வெளியே சொல்ல முடியாத பல விதமான வலிகளோடு வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். நாமும் மாறுவோம் சமூகத்தையும் மாற்றுவோம். மனித நேய சமுதாயத்தை உருவாக்குவோம்